வரலாற்றில் நெஞ்சையள்ளும்
தமிழக உயர்நீதி மன்றம்



ஆசிரியர்
சி. இராமகிருட்டினன், பி.ஏ.,பி.எல்.

வரலாற்றில் நெஞ்சையள்ளும் தமிழக உயர்நீதிமன்றம்

ஆசிரியர்:-
சி. இராமகிருட்டினன் பி.எ.பி.எல்.

வெளியீடு:-
கரிகாலன் பதிப்பகம்
குறள் இல்லம்
16, காரனீசுவரர் கோயில் வீதி,
மயிலை, சென்னை-600 004.

வரலாற்றில் நெஞ்சையள்ளும்

தமிழக உயர்நீதிமன்றம்

ஆசிரியர்:- சின்னஅய்யன் இராமகிருட்டினன்.

1000 Copies

முதல் பதிப்பு 1987

1000 படிகள்

விலை. ரூபாய் 25-00

அச்சிட்டோர்:-
லாயல் அச்சகம்
118, T.P. கோயில் தெரு, சென்னை-5

காணிக்கை

தமிழ்நாடு நீதித்துறையில் தம் அல்லல் களைக் களைய நீதியை நாடிவரும் சாதாரண மக்களுக்கும் நீதி வழங்கத் தவறாது மிகக்திறம் படவும் ஆர்வத்துடனும் மிகுந்த பரிவுடனும் பணிபுரியும் நீதிபதிகள் அனைவருக்கும் (All the Judicial Officiers in Tamil Nadu Judiciary) இந் நூலை அன்புடன் காணிக்கையாக்கு கின்றேன்.

பொருளடக்கம்

மாண்புமிகு நீதிபதி
சு. இரத்தினவேல் பாண்டியன் அவர்கள்
எபி 41, 6வது டி எச் மெயின் ரோடு,
அண்ணா நகர் சென்னை-600040.

தேதி: 29-4-1987

அணிந்துரை

நமது தனிப்பட்ட அன்றாட வாழ்வில் கூட நாம் நடுநிலையுடன் வாழ வேண்டும், இல்லாவிடில் கேடு வந்து நம்மைச் சேரும், என்கிறார் திருவள்ளுவர்.

**கெடுவல்யான் என்பது அறிக, தன் நெஞ்சம்
நடுஒரீஇ அல்ல செயின்.**

இந்த நடுநிலைப் பன்பு மக்களிடையே குறையும் பொழுது தான் பூசல்கள் தோன்றுகின்றன. வழக்குகள் எழுகின்றன. சமுதாய நல்வாழ்விற்கு இவ்வழக்குகளைத் தீர்த்து நீதி வழங்குவது இன்றியமையாததாகின்றது.

இவ்வாறு நீதி வழங்குவதை 'முறை செய்தல்' என்கிறார் வள்ளுவர். முறை செய்து மக்கள் சமுதாயத்தைக் காப்பாற்றும் அரசன் கடவுளாகவே போற்றப் படுகின்றான், என்பது குறள்.

**முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறையென்று வைக்கப் படும்**

மக்களாட்சியில் இந்த மாபெருங் கடமையினை நீதி மன்றங்கள் ஆற்றுகின்றன. நம் நாட்டு அரசியலமைப்புச் சாசனத்தில் உச்சநீதி மன்றமும் உயர்நீதி மன்றங்களும் சிறப்பிடம் பெறுகின்றன. பிற, கீழமை நீதிமன்றங்களையும் நிர்வகிப்பது மாநிலங்களில் உள்ள உயர்நீதி மன்றங்களின் தனிப் பொறுப்பாகின்றது.

இத்தகைய பீடும் பெருமையும் உருவெடுத்து ஒளிர்வது போல அமைந்துள்ளது நம் சென்னை உயர்நீதி மன்றத்தின் ஏற்றமிகு தோற்றம். இந்த அமைப்பின் வரலாற்றினை அனைவரும் தெரிந்து கொள்வது அவசியமாகும்.

இந்த வரலாற்றை இனிய தமிழிலே இந்நூலில் எடுத்துக் கூறியுள்ளார் மாவட்ட நீதிபதி திரு. சி. இராமகிருட்டினன். **"வரலாற்றில் நெஞ்சையள்ளும் தமிழக உயர்நீதி மன்றம்"** என்ற இந்நூல் படிப்போர் நெஞ்சைத் தொடும் வகையில் பண்டைய வரலாற்றைப் பாங்குற விளக்குகின்றது.

கி. பி. 1600 ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை தமிழ் நாட்டில், குறிப்பாகச் சென்னை மாநகரில் நீதிமன்றங்கள் வளர்ந்த வரலாற்றைச் சுவைபடக் கூறியுள்ளார் ஆசிரியர். வணிகர்களாக வந்த ஆங்கிலேயர்கள் நம் நாட்டின் ஆட்சியாளர்களாக மாறிய பொழுது எத்தகைய நீதிமன்றங்கள் நிறுவப்பட்டன என்பது பற்றியெல்லாம் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளது இந்நூலில். சென்னை உயர்நீதி தலைமை நீதிபதிகளின் வாழ்க்கை வரலாறு, அவர்களின் குணநலன்கள் வழக்கறிஞர்களாகப் பணியாற்றிய ஆங்கில நாட்டு மேதையின் சிறப்புகள், நம் நாட்டில் தோன்றிய சட்ட மேதைகள், இவ்வாறான விவரங்களைக் கொண்டுள்ளது இந்நூல். உயர்நீதி மன்ற உயர் அலுவலர்களான பதிவாளர், 'மாஸ்டர்' இவர்களின் பணிமுறைகள் பற்றியும் ஆசிரியர் விளக்கியுள்ளார்.

''டென்னிஸ்'' ஆடுவதுதான் நீதிபதிகளுக்கேற்ற விளையாட்டு என்று நீதிபதி பர்ன் குறிப்பிட்டுள்ளார்: 1930ல் இருந்த நீதிபதி கில்பெட் ஸ்டோன் என்பவர் ஆங்கில நாட்டு வழக்கறிஞர்கள், இந்திய நாட்டு வழக்கறிஞர்கள் இவர்களிடையே கண்ட ஒரு வேறுபாட்டைக் கூறுகிறார்:

''ஆங்கில நாட்டின் திறம்படைத்த வழக்கறிஞர் ஒரு வழக்கில் வலிவான ஒன்றிரண்டு வாதங்களையே வெற்றி பெற நீதிமன்றத்தின் முன் எடுத்து வைக்கின்றார். பல வலிவற்ற வாதங்களை எடுத்துச் சொல்வதைக் காட்டிலும், ஒன்றிரண்டு வலிவான வாதங்களை உடும்புப் பிடியாகப் பிடித்துக் கொள்வது நலம் என்று ஆங்கில நாட்டு ஆற்றல் படைத்த வழக்கறிஞர் கருதுகின்றார். ஆனால், இந்திய வழக்கறிஞர் வலிவான வலிவற்ற வாதங்கள் என வேறுபாடு பார்ப்பதில்லை. வழக்கில் உள்ள தனக்குச் சாதகமான எல்லா வாதங்களையும் நீதிமன்றத்தின் முன் வைத்து விடுவது என்பது அவரது போக்கு''. நீதிபதி கில்பர்ட் ஸ்டோனின் இந்தக் கணிப்பு இன்றைக்கும் பொருந்துவதாகும்: இது போன்ற சுவைமிக்க பல செய்திகளை இந்நூலில் நாம் காணுகின்றோம்.

''இலவச சட்ட இயக்கம்'' பற்றியும் வரிவான விவரங்களைக் கூறியுள்ளார் ஆசிரியர்.

இனிய தமிழில் எளிய நடையில் இந்நூலை எழுதியுள்ள ஆசிரியர் திரு. இராமகிருட்டினன் அவர்களைப் பாராட்டுகிறேன். நீதிமுறையில் அக்கறையுள்ள பலரும் இதனைப் படித்துப் பயன்பெறுவார்களென நம்புகிறேன்.

மாண்புமிகு நீதிபதி. திரு. சி. ஜே. ஆர். பால் அவர்கள்

அணிந்துரை

The author Sri Ramakrishnan, a District Judge of the Tamil Nadu Higher State Judical Service. has to be congratulated for having brought out this highly informative book - a product of much painstaking study and research. Besides tracing the evolution and history of the Madras High Court, the author has included in the book, interesting sketches of each of the Chief Justices whohad presided over this great institution during the 125 years of its existence, and of some of the eminent Judge, who have left their indelible marks by way of valuable contribution to the great and undying traditions of the Madras High Court, men of high intellect, great wisdom and learning; men who imbued with a relentless urge to do justice without fear or favour to all who enter the sacred precints of this temple of justice, gave of their best to this institution; men who have contributed to the high traditions and glory of the Madras High Court.

The graphic description of the Centenary celebrations of the Madras High Court which the author has given, along with the speehes made by eminent men at that function, highlights the great ideals for which this High Court stands and its glorious traditions, which have been zealously upheld and maintained by the efforts of eminent judges and lawyers during a century and a quarter.

The significant and outstanding contribution made by the members of the Bar to the greatness of this High Court has been most fittingly acknowledged and placed on record by the author,

A brief account of the working of the High Court and a note on the Legal Aid programmes have been appropriately included in this book and are very informative. The book, besides being highly informative, is very interesting to read and once a reader starts reading it, he is loathe to put it down till he comes to the end of it.

As one who has served in the Judiciary for 32 years, starting as a District Munsif and retiring as a Judge of the Madras High Court, after nearly 7½ years on the Bench of this High Court, I could not but, on reading this book, indulge in reminiscence and reflections. Those 32 years though filled with hard work and strenuous efforts, have been to me, most rewarding, and an overwhelming sense of pride and achievement fills

me, as I realize what a great privilege it had been for me to have served in the subordinate Judiciary which forms the foundation and base on which the entire judicial edifice stands immutable and also to have worn ' the halo of prestige and tradition that inherently surrounds a seat upon the Bench of the Madras High Court". The law is an exacting goddess demanding of her votaries an intellectual and moral discipline "To the lover of the law, every text that he deciphers, every doubt that he resolves, adds a new feature to the unfolding panorama of man's destiny upon this earth. Nor will his task be done until, by the farthest stretch of human imagination he has seen as with his eyes, the birth and growth of society, and by the farthest stretch of reason, he has understood the philosophy of its being.

The profession of law of all secular professions, has the highest standards; no other profession gives such scope to realize the spontaneous energy of one's soul and in no other does "one plunge so deep in the stream of life — so share its passions, its battles, its despair, its triumphs, both as witness and actor"

In the Judges' half of the common work in which the Judges and members of the Bar are engaged and are striving, "the will atleast is not wanting, to do every duty of their noble office; that every interest, every faculty, every energy, almost every waking hour is filled with their work, that they give their lives to it; more than which they cannot do".

Onerous are the duties of the Judge, awesome is the responsibility that rests on him; innumerable are the opportunities given to him of alleviating the distress of people; of contributing in no small measure to the wellbeing of society and of strengthening the Rule of Law which is the foundation of democracy; but great in his reward—that of satisfaction that he has been true to the oath he took on becoming a Judge and of knowing that he has done his best to advance the cause of justice and to maintain the high traditions and ideals of his calling.

May this book be not only a source of information, but also a source of inspiration to all who are, or would be involved in the task of administering Justice.

Madras
18—5—87

(Justice C. J. R. PAUL
Retd. Judge, Madras High Court)

பேராசிரியர் டாக்டர் ந. சஞ்சீவி,
தலைவர், தமிழ் இலக்கியத் துறை,
சென்னைப் பல்கலைக் கழகம்,
சென்னை-600 005.

அணிந்துரை

இருபதாம் நூற்றாண்டின் இமய வெற்றியாய்த் தமிழுக்கு விளங்குவது பெருந்தமிழர் பெரியசாமித்தூரன் உருவாக்கிய கலைக்களஞ்சியம். அதில் 'உயர் நீதிமன்றம்' என்ற தலைப்பில் தொகுதி இரண்டில் (1955) திரு. வி.டி. ரங்கஸ்வாமி ஐயங்கார் ஒரு சுருக்க விளக்கமான கட்டுரை எழுதியுள்ளார். இக்கட்டுரை 'உயர் நீதி மன்றம்' பற்றிப் பொதுவானது. இது தவிர 'சென்னை உயர்நீதி மன்றம்' என்ற தலைப்பிலோ 'தமிழக உயர் நீதி மன்றம்' என்ற தலைப்பிலோ கட்டுரைகளைத் தமிழ்க் கலைக் களஞ்சியத்திலும் காணோம். (சென்னைப் பல்கலைக் கழகத்தில் கலைக் களஞ்சிய அலுவலகம் செயல்பட்ட காரணத்தால் போலும் சென்னைப் பல்கலைக் கழகம் பற்றிய கட்டுரை உள்ளது, சென்னை அருங்காட்சியகம் பற்றி கட்டுரையும் உள்ளது) இன்று உச்ச நீதிமன்றம் என்று சொல்லப்படும் அமைப்பைப் பற்றிய கட்டுரை 'சுப்ரீம் கோர்ட் என்ற தலைப்பில் உள்ளது.

நீதிபதி இராமகிருட்டினன் நீதியைப் போலவே தமிழையும் நேசிப்பவர். வாழ்க்கை நீதி நூலாகிய திருக்குறளிடத்து மெத்த ஈடுபாடு கொண்ட இவர் சட்ட நீதி நூலியலிலும் மதிக்கத்தக்க ஈடுபாடும், நடைமுறைப் பயிற்சியும் கொண்டவர். ஏற்கனவே 1. வளரும் சன நாயகத்தில் நீதிமன்றங்கள் 2. நீதி வானில் ஓர்விடிவெள்ளி ஆகிய நூல்களை எழுதியுள்ள திரு. இராமகிருட்டினன் இப்போது **வரலாற்றில் நெஞ்சையள்ளும் தமிழக உயர்நீதி மன்றம் என்ற தலைப்பில்** புது நூல்—எனக்குத் தெரிந்தவரையில்!—முதல் நூல் படைத்திருத்தல் போற்றற்குரியது. மேற்கு நாடுகளில் கட்டடங்கட்கு எல்லாம் வரலாறு உண்டு.

நீதிபதி இராமகிருட்டினனின் நூல் 15 இயல்களையும் அவற்றுற்குரிய உட்பிரிவுகளையும் கொண்டது. சென்னையிலும் தமிழகத்திலும் நீதிமன்றங்கள் தோன்றி வளர்ந்த வரலாற்றைத் தெள்ளத் தெளிவாக விளக்கும். இந்நூலை யான் படித்தபோது பத்தாண்டுகட்கு முன் யான் சென்னைச் சட்டக் கல்லூரியில் இரண்டாண்டுகள் படித்தபோது ஆங்கி

லத்தில் படித்த உயர் நீதி மன்ற வரலாறு மின்னல வீச்சுகள் போல் என் மனத்திரையில் பளிச்சிட்டு மறைந்தன.

நீதிபதி இராமகிருட்டினனின் நூல் அவர் ஒரு சிறந்த மொழிபெயர்ப்பாளர் என்பதையும் நினைவூட்டுகிறது. காரணம் 1. நூல் முழுதும் ஆங்கில மூலங்களை மனதில் உள் வாங்கி அவர் செய்துள்ள நல்ல தமிழாக்கம் 2. ஆங்கில உரைகள் பலவற்றை சொல்லுக்குச் சொல் நேராகத் தமிழாக் கம் செய்துள்ள செப்பம்; திறம்.

நீதிபதி இராமகிருட்டின் இலக்கிய நெஞ்சினர். அதனால் பல இடங்களில் சட்டத்தின் சாரம் கவிதை வரிகளாகப் பிறப் பெடுக்கின்றன. (பார்க்க பாக்கங்கள் (15, 21, 39, 80, 98) கால அடைவில் இன்னும் சிறந்த கவிதை அடிகளை இவரிடம் எதிர்பார்க்கலாம். ஆர்வந்தானே ஆக்கத்தின் அடிப்படை.

நீதிபதி இலக்கிய ஆர்வம் உடையவர் மட்டுமல்லர்; இலக் கியப் பயிற்சியும் உடையவர். இவ்வுண்மை இவர் நூல் முழு தும் ஆங்காங்கே காட்டிச் செல்லும் பொருத்தமான தமிழிலக் கிய மேற்கோள்களால் இனிது விளங்கும். (பார்க்க பக்கம் 11, 16, 18, 40, 58, 69, 73. 153, 156, 157, 168, 191).

நீதிபதியின்நெஞ்சங்கவர்ந்த தமிழ்நூல்களுள் தலையாயது திருக்குறள். நீதிபதியின் திருக்குறள் ஈடுபாட்டை நோக்கும் போது அவர்களைத் திருக்குறள் இராமகிருட்டினன் என்றே போற்றலாம். திருக்குறளுக்கு அடுத்த நிலையில் நீதிபதி தம் நூற்பொருள் காரணமாகப் போற்றும் நூல்கள்

1. சிலப்பதிகாரம் (பக்கம்-11, 155)
2. மதுரைக் காஞ்சி (பக்கம்-16, 17)
3. புறநானூறு (பக்கம்-16)
4. நற்றிணை (பக்கம்-16)
5. மணிமேகலை (பக்கம்-18)
6. பழமொழி (பக்கம்-18)

'எங்கும் தமிழ் எதிலும் தமிழ்' ஏற்பட்டால்தான் தமிழும் தமிழரும் வாழ்வு பெறுவர். அதற்கு இத்தகைய சட்ட நீதி மன்ற வரலாற்று நூல்கள் உடன் தேவை. சிறப்பாகச் சட்டக் கல்வி தமிழில் நடைபெறத் தேவை.

நீதிபதி இராமகிருட்டினன் அவர்கட்கு என் பணிவார்ந்த மனம் நிறைந்த பராட்டுதல்கள்.

ஆசிரியர் முன்னுரை

மிகச்சாதாரண மான ஒருவன் 125 ஆண்டுகளைத் தாண்டிய பாரம்பரியம் மிக்கதும் உயர்ந்த மரபுகளைக் கொண்டதுமான ஒரு மிகப்பெரிய மாமன்றத்தின் பெருமை கூறுவதே இந்நூலாகும். ''வரலாற்றில் நெஞ்சையள்ளும் தமிழக உயர்நீதிமன்றம்'' என்றஇந்நூலை எழுதும் எனக்குள்ள ஒரேதகுதியென நான் நினைப்பது உயர்நீதிமன்ற வளாகத்தில் பணிசெய்யும் வாய்ப்புக் கிடைத்ததேயாகும். விண்ணைமுட்டும் படி மிகக்கம்பீரமாக நிற்கும் உயர் நீதிமன்றக்கட்டிடத்தினுள் காலடி வைக்கநேரும்போதெல்லாம் நான் உணர்ச்சிவசப்படுவதுண்டு. மாலையில் வீடுதிரும்பும் போது கூட கட்டிடத்தின் பொலிவான தோற்றத்தை கண்டு களித்தவாறு கட்டிடத்துக்குள் நுழைந்து பார்த்து விட்டுவரும் பழக்கத்தை மேற் கொண்டிருந்தேன். மாலைவேளையில் கொஞ்ச நேரத்தில் மறையப் போகும் ஆதவன் தன் பொன்னிறக் கதிர்களை உயர்நீதிமன்றக்கட்டிடத்தின் மேல் பரப்பி கட்டிடமே பொன் தகடால் வேயப்பட்டதோ என்று வியக்கும்படி செய்து விடுவான். அப்போது தோட்டத்திலிருந்து மெதுவாக வீசும் மெல்லிய பூங்காற்றும் ஆதவனுடன் போட்டி போட்டுக் கொண்டு உயர்நீதிமன்ற கட்டித்தைத் தழுவிக் கொள்ளும். ஆதவன் பூசும் பொன்னிற வண்ணம் நம் கண்களுக்கு விருந்தையும் தோட்டத்தில் உள்ள மரங்கள் அசைந்தாடித் தாம் பெற்ற இன்பத்தை இவ்வையகம் பெறட்டும் என அனுப்பும் மெல்லிய பூங்காற்று நம் உடலைத் தழுவித் தெம்பையும் அளிக்கத தவறுவதில்லை. அதே வேளையில் உயர் நீதிமன்றத்தின் உன்னத வரலாறையும் அதில் அமர்ந்து நீதிவழங்கும் மாண்புமிகு நீதிபதிகளையும் நாம் எண்ணும் போது உள்ளத்துக்கு ஊக்கமும் உரமும் கிடைக்கின்றன என்பதை நம்பால் உணரமுடிகின்றது.

கடந்த 125ஆண்டுகளில் நமது உயர்நீதிமன்றம் பல மாபெரும் நீதிபதிகளையும். ஆற்றல் வாய்ந்த வழக்கறிஞர்களையும் எண்ணிறந்த பதிவாளர்கள் பணியாளர்களையும் தோற்றுவித்து மகத்தான வரலாறு படைத்துள்ளது. அந்த மாபெரும் நீதிபதிகளும்.ஆற்றலும் வலிவும்வாய்ந்த வடிக்கறிஞர்களும் நீதிமன்றக்கட்டிடத்தினுள் தம் காலடிகளைப்பதித்துள்ளனர். கட்டிடத்தினுள் அவர்தம் காலடிபடாத இடமே இருக்க முடியாது. இன்று நம்மை போன்றவர்கள் அவர் தம் பொன்னான காலடி பட்ட புனித இடங்களில் நடக்கும் போது நமக்கே பூரிப்பும் பெருமிதமும் தோன்றுகின்றன. நமது நீதிபதிகள் அமர்ந்து நீதிவழங்கும் கட்டிடம் வெறும் செங்கற்களால் ஆன கட்டிட

மாகத் தோன்றுவதில்லை தெய்வங்கள் அமரும் கோயில் களாகத் தோற்றமளிக்கின்றது.

பக்தர்கள் தமது குறைகள் தீர கோயில்களை நாடுகின்ற னர். தூரத்திலேயே ஆலையங்கள் தெரியும் போது பக்தர் களது உள்ளத்தில் ஆண்டவனைப் பற்றிய நினைப்புத் தோன்றி விடுகின்றது. பின்னர் ஆலையத்தினுள் நுழைந்து ஆண்டவனைத் தொழும் போது பக்தர்கள் மனதில் தேக்கி வைத்திருக்கும் குறைகள் என்ற சுமையை இறக்கி அமைதி அடைகின்றனர். பூசல்களில் மாட்டிக் கொண்டவர்களும் பக்தர்களைப் போலவே உயர்நீதிமன்றம் என்ற உன்னதக் கோயிலை நாடுகின்றனர். கோயிலைக் காணும் போதே பக்தர்கள் எண்ணுவது போல வழக்காளிகளும் தமது பூசல் களைத் தீர்த்து வைக்கும் புனித இடத்தைச் சேர்கின்றோம் என்ற எண்ணத்தைப் பெறுகின்றனர். உயர் நீதிமன்ற ஆலைத் தினுள் நுழைந்து மாண்புமிகு நீதிபதிகளிடத்தில் தமது துயர் களைக் குறிப்பிடும் போது நியாயம் கிடைக்கும் என்ற உறுதி யையும் உரத்தையும் பெற்று அமைதி அடைகின்றனர் என் பதைக் காண்கின்றோம்.

உயர்நீதி மன்றத்தில் அமர்ந்து நீதி வழங்கும் மாண்புமிகு நீதிபதிகளும் கட்டிடத்தை அணி செய்யும் கோபுரங்கள் போல் உயர்நீதி மன்றக் கோயிலை அணிசெய்யும் எழில் மிகுந்த கோபுரங்கள் எனக் கருதப் படுகின்றனர். உயர்நீதி மன்றத் தலைமை நீதிபதியாக இருந்த சர். ஆர்தர் காலின்சு நீதிபதி முத்துசாமி அய்யர் மறைந்தபோது ''நீதிபதி முத்து சாமி நமது உயர் நீதிமன்றத்தின் எழில் மிகுந்த கோபுரம்'' என்று குறிப்பிட்டார் அவரது சிலை உயர்நீதி மன்றக்கட்டிடத் தின் நடுப்பகுதியில் அழகாக அமைந்துள்ளது. உச்ச நீதி மன்ற முன்னாள் நீதிபதி டி. எல். வெங்கிட்டராம அய்யர் அவர்கள் நீதிபதி முத்துசாமி அய்யரின் சிலை தரும் காட்சியையும் கருத்தையும் அவர்க்கே உரிய அழகிய நடையில் பின் வருமாறு வர்ணிக்கின்றார்.

''சென்னை மாநகர நடுவில் உயர் நீதிமன்றம் என்ற கலைக்கோவில் உள்ளத்தைக்கவறும் வகையில்அமைந்துள்ளது. அதன் நடுப்பகுதியில் வட்டவடிவில் உள்ள கூண்டில் ஒளி வீசும் அறிவுக் கூர்மை கொண்ட முத்துசாமி அய்யரின் சிலை அழகிய ஆசனத்தில் அமர்ந்துள்ளது. சிலை அமர்ந்திருக்கும் பகுதியை மக்கள் நீதி வழக்கும் கோயிலில் உள்ள ஒரு புனித இடம் எனக் கருதுகின்றனர். நீதியை வேண்டி உயர் நீதிமன்றத்தை நாடும்

மக்கள் சிலை முன் மிருந்த மரியாதையுடனும் பணிவுடனும் நின்று ''நீதி வேண்டுகின்றோம்'' என வணங்குகின்றனர். முத்துசாமி அய்யரின் சிலை நீதியின் அடையாளமாக மக்களுக்குத் தெரிகின்றது.''

இன்னும் பல நீதிபதிகளைப் பற்றிக் குறிப்பிட முடியும். நூலினுள் பல நீதிபதிகளின் வரலாறு அவர் நிகழ்த்திய சாதனைகள் அவர் தம் வாழ்க்கையில் நிகழ்ந்த சுவை மிக்க நிகழ்ச்சிகள் சுருக்கமாகத் தரப்பட்டிருக்கின்றன.

1862 ஆகஸ்டு திங்கள் *15*-ம் நாள் அன்று நமது உயர்நீதி மன்றம் செயல்படத் தொடங்கியது. உயர் நீதி மன்றம் தோன்றுவதற்கு முன் சென்னை மாநகரில் உச்ச நீதிமன்றம் (Supreme Court) என்ற பெயரில் ஒரு நீதிமன்றம் இயங்கியது. அது வெள்ளையரின் நீதி மன்றமாக இருந்தது. அதாவது அந்த உச்ச நீதி மன்றம் அன்று நம்மை ஆண்ட வெள்ளையாரால் வெள்ளையர்க்கென்றே ஏற்படுத்தப்பட்டு வெள்ளையர் நீதி மன்றமாக இயங்கிய போக்கைக் காண்கிறோம்: அன்று இயங்கிய அந்த உச்ச நீதிமன்றம் வெள்ளையருக்கு உயர்ந்த நீதியும் நமது பாநிலத்தின் உள்பகுதியில் இயங்கிய அதெலெத் நீதியன்றங்கள் இந்தியருக்குக் குறையுடைய நீதியும் வழங்கி வந்தன. சமமான நீதி எட்டாத நிலையில் இருந்தபோது உயா நீதிமன்றம் தோன்றி இந்தியர் வெள்ளையர் என்ற பாகுபாடின்றி எல்லோருக்கும் சமமான நீதி என்ற கனவை நனவாக்கியது வரலாற்றில் குறிப்பிடத்தக்கதாகும்.

உயர் நீதிமன்றம் தோன்றி எல்லோரும் சமமான நீதி பெற முடியும் என்ற நிலை தோன்றிய பின்னரும், வேறு சில நிலைகளில் சமமின்மை தொடர்ந்து இருந்து வந்தது. ஆங்கில நாட்டில் படித்து வந்த பாரிஸ்டர்களும், இந்திய வக்கீல்களும் உயர் நீதிமன்றத்தில் தொழில் நடத்தி வந்தனர். பாரிஸ்டர்கள் உயர்ந்த சாதியாகவும் இந்திய வக்கீல்கள் தாழ்த்தப்பட்ட சாதியாகவும் கருதப்பட்டனர். இன்று எண்ணும்போது அன்றிருந்த இந்தப் பாகுபாடு நமக்கு வியப்பாகவும வேதனையளிப்பதாகவும் இருக்கின்றது. இந்திய வக்கீல்களுக்குத் தனியாகத் தங்கும் அறை இல்லாதிருந்தது. அவர்கள் காலில் வெள்ளையர் அணியும் பூட்சு அணிய முடியாது. வக்கீல்கள் முதல் ஏற்பு வழக்குகளிலும், (Original Suits) இன்சால்வென்சி வழக்குகளிலும் ஆசராக முடியாது. எல்லாவற்றுக்கும் மேலாக இந்திய வக்கீல்கள் அட்வகேட் ஜெனரலாகவும், பப்ளிக்பிராசிகுயூட்டராகவும் ஆக முடியாது. சமுதாயத்தில் தீண்டப்படாத ஒரு சமுதாயம் இருந்தது போல் நீதித்துறையிலும் இந்திய

வக்கீல்கள் தீண்டப்படாதவர்கள் போல நடத்தப்பட்டு வந்தனர்.

இந்திய வக்கீல்கள் வெகுண்டெழுந்து தமக்கிழைக்கப் பட்ட கொடுமைகளை எதிர்த்துக்குரல் கொடுத்ததன் விளை வாக ஆங்கில பாரிஸ்டர்களுக்குச்சமமாக இந்திய வக்கீல்களும் நடத்தப்பட்டனர். பாரிஸ்டர்களுக்குக் கிடைத்த எல்லா வாய்ப்புக்களும் இந்திய வக்கீல்களுக்கும் கிடைத்தன. தொழி லில் பாரிஸ்டர்களுக்கு இணையாக இன்னும் சொல்லப் போனால் அவர்களையே பின்னுக்குத் தள்ளும் அளவுக்கு இந்திய வக்கீல்கள் பிரகாசித்தனர் என்றே கூறலாம். இதுவும் நமது உயர் நீதிமன்ற வரலாற்றில் குறிப்பிடத்தக்க செய்தி யாகும்.

உயர் நீதிமன்றம் தோற்றமெடுத்து 30 ஆண்டுகளாக கடற்கரைச்சாலையில் இருந்த சிறிய பழைய கட்டிடத்தில் இயங்கி வந்தது. அது 1892ம் ஆண்டுதான் இப்பொழுதுள்ள எழில் ததும்பும் பெரிய கட்டிடத்துக்கு மாற்றப்பட்டது. இந்தப் பொலிவும் வலிவும் வாய்ந்ததும் விண்ணையே தொட்டு நிற்பதுமான உயர் நீதிமன்றக் கட்டிடத்தின் திறவு கோலை அன்றைய ஆளுநர் உயர் நீதிமன்றத்தலைமை நீதிபதியிடம் ஒப் படைத்து ஆற்றிய உரையும், தலைமை நீதிபதி திறவுகோலை பெற்று அளித்த உறுதி மொழியும் இன்றும் படிப்பவர் களின் நெஞ்சையள்ளும்படியாக உள்ளன. "'இந்த நீதிமன்றத் தில் வகுப்பு, இனம், சமய வேறுபாடுகாட்டாது நீதி வழங்கக் கூடிய திறமையும் துணிவும் கொண்ட நீதிபதிகள் தொடர்ந்து அணி செய்ய வந்த வண்ணம் இருப்பர்''

என் 1892ல் தலைமை நீதிபதி அளித்த உறுதியும் நம்பிக் கையும் அவர் தனிப்பட்ட குடிமகனாக இருந்து அளித்ததாக நாம் கருதவில்லை. விலங்குகளுக்கும் நீதி உண்டு என்று எடுத்துக்காட்டிய பெருமைக்குரிய தமிழக நீதித்துறை வரலாறே அவரைப் பேச வைத்தது எனக் கருத இடமுண்டு.

இந்தியத் தாய்த்திரு நாடு 1947ல் ஆங்கிலேயரிடமிருந்து விடுதலை பெற்று முழு உரிமைபெற்ற சனநாயகக் குடியரசாக மலர்ந்த போது நமது உயர்நீதி மன்றம் என்றுமில்லாத அள வுக்குப் புதிய பொலிவையும் வலிவையும் அதிகாரங்களையும் அடைந்து மேலும் உயர்ந்தது. 6000 மைலுக்கு அப்பால் உள்ள ஆங்கிலப் பேரரசி 1862ல் வழங்கிய பட்டயத்தின்படி உருவான கல்கத்தா, பம்பாய் உயர்நீதிமன்றங்களைப் போல சென்னை உயர்நீதிமன்றமும் உருவான போதிலும் இந்திய அரசியல் சட்டமும் தான் பெற்ற குழவிகளில் ஒன்றாக இதை ஏற்றிருக்கின்றது. இந்திய அரசியல் சட்டம்5வது பகுதி 214 வது ஆர்ட்டிக்கிள் ''ஒவ்வொரு மாநிலத்திலும் ஒரு உயர் நீதிமன்றம் செயல்படும்'' என்று கூறுகின்றது.

பழம்பெருமையுடன் புதிய வலிவும் பெற்றுள்ளதால் நமது உயர்நீதிமன்றம் இந்திய நீதித்துறையில் ஒரு சிறந்த இடத் தைப் பெற்றுள்ளதைக் காண முடிகின்றது. ஆகவே தமிழக

உயர்நீதிமன்றத்திலிருந்து வெளிவரும் தீர்ப்புகள் இந்தியாவில் உள்ள பிற மாநிலங்களிலும், அமெரிக்கா, பிரிட்டன், ஆஸ்டிரேலியா, கானடா, நியூசிலாந்து போன்ற நாடுகளிலும் சிறப்பாகப் பேசப்படுகின்றன. பெருமளவுக்கு நமது உயர்நீதிமன்றம் வழங்கிய முன் தீர்ப்புகளில் காணப்படும் சட்டப்பொருள் விளக்கங்களும் முடிவுகளும் மதிக்கப்பட்டுப் பின்பற்றப்படுகின்றன.

1977-ம் ஆண்டில் அன்றைய தலைமை நீதிபதி திரு கைலாசம் அவர்கள் தமிழ்நாடு இலவச சட்ட ஆலோசனை இயக்கத்தை உயர்நீதிமன்றத்தில் துவக்கி வைத்தது வரலாற்றில் குறிப்பிடத்தக்க நிகழ்ச்சியாகும். நாட்டில் சாதாரண மக்களைக் கவ்வியுள்ள அநீதியை எதிர்த்து அவர்களுக்கும் நீதி நியாயம் கிடைக்கவே இலவச சட்ட இயக்கம் உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதியால் துவக்கப்பட்டுள்ளது என்பதை மக்கள் உணர்ந்துவருகின்றனர். மக்களைப் பாதிக்கும் தீங்குகளை அகற்றி சட்டம் நியாயம் ஆகியவைகளின் அடிப்படையில் தீர்வுகாண இலவச சட்ட இயக்கம் உயர்நீதிமன்ற உதவியுடன் முயன்று வருகின்றது. இங்ஙனம் உயர்நீதிமன்றம் மக்களின் நண்பன். மக்களுக்காகவே இயங்கிவருகின்றது. அரசும் மக்கள் மன்றமும் அதன் உயரிய பணிகளுக்குத் துணையாக நிற்க வேண்டுமென்று நியாய உணர்வுள்ள அனைவரும் எதிர்பார்க்கின்றனர்.

உயர்நீதிமன்ற நீதிபதி என்பது மிக உயர்வான பதவியாகும். மிக உயர்ந்ததும் நிறைந்த மதிப்பும் கொண்ட (Tne most exalted and dignified) பதவி என்பதில் அய்யமில்லை. உயர்நீதிமன்ற நீதிபதிகள்தான் உயர்நீதிமன்ற வரலாற்றைப் படைக்கும் சிற்பிகளும் நாயகர்களுமாகும். வழக்கறிஞர்களாகத் திறம்படத் தொழில் நடத்துபவர்களும், கீழமை நீதிமன்ற மூத்த நீதிபதிகளும் மிகவும் சிறப்புக்குரிய உயர்நீதிமன்ற நீதிபதியாக வரவேண்டுமென நினைப்பது இயல்பானதே. எல்லோருக்கும் அது சாத்தியமானதல்ல என்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தெளிவாக இருக்கின்றது. ஆனால் அத்தகையோர் உயர்நீதி மன்றத்தின் பெருமையையும் மரபுகளையும் உலகுக்குப் பறைசாட்டி நீதித் துறையின் உயர்வுக்குத் தமது பங்கைச் செலுத்துவது சாத்தியமானதாகும்.

உயர்நீதிமன்றத்தில் அமர வாய்ப்பில்லாத என் போன்றோர் உயர்நீதிமன்றத்தின் பெருமையை எடுத்துக் கூறும் வாய்ப்புப் பெற்றவர்களாக இருக்கின்றோம். அமெரிக்க உச்சநீதிமன்ற நீதிபதி பிளேக் பெரும்பான்மையான மக்கள் நீதிமன்றங்களைப் புரிந்து கொள்ளாதவர்களாக இருக்கின்றனர் என்பார். (The Courts are Seldom understood - Justice Blake of U.S.A. Supreme Court). மக்கள் நீதிமன்றங்களைப் புரிந்து கொள்ளும்படியாகச் செய்யும் பணியில் இந்நூல் மூலமாக எனது சிறியடணிவான பங்கைச் செலுத்த வாய்ப்புப் பெற்றிருக்கின்றேன். தமிழகத்தின் பொற்காலம் என வர்ணிக்கப்படும் சங்ககாலத்தில இயங்கி வந்த நீதிமன்றங்களைப்

பற்றிய தனி வரலாறு நமக்குக் கிடைக்கவில்லை. ஆனால் அவைகள் அறங்கூர் அவையங்கள் என்றே பேசப்படுகின்றன. உயர்ந்த நேர்மை நெறிகளை (Doctrine of Equity) ப்பின் பற்றி இயங்கிவந்துள்ளன என்பதை அறிகின்றோம். அன்றைய தமிழகநீதிமன்றங்களுக்கும் இன்றைய தமிழக உயர்நீதிமன்றத்துக்கும் இடையே 2000 ஆண்டுகள் குறிக்கிட்டாலும், அவைகள் பின்பற்றி வந்த அறநெறிகள் இரண்டையும் இணைக்கின்றன, என்பதை மறந்து விடக்கூடாது.

இந்நூலுக்கு என்றும் போல் பெரிய உள்ளம் படைத்த மாண்புமிகு நீதிபதி இரத்தினவேல் பாண்டியன் அவர்கள் அணிந்துரை வழங்கியுள்ளார். அவரது அணிந்துரை எல்லோரும் விரும்பிப் படிக்கும் தன்மை கொண்டது. தனது அளப்பரிய சட்டப்புலமையையும், மிகுந்த அனுபவத்தையும் குழைத்து அணிந்துரை என்னும் அழகான பொட்டை நூலின் நெற்றியில் வைத்துள்ளார். அமெரிக்க நீதிபதி வெண்டல் கோம்சு சட்டத்தையே இலக்கியச் சுவையுடன் விளக்குவதில் வல்லவர் என்பதை நாம் அறிவோம். மாண்புமிகு நீதிபதி இரத்தினவேல் பாண்டியன் அவர்களும் சட்டத்தை இலக்கியக் கண் கொண்டு பார்க்கும் பெற்றி வாய்ந்தவர். இலக்கியச் சுவையுடன் அவர் வழங்கியுள்ள அணிந்துரைக்காக எனது அன்பு கலந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

பேராசிரியர் ந. சஞ்சீவி அவர்களும் நல்ல அணிந்துரை வழங்கியுள்ளார். அவர் சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் இலக்கியத் துறைத் தலைவர் ஆவார். எதையும் ஒளிக்காது தன் உள்ளத்தில் பட்டதைத் துணிவுடன் வெளிப்படுத்தும் செம்மை சான்ற பெரும்புலவர் பேராசிரியர் சஞ்சீவி அவர்களுக்கும் எனது அன்பு கலந்த நன்றியை உரித்தாக்குகின்றேன்.

இந்த நூலை எழுத எனக்குப் பச்சைக் கொடி காட்டி ஊக்குவித்தவர் குஜராத் மாநில உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி மாண்புமிகு நீதிபதி கோகுலகிருஷ்ணன் ஆவார்கள். அவருக்கும் எனது பணிவான அன்பு கலந்த நன்றியைத் தெரிவிதது‌க் கொள்ளுகின்றேன்.

சென்னை உயர்நீதிமன்ற நூல்நிலையத்திலிருந்து சில நூல்களைப் படிக்க அருள்கூர்ந்து அனுமதி வழங்கிய உயர்நீதிமன்றப் பதிவாளர் உயர்திரு. ஜனார்த்தனம் அவர்களுக்கும் எனது அன்பு கலந்த நன்றி.

நூலை நல்ல முறையில் அச்சிட்ட திருவல்லிக்கேணி லாயல் அச்சகத்தாருக்கு எனது நன்றி.

குறள் இல்லம்
16, காரனீசுவரர் கோயில் வீதி
மயிலை, சென்னை-4

அன்பன்
சி. இராமகிருட்டினன்

1. நீதித்துறையில் புதிய பாதை

(1600 - 1800)

எல்லோருக்கும் சமமான நீதி என்பதையே குறிக்கோளாகக் கொண்டு சென்னையில் உயர்நீதி மன்றம் தோன்றுவதற்குமுன் எத்தகைய நீதிமன்றங்கள் இயங்கின, அவைகள் வழங்கிய நீதி எத்தகையது, எப்படிப்பட்டவரால் அந்த நீதி வழங்கப்பட்டது என்பதையெல்லாம் அறிந்து கொள்வது நமது ஒப்பற்ற உயர்நீதி மன்றத்தின் சிறப்பையும் பெருமையையும் புரிந்து கொள்ளப் பயன்படும். 1600 க்குப் பிறகு நீதித்துறையில் புதிய நிலையையே நாம் காணப் போகின்றோம். புதிய நிலை எனக் குறிப்பிடுவதற்குக் காரணம் உண்டு. 1600 க்கு முன் நம் நாட்டில் நிலவிய நீதியில் அந்நியரின் வாசனை கலக்கவில்லை. 1600 க்குப் பின்னர் ஆங்கிலேயரின் கண்ணோட்டமும் நம் நீதி முறையில் இணைந்ததால் சில மாற்றங்கள் தோன்றின. அந்த மாற்றங்களைக் கவனத்தில் கொண்டே புதிய நிலை என்று குறிப்பிட நேர்ந்தது.

இலண்டன் மாநகரத்தில் தோன்றிய வணிகர் குழு ஆசிய நாடுகளில் வணிகத்தைத் துவக்கிப் பெரும் இலாபம் அடைய முயற்சிகளை மேற்கொண்டது. இந்திய மண்ணில் சூரத், மசூலிப்பட்டணம், சென்னை போன்ற இடங்களில் வணிகக் குடியிருப்புகளை கிழக்கிந்திய வணிகர் குழு தோற்றுவிக்கும் வாய்ப்பையும் பெற்றது. வணிகம் செய்து இலாபத்தைக் குவிப்பதுடன் நின்றுவிடவில்லை அவர்கள். அன்று போர்ப்பரணி பாடிக் கொண்டிருந்த இந்திய அரசுகளையும் அப்பாவி மக்களையும் கண்ட ஆங்கில வணிகர் குழுவும் அதன் ஆளுநரும் ''வணிகமும் செய்வோம், இயன்றால் ஆட்சியையும பிடிப்போம்'' என்ற ஆவலை வளர்த்துக் கொண்டனர். 6000 கல் தொலை தூரத்தில் இருந்த ஆங்கில நாட்டு அரசும் கிழக்கிந்திய வணிகர் குழுவுக்குப் பச்சைக் கொடி காட்டியதுடன் அதற்கான அதிகாரங்களையும் வழங்கியது. ஆகவே வணிக நோக்குடன் இந்திய மண்ணில் காலடி வைத்த கிழக்கிந்தியக் குழு இங்கு நிலவிய அரசுகளை மண்ணில் சாய்த்து நிலத்தைப் பண்படுத்தி ஆங்கில சாம்ராஜ்யம் செழித்து வளர விதைகளைத் தூவினர்.

1430 வாக்கில் புலிக்காடுவிலிருந்து சாந்தோம் வரை உள்ள நிலப்பகுதி தர்மாலா வெங்கிட்டாத் திரி என்ற குறுநில மன்னன் கையில் இருந்தது. கிழக்கிந்திய குழுவின் குடியிருப்புத் தலைவராக இருந்த (President of English Settlements) பிரான் சிஸ்டே என்பவர் குறுநில மன்னனை அணுகி "மன்னர்பிரானே கடற்கரை ஓரத்தில் எங்கள் ஆட்கள் குடியிருக்க இடம் கிடைத் தால் நல்லது. கடலிலிருந்து ஆட்களும் பண்டங்களும் கரையில் இறங்கவும், கரையில் இருந்து பின்னர் ஆட்களும் பண்டங் களும் கடலில் இறங்கவும் வசதியாய் இருக்கும். அருள் கூர்ந்து அனுமதி வழங்கவும்" என்று மிகுந்த பணிவுடன் கேட்டுக் கொண்டார். வெள்ளை நிறம் படைத்தவர்கள் தன்னிடம் பணிந்து கேட்கின்றார்களே எனப் பெருமிதமடைந்த வெங்கிட்டாத் திரியும் "என் தகப்பனார் சென்னப்பன் பெயரால் நீர் கேட்கும் இடத்தைத் தானமாகத் தந்து விட் டோம்" எனக் கூறினான். விளைவு செயின்ட் ஜார்சு கோட்டை உருவாயிற்று. வணிகத்தின் பொருட்டு வந்த வெள்ளைக்கார மக்கள் கோட்டைக்குள் பாதுகாப்பாகக் குடியேறினர்.

அ. "சவுல்ட்டரி நீதிமன்றம்"

அப்படிக் குடியேறிய மக்களிடையே எழும் சிறிய பூசல் களைத் தீர்க்கவும் குற்றம் செய்தவர்களைத் தண்டிக்கவும் முதன் முதலில் தோன்றிய நீதிமன்றம் சவுல்ட்டரி நீதிமன்றம் என்பதாகும். 31-12-1600 ல் முதலாம் எலிசபெத் அம்மையார் வழங்கிய பட்டையமும், 31-5-1609 ல் முதலாம் சேம்ஸ் வழங்கிய பட்டையமும் (Charter) கிழக்கிந்திய வணிகர் குழு வுக்கு ஆங்கிலக் குடியிருப்பில் வாழும் எவராவது குற்றம் செய்தால் அதைத் தண்டிக்கும் அதிகாரத்தை வழங்கின. குழுவின் நான்காவது உறுப்பினர் நீதிமன்றத்தின் தலைவரா கவும் இருந்தார். சவுல்ட்டரி நீதிமன்றம் சிறுசிவில் வழக்கு களையும், சிறிய குற்ற வழக்குகளையும் விசாரித்தது. ஆனால் இங்கு ஆங்கிலேயரிடையே எழுந்த பெரிய வழக்குகளை ஆங்கில நாட்டில் உள்ள நீதிமன்றங்களே விசாரிக்க இயலும் என்ற நிலையும், இந்தியரிடையே எழுந்த பெரிய வழக்குகளை இங்குள்ள நாயக்குகளே விசாரிக்கலாம் என்ற நிலையும் இருந்தது குறிப்பிடத்தக்கதாகும். பெரிய வழக்குகளை எடுத்து விசாரிக்க சவுல்ட்டரி நீதிமன்றத்துக்குப் போதுமான தகுதியுமில்லை. மேலும் வணிகர் குழுவுக்கு வணிகமே முக்கிய மான பணியாக இருந்ததால் பெரிய வழக்குகளை விசாரிக்கு மளவுக்கு நேரத்தை ஒதுக்கவும் இயலவுமில்லையென்பதும்

காரணமாக இருந்தது. அத்துடன் ஆங்கில நாட்டுச் சட்டப்படி வழக்குகளை நடத்த முடியுமா என்ற அய்யமும் இருந்தது.

ஸ்டிரீன்சாம் மாஸ்டர் சென்னை ஆளுநராக வந்தபோது இந்தக் குறைபாட்டை உணர்ந்தார். 3-4-1661 ல் இரண்டாவது சார்லசு வழங்கிய பட்டையம் குழுவும் அதன் ஆளுநரும் சிவில், குற்ற வழக்குகளை ஆங்கில நாட்டுச் சட்டத்தின் அடிப்படையில் விசாரித்துத் தீர்ப்பு வழங்கலாம் என்றும் தீர்ப்புகளை நிறைவேற்றவும் செய்யலாம் என்றும் அதிகாரம் கொடுத்துள்ளதை கவனத்தில் எடுத்துக் கொண்டார். முதலில் சவுல்ட்டரி நீதிமன்றத்தின் நீதிபதிகளின் எண்ணிக்கையைக் கூட்டினார். அவர் போட்ட உத்திரவில் இரண்டுக்கும் மேல் பட்ட நீதிபதிகள் ஒவ்வொரு செவ்வாய்க் கிழமையும் வெள்ளியும் சவுல்ட்டரி நீதிமன்றத்தில் உட்கார்ந்து வழக்குகளை நடத்த வேண்டுமென்றும், அவர்கள் நகரத்தில் வழக்கத்தில் இருக்கும் பொது நீதியே வழங்க வேண்டுமென்றும் (Common justice of the Town as usual). நீதிமன்ற எழுத்தர் நீதிமன்றம் வழங்கும் தண்டனைகளை போர்த்துக்கீசிய மொழியிலேயே முன்போல் பதிவு செய்ய வேண்டும் என்றும் குறிப்பிட்டிருந்தார். நகரத்தில் வழக்கத்தில் இருக்கும் பொது நீதியே வழங்க வேண்டுமென்பதும், போர்த்துகீசிய மொழியிலேயே தண்டனைகள் முன்போல் பதிவு செய்யப்பட வேண்டுமென்பதும் ஆளுநர் படிப்படியாக நீதித் துறையில் மாற்றம் செய்யவேண்டுமென்ற எண்ணத்துக்கு எடுத்துக்காட்டுக்கள் எனக் காண்கின்றோம்.

சவுல்ட்டரி நீதிமன்றத்தை ஒரு தகுதியான நீதிமன்றம் எனக் குறிப்பிட முடியாது. சட்டத்தில் புலமை பெற்றவரும் நீதிபதியாகப் பணியாற்றத் தகுதி பெற்றவரும் அந்த மன்றத்தில் நீதிபதியாக பணியாற்றவில்லையென்பதே காரணமாகும். சவுல்ட்டரி நீதிமன்றம் சிறு சிறு குற்ற வழக்குகளையும், உரிமை வழக்குகளையும் கூட விசாரிப்பதற்குத் தகுதியற்றது என்பதையே ஆளுநர் முடிவாகக் காண நேர்ந்தது. இந்த நிலையில் அந்த நீதிமன்றத்தைத் தீர்ப்புகளை நிறைவேற்றும் மன்றமாக (Court of Execution) வைத்துக்கொண்டு ஒரு தகுதி வாய்ந்த நீதிமன்றத்தை விரைவில் உருவாக்குவதே நீதித் துறையில் காண வேண்டிய பயனுள்ள பணியென உணர்ந்த ஆளுநர் கிழக்கிந்திய கம்பெனிக்கு அதற்கான வாய்ப்புண்டா என்பதை ஆராயத் தொடங்கினார். 3-4-1661ல் இரண்டாம் சார்லசு வழங்கிய பட்டயமே கம்

பெனிக்கு அந்த வாய்ப்பைத் தந்துள்ளது என்பதைக்கண்டார். ஆளுநரும் ஆட்சிக் குழுவும் தம் அதிகாரத்தின் கீழ் வாழும் குடிமக்களிடையே எழும் எல்லா குற்ற வழக்குகள் உரிமை வழக்குகளில் ஆங்கில நாட்டில் நிலவும் சட்டங்களின் அடிப் படையில் விசாரித்து நீதி வழங்கலாம் என அந்தப் பட்டையம் கூறுகின்றது. இப்படி பரந்தபட்ட அதிகாரத்தைப் பட்டயம் வழங்கியுள்ளதால் அதையே பயன்படுத்திப் புதிய அத்தியாயத் தைத் தொடங்குவோம் என ஆளுநர் எண்ணியதில் வியப் பில்லை. மேலும் இரண்டாம் சார்லசு 27-3-1669 லும், 16-12-1674 லும் வெளியிட்ட இரண்டு பட்டயங்களும் கம் பெனி நீதித் துறையில் புதிய மாற்றங்கள் செய்யும் அதிகாரத் தைக் கொடுத்திருந்தன. நீதிபதிகளை நியமிக்கவும் சில வழக் குகளில் மரண தண்டனை அளிக்கவும் தேவைப்பட்டால் அதற்குத் தகுதியான முறை மன்றங்களை உருவாக்கவும் கம் பெனி சட்டங்கள் செய்யலாம் என அப்பட்டயங்கள் கூறின.

ஆ. ''நீதி வழங்கும் முறை மன்றம்''
(Court of Judicature at Madras)

சென்னையில் 1678 மார்ச்சில் நீதி வழங்கும் முறை மன்றம் தோற்றமெடுத்தது. இதற்கு முன்பு இயங்கிய நீதி மன்றங்கள் குறிப்பாக சவுல்ட்டரி நீதிமன்றம் பெயரளவில் நீதிமன்றம் என இயங்கி வந்தன என்பது புரிகின்றது. 9-8-1683ல் இரண்டாம் சார்லசு மீண்டும் வழங்கிய பட்டயம் சட்டத்தில் புலமை பெற்றவர் ஒருவரும், இரண்டு வணிகப் பெருமக்களும் இந்த நீதிமன்றத்தில் உட்கார்ந்து நேர்மை நெறி (Eguity), நல் உளச்சான்று, வணிகர் சட்டங்கள், வழக்கங்கள் ஆகியவைகளின்படி நீதி வழங்கக் கம்பெனி செயல் படும் அதிகாரத்தை நேரடியாகத் தந்தது. ஆகவே ஆளுநரும் ஆட்சிக் குழுவும் சட்டத்தில் புலமை பெற்ற ஒருவரை ஆங்கில நாட்டிலிருந்து வரவழைத்தனர். சர். சான்பிரிக்சு என்பவரே அவர். அவர் ஆங்கில நாட்டில் பிளைமவுத் என்ற இடத்தில் ரிக்கார்டர் என்ற பணியில் இருந்த சட்டத்தில் புலமை பெற்ற வழக்கறிஞர். சட்டத்தை முறையாகப் பயின்று தேர்ந்த ஒருவர் சென்னையில் உள்ள நீதிமன்றத்தில் நீதிபதியாகப் பணிபுரிய முதல்முறையாக வந்தவர் சான்பிரிக்சு என்பதுதான் குறிப்பிடத் தக்கதாகும். அவர் சட்டத்தில் தேர்ந்தவர் என்பதைக் குறிக்கவே அவரை நீதிபதி வழக்கறிஞர் (Judge—Advocate) என்றே அழைத்தனர். மரண தண்டனையும் கூட வழங்க அதிகாரம் படைத்த அவர் கொலை வழக்குகளையும் நடத்தத் தொடங்கினார்.

பின்னால் மேயர் நீதிமன்றம் முக்கியத்துவம் பெற்றபோது இந்த நீதிமன்றம் சிறிது செல்வாக்கை இழந்தாலும், சட்டத் தில் புலமை பெற்றவர் நீதிபதியாக இருந்ததால் அதிகார வட்டாரங்கள் இதற்குரிய மதிப்பைக் கொடுக்கத் தவற வில்லை. நீதிபதி வழக்கறிஞர் என்பவரைத் தவிர இன்னும் நான்கு நீதிபதிகளையும் இந் நீதிமன்றத்துடன் இணைத்தனர். அய்ந்து நீதிபதிகளின் பட்டியலில் அள்ளிங்கால் பிள்ளை என்ற ஒரு இந்திய நீதிபதியும் இடம் பெற்றது வியப்பையும் அதே வேளையில் நமக்குப் பெருமையும் தருகின்ற செய்தியாகும்.

இ. ''மேயர் நீதி மன்றம்'' 1688 - 1799

கிழக்கிந்தியக் கம்பெனி இந்திய மண்ணில் ஒரு வலிவு பெற்ற அரசாக மலர்ந்தபோது ஆறாயிரம் கல் தொலைவில் உள்ள ஆங்கில மன்னரையோ அரசியையோ ஒவ்வொன்றுக் கும் எதிர் நோக்காது தாமே தேவைப்பட்டால் பட்டயம் வழங்க முடிவு செய்தனர். செயின்ட்ஜியார்சு கோட்டையைச் சுற்றிச் சுமார் பத்து கல் தொலை தூரத்துக்குள் அமைந்துள்ள பகுதியை சென்னை மாநகரம் எனப் பெயரிட்டு அதை மாநகராட்சி எனவும் உருவாக்கினர். 30-12-1687ல் கம்பெனி யார் வெளியிட்ட பட்டயத்தின் அடிப்படையில் 1688ல் மேயர் நீதிமன்றம் தோன்றியது. மேயரும் ஆல்டர்மென் எனப் பட்டோரும் மேயர் நீதிமன்றத்தில் அமர்ந்து நீதி வழ்ங்கினர். அவர்கள் ''அமைதி காக்கும் நீதிபதிகள்'' என அழைக்கப் பட்டனர். மேயர் நீதிமன்றம் மதிப்புறுத்து நீதிமன்றம் (Court of Record) ஆகவும் கருதப்பட்டது, சிந்தனைக்குரிய தாகும். தனது அதிகாரத்தை யாரேனும் அவமதித்தால் அதற்குத் தண்டனையோ அல்லது அபராதமோ விதிக்கும் அதிகாரம் பெற்ற நீதி மன்றத்தையே மதிப்புறுத்து நீதிமன்றம் (Court of Rocord) எனக் குறிப்பிடுவது வழக்கம். பத்துமைல் சுற்றளவுக்குள் இருந்த அன்றைய சென்னையில் வாழ்ந்த ஆயுதம் ஏந்தாத மக்களிடையே எழுந்த உரிமையியல் குற்ற வியல் வழக்குகள் அனைத்தையும் சுருங்கிய முறையில் விசாரித்து தண்டனை விதித்துத் தீர்ப்பு வழங்கவும், தீர்ப்பை நிறைவேற்றவும் மேயர் நீதிமன்றம் அதிகாரம் படைத் திருந்தது.

உரிமையில் வழக்குகளில் அன்று புழக்கத்தில் இருந்த மூன்று பகோடாப் பணமும் அதற்குக் கீழும் எதிர்வாதி வாதிக்குத் தரவேண்டுமென மேயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தால், அந்தத் தீர்ப்பே முடிவானது. மேல் முறையீடு செய்ய முடியாது.

தீர்ப்பு மூன்று பகோடாப் பணத்துக்கும் மேலிருந்தால், கடலாண்மை நீதிமன்றம் எனப் பொதுவாக அழைக்கப்படும் (Court of Admiralty) உச்ச நீதிமன்றத்துக்கு (Supreme Court of Judicature) மேல் முறையீடு செய்யலாம். குற்றவியல் வழக்குகளில் மேயர் நீதிமன்றம் மரணதண்டனை அல்லது உடலுறுப்பைச் சிதைக்கும் தண்டனை வழங்கினால் அதை எதிர்த்து உச்ச நீதிமன்றத்துக்கு மேல் முறையீடு செய்து கொள்ள முடியும். மேல் முறையீட்டில் உச்ச நீதிமன்றம் மீண்டும் வழக்கைத் திரவிசாரித்து முடிவு செய்யும் தகுதி பெற்றிருந்தது. மேயர் நீதிமன்றம் பதினைந்து நாட்களுக்கு ஒரு நாள் இயங்கி வந்தது. இந்நிலையில் சிறு வழக்குகளை விசாரிக்க மூன்று ஆல்டர்மென்களில் இருவர் சவுல்ட்டரி நீதிமன்றத்தில் வாரத்துக்கு இரு நாட்களில் உட்கார்ந்து நீதி வழங்கவும் ஏற்பாடு செய்யப்பட்டது. அவர்கள் இரண்டு பகோடாவுக்கும் குறைந்தே அபராதம் விதிக்கும் அதிகாரம் பெற்றிருந்தனர். பெரிய வழக்குகள் அவர்கள் முன் வந்தால் அவைகளை மேயர் நீதிமன்றமே விசாரிக்க இயலும் என அங்கு அனுப்பி விடுவர்.

கிழக்கிந்தியக் கம்பெனியின் பட்டயத்தின்படி மேயர் நீதிமன்றம் இயங்கி வந்தாலும் அது ஆங்கிலப் பேரரசின் முத்திரையையும் பெறத் தவறவில்லை. அந்த நீதிமன்றம் இயங்கத் தொடங்கி 40 ஆண்டுகளுக்கு அப்புரம் 24-9-1726ல் ஆங்கில அரசு இலண்டன் மாநகரிலிருந்து வெளியிட்ட பட்டயம் சென்னை மாநகராட்சிக்கும், மேயர் நீதிமன்றத்துக்கும் தெம்பையும் புதிய வலிவையும் தந்தது. சென்னை நகரத்துக்கும் புனித ஜியார்சு கோட்டைக்கும் என ''செரிப்'' என்ற புதிய பதவி உருவாக்கப்பட்டது. செரிப் பதவியில் அமர்பவர் மேயர் நீதிமன்றத்துக்கு உதவியாய் இருப்பார். மேயர் நீதி மன்றத்தின் நடை முறையும் சீராக்கப்பட்டது. முறை வேண்டி மேயர் நீதிமன்றத்தை ஒருவர் அணுக விரும்பினால் அவர் தனது வழக்கை மனுவடிவில் எழுதித்தரவேண்டும். எதிர்வாதி சென்னை நகருக்குள் குடியிருப்பவராகவோ அல்லது இருவருக்கும் இடையில் பூசல் எழுந்தபோது குடியிருந்தவராகவோ இருக்கவேண்டும். எதிர்வாதிக்கு அழைப்பாணை இரண்டு நீதிபதிகளின் கையொப்பமிட்ட முத்திரையுடன் அனுப்பப்படும். அழைப்பாணை செரிப்புக்குப் போய்ச்சேரும். குறிப்பிட்ட நாளில் எதிர்வாதி நீதிமன்றத்தில் தோன்றி மனுதாரர் கூறியுள்ள வழக்கை எதிர்த்தோ அல்லது ஏற்றோ

வாதாடலாம் என அழைப்பாணையில் குறிப்பிட்டு செரிப் அனுப்புவார். அழைப்பாணையைப் பெற்று எதிர்வாதி நீதி மன்றம் வரவில்லையென்றால் அவரை நீதிமன்றத்துக்கு இழுத்துவர செரிப்புக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருந்தது.

புதிய அதிகாரம் படைத்த இந்த மேயர் நீதிமன்றம் 17-8-1727 ம் அன்று தன் பணியைத் துவங்கியது. இதுமாதிரி வேளைகளில் கோலாகலமான விழாவும் கண்களைப் பறிக்கும் சோடனையும் இடம் பெறுவது இயல்பாகும். ''இன்றைய சூரிஸ்டு'' (The Modern Jurist) என்ற புத்தகத்தில் கோலாகல மான அந்த விழா பின்வருமாறு வர்ணிக்கப்பட்டுள்ளது.

''அன்று நீதித்துறையைச் சேர்ந்த அனைவரும், நீதித் துறையில் அக்கறை கொண்டோரும் அயலண்டு மைதானத்தில் ஒன்று கூடினர். பெரும்பாலோர் குதிரைகள் மீது அமர்ந்திருந் தனர். ஊர்வலம் கம்பெனியின் அரண்மனைப் பூங்காவை நோக்கி நகர்ந்தது. ஊர்வலத்தில் பல்வேறு குழுக்கள் சீறுடை யுடன் வரிசை வரிசையாய் ஆரோகணித்துச் சென்ற காட்சி கண்களுக்கும் கருத்துக்கும் விருந்தாக இருந்தது.

முதலில் மேசர் சான்ரோச் கம்பீரமாக சிங்காரக்குதிரை யின் மேல் அமர்ந்து கடிவாளத்தை இறுக்கிப் பிடித்தவண்ணம் மெதுவாக நகர்ந்தார். குதிரையின் காலடி ஓசையும் இராணுவ வீரர்கள் எழுப்பிய இனிய ஓசையுடன் சேர்ந்து கொண்டது. மேசரின் வீரர்கள் குதிரையைத் தொடர்ந்து இராணுவ இசையை முழக்கிய வண்ணம் சென்றனர். அவர்களது வீர நடையும் இராணுவ இசையும் பார்ப்பவரின் உள்ளத்தில் கிளர்ச்சியை உண்டு பண்ணின. அவர்களைத் தொடர்ந்து அழகிய நடன நங்கைகள் ஒய்யாரமாக நடனமாடியபடி சென்றனர். அவர்களது மெல்லிய கால்கள் இசைக்கேற்ப நடனமிட்டு நடைபயில கால் சலங்கைகளோ சலக் சலக்கென தாளமிட்டன. பெரியநாயக் தனது சிற்றாள்களுடன் குதிரை மீதும், மார்சல் தனது பரிவாரங்களுடன் குதிரைமீதும், நீதி மன்றப் பதிவாளர் பழைய பட்டயத்தைத் தாங்கியவண்ணம் குதிரைமீதும் அமர்ந்திருந்தனர். பதிவாளரின் இருமருங்கும் பழைய மேயரும், புதிய மேயரும் குதிரைகள்மீது அமர்ந்து சென்றனர். ஊர்வலத்தின் பின்பகுதியில் கம்பெனியின் பணி யாட்களும் நகரத்தின் நம்பிகளும் நிரம்பியிருந்தனர்.

கண்களுக்கு விருந்தளித்தபடி மெதுவாக நகர்ந்த இந்த ஊர்வலம் பூங்காவைச் சென்று அடைந்ததும் ஆளுநரும் ஆட்சி

குழுவும் வரவேற்றனர். புதிய மேயர் நீதிமன்றத்தில் அமரப் போகும் புதிய மேயருக்கும் ஆல்டர்மேன் ஆகியோருக்கும் ஆளுநர் பதவிப்பிரமாணம் செய்துவைத்தார். ஆளுநர் பழைய மேயரிடமிருந்து முன்னாள் பட்டயத்தைத் திருப்பிப் பெற்றுப் புதிய பட்டயத்தைப் புதிய மேயரின் கைகளில் ஒப்படைத்த பிறகு விழா இனிது முடிந்தது.''

இப்படிப் புதிய தோரணையுடன் அமைக்கப்பட்ட மேயர் நீதிமன்றம் 18 ம் நூற்றாண்டின் பிற்பகுதி வரையிலும் ஓரளவுக்குச் சிறப்புடன் செயல்பட்டுவந்தது. ஆனால் அதன் சிவில் அதிகாரம் மேலை நாட்டுக் குடிமக்கள் மீதே இருந்தது. இந்தியர்கள் தாமாகவே ஏற்றால் ஒழிய மேயர் நீதிமன்றம் அவர்களிடையே எழும் உரிமை வழக்குகளை விசாரிக்கும் அதிகாரம் பெறாமல் இருந்தது. செரிப் முன்போலவே மேயர் நீதிமன்றத்தின் அழைப்பாணைகளை உறியவர்களுக்குச் சேர்த்துவதும், சேர்த்திய பிறகு அறிக்கை தருவதும் ஆன பணியைச் செய்து வந்தார். அத்துடன் செரிப்புக்கும் இன் னொரு பணியும் தானாகவே வந்து சேர்ந்தது.

ஆளுநரும் ஆட்சிக்குழுவின் மூத்த அய்ந்து உறுப்பினர்களும் அமைதி காக்கும் நடுவர்களாகவும் இருந்தனர் என்பதை முன்னரே பார்த்தோம். அவர்களுடன் ஓயர், டெர்மினர் ஆணையர்ளும் இருந்து அமர்வு வழக்குகளை விசாரித்து வந்தனர். அரசுப்பகை மூட்டும் குற்றச்சாட்டைத் தவிர (Except Treason) மற்ற குற்ற வழக்குககளையும் விசாரிக்கும் வாய்ப்பையும் பெற்றிருந்தது. மேயர் நீதிமன்றம் இட்ட பணி களைச் செய்ததுபோல் அமைதிகாக்கும் நடுவர் மன்றம் இடும் ஆணைகளையும் செரிப் நிறைவேற்றிவந்தார். நடுவர் நீதி மன்றத்தின் முன் குற்றவாளிகளைக் கொண்டு வர ஏற்பாடு செய்வதும் நடுவர்களுடன் இருந்து பணிபுரியும் முறை காண் ஆயத்தினர் ((Grand Jury) ஆகியோரை வரவழைப்பதும் செரிப் செய்யவேண்டிய வேலையாகும்.

உரிமை வழக்குகளை விசாரித்த மேயர் நீதிமன்றம் சாதாரண மக்களுக்குச் சிறிது எட்டாத தூராத்தில் இருந்தது. அந்த நீதிமன்றத்தை நாடி சிவில் வழக்குகளில் தீர்ப்புப் பெறு வது நிரம்பச் செலவு பிடிக்கும் செயலாக இருந்ததால் சிறு கடன்களைக் குறித்து எழும் வழக்குகளையும், செலவு செய்ய இயலாதஏழைமக்கள்கொண்டுவரும்வழக்குகளையும்விசாரிக்க வகை காண வேண்டுமென்று அரசு முடிவு செய்தது. அமைதி

காக்கும் நடுவர்களையே சவுல்ட்டரி நீதிமன்றத்திலும் அமரச் செய்து 20 பகோடாவும் அதற்கும் கீழ் மதிப்புள்ள வழக்கு களை விசாரிக்கச் செய்யலாம் என்ற திட்டம் அரசின் முன் வைக்கப்பட்டது. அத்திட்டத்தைப் பரிசீலனை செய்தபோது அதை அமுல் செய்வதில் ஒரு இக்கட்டான நிலை தோன்றக் கூடும் என்பது புரிந்தது. அமைதி காக்கும் நடுவர் என்போர் தலைவரும் மூத்த ஆட்சிக் குழுவினரும் ஆகும். அவர்கள் தான் கம்பெனியின் உச்சாணியில் உள்ளவர்கள். அவர்கள் சவுல்ட்டரி நீதிமன்றத்தில் அமர்ந்து விசாரிக்கும் சிவில் வழக்கு களில் வழங்கும் தீர்ப்புகளுக்கு எதிராக மேல் முறையீடுகள் மேயர் நீதிமன்றத்துக்கு எடுத்துச் செல்லப்படும் எனச்சட்டம் கூறுகின்றது. இது அவர்களுக்கு உடன்பாடாக இருக்க முடியாது. கம்பெனியின் கீழ் நிலையில் பணிபுரிகின்றவர்கள் கம்பெனியின் உச்சத்தில் இருப்பவர்கள் வழங்கும் தீர்ப்பு சரியானதா என்பதை முடிவு செய்ய அனுமதிப்பது முறையாகாது. ஆகவே அந்தப்பணி செரிப்பின் தலைமேல் ஏற்றப்பட்டது. செரிப் நீதிமன்றம் சிறுவழக்கு நீதிமன்றம் (Court of Small Causes) ஆகச் செயல்படும் என்றும், 20 பகோடாத் தொகைக்கும் கீழ் மதிப்புள்ள வழக்குகளை அவரே விசாரிப்பார் என்றும் அவரது தீர்ப்புக்கு எதிராகமேல் முறையீடு மேயர் நீதி மன்றத்தில் செய்து கொள்ளலாம் என் றும் பிரகடனம் செய்யப்பட்டது நீதித்துறை வரலாற்றில் ஒரு இடைக்கால ஏற்பாடாகவே கருதப்பட்டது எனலாம். செரிப்பை நீதிபதியாகக் கொண்ட சிறுவழக்கு நீதிமன்றம்மிகக் குறுகிய காலமே செயல்பட்டு 1729ல் அதன் காலம் முடிந்தது. வேண்டுகோள் நீதிமன்றமும் (Court of Requests) இதே பணியைச் செய்து வந்தது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

1753 லும் மேயர் நீதிமன்றம் புதிப்பிக்கப்பட்டதைக் காண்கின்றோம். 1726 ல் மேயர் நீதிமன்றத்துக்குக் கொடுக்கப் பட்ட அதிகாரங்கள் ஒருபுறமிருக்க 1753 லும் அதிகாரங்கள் அளிக்கப்பட்டன. உயில் சம்பந்தமாகவும் மேயர் நீதிமன்றம் அதிகாரம் பெற்றது. சென்னைப்பட்டண எல்லைக்குள்ளே அல் லது புனித ஜியார்சுக்கோட்டை கொத்தள எல்லைக்குள்ளோ ஒருவர் உயில் எழுதி வைத்து மறைந்துவிட்டால் உயிலில்குறிப் பிட்ட சரத்துகளின்படி சொத்தை நிர்வாகம் செய்ய மேயர் நீதிமன்றம் சான்றிதழ் வழங்கும் அதிகாரம் பெற்றிருந்தது. மேலும் மேயர் நீதிமன்றத்தில் வழக்கிடுவோரின் வசதியை முன்னிட்டு அரசு தலைமைக் கணக்காய்வாளர் (Accountant

General) என்ற புதிய பதவியும் தோற்றுவிக்கப்பட்டது. வழக்காடுவோர் மேயர் நீதிமன்றததில் கட்டும் பணம், காப்பீட்டுத் தொகைகள், பிணையங்கள் (Securities) ஆகியவை களை வாங்கி பாதுகாப்பாக வைப்பது அரசு தலைமை கணக்காயரின் பணியாக இருந்தது.

1688ல் மேயர் நீதிமன்றம் பிறந்து நூறாண்டுகளுக்கு மேல் வாழ்ந்து 1798ல் மறைந்தது நீதித்துறை வரலாற்றில் குறிப்பிடத்தக்க நிகழ்ச்சி என்பதில் அய்யமில்லை. சட்டத்தில் புலமை பெறாதவர்களே பெரும்பாலும் மேயர் நீதிமன்றத்தில் அமர்ந்து நீதி வழங்கினார் என்பது உண்மையென்றாலும், அன்றைய சூழ்நிலையில் தவிர்க்க முடியாததொன்றாகவே இருந்தது. கிழக்கிந்தியக்கம்பெனியார் இந்திய மண்ணில் காலடிவைத்து சென்னை போன்ற புதிய குடியிருப்புகளை உருவாக்கி ஆதிக்கம் பெறுவதற்கு முன் இங்கு நிலவிய நீதிமுறை சிறப்பானதொன்றாகக் கருதஇயலாது. சாதிக்கொரு நீதிதான் நிலவியது என்பதை நாம் ஒத்துக்கொள்வதில் தவறில்லை. மனு தர்மச்சட்டத் தொகுப்பின்படி மேல் சாதியைச் சேர்ந்த ஒருவர் பெரிய குற்றம் செய்தாலும் சிறிய தண்டனையே பெறுவர் என்பதும், கீழநிலையில் உள்ள சாதியைச் சேர்ந்த ஒருவர் சிறிய குற்றத்துக்கும் பெரிய தண்டனை பெற்று வந்தார் என்பதும் காணமுடிகின்றது. மெக்காலே என்ற சட்டவல்லுநர் "under The laws of Manu a Brahmin Criminal Went off scot free when the Paraiah suffered a heavy punishment for a minor offence. The Muslim law did not allow the evidence of a infidel. Could such anomalies whieh were revolting to the ordinary sense of justice be suffered to continue for all time?" என்று எழுப்பிய கேள்வியை நாம் முற்றிலும் புறக்கணித்து விட இயலாது. இந்தக் கண்ணோட்டத்தில் நாம் பார்க்கும்போது சவுல்ட்டரி நீதிமன்றமும் மேயர் நீதி மன்றமும் வழங்கிய நீதி தாங்கிக்கொள்ளக் கூடியதாக இருந்தது என்று கருத்துக் கூற இடலும்.

ஈ. "கடலாண்மை நீதி மன்றம்" (Court of Admiralty)

தமிழ்நாடு நீண்ட கடற்கரையைக் கொண்டது. கடல் வாணிகத்தில் தமிழ்நாடு கொடி கட்டி பறந்த காலமும் உண்டு. காவிரிப்பூம்பட்டினம் தென்கிழக்கு ஆசியாவில் மிகப் பெரிய துறைமுகப்பட்டினமாகஇருந்தது என்பதையும் வரலாறு குறிப்பிடுகின்றது. அலை கடலுக்கு அப்பால் இருக்கும் நாடுகளில்

வதியும் நாட்டினர் அனைவரும் புகார் நகரத்தில் வந்து கூடி விரும்பிக் கேட்கின்ற அனைத்தையும் சலியாது வழங்கக் கூடிய வளம் பெற்ற துறைமுகமாக விளங்கியது.

"முழுங்குகடல் ஞாலம் முழுவதும்வரினும்
வழங்கத்தவாஅ வளத்தது ஆகி" என நெஞ்சை யள்ளும் சிலப்பதிகாரம் சிறப்பித்துப்பாடுகின்றது.

காவிரிப் பூம்பட்டினத் துறைமுகத்திலிருந்து செல்லும் கப்பல்களில் வணிகர் பலர் அலை கடலுக்கப்பால் உள்ள நாடுகளில் வாணிகம் செய்யப்போன வண்ணம் இருந்தனர். அது போன்றே வெளி நாட்டினர் பலரும் இங்கு வணிகத்தொடர்பு கொள்ள கப்பல்களில் நம் துறைமுகப்பட்டினங்களை நோக்கி வந்த வண்ணம் இருந்தனர். அக்கப்பல்கள் இங்கு வரும் போது "பொன்னுடன் வந்து" "கறியுடன் பெயர்ந்து" சென்றன. பொன்னைச் சுமந்து வந்த கப்பல்கள் தம் நாட்டை நோக்கித் திரும்பும் போது பொன்னை இங்கே இறக்கிவிட்டு மிளகு போன்ற பொருள்களை ஏற்றிச் சென்றன என்ற குறிப்புகள் சங்க இலக்கியத்தில் காணப்படுகின்றன.

காவிரிப்பூம்பட்டினத்தில் இயங்கி வந்த நீதிமன்றங்கள் கடலில் செல்லும் கப்பல்களில் உண்டாகும் பூசல்களையும் அக் கப்பல்களை வழி மறிக்கும் கடல் கொள்ளைக்காரர்களால் ஏற்படும் வழக்குகளையும் விசாரித்திருக்கக்கூடும் என்று நம்மால் அனுமானிக்க முடிகிறது. ஆனால் அத்தகைய வழக்குகளை விசாரிக்கத் தனியான நீதிமன்றங்கள் புகார் நகரிலோ அல்லது மற்ற துறைமுகப்பட்டினங்களிலோ இயங்கி வந்தன என்ற வரலாற்றுக் குறிப்புகள் கிடைக்கவில்லை,

ஆங்கிலேயர் இந்திய மண்ணில் ஆதிக்கம் பெற்றபோது ஓயாத அலைகள் முழக்கமிடும் சென்னைப்பட்டினத்திலும் கடலில் எழும் வழக்குகளை அவர்கள் சந்திக்க வேண்டிவந்தது. ஆங்கில நாட்டினரும் பழம் தமிழ் நாட்டினரைப் போல் கடல் வாணிகத்தில் வல்லவர்களாக இருந்தனர். அவர்கள் தமது நாட்டில் கடலில் எழும் வழக்குகளை விசாரிக்கத்தனியான நீதிமன்றங்களை ஏற்படுத்தியிருந்தனர். அதனால் சென்னையிலும் கடலாண்மை நீதிமன்றம்ஒன்றை உருவாக்க எளிதில்முடிந்தது. இரண்டாம் சார்லசு வழங்கிய பட்டயம் கிழக்கிந்தியகம்பெனி கடலாண்மை நீதிமன்றத்தை உருவாக்க வகை செய்தது.

இலண்டன் மாநகரிலிருந்த கிழக்கிந்திய கம்பெனி அலுவலகம் சென்னைக் கோட்டையினருக்கு பின்வருமாறு கடிதம் எழுதியது.

''நமது மேன்மை தங்கிய மன்னர்பிரான் கடற் கொள்ளைக்காரர்களை ஒடுக்க நமக்கு அளித்திருக்கும் பட்ட யத்தின் உண்மை நகலை இத்துடன் அனுப்பியுள்ளோம். மேலும் கோட்டையில் கொலுவீற்றிருக்கும் ஆளுநரை நமது நீதிபதி வழக்கறிஞராகவும் அந்த இடத்தில் நியமனம் செய் திருக்கின்றோம். அத்துடன் பட்டயத்தில் குறிப்பிட்டுள்ளவை களை அமுல்படுத்த தேவையான அதிகாரங்களையும் அவருக்கு வழங்கப்படுகின்றது''

இதனையொட்டி ''கடலாண்மை நீதிமன்றம்'' 1686 சூலை 10ந்தேதி சென்னையில் அமைக்கப்பட்டது. சான்கிரே என்பவர் அந்த நீதிமன்றத்தின் நீதிபதியாகவும் சான்லிட் டில்டன், நத்தேனியல் கிகின்சன் ஆகியோர் அவருக்கு உதவி யாளர்களாகவும் நியமிக்கப்பட்டனர். 1687 ல் சான்கில் என்பவர் கடலாண்மை நீதிமன்றத்துக்கு அட்டர்னி செனர லாக (Attorney General) நியமனம் பெற்றார். சான்கில்லுக்குப் பிறகு கென்றிமோசி என்பவர் அட்டர்னி செனரல் ஆனார்.

1687 ல் கென்றிமோசி பதவியில் இருந்தபோது கடற் கொள்ளை வழக்கொன்று விசாரணைக்கு வந்தது. அந்த வழக்கை விசாரணை செய்ய 17-11-1687ம் அன்று பிற்பகலில் இராணுவ நீதிமன்றம் (Court Martial) கூடியது. வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட ஆறுபேரும் நீதிமன்றத்தில் நிறுத்தப் பட்டனர். கப்பலில் பணிபுரிந்த அந்த ஆறுபேரும் தம் கம்பலைக் கைவிட்டுத் தப்பியோடி கடலுக்குள் மறைந்து கடலில் செல்லும் கப்பல்களில் கொள்ளையடித்தனர் என்பது அவர்கள் மீது வனையப்பட்ட குற்றம்.

குற்றவாளிகளுக்கு எதிராக வாய்மொழிச் சான்றுரை நீதி மன்றத்தின் முன் வைக்கப்பட்டது. மேலும் குற்றம் சாட்டப் பட்டவர்களில் சிலர் தாம் செய்த குற்றத்தையும் ஒத்துக் கொண்டனர். நீதிமன்றம் வாய்மொழிச் சான்றையும் ஒப்புதல் வாக்குமூலத்தையும் ஆய்ந்து குற்றம் மெய்ப்பிக்கப் பட்டதாகக் கருதி குற்றம் செய்தவர்களின் எண்ணிக்கையை யும் தண்டனை தருவதில் கொஞ்சம் கருணை காட்ட வேண்டு மென்பதையும் மனதில் கொண்டு கீழ்வருமாறு தண்டனை அளிக்கப்பட்டது.

குற்றவாளி அலெக்சாண்டர் இராயல் சேம்ஸ் என்ற கப்பல் தளத்தில் தூக்கிலிப்பட வேண்டும்.

குற்றவாளி சேம்ஸ் சிமித் பொதுத் தூக்குக் கம்பத்தில் தூக்கிலிடப்பட வேண்டும்.

குற்றவாளி இரால்ப் ஸ்டிரிக்கர் கோட்டை வாயிலில் சுட்டுக் கொல்லப்பட வேண்டும்.

மற்ற மூன்று குற்றவாளிகள் சான்நேசுபை, நிக்கோலஸ் டாரில், ஜியார்சுரோடு ஆகியோரின் நெற்றிகளில் "க. கொ" என்ற (கடல் கொள்ளைக்காரன்) எழுத்துக்கள் படியு மாறு சூடு வைக்கப்பட்டு அவர்கள் நாடுகடத்தப்படல் வேண்டும்.

கொள்ளையடிக்கப்பட்ட பொருளை வாங்கிய சந்தர் லேண்டு கப்பல் பணியிலிருந்து நீக்கப்படல் வேண்டும்,

பொதுவாக சென்னை ஆளுநர் கடற்கொள்ளைக்காரர் விசாரிக்கக்கூடும் இராணுவக் கடலாண்மை நீதிமன்றத்தில் நீதிபதியாக அமர வேண்டுமென்பது நியதியாக இருந்தாலும் சட்டத்தை முறையாகக் கற்றுப்பட்டம் பெற்று சென்னைக்கு அனுப்பப்பட்ட சர் சான்பிரிக்சு 1689 ல் கடலாண்மை நீதி மன்றத்தில் நீதிபதியாக இருந்து பணியாற்றினார் என்பது தெரிகின்றது. ஒன்று ஆளுநர் சட்டத்தை முறையாகக் கற்றவ ரல்ல. இரண்டு அவருக்கு இருக்கும் வேறு பணிகள் ஏராளம். மூன்றாவது சட்டத்தில் புலமை பெற்றவர் அந்தப் பணிக் கென்றே இங்கு வந்திருக்கும்போது அவரையே நீதிபதியாகப் பணியாற்றச் செய்வதே முறையாகும்.

சான்பிரிக்சு முன் நடந்த கடற்கொள்ளை வழக்கில் இரண்டு பேருக்குத் தூக்குத் தண்டனையும் மற்றும் ஆறு பேர் நெற்றியில் "க. கொ" என்ற எழுத்துக்கள் விழுமாறு சூடு வைக்கும்படியும் தீர்ப்புத் தந்தார்.

1782 ல் கடலில் எழுந்த ஒரு வழக்கு விசாரணைக்கு வந்தது. "மரணம் அல்லது கீர்த்தி" என்ற பெயர் கொண்ட ஒரு தனிப்பட்ட கப்பலில் கேப்டனாகப் பணிபுரிந்த சான் ஓடேன்னல் என்பவர்தான் குற்றவாளி. மலேயாவைச் சேர்ந்த சில கடற் கொள்ளைக்காரர்கள் கைது செய்யப்பட்டு இவரது கப்பலில் அனுப்பப்பட்டனர். கடலில் அந்தக் கப்பல் சென்று

கொண்டிருக்கும்போது திடீரென மலாக்கா என்ற இடத்தில் கப்பல் கம்பெனிக்கு எதிராக கைதியாக வைக்கப்பட்டிருந்த மலேயா ஆட்கள் கலகக் கொடி தூக்கினர். சான்ஓடேன்னல் வெகுண்டு அவர்களை வெட்டித் தீர்த்தார். ஓடேன்னல் கடலில் நடந்த கொலைக் குற்றத்துக்காக கல்கத்தா நகரில் உள்ள அமைதி காக்கும் நீதிபதிகளின் முன் ஆசர் செய்யப் பட்டார்.

சென்னையில் உள்ளதுபோல் கல்கத்தாவில் கடலாண்மை நீதிமன்றம் அமைக்கப்படவில்லை. ஆகவே கல்கத்தாவில் இருந்த கம்பெனி ஆட்சிக்குழு ஓடேன்னலை சென்னைக்கு அனுப்பியது. சென்னையில் செரிப், ஓடேன்னலைத் தன் வசம் வைத்திருந்து கடலாண்மை நீதி மன்றத்தின் முன் நிறுத் தினார். அட்மிரல் சர் எட்வர்டுகுயூக்சு என்பவரும் அரசுக்குச் சொந்தமான கப்பல் தளபதி ஒருவரும் நீதிபதிகளாக இருந்து வழக்கை விசாரித்தனர். முடிவில் ஓடேன்னல் குற்றம் செய்ய வில்லையென்று விடுதலை செய்யப்பட்டார். 1783 ல் மேயர் நீதிமன்றமே கடலில் எழும் வழக்குகளையும் விசாரிக்கலாம் என்ற கருத்துடன் அன்றைய அரசு மேயர் நீதிமன்றத்துக்குச் சில வழக்குகளை அனுப்பியது, ஆனால் மேயர் நீதிமன்றம் அவ்வழக்குகளை விசாரிக்கும் அதிகாரம் தனக்கில்லை யென்றும், மேயர் நீதிமன்றம் அமைய வழிவகுத்த பட்டயம் அந்த அதிகாரத்தைத் தரவில்லையென்றும் ஆங்கிலப் பாராளு மன்றம் உருவாக்கும் ஒரு சட்டமே அந்த அதிகாரத்தை அளிக்கவல்லது என்றும் கூறி வழக்குகளை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டது. 1788ல் கடலாண்மை நீதிமன்றம் சென்னைக் கோட்டையில் கூட்டப்பட்டது. அதன் பிறகு பத்தாண்டுகள் கழித்து சென்னையில் ரிக்கார்டர் நீதிமன்றம் தோற்றுவிக்கப் பட்டபோது அந்த நீதிமன்றமே கடலாண்மை நீதிமன்றமாக வும் செயல்படலாம். என்று முடிவு செய்யப்பட்டது. மேலே சொல்லப்பட்டவைகளிலிருந்து கடலாண்மை நீதிமன்றம் என்பது தேவைப்பட்டபோது மாத்திரம் செயல்பட்டது என்பதும், அவ்வப்போது தகுதியானவர் எவர் காணப்படு கின்றாரோ அவரை கூட்டப்படும் நீதிமன்றத்தில் நீதிபதியாக அமரச் செய்வது மரபு என்பதும், அதற்கென நிரந்தரமாக நீதிபதி யாரும் நியமிக்கப்படவில்லையென்பதும் புரிகின்றது. கடலில் எப்போதாவதுதான் வழக்கு எழும் என்பதுதான் அதற்குக் காரணம் போலும். சர்சான் பிரிக்சு சென்னையில் செசன்சு வழக்குகளை விசாரிப்பதற்கென நீதிபதி வழக்கறிஞர் என்ற பதவியில் அமர்த்தப்பட்டு இங்கு வந்தார். அவரே

கடலாண்மை நீதிமன்றம் கூட்டப்பட்டபோது அந்த நீதி மன்றத்திலும் நீதிபதியாக அமரவேண்டி வந்தது என்பதைப் பார்த்தோம்.

நீதித் துறையில் புதியபாதை கண்டோம்.
நீள்துயில் அகற்றி நிமிர்ந்து நின்றோம்.
நீதியே நீ அனைவருக்கும் சொந்தமென்ற
நல் உறவை நாடி நீள் பயணம் செய்திடுவாய்.

——

2. "நீதித்துறையில் புதிய போக்குகள்" (1800 - 1862)

18ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் சென்னை மாநகரில் நான்கு விதமான நீதிமன்றங்கள் இயங்கி வந்தன. ஒன்று சவுல்ட்டரி நீதிமன்றம். இது பழந்தமிழகத்தில், அம்பலம், ஊர்ச்சாவடி பொதியில் போன்ற பொது இடங்களில் இயங்கி வந்த நீதிமன்றங்களைப் போன்றதெனலாம். சத்திரம், சாவடியைத்தான் சவுல்ட்டரி என ஆங்கிலத்தில் அழைத்தனர். அம்பலம், சத்திரம் அல்லது சாவடியில் இயங்கி வந்த நீதி மன்றங்களை அடிப்படையாகக் கொண்டே ஆங்கிலேயர் சவுல்ட்டரி நீதிமன்றத்தைத் தோற்றுவித்தனர் எனக் கொள்ளலாம்.

''அவையிருந்த பெரும் பொதியில்
சான்றோரிருந்த பெரிய அம்பலம்''

மதுரைக் காஞ்சி 161.

அடுத்து மேயர் நீதிமன்றம். இது நமக்குப் புதிதாகத் தோன்றினாலும் இந்த நீதிமன்றத்தைப் போன்று நகர்ப்புறங்களில் பழந்தமிழகத்தில் நீதிமன்றங்கள் இயங்கி வந்துள்ளன. அவைகள் அறங்கூர் அவையங்கள் என அழைக்கப்பட்டு வந்தன.

மறங்கெழு சோழர் உறந்தை அவையத்து
அறம் நின்று நிலையிற்று

(புறம் 3)

மறங்கெழு சோழர் உறந்தை அவையத்து
அறங்கெட அறியாதாங்கு

(நற்றிணை 400)

ஆரங்கண்ணி அடுபோர்ச்சோழன்
அறங்கெழு நல்லவை உறந்தை

(அகநானூறு 93)

அறநிலை திறியா அன்பின் அவையத்துத்
திறனில் ஒருவனை நாட்டி முறைதிரிந்து
மெலிகோல் செய்தேனாகுக

(புறநானூறு 71)

''அச்சமும் அவலமும் ஆர்வமும் நீக்கிச்
செற்றமும் உவகையும் செய்யாதுகாத்து
ஞெமன் கோல்அன்ன செம்மைத்தாகிச்
சிறந்த கொள்கை அறங்கூர் அவையமும்''
—மதுரைக் காஞ்சி.

மேலே சுட்டிக்காட்டியபடி அறங்கூர் அவையங்கள் சோழர் தலைநகரான உறந்தை, காவிரிபூம்பட்டினம் போன்ற நகரங் களில் இயங்கி வந்தன என்பதைக் காண்கின்றோம்.

மூன்றாவது கடலாண்மை நீதிமன்றம் (Court of Admiralty) கடலாண்மை நீதிமன்றம் என்பது தேவைப்பட்டால் கூட்டப்படும். அதற்கெனத் தனியாக நீதிபதி நியமிக்கப் படாது தேவைப்படும்போது சட்டத்தில் ஓரளவுக்குப் புலமை பெற்ற யாரையாவது நடுக்கடலில் எழும் பூசல்களை விசாரிக் கும்படி நியமித்தனர் என்பது தெரிகின்றது. அன்றைய தமிழகம் கடல் வாணிகத்திலும் கப்பல்களைக் கடலில் செலுத்துவதிலும் (''நளியிருமுன்னீர் நாவாய் ஓட்டி'') வல்லமை படைத்ததாக இருந்ததால், கடலில் பூசல்களும் எழாமல் இருந்திருக்காது. அத்தகைய பூசல்களை காவிரிப்பூம் பட்டினம் போன்ற துறைமுக நகரங்களில் இயங்கிவந்த அறங்கூர் அவையங்கள் விசாரித்து வந்தன என்று நம்மால் ஊகிக்க முடிகின்றது.

நான்காவதாக 18ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இயங்கி வந்த நீதிமன்றம் ''தலைவர் அல்லது ஆளுநர் நீதி மன்றம்'' என்பதாகும். (The Court of President or Governor in Council) இந்த நீதிமன்றமும் தமிழ்நாட்டுக்குப் புதிதல்ல. கிழக்கிந்திய கம்பெனி ஆட்சியை நடத்திய ஆளுநர் ஆங்கில நாட்டின் முடிசூடிய மன்னர்பிரானின் பிரதிநிதி. அதாவது முடிசூடா மன்னர், என்றே அவரைச் சொல்லலாம். அவரும் அன்று நீதிபதியாகவும் செயல்பட்டிருக்கின்றார். தமிழ்நாட் டிலும் நாட்டை ஆண்ட மணிமுடி தரித்த மன்னர்கள் நீதிபதி களாவும் செயல்பட்டுள்ளனர் என்பது வரலாற்றுச் செய்தி யாகும்.

ஆற்றலும் அறிவும் மிக்க மன்னன் கரிகால் வளவன் அமர்ந் திருந்த நீதிமன்றத்துக்கு முறைவேண்டி பூசல் செய்த இரு சாராரும் வந்தனர். நீதிமன்றத்தில் அமர்ந்திருந்த இளமை

வாய்ந்த மன்னரைக் கண்டனர். போர்க்களத்தில் தன்னை எதிர்த்த மன்னர்களையெல்லாம் மண்ணைக்கவ்வ வைத்தவன் அஞ்சா நெஞ்சம் கொண்ட இளைஞன் கரிகால்வளவன். ஆனால் நீதிக்களத்தில் தேவையானவை அனுபவமும், அறிவும் நடுநிலை என்ற பண்பும் அல்லவா? வந்த இருசாராரும் போர்க்களத்தில் பேராற்றலுடன் செயல்பட்ட மாமன்னன் நீதிக் களத்தில் இளைஞனானதால் நீதி வழங்க இயலுமா என்ற அய்யத்துடன் பின்வாங்கினர்.

கரிகால் வளவன் நீதிக்களத்தில் தன் இளமையை எண்ணி நாணினான். முதுமை வேடம் புனைந்தான். வந்த இருசாராரின் வழக்கை விசாரித்து இருசாராருமே மகிழ்ச்சியடையும்படி நீதி வழங்கிய பாங்கை எண்ணி நாமும் மகிழலாம்.

'இளமை நாணி, முதுமைஎய்தி
உரைமுடிவு காட்டிய உரவோன்'—மணிமேகலை
பளிக்கறைபுக்காதை

'உரைமுடிவு காணானிளமையேனென்ற
நரைமுது மக்க ளுவப்ப — நரைமுடித்துச்
சொல் லான் முறை செய்தான் சோழன்'-பழமொழி.

அன்று கரிகால்வளவன் முதுமை வேடம்பூண்டு நீதிவழங்கிய பாங்கைப் பின்பற்றியே ஆங்கில நாட்டில் நீதிபதிகள் நீதி மன்றத்தில் உட்காரும்போது தலைப்பாகை அணிந்து முதுமையைக் காட்டுகின்றனர் போலும்.

18-ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் சென்னையில் இயங்கி வந்த சத்திரத்து நீதிமன்றம், மேயர் நீதிமன்றம், கடலாண்மை நீதிமன்றம், ஆளுநர் நீதிமன்றம் ஆகிய நான்கு நீதிமன்றங்களும் இன்றைய நீதிமன்றங்களைப் போல தனித்தன்மை வாய்ந்த நீதிமன்றங்கள் அல்ல என்பதை நாம் உணரவேண்டும். அன்று நீதித்துறை தனியாகப் பிரிக்கப் படாத காலம். (No Separation of Judiciary) நகரசபையை நிர்வாகம் செய்த மேயரும், ஆட்சிபீடத்தில் அமர்ந்து நிர்வாகம் செய்த ஆளுநரும் நீதிபதிகளாகவும் அமர்ந்தனர் என்றால் நிர்வாகத்தையும் நீதித்துறையையும் ஒருவரே வைத்திருந்தார் என்பதே பொருளாகும். இரண்டும் ஒருவர் கையில் இருந்தால் அது எதேச்சதிகாரத்துக்கு வழிவகுக்கும் என்பார்கள்.

1600லிருந்து 1800 வரை கிழக்கிந்திய கம்பெனியாரின் ஆளுகையின் கீழ் இயங்கிவந்த நீதித்துறையில் ஒரு நிலையற்ற

தன்மையே காணப்பட்டதுஎனலாம். இரண்டு நூற்றாண்டுகள் அப்படியே ஓடிவிட்டது. நிலையற்ற தன்மையை மாற்றி நிலையான அமைப்பை நீதித் துறையிலும் கொண்டு வருவது தேவை என்பதை ஆட்சியில் உள்ளவர்கள் உணர்ந்தார்கள். கிழக்கு நாடுகளில் கிழக்கிந்திய கம்பெனி ஒரு வலிமைவாய்ந்த அரசாக மலர்ந்து ஆட்சித் துறையில் மாத்திரமல்லாமல் நீதித் துறையிலும் தனது முத்திரையைப் பதிக்கத் தகுதி பெற்று விட்டது என்பதில் அய்யமில்லை.

சட்டத்தில் நுண் மாண் நுழை புலம் பெற்ற சட்ட வித்தகர் லார்டு மெக்காலே தனது சட்டமன்றக் குறிப்புகளில் ''மொகலாயப் பேரரசர் கிழக்கிந்திய கம்பெனியை வங்காளத்தில் தனது திவானாகச் செயல்படும்படி நியமனம் செய்தார். கம்பெனி நிர்வாக இயக்குநர்கள் திவானுக்குரிய அத்துணை பணிகளையும் மேற்கொண்டு செயல்பட ஆரம்பித்தபோது. குற்றங்களை விசாரிக்கும் நடுவராகவும் (Magistrate) உரிமைகளை விசாரிக்கும் நீதிபதியாகவும் (Judge) செயல்பட வேண்டி நேர்ந்தது'' எனக்குறிப்பிட்டுள்ளார். (Lord Mecaulay's Leqislative Minutes)

அப்போது கம்பெனியின் ஆளுநரான வாரன் கேஸ்டிங்ஸ் வெளியிட்ட 1772ம் ஆண்டு ஒழுங்குச்சட்டத்தின் 23வது விதி பின்வருமாறு கூறுகின்றது. (Article XXIII laysdown)

''சொத்து வாரிசுரிமை, திருமணம், சாதி, இன்னும் சமயச்சடங்குகள் அல்லது சமய நிறுவனங்கள் ஆகியவைகளைப் பொருத்து இஸ்லாமியர்களாக இருந்தால், கொரான் கூறும் இஸ்லாமியச்சட்டமும், இந்துக்களாக இருந்தால் சாஸ்திரங்களும் பயன்படுத்தப்படும். அந்த வேளைகளில் மவுலிகள் அல்லது பிராமணர்கள் அந்தந்த சட்டங்களை விளக்குவார்கள். அவர்கள் அறிக்கைகளிலும் கையொப்பமிட்டு தீர்ப்பாணையை வழங்குவதிலும் உதவுவார்கள்''

மேலே சொன்ன 1772ம் ஆண்டு ஒழுங்குச்சட்டம் வெளியிட வாரன் கேஸ்டிங்சுக்கு ஆங்கிலப் பேரரசர் அதிகாரம் அளிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். ஆனால் டில்லி மா நகரில் உள்ள மொகலாயப் பேரரசரின் ஏசண்டு என்ற முறையில் நீதித்துறையில் காணவேண்டிய சிலவசதிகளையெண்ணி அதை வெளியிட வேண்டிவந்தது என இப்பீரியஸ்

கெசட்டு குறிப்பிடுகின்றது. (ஆங்கிலேயர் காலத்திலேயே இப்படி இஸ்லாமியர் சமயச்சட்டங்கள், இந்துக்களின் சமயச்சட்டங்கள் அந்தந்த சமயத்தினருக்குப் பயன்படும் என வகுத்துக்கொண்டதின் விளைவை இன்று நாம் கண்டுவருகின்றோம்-ஆசிரியர்)

அ. "புதிய காலம்"

18ம் நூற்றாண்டு முடிந்து 19ம் நூறறாண்டின் தொடக்கத்தில் நீதித்துறையில் ஒருபெரிய மாற்றம் ஏற்பட்டதைக் காண்கின்றோம். நீதித்துறையில் ஒரு புதிய சகாப்தம் என்று கூட வர்ணிக்கலாம். 18ம் நூற்றாண்டின் இறுதிவரையிலும் சென்னையில் இயங்கிவந்த மேலேசொன்ன நான்குவகை நீதிமன்றங்களில் அமர்ந்து நீதிவழங்கிய பெருமக்கள் சட்டத்தில் புலமையும் தகுதியும் பெற்ற நீதிபதிகள் அல்லர். நீதிமன்றங்களில் அமர்ந்து வழக்குகளை விசாரித்ததால் அவர்களையும் நீதிபதிகள் என்று அழைக்க வேண்டிவந்தது. மற்றபடி அவர்கள் நிர்வாகத்துறையில்தான் திறமையும் அனுபவம் வாய்ந்தவர்களாக இருந்தனர். ஆங்கில நாட்டில் அமைதி காக்கும் நீதிபதிகள் (Justices of peace) என்ற குழு ஒவ்வொரு மாவட்டத்தலை நகரிலும் இலண்டனிலும் நியமிக்கப்பட்டனர். அந்த நாட்டின் மத்திய காலத்தில் (Medieval period) "தடியெடுத்தவன் தண்டக்காரன்" என்பதுபோல் பெரும் பெரும் நிலக்கிழார்களும் சீமான்களும் தம்தம் கையில் குண்டர் படைகளை வைத்துக்கொண்டு வலிமைவாய்ந்த நடு அரசையும், சாதாரண மக்களையும் மிரட்டிவந்தனர். மத்தியகாலத்தில் அவர்களின் மிரட்டலையும் கொடுமையையும் ஓரளவுக்கு அரசும் மக்களும் பொறுத்துக் கொண்டனர். ஆனால் நவீனகாலம் (Modern Age) தோன்றத் தொடங்கியதும் சிற்றரசர்களைப் போல ஆடம்பரமாக வாழ்ந்த நிலக்கிழார், சீமான்கள் ஆகியோர், வைத்திருந்த படை வீரர்கள் மக்களுக்கு அளித்த தொல்லைகளையும் செய்த கொடுமைகளையும் அடக்கி ஒடுக்க வேண்டிவந்தது. அவர்கள் மக்களுக்குஅளித்ததொல்லைகளும் கொடுமைகளும் கேட்பாரின்றிக் கிடந்த நிலைமாறி அவைகளை விசாரிக்க அந்தந்தப்பகுதியிலே வாழ்ந்த நடுநிலையாளர்களையும், சாதாரண மக்களில் செல்வாக்குப்படைத்தவர்களையும் அமைதிகாக்கும் நீதிபதிகளாக அரசுநியமித்து அவர்களை நீதிபதிகள் என்றும், அவர்கள் அமரும் அலுவலகத்தை நீதிமன்றம் என்றும் பெயர் சூட்டியது வரலாற்றின் தேவையாக இருந்தது.

''சட்டம், நீதித் துறை வரலாற்றில் பெருமை படைத்த அத்தியாயத்தைக் காண விழைபவர்களுக்கு அமைதிகாக்கும் நீதிபதிகள் என்ற அமைப்பு ஒரு நல்ல சான்றாகத் தோன்றா மல் போகாது. அந்த அமைப்புப் படிப்படியாக வளர்ந்து பல வடிவங்கள் பெற்று வியத்தகு அமைப்பாக மலர்ந்தது.'' என ஆங்கில நாட்டின் புகழ் பெற்ற சட்ட வரலாற்று ஆசிரியர் மெயிட் லேண்டு (Mait land) மிகப் பெருமிதத்துடன் குறிப்பிடு கின்றார். இந்த அமைதிகாக்கும் நீதிபதிகள் என்ற அமைப்பு ஆங்கில நாட்டில் வளர்ந்து வெற்றிப்பாதையில் நடை போட்ட போதுதான் சென்னையிலும் அதைப் போன்றதொரு அமைப்பை மேலே சொன்ன நான்கு நீதிமன்ற வடிவில் அமைத் தனர் என்பதை நீதித்துறை வரலாற்றை உற்று நோக்குவோர் உணர்வார்கள்.

சென்னையில் வந்திறங்கிய ஆங்கிலேயரில் சிலரும் அய்ரோப்பிய நாடுகளைச்சேர்ந்த மற்ற மொழியினரில் சிலரும் கலகம் விளை விப்பது, கொள்ளயடிப்பது, கொலை செய்வது போன்ற ஈனச் செயல்களில் ஈடுபட்டனர். அத்தகையோரை அடக்குவது தேவையானதால் கிழக்கிந்திய கம்பெனி ஆட்சி யாளர்கள் சத்திர நீதிமன்றம், மேயர் நீதிமன்றம், கட லாண்மை நீதிமன்றம், ஆளுநர் நீதிமன்றம் போன்றவை களைத் தோற்றுவித்து அமைதியைக் காக்க ஏற்பாடு செய் தனர். ஆகவே நீதிமன்றங்கள் தேவையென உணர்ந்த அதே வேளையில் அவைகளில் அமர்ந்து நீதிவழங்குவோர் முறை யாகச்சட்டம் படித்துத்தகுதிபெற்றவராக இருக்கவேண்டிய தில்லை என்றும், நிர்வாகத்தில் திறமையும் அனுபவமும் வாய்ந்தவர்களே போதும் என்றும் எண்ணினர். அமைதிகாப் பதே தலையாயபணி என்பது ஒரு பழையகால நினைப்பே யாகும். சட்டத்துறையிலும் நீதித்துறையிலும் வளர்ந்து வரும் கோட்பாடுகள் நீதிமன்றங்கள் அமைதிகாக்கும் பணிக் காக மாத்திரம் பயன்படுவது போதாது என்பதைக்காட்டு கின்றன. நீதிமன்றங்கள் ஏதோ நீதிஎன்ற பெயரால் தீர்ப்புகள் வழங்குகின்றன என்பதுடன் உண்மையாகவே நீதி வழங்கப் படுகின்றன என்ற தோற்றத்தையும் உருவாக்க வேண்டும் என்பது புதிய கோட்பாடுகளில் ஒன்றாகும். இந்தப்புதிய கோட்பாடுடன் 19ம்நூற்றாண்டின் தொடக்கத்தில் சென்னை யில், அமைக்கப்பட்ட நீதிமன்றம் ரிக்கார்டர் நீதிமன்றம் (Court of Recorder) என அழைக்கப்பட்டது.

ஆ. ரிக்கார்டர் நீதிமன்றம் (Court of Recorder)

இந்த நீதிமன்றத் தோற்றத்துடன் நீதித் துறையில் புதிய காலம் தொடங்கியது எனக் கொள்ளலாம். 20-2-1798ம் தேசிய ஆங்கில அரசுப் பட்டயம். இந்த நீதிமன்றத்தைத் தோற்றுவித்தது. இங்கிலாந்திலோ, அல்லது அயலார்ந்திலோ அய்ந்து ஆண்டுகளுக்கும் குறைவின்றி வழக்கறிஞராக (Barrister)த் தொழில் செய்தவரே ரிக்கார்டராக நியமனம் பெறத் தகுதியுடையவர். ஆங்கிலப் பேரரசர் அருளிய அந்தப் பட்டயத்தில் ''நமது நம்பிக்கைக்குரியவரும், நம்மிடம்மிகுந்த அன்பைப் பெற்றவருமான பெருந்தகை தாமஸ் ஆண்டுரூ ஸ்டிரேஞ்சுவை சென்னையின் முதல் ரிக்கார்டராக நியமனம் செய்கின்றோம். அவர் இங்கிலாந்தில் அய்ந்து ஆண்டுகளுக்கு மேல் பாரிஸ்டராகத் தொழி புரிந்துள்ளார்'' எனக் குறிப்பிட்டுள்ளது காணமுடிகின்றது. ரிக்கார்டர் பதவி வங்காளத்தில் உள்ள கவர்னர் செனரலுக்கும் சென்னையில் உள்ள ஆளுநருக்கும் அடுத்த பதவி என மதிக்கப்பட்டது. ரிக்கார்டர் மரணமடைந்தால் கல்கத்தாவில் இயங்கிய உச்ச நீதிமன்ற நீதிபதிகளில் ஒருவர் ரிக்கார்டர் பதவியை மேற்கொள்வார்.

ஆங்கில நாட்டில் ''மன்னர் நீதிமன்றம்'' (King's Bench) என்ன அதிகாரங்களையும், உரிமைகளையும் பெற்றிருந்தோ அதற்குச் சமமான அதிகாரங்களும் உரிமைகளும் ரிக்கார்டர் நீதிமன்றத்துக்கும் வழங்கப்பட்டன. விசாரணையில் கடைப்பிடிக்க வேண்டிய விதிகளையும் ரிக்கார்டரே உருவாக்கலாம். மன்னர் பிரானின் உருவம் பதித்த முத்திரை அவர் வசம் இருப்பதுடன் அந்த முத்திரை பதித்து ரிக்கார்டர் தன் கையொப்பமிட்டு ஆணைகளையும் தேவையான வழக்குகளில் வழங்கும் அதிகாரமும் பெற்றிருந்தார்.

ரிக்கார்டர் நீதிமன்றம் இதுவரையிலும் சென்னையில் இயங்கி வந்த எந்த நீதிமன்றமும் பெற்றிராத அளவுக்கு அதிகாரங்களையும்.(Powers)விரிந்த அதிகார வரம்பையும் (Greater Jurisdiction) செல்வாக்கையும் பெற்ற முதல் நீதிமன்றமாக அமைக்கப்பட்டிருந்தது.

ஆங்கில நாட்டில் சான்சரி நீதிமன்றம் (Court of chancery) என ஒரு நீதிமன்றம் இயங்குகின்றது. சட்டத்தின் அடிப்படையில் நீதி வழங்க இயலா விட்டால், நேர்மை நெறியின் (Equity)

வழி நீதி வழங்க வேண்டும் என்பதே இந்த நீதிமன்றத்தின் நோக்கமாகும். குறை தீர்க்க நீதிமன்றத்தை நாடியஒருவருக்கு அவரது குறையைப் போக்கச் சட்டம் உதவ முன் வரவில்லையென்றால் நீதிமன்றம் நேர்மை நெறியை (Equity) துணைக் கழைத்து அவரது குறைப் போக்கும் நீதியை வழங்கவே சான்சரி நீதிமன்றம் அமைக்கப்பட்டது. ரிக்கார்டர் நீதிமன்றம் சான்சரி நீதிமன்றம் போல் சொத்து சம்பந்தமாக எழும் பூசல்களில் நேர்மை நெறி வழி தீர்வு காணும் வாய்ப்புப் பெற்றிருந்தது. மேலும் கடலில் எழும் பூசல்களை விசாரணை செய்யும் அதிகாரமும் அதனிடம் விடப்பட்டிருந்தது. ரிக்கார்டர் நீதிமன்றம் இறந்து போனவர்கள் விட்டுச் செல்லும் சொத்துக்களை நிர்வகிக்க ஆட்களை நியமனம் செய்யவும் உயில்களின்படி சான்றிதழ் வழங்கவும் உரிமை பெற்றிருந்ததையும் காண்கின்றோம். மற்றும் சென்னையில் இயங்கிவந்த விண்ணப்ப நீதிமன்றம் (Court of Requests) அமர்வு நீதிமன்றம் இன்னும் அமைதிகாக்கும் நீதிபதிகள், நடுவர்கள் (Magistrates) ஆகியோர் ரிக்கார்டர் நீதிமன்றத்துக் கட்டுப்பட்டவர்களாக ஆக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கதாகும்.

வரலாற்றில் இடம் பெறக் கூடிய இன்னொரு நிகழ்ச்சியையும் இங்கு குறிப்பிடலாம். சென்னை வழக்கறிஞர்கள் என்ற ஒரு குழுத் தோன்றக்கூடிய நிலை உருவாகியது என்பதே அந்த நிகழ்ச்சியாகும். மேயர் நீதிமன்றம் போன்றவைகளில் சட்டத் தொழில் நடத்தியவர்களில் உண்மையானவர்களையும் இங்கிலாந்து அயர்லாந்து நாடுகளில்பாரிஸ்டர் பட்டம் பெற்றவர்களையும் வழக்கறிஞர்களாகவும் அட்டர்னிகளாகவும் அனுமதித்து அவர்களது பெயர்களைப் பட்டியலில் பதிவு செய்யும் தகுதியும் ரிக்கார்டர் நீதிமன்றத்துக்குக் கொடுக்கப்பட்டது வழக்கறிஞர்கள் வளர்ச்சியில் குறிப்பிடத் தக்க செய்தியாகும். என்பதில் அய்யமில்லை. அத்துடன் அப்படி அனுமதிக்கப்பட்டு பட்டியலில் இடம் பெற்றவர்களைத் தவிர வேறு யாரும் அவர் எப்படிப்பட்டவரர்க இருந்தாலும் ரிக்கார்டர் நீதிமன்றத்தில் வழக்காளிக்காக வழக்கு நடத்த அனுமதிக்கப்பட்டார்கள் என்பது தெளிவு படுத்தப்பட்டிருந்தது. 1798 நவம்பர் 3ம் தேதி ரிக்கார்டர் நீதிமன்றம் திறந்து வைக்கப்பட்டு செயல்படத் தொடங்கிய போது அதன் பதிவேட்டில் சுமார் 12 பேர் வழக்கறிஞராகவும் அட்டர்னிகளாகவும் இடம் பெற்றிருந்தனர். அவர்கள் ஒவ்வொருவரும் நோட்டரிபப்ளிக்காகவும்,

பின்னர் புரோக்டராகவும் பதவிப் பிரமாணம் செய்துவைக்கப் பட்டனர். இவர்களே சென்னை வழக்கறிஞர் சங்கமாக உருவாகினர்.

ரிக்கார்டர் நீதிமன்றம் ஒரு உயர் நீதிமன்றம் போல் தகுதியும் வாய்ப்பும் பெற்றிருந்தது. அந்த நீதிமன்றம் அளிக்கும் தீர்ப்புக்கு எதிராக மேல் முறையீடு செய்ய சென்னையில் மேல் முறையீட்டு நீதிமன்றம் எதுவும் இல்லாததால் இலண்டனில் இயங்கி வந்த பிரிவு கவுன்சில் நீதிமன்றத்துக்குக் மேல் முறையீடு செய்து கொள்ள முடியும். ரிக்கார்டர் நீதிமன்றத்துக்கு வரும் வழக்குகளின் தொடக்க நடை முறைகளைக் கவனிக்க இப்போது மாஸ்டர் என்ற பதவியும் உருவாக்கப்பட்டது. வழக்கு விசாரணைக்கு வருவதற்கு முன் செய்யபட வேண்டிய ஆரம்பப் பணிகளை மாஸ்டர் கவனித்து வந்தார்.

இவ்வளவு தகுதியும் வாய்ப்பும் பெற்றிருந்த ரிக்கார்டர் நீதிமன்றம் இரண்டு ஆண்டுக் காலமே வாழ முடிந்தது என்பது வியப்பும் வேதனையும் நிறைந்த செய்தியாகவே படுகின்றது. இராணுவத்தை ஒரு தானைத்தலைவரின் கீழ் கொண்டுவருவது எவ்வளவு நலம் பயப்பதாக இருக்குமோ அது போல சென்னையில்இயங்கிவந்த நீதிமன்றங்களை ரிக்கார்டர் நீதிமன்றம் என்ற ஒரு குடையின் கீழ் கொண்டுவர ஒரு முயற்சி செய்யப்பட்டது. அந்த முயற்சி ஒரு சோதனையாகவே கருதப்பட்டது எனலாம். சோதனையும் பெருமளவுக்கு வெற்றியும் பெற்றது. சோதனையின் வெற்றிக்குப் பெரிதும் காரணமாக இருந்த நீதிபதி தாமசு ஆண்டிரு ரிக்கார்டர் நீதிமன்றம் இரண்டு ஆண்டுகளுக்கு மேல் நீடிப்பதை விரும்பவில்லை. அதற்கும் காரணமும் இருந்தது. ரிக்கார்டர் நீதிமன்றத்தில் தகுதிவாய்ந்த நீதிபதிகளுடன் ஆல்டர்மென் என்ற பதவி வகிப்பவர்களில் சிலரும் நீதிபதிகளாக அமரலாம் என்ற விதியும் இருந்தது. எல்லா வகையிலும் பெரும் தகுதிபடைத்த நீதிபதி தாமசு ஆண்டிரு இந்த விதியை வெறுத்ததுடன் தகுதி வாய்ந்த நீதிபதிகளைக் கொண்ட ஒரு நீதிமன்றமே தனித் தன்மையுடன் செயல்பட முடியும் என்பதையும் உணர்ந்தார். ஆகவே அவர் ரிக்கார்டர் நீதிமன்றத்தை நீடிக்காமல் அதைநீக்கி, நிர்வாகத்தினர் பங்கு கொள்ளாததும் தகுதி வாய்ந்த நீதிபதிகளே அமரக் கூடியதுமான தலைமை நீதிமன்றத்தை அமைக்கும்படி ஒரு புதிய ஆய்வுத் திட்டத்தை அரசின் முன் வைத்தார். அரசும் அவரது கருத்துரையை ஏற்று தகுதியான தலைமை நீதிமன்றத்தை அமைத்தது.

"நீதிமன்றங்கள் நான்கு கண்டோம்
சமநீதி கிடைக்காத குறையும் கண்டோம்
சமநீதி எல்லோருக்கும் கிடைக்க வேண்டின்
ஊக்கமது வழிகாட்ட இன்னும் செல்வோம்."

---

3. நீதித்துறையில் இருவேறு முறைகள்

அ. தலை நகரில் உச்ச நீதிமன்றம்

நீதிபதி தாமசு ஆண்டிருவின் பரிந்துரையின் அடிப்படையில் ஆங்கிலப் பேரரசர் வெளியிட்ட முத்திரைப் பத்திரம் (Latters Patent) சென்னைக் கோட்டையில் உச்ச நீதி மன்றம் ஏற்பட வழி வகுத்தது. இது மதிப்புறுத்து நீதிமன்றமாக இருந்தது. (Court of Record). உச்ச நீதிமன்றத்தில் தலைமை நீதிபதி ஒருவரும். இரண்டு நீதிபதிகளும் இருப்பார்கள். இங்கிலாந்திலோ அல்லது அயர்லாந்திலோ அய்ந்து ஆண்டுக்குக் குறையாத கால அளவில் தொழில் செய்யும் பாரிஸ்டர்களே தலைமை நீதிபதியாகவும் நீதிபதிகளாகவும் வரத்தகுதியுடையவர்கள் ஆவர். தலைமை நீதிபதி ஆளுநருக்கு அடுத்த தகுதியும் மற்ற நீதிபதிகள் ஆளுநரின் ஆட்சிக்குழு உறுப்பினர்களுக்கு அடுத்த தகுதியும் பெற்றவர்களாக் கருதப்படுவா .

ஆங்கில நாட்டின் மன்னர் நீதிமன்றத்துக்கு என்ன அதிகாரமும் உரிமையும் உண்டோ ஏறக்குறைய அதே அதிகாரமும் உரிமையும் படைத்த உச்ச நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியும் இரண்டு நீதிபதிகளும் சேர்ந்து தரும் ஒப்புதலுடன் தீர்ப்புகளும், ஆணைகளும், விதிமுறைகளும் வெளியிடப்படும். தலைமை நீதிபதியும் இரண்டு நீதிபதிகளும் ஒருங்கே அமர்ந்து நடவடிக்கைகள் நடத்தும் போது அவர்களிடையே வேறுபாடு தோன்றுமானால் தலைமை நீதிபதிக்கு இரண்டு வாக்குகள் இருக்கும். மேலும் அவரது வாக்கே இறுதி முடிவு செய்யும் தகுதியும் பெற்றிருக்கும். இரண்டு நீதிபதிகளே இருந்து அவர்களிடையே வேறுபாடு தோன்றுமானால், முடிவு எதுவும் செய்யாமல் மூன்று பேரும் சேர்ந்து அமர்ந்து முடிவு செய்யும்படி விடப்படும்.

தலைமை நீதிபதியின் ஆண்டு ஊதியம் 6000 பவுன்களும் நீதிபதியின் ஆண்டு ஊதியம் 5000 பவுன்களுமாகும். நீதிபதிகள் பணிக்காலத்தில் வேறு ஊதியம் பெறும் தொழில் செய்யக் கூடாது.

நீதிபதி தாமசு ஆண்டிருவே உச்ச நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக நியமனம் செய்யப்பட்டார். அவருடன் பாரிஸ்டர்கள் கென்றி ஜிவில்லிம், பெஞ்சமின் சுல்லிவன் என்போரும் உச்சநீதிமன்றத்தின் இருநீதிபதிகளாகவும் நியமனம்பெற்றனர்.

உச்ச நீதிமன்றத்துக்குத் தனி முத்திரை உண்டு. முத்திரைப் பதித்த நீதிப் பேராணைகள் மன்னர் பெயரால் வழங்கப் பெறும். தேவையான விதிமுறைகளை உருவாக்கும் தகுதியும் நீதிமன்றம் பெற்றிருந்தது. ரிக்கார்டர் நீதிமன்றத்தில் தொழில் நடத்திய வழக்கறிஞர்களும் இங்கிலாந்தில் அல்லது அயர்லாந்தில் உள்ள பாரிஸ்டர்களும், இலண்டன் வெஸ்டு மினிஸ்டர் நீதிமன்றங்களில் தொழில்செய்த வழக்கறிஞர்களும் அட்டர்னிகளும், உச்ச நீதிமன்றம் வகுக்கும் தகுதியைப் பெற்றவர்களும் விதிமுறையை ஏற்றுக் கொண்டவர்களும்உச்ச நீதிமன்றத்தில் தோன்றி வழக்குகளை நடத்த அனுமதிக்கப்படுவர். அவர்களைத் தவிர வேறு எவரும் உச்ச நீதிமன்றத்தில் தோன்றி வழக்குகளை நடத்த அனுமதிக்கப்படார். ஆங்கில குடிமக்கள் அனைவரும் உச்ச நீதிமன்றத்தின் அதிகாரவரம்புக்கு உட்பட்டவராகும், ஆனால் ஆளுநரும், தலைமை நீதிபதியும் இன்னும் சில குறிப்பிட்ட நபர்களும் உச்ச நீதிமன்றத்தின் அதிகாரவரம்புக்குட்படாதவர் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

ரிக்கார்டர் நீதிமன்றம் மறைந்து விட்டதால் அதில் நிலுவையில் இருந்த அத்துணை வழக்குகளும் மேல் முறையீடுகளும் உச்ச நீதிமன்றத்துக்கு மாற்றப்பட்டன. ரிக்கார்டர் நீதிமன்றம் போல் உச்ச நீதிமன்றமும் திருக்கோயில் தொடர்பான வழக்குகளையும் கடலில் தோன்றும் பூசல்களையும், விசாரிக்கவும், உயில் சம்பந்தமான வழக்குகளை விசாரித்து சான்றிதழ் வழங்கவும் அதிகாரம் பெற்றிருந்தது. விண்ணப்ப நீதிமன்றம் (Court of Request) அமர்வு நீதிமன்றம், அமைதி நீதிபதிகள், நடுவர்கள் ஆகியோர் உச்ச நீதிமன்றத்தின் அதிகாரத்துக்கும் ஆளுகைக்கும் உட்பட்டவர்கள் ஆவர். இதன் நிமித்தம் செயல் உறுத்தும் நீதிப் பேராணை. (Write of Mandamus) நெறிமுறை உறுத்தும் நீதிப் பேராணை (Write of Certiorari) போன்ற பேராணைகளை மேலேசொன்ன கீழமை நீதிமன்றங்கள் தவறு செய்யும் போது வழங்கிச் சுட்டிக் காட்டும் அதிகாரம் தன் கையில் வைத்திருந்தது. அத்துடன் நீதிமன்றத்தை அவமதிப்பவர்களைச் சிறையில் தள்ளவும் அபராதம் கட்டும்படி ஆணையிடவும் உச்ச நீதிமன்றம் அதிகாரம் பெற்றிருந்தது,

உச்ச நீதிமன்றத் தீர்ப்பை எதிர்த்து பிரிவுக்கவுன்சிலுக்கு மேல் முறையீடு செய்யலாம். மேல் முறையீடு செய்த வழக்கு களில் உள்ள சான்றுரைகளையும் நடவடிக்கைகளையும் பிரிவு கவுன்சிலுக்கு உச்ச நீதிமன்றம் அனுப்பி வைக்கும்.

உச்ச நீதிமன்றத்துக்கும் ரிக்கார்டர் நீதிமன்றத்துக்கும் பெரும் வேறுபாடு காணப்படவில்லை. ரிக்கார்ட்டர் நீதிமன் றத்தில் நிர்வாகத்துறையினர் பங்கு இருந்தது. உச்சநீதிமன் றத்தில் அது நீக்கப்பட்டு முழுக்க முழுக்க நீதித்துறையைச் சேர்ந்தவர்களே நீதிபதிகளாக அமர்த்தப்பட்டனர். ரிக்கார் டர் நீதிமன்றத்தில் ரிக்கார்டர் என்ற பதவி வகித்த தாமசு ஆண்டிரு உச்ச நீதிமன்றத்தில் தலைமை நீதிபதி என அழைக் கப்பட்டார். ரிக்கார்டரைக் காட்டிலும் தலைமை நீதிபதிக்கு கூடுதல் அதிகாரம் இருந்தது. சொல்லப் போனால் வழக்கு களிலும் நிர்வாகத்திலும் தலைமை நீதிபதியின் கையே ஓங்கி யிருந்தது எனலாம். உச்ச நீதிமன்றத்தில் தோன்றி வழக்கு களை நடத்தும் வழக்கறிஞர்களின் எண்ணிக்கையும் கூடுத லாக இருந்ததையும் பார்க்கின்றோம். உச்ச மன்றத்தலைமை நீதிபதியின் ஆண்டு ஊதியமும் 6000 பவுன் என கூட்டப்பட்ட தும் குறிப்பிடத்தக்கதாகும். உச்ச நீதிமன்றத்தை ஒருவகை யில் இன்று இயங்கும் நெஞ்சையள்ளும் உயர் நீதிமன்றத்தின் முன்னோடி எனக்கூறினால் மிகவும் பொருந்தும்.

ஆ. "உள்பகுதியில் அதலெத் நீதிமன்றங்கள்"

1800க்கு அப்புறம் 1862 வரையிலும் சென்னை மாநகரில் ஒரு வகை நீதிமுறையும், தலை நகரைவிட்டு நாட்டின் உள் பகுதியில் வேறுவகை நீதிமுறையும் இயங்கி வந்ததென்றால் நமக்கு அது வியப்பைக்கொடுக்காமல்இருக்காது. சென்னையில் இயங்கிவந்த உச்ச நீதிமன்றமும் அதன் ஆளுகையில் சென்னை யில் இயங்கிய நடுவர்கள், அமைதிநீதிபதிகள் போன்றாரும் ஒரு வகையான நீதிமுறையை வழங்கினர். சென்னை மாநிலத்தின் உள்பகுதியில் வேறுவகையான நீதிமுறை, வழங்கிவந்தது. இதை அதலத் முறை (Adawlut System) என்று கூறுவர். இந்த இருவகையான நீதிமுறைக்குக் காரணமும் கற்பிக்கப்பட்டது. ஆங்கிலேயர் இந்த நாட்டில் காலூன்றியபின்னர் அவர்களது வளர்ச்சி எண்ணிப்பார்க்க முடியாத அளவுக்கு மேலோங்கியது எனப்பார்த்தோம். அவர்களின் ஆளுகையின் கீழ் நாட்டின்பல பகுதிகள் வந்து சேரச்சேர அவைகளில் வாழ்ந்தமக்களும் பல பிரிவுகளைச் சேர்ந்தவர்களாக இருந்தனர். ஆங்கிலேய

அய்ரோபியக் குடி மக்கள், இந்துக்கள், இஸ்லாமியர், இந்து முஸ்லீம், கிருஸ்துவ மதத்தைச் சேராத மற்ற குடி மக்கள், போர்த்துக்கீசியர், ஆர்மீனியன் வகுப்புகளைச் சேர்ந்தவர்கள், ஆங்கிலேயரும் இந்தியத்தாய்மார்களும் கூடியதால் பிறந்த ஆங்கில இந்திய மக்கள் போன்ற பிரிவினர் நாட்டின் குடிமக்களாகக் கருதப்பட்டனர். இவர்கள் அனைவருக்கும் ஒரே நீதிமுறை போதும் என்றாலும் அன்றைய ஆட்சியாளர் வேறு விதமாக நினைத்து இருவகை நீதிமுறையைக் கைக் கொண்டனர்.

சென்னை மாநகரில் இயங்கிய நீதிமன்றங்கள் ஆங்கிலப் பேரரசால் வெளியிட்ட சட்டங்கள், பட்டயங்கள்படி அமைக் கப் பட்டவை. அவைகளில் அமர்ந்து நீதிவழங்கிய நீதிபதிகள் மேன்மைதங்கிய ஆங்கில மன்னர்பிரானால் நியமனம் பெற்ற வர்கள். சென்னை மாநிலத்தின் உள் பகுதியில் இயங்கிய அதலத் முறை நீதிமன்றங்கள் கிழக்கிந்திய கம்பெனியால் உரு வாக்கப்பட்டவை. அவைகளில் அமர்ந்த நீதிபதிகளும் கிழக் கிந்தியக் கம்பெனியால் நியமனம் பெற்றவர்களாவர்.

1802ம் ஆண்டு வெளியிடப்பட்ட ஒழுங்குமுறைச் சட்டம் கூறுகின்றபடி புதிய நீதிமுறை சென்னை மாநிலத்தின் உட் பகுதியில் புகுத்தப்பட்டது. இந்தப் புதிய நீதி முறையில் நாம் காணும் ஒரு சிறப்பு என்னவென்றால் ஒருவரே நீதிபதியாகவும் (Judge), குற்றவியல் நடுவராகவும் (Magistrate), மாவட்ட ஆட்சியாளராகவும் (Collector or Revenue) இருக்க முடியாது என்பது தான். தனித்தனி ஆட்களே நியமணம் பெற்றனர்.

மாநில உள் பகுதியில் உரிமையியல் நீதிமன்றங்களும் (Civil Courts) குற்றவியல் நீதிமன்றங்களும் தனித்தனியாக அமைக்கப்பட்டன.

இ. உரிமையியல் நீதிமன்றங்கள் (Civil Courts)

1. ஊர் ஆணையர் நீதிமன்றம். (Native commissioners)
2. மாவட்ட நீதி மன்றப் பதிவாளர் நீதி மன்றம்' (Registrars of Zilla Courts)
3. மாவட்ட நீதிமன்றம் (Court of Zilla Judge)
5. மாநில மேல் முறையீட்டு நீதிமன்றங்கள் (Provincial Courts of Appeal)

5. சதர் அதலத் நீதிமன்றம். (Suddar Adawlut Consisted of Governor In Council)

ஊர் ஆணையர் நீதிமன்றம் ரூ 80/- வரை மதிப்புள்ள வழக்குகளையும், பதிவாளர் நீதிமன்றம் ரூ 200/- வரை மதிப்புள்ள வழக்குகளையும் விசாரித்தனர். மாவட்ட நீதிபதிக்கு உதவியாக ஊர்சட்ட அதிகாரிகள் (Native law officers) இருந்தனர். அன்றைய மாவட்ட நீதிபதி சில வழக்குகளில் தரும் தீர்ப்புக்கு எதிராக மேல் முறையீடு செய்ய இயலாது. ரூ 1000/- வரை மதிப்புள்ள வழக்குகளில் மாவட்ட நீதிபதி வழங்கும் தீர்ப்பு இறுதியானது. அது போன்றே மாநில மேல் முறையீட்டு நீதிமன்றங்கள் ரூ 5000/- வரை மதிப்புள்ள வழக்குகளில் வழங்கும் தீர்ப்பு இறுதியானதாகக்கருதப்பட்டது. அத்தகைய தீர்ப்புக்ளுக்கு எதிராக மேல் முறையீடு செய்வது தடுக்கப்பட்டிருந்தது. ரூ 1000/ -க்கும் மேல் மதிப்புள்ள வழக்குகளில் மாவட்ட நீதிபதி வழங்கும் தீர்ப்புக்கு எதிராக மாநில மேல் முறையீட்டு நீதிமன்றங்களுக்கு மேல் முறையீடு செய்யலாம். அது போன்றே ரூ 5000/- க்கும் மேல் மதிப்புள்ள வழக்குகளில் மாநில மேல் முறையீட்டு நீதிமன்றங்கள் வழங்கும் தீர்ப்புகளுக்கு எதிராக சதர் அதலத் நீதிமன்றத்துக்கு (Governor in Council) மேல் முறையீடு செய்யலாம்.

ஊர் ஆணையர் நீதிமன்றத்திலிருந்தும் மாவட்ட நீதிமன்றப் பதிவாளர் நீதிமன்றத்திலிருந்தும் மேல் முறையீடுகள் மாவட்ட நீதிமன்றத்துக்குச் செய்ய முடியும்.

இன்றைக்கு எப்படி நீதிமன்ற அதிகாரவரம்பிலும், நீதிமன்றங்களின் அமைப்பிலும் அவ்வப்பொழுது தேவைக்கேற்ற மாற்றங்கள் செய்வது போல் அன்றும் மாற்றங்கள் நிகழ்ந்து வந்தன என்பதைக் காண்கின்றோம். 1806-ம் ஆண்டில் மாநிலத்தின் கடைசி மேல் முறையீட்டு நீதிமன்றமாக இயங்கி வந்த அதலத் நீதிமன்ற அமைப்பில் பெரும்மாறுதல் நிகழ்ந்தது. அதலத் நீதிமன்ற நீதிபதியாக இருந்த ஆளுநர் இனிமேல் அந்த நீதிமன்றத்தில் நீதிபதியாக அமரமுடியாது என்பது தான் அந்த மாறுதல். அவரை எடுத்துவிட்டுப் புதிய நீதிபதிகள் அந்த நீதிமன்றத்துக்கு நியமிக்கப்பட்டனர். இது ஒரு நல்ல காலத்துக்குத் தேவையான மாற்றம் என்பதில் அய்யமில்லை. இதே போன்றே 18 8ல் ஒரு மாற்றம் ஏற்பட்டது. சதர் அதலத் நீதிமன்றப் ரூ 45000/-க்கும் அதற்கும் மேல்பட்ட மதிப்புள்ள

வழக்குகளில் வழங்கும் தீர்ப்புக்குஎதிராக கல்கத்தாவில் உள்ள ஆளுநர்-தளபதி நீதிமன்றத்துக்கு (Governor-General In CounciI) மேல் முறையீடுகள் செய்யப்பட்டுவந்தன. 1818ல் ஆளுநர்-தளபதி இனிமேல் சென்னை சுதர் அதலத் நீதிமன்றம் வழங்கும் தீர்ப்புகளுக்கு எதிராகச் செய்யப்படும் மேல் முறையீட்டுகளை விசாரணை செய்யும் உரிமையைத்தான் விட்டுவிடுவதாக அறிவித்து விட்டதால் இலண்டன்மாநகரில் இயங்கி வந்த பிரிவிகவுன்சிலே அவைகளை விசாரணை செய்யும் நிலை ஏற்பட்டது. இதுவும் வரவேற்கத்தக்கமாற்றமே.

1843ம் ஆண்டில் மாநில மேல் முறையீட்டு நீதிமன்றங்கள் நான்கும் நீக்கப்பட்டு மாவட்ட நீதிமன்றங்களின் அதிகார வரம்பும் உரிமைகளும் உயர்த்தப்பட்ட பாங்கைக் காண்கின்றோம். மாவட்ட நீதிமன்றங்களின் கூடுதலான பணிகளைப் பகிர்ந்துகொள்ள உதவி நீதிபதிகள் (Sub Judges) நியமிக்கப் பட்டனர். மேலும் தலைமை ஊர் ஆணையர்களும் (Head native Commissioners) புதிதாக நியமிக்கப்பட்டிருந்தனர். சதர் அதலத் முறை என்ற மரபையொட்டி தலைமை ஊர் ஆணையர்கள் சதர் அமீன்கள் என்றே அழைக்கப்பட்டனர். (Suddar Ameens) நமது சென்னை உயர் நீதிமன்றத்துக்கு முதல் இந்திய நீதிபதியாக நியமனம் பெற்ற முத்துசாமி அய்யர் மங்களூரில் சதர் அமீனாகப் பணிபுரிந்தவர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

மாவட்ட நீதிமன்றங்களின் கீழ் பணி புரியும் கீழ்மை நீதிமன்றங்களாக உதவி நீதிபதிகளும் சதர் அமீன்களும் நியமனம் ஆனதால் மாவட்ட நீதிமன்றப் பதிவாளர்கள் பதவிஅடியோடு நீக்கப்பட்டுவிட்டது. அன்று மாவட்டத் தலை நகரங்களில் இயங்கி வந்த மாவட்ட நீதி மன்றங்களில் பதிவாளர்கள் (Registrars) இருந்ததும் அவர்கள் நீதிபதிகளாகப் பணியாற்றியதும் இன்று நமக்கு ஒரு வரலாற்றுச் செய்தியாக மட்டும் படுகின்றது. ஏனென்றால் மாவட்ட நீதிமன்றங்களில் இன்று அந்தப் பதவியே இல்லை. ஆனால் சென்னை மாநகரத்தில் இங்கும் சிறு வழக்கு நீதிமன்றத்தில் [Court of Small Causes] பதிவாளர் பதவி வகிப்பவர் இன்றைக்கும் உண்டு. அதே போல் சென்னை மாநகரத்தில் இயங்கி வரும். நகர உரிமையியல் நீதிமன்றங்களுக்கென ஒரு பதிவாளர் உண்டு. சென்னை மாநகரமானதால் பழைய மரபையொட்டி பதிவாளர் பதவிகளை இங்குள்ள நீதிமன்றங்களில நீக்காமல் வைத்திருக்கின்றனர்.

சட்ட வித்தகர் மேதை மெக்காலே தனது சட்ட மன்றக் குறிப்புகளிலே அன்று கிழக்கிந்தியக் கம்பெனி நீதிமன்றங்கள் நான்கு இயங்கிவந்தன எனச்சுட்டிக் காண்பிக்கின்றார். அவை 1. முன்சீப் நீதி மன்றம். 2. சதர் அமீன் நீதிமன்றம். 3. மாவட்ட நீதி மன்றம். 4. சதர் திவானி அதலத். நீதி மன்றம் என்பவையாகும். இந்த நான்கு நீதி மன்றங்கள் உரிமை இயல் நீதி மன்றங்களாகும். பெரும்பாலும் இவைகள் உடைமை, உரிமை [Possessin & Title] சம்பந்தமான பூசல் களையே கவனித்து வந்தன. இதே போல் குற்றவியல் நீதி மன்றங்களும் தனியாக செயல்பட்டன.

ஈ. “குற்றவியல் நீதிமன்றங்கள்

1. நடுவர் நீதி மன்றங்கள் Magistrates
2. உதவி நடுவர் நீதிமன்றங்கள் Assistant Magistrates
3. நான்கு உலா நடுவர்கள் Courts of Circuit
4. பவுசுடரி அதலத் நீதிமன்றம் Foujdary Adawlut Consisted of The Governor and members of the council

நடுவர் நீதிமன்றங்ள் குற்றவழக்குகளில் விசாரனைசெய்து தண்டனை வழங்கியும், அபராதம் விதித்தும் தீர்ப்புக்கூறலாம். அபராதம் எந்தக்காரணத்தைக் கொண்டும் ரூ. 200 மிகாமல் பார்த்துக் கொள்ளவேண்டும். மாநிலத்தில் உள் பகுதியில் வசிக்கும் ஆங்கிலேயர்களில் குற்றம் புரிந்தவர்களை நடுவர்கள் கைது செய்ய உரிமை இருந்தாலும் அவர்களை விசாரிக்கும் அதிகாரம் சென்னை மாநகரிலுள்ள உச்ச நீதி மன்றத்துக்கே உண்டு. உலா நடுவர் கொலை வழக்குட்பட பெரிய குற்ற வழக்குகளையும் விசாரித்து தண்டனை வழங்கும் அதிகாரம் பெற்றிருந்தது. ஆனால் கொலை வழக்கில் உலா நடுவர்கள் வழங்கும் தண்டனை (தூக்குத் தண்டனை) பவுசுடரி அதலத் நீதி மன்றத்தால் உறுதி செய்யப்பட்ட பிறகே நிறைவேற்ற முடியும் என்ற சட்டவிதி உண்டு. பவுசுடரி அதலத் நீதிமன்றம் குற்றவியல் நீதிமன்றமாகச் செயல்பட்டது. ஆளுநரும், ஆட்சிக் குழு உறுப்பினர்களும் அந்த நீதிமன்றத்தின் நீதிபதிகளாக இருந்ததால் அவர்கள் குற்றவாளிகளை மன்னிப்பதும், தண்டனையைக் குறைப்பதும் போன்ற அதிகாரங்களை பெற்றிருந் தனர். மேலும் அது உலாநடுவர்கள் கொலை வழக்கில் வழங் கும் தண்டனைகளை உறுதி :செய்யும் வல்லமை படைத்த தாகவும் இருந்தது.

குற்றவியல் நீதித்துறையிலும் அவ்வப்போது சில மாற்றங்கள் நிகழ்ந்தன என்பதையும் காண்கின்றோம். மாவட்ட ஆட்சியாளருக்கும் District Collectors அவரது உதவியாளருக்கும் குற்றவியல் நடுவருக்குரிய சில அதிகாரங்கள் வழங்கப்பட்டன. 1816-ல் மாவட்ட நீதிபதிகளே அந்தந்த மாவட்டங்களின் குற்றவியல் நீதித்துறையின் தலைமைப் பொருப்பை ஏற்றனர். குற்றவியல் தலைமை நடுவர் (District Magistrate) மாவட்ட நீதிபதியின் தலைமைக்குட்பட்டே செயல்பட்டு வந்தார்.

உலா நடுவர் நீதிமன்றங்கள் நீக்கப்பட்டு. 1843ல்மாவட்ட நீதி மன்றங்களுக்கு உரிமையில் வழக்குகளில் கூடுதல்அதிகாரம் அளிக்கப்பட்டது போல் குற்றவியல் வழக்குகளிலும் மாவட்ட நீதிமன்றங்கள் முக்கியத்துவம் பெற்றன. உலா நடுவர்கள் நீக்கப்பட்டு விட்டதால் மாவட்ட நீதிமன்றமே ''நிரந்தர அமர்வு நீதிமன்றமாக'' (Permanent Sessions) புதிய வடிவம் பெற்று உயர்ந்தது. கொலை வழக்குகள் உட்பட உலா நடுவர்கள் நடத்தி வந்த எல்லாவழக்குகளையும் மாவட்ட நீதிமன்றம் நடத்தத் தொடங்கியது. அத்துடன் அமர்வு வழக்குகளில் மாவட்ட நீதிபதி தனக்கு உதவியாக மதிப்பும் செல்வாக்கும் மிக்க ஊர்ப்பெரியவர்களை அமர்த்திக்கொள் ளும் வாய்ப்பையும் பெற்றிருந்தார்.

அமர்வு வழக்குகளில் சாட்சிகளின் வாய்மொழிச் சான்று ரையைக் கணிப்பதிலும் மதிப்பீடு செய்வதிலும் அவர்கள் மாவட்ட நீதிபதிக்குத் துணையாக இருப்பதால் அவர்களை மதிப்பீட்டாளர் (Assessors) என்பர். அமர்வு வழக்கு விசாரணையில் அத்தகையோர் விசாரணையில் சில கூறுபாடு களைக் கூறுவதிலும் (Points of inquiry) தமக்குள்ளே ஆலோ சனை செய்து முடிவில் குற்றவாளியா அல்லது இல்லையா எனக் கருத்துக் கூறுவதிலும் உதவியாக இருக்கும் அவர்கள் முறை காண் ஆயமாகவும்(Jury)கருதப்படுவர். மாவட்ட நீதிபதி அவர்களின் கருத்தை ஒட்டிதனது தீர்ப்பை அளிப்பார். அவரின் கருத்து சூரிகளின் கருத்துக்கும் மாறானதாக இருந் தால் முடிவில் பவுசுடரி அதலத் நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு விடப்படும்.

உ. சட்டமேதை மெக்காலேயின் கருத்தோவியம்

சட்ட வித்தகர் மெக்காலே தனது சட்ட மன்றக் குறிப்பு களில் அன்று வழங்கிய சட்டங்களில் காணப்பட்ட ஓட்டை

ஒடிசல்களை மிகவும் துல்லியமாக ஆய்ந்து குறைகளையும் நிறைகளையும் எடுத்துக்காட்டியுள்ளார்.

இசுலாமியர் சட்டம் சமயநம்பிக்கையற்ற ஒருவர்வழக்கில் சான்றுரை அளித்தால் அதை ஏற்றுக் கொள்ளக் கூடாதெனக் கூறுகின்றது. மனுச் சட்டமோ ஒரு பிராமணர் பெரியகுற்றம் செய்தாலும் அவரை விட்டுவிடலாம் என்றும் ஒரு பறையர் சிறிய குற்றம் செய்தாலும் கடுமையான தண்டனைக்குரியவர் என்றும் கூறுகின்றது. நேர்மை நியாயம் ஆகியவைகளுக்கு எதிரான இத்தகைய முறைகேடுகள் என்றும் தொடர்ந்து இருக்க நாம் அனுமதிக்க முடியுமா?'' என உள்ளம் நொந்து மெக்காலே குறிப்பிட்டுள்ளார்.

அன்றைய மொகலாயப் பேரரசர் கிழக்கிந்தியக் கம்பெனியை வங்காளத்தில் தனது திவானாக இருந்து பணி செய்யும்படி நியமித்தார். கிழக்கிந்தியக் கம்பெனி அன்றிருந்த நிலையில் அந்தப் பெரிய பொறுப்பை ஏற்றுக்கொள்ள இயலுமா என்பது கேள்விக் குறியாக இருந்தாலும், தானாக வந்த சீதேவியை விட்டுவிடவும் மனமில்லை. ஆகவே 1771-ல் கம்பெனியின் நிர்வாக இயக்குநர்கள் திவான் பொறுப்பை ஏற்றுக் கொள்வதென முடிவு செய்த பொழுது கம்பெனி நிர்வாகம் ஒரே சமயத்தில் ஒரு குற்றவியல் நடுவராகவும் (Magistrate) உரிமையியல் நீதிபதியாகவும் (Judge) செயல்பட வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டதைக் கண்டு திகைத்தது. இருந்தாலும் வாரன் கேஸ்ட்டிங்சு போன்ற உறுதியும் துணிவும், செயல் திறனும் வாய்ந்தவர்கள் கம்பெனி நிர்வாகத்தின் தலைமையிடத்தில் இருந்ததால் நிலையைச் சமாளிக்க முடிந்தது. அவர் 1772ல் தொடர்ந்து சில ஒழுங்கு முறைச் சட்டங்களை வெளியிட்டார். அவைகளின்படி, குற்றவியல் நீதிமன்றங்கள், உரிமையியல் நீதிமன்றங்கள் (Criminal and Civil Courts) அமைக்கப்பட்டன. அவைகள் தான் மாநிலத்தின் உள்பகுதிகளில் (Muffasil) அமைக்கப்பட்ட அதலத் நீதி மன்றங்கள் ஆகும். ஒழுங்கு முறைச் சட்டங்களில் நீதிமன்றங்கள் தம் முன்வரும் வழக்குகளில் என்ன நடைமுறையைப் பின் பற்றித் தீர்ப்பு வழங்க வேண்டுமென்ற விதிமுறையும் கூறப்பட்டிருந்தது.

அவைகளில் பிரிவு XXIII பின் வருமாறு கூறுகின்றது. "'மகம்மதிய மக்களிடையே எழும் வாரிசுரிமை, திருமணம்,

சமய நிறுவனங்கள், சமயப் பழக்க வழக்கங்கள் ஆகியவை பற்றிய வழக்குகளில் கொரானில் விதிக்கப்பட்ட சட்டங்களையே நீதி மன்றம் பின்பற்ற வேண்டும். இந்து மக்களிடையே வாரிசுரிமை, திருமணம், சாதிபேதங்கள், சமய நிறுவனங்கள், சமய பழக்க வழக்கங்கள் பற்றி எழும் பூசல்களில் இந்து சாஸ்திரங்களில் கூறப்படும் விதிகளையே பெரும்பாலும் நீதி மன்றம் ஏற்றுச் செயல்பட வேண்டும். அம்மாதிரிசமயங்களில் முகம்மதிய மவுலிகளும், பிராமணர்களும் அந்தந்த சட்டங்களை விளக்குவதுடன் கையொப்பமிட்ட அறிக்கைசமர்ப்பிக்க வேண்டும். நீதிமன்றம் வழங்கும் தீர்ப்பாணைகளிலும் சான்றுக் கையொப்பமிடுதலும் தேவையாகும்,''

இப்படி ஒரு ஒழுங்கும் சீறும் இல்லாத நீதி முறையே அன்று நிலவநேர்ந்தது. அய்ரோப்பிய நாடுகளிலும் தொடக்கத்தில் நீதித்துறையில் அத்தகைய நிலையே இருந்தது. பின்னர் சீரடைந்து நீதித்துறையில் பெருமுன்னேற்றம் அந்த நாடுகளில் காண முடிந்தது. ஆகவே ஒவ்வொரு நாடும் தனது நீதித் துறை வரலாற்றில் தேக்கத்தையும் ஒழுங்கும் சீரும் அற்ற நிலையையும் சந்தித்த பிறகே முன்னேற்றத்தைக்காணமுடியும். இந்திய மண்ணிலும் அந்தக் கால கட்டத்தில் நீதித்துறையில் அவல நிலை இருந்ததை மெக்காலே சுட்டிக் காட்டியுள்ளார்.

இந்தியாவில் ஒன்றுக்கொன்று வேறுபாடுகளைக் கொண்ட பல சட்டமுறைகள் இருந்தன. வேறுபாடுகளைக்கொண்டவையானாலும் ஒரே கால கட்டத்தில் அவை இயங்கவேண்டி வந்தன. இந்தியப் பூர்வகுடிகள் தமக்கென ஒருவகைச் சட்டங்களை வைத்திருந்தனர். இந்தியாவின் மீது படையெடுத்து வந்து நாடுகளை வெற்றி கொண்ட பல இனங்கள் தம்முடன் தனி இயல்புகள் கொண்ட சட்டங்களை சுமந்து வந்து இந்திய மண்ணில் இறக்கினர். முகமதியர் கொரானையும் கொரானுக்கு விளக்கம் தரும் பல உரையாசிரியர்களின் கருத்தோவியங்களையும் இறக்குமதி செய்தனர். ஆங்கிலேயர் தமதுநாட்டில் வளர்ந்துள்ள சட்டஏடுகளையும் அவைகளுடன் இணைந்துள்ள அறிக்கைகளையும் கொண்டுவந்தனர். ஒரே வழக்கில் வாதுரையும் அதைச் சேர்ந்த அழைப்பாணையும் ஒரு இன மக்கள் கொண்டிருந்த முறையில் இருந்தன. வழக்கில் வழங்கும் தீர்ப்பு இன்னொரு இனத்தின் சட்ட முறையை ஒட்டி இருந்தது. வழக்கில் எழுகின்ற வினா ஆங்கில நாட்டு நீதிமுறையின் அடிப்படையில் வனையப்பட்டது. அந்த வழக்கில் நீதிமன்றம் சொள்ளுகின்ற முடிவு காசி நகரில் நிலவும் சட்ட விதிகளின் அடிப்படையில் இருந்தது.

(In one and The Same Case The Process and pleadings are in the fashion of one nation. The Judgment is according to the Laws of another. An issue is evolved accurding to the Rules of West minister and decided according to those of Benaris-Meaculay's Legislative minutes)

மேதை மெக்காலேயின் கருத்தில் அன்று இந்திய மண்ணில் நிலவி வந்த சட்ட அமைப்பில் மூன்று குறைபாடுகள் காணப்பட்டன. இயல்பாகவே அன்றைய சட்டத்தில் குறைபாடுகள் காணப்பட்டது முதலாவதாகும். இரண்டாவதாக இந்தப் பல்வேறு சட்டங்கள் எங்கிருந்து முளைத்தன, யார் மூலம் தோன்றின என்பவைகள் புரிய முடியாமல் இருந்தன. மூன்றாவதாக இத்தகைய குறைபாடுகள் கொண்ட சட்டங்களை அமுல்படுத்திய நீதிமன்றங்கள் ஒழுங்கற்றும் ஒன்றுக்கொன்று முரண்பட்டும் இருந்தன என்பதாகும். இந்த நிலையில் நீதிமன்றங்கள் சில கோட்பாடுகளைக் கடைப் பிடித்தால் சட்டங்களிலும், அவைகளை அமுல்படுத்தும் நீதிமன்றங்களிலும் காணப்படும் குறைபாடுகளையும், முரண்பாடுகளையும் பெரிதும் தவிர்க்க முடியும் என சட்ட வித்தகர் மெக்காலே ஆலோசனை தெரிவித்தார்.

''உங்களுக்குத் தேவைப்பட்டால் ஒரே சீரான போக்கைக் கைக் கொள்ளுங்கள். மாறுபாடுகள் தேவையென்றால் அவைகளையும் வைத்துக் கொள்ளுங்சள். ஆனால் எல்லா வழக்குகளிலும் ஒரு உறுதியான அய்யத்துக் கிடமற்ற போக்கை மேற்கொள்ளுங்கள்'' என்பதே மேதை மெக்காலேயின் அறிவுரையாகும்.

(The Principle is this. Uniformity when you Can have it; diversity where you must have it; but in all cases Certainity-Mecaulay in his Legislative minutes.)

ஊ. சென்னை மாநகரில் ஒரு நீதியும் மாநில உட்பகுதியில் வேறு நீதியும்

சென்னை மாநகருக்கு ஒரு நீதி, மற்ற பகுதிகளுக்கு இன்னொரு நீதியா என்ற கேள்வி நமது உயர் நீதிமன்றம் தோன்றுவதற்கு முன்னர் எழுந்தது. இந்த இருவகை நீதிக்கு ஆங்கிலேய அரசே காரணம் என்றாலும், இதை எதிர்ப்பதிலும் ஆங்கிலச் சட்ட மேதை மெக்காலே முன்வரிசையில் இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

எதிர்ப்புக்குக் காரணம் எல்லாவற்றிலும் தகுதி பெற்ற உச்சநீதிமன்றம் சென்னை மாநிலத்தில் வாழ்ந்த வெள்ளைக் காரர்களுக்கு நீதிவழங்க வேண்டுமென்றும், அதலத் நீதிமன்றங் கள் வெள்ளைக்காரர்களுக்கு நீதிவழங்கும் தகுதி பெறவில்லை எனவும் கருதி இந்தியர்களுக்கு மாத்திரம் நீதி வழங்க வேண் டும் என்ற ஏற்பாடுதான் என்பதில் அய்யமில்லை. உள்பகுதிகளில் வாழ்ந்த வெள்ளைக்காரக் குடிமக்களுள் குற்றம் செய்தவர் களை நடுவர்கள் கைது செய்ய உத்திரவு வழங்கலாம். ஆனால் அவர்களை நீதிமன்றத்தில் நிறுத்தி விசாரணை செய்ய முடி யாது. சென்னையில் உள்ள உச்ச நீதி மன்றமே அத்தகை யோரை விசாரித்துத் தண்டனை வழங்கும் அதிகாரம் பெற்றி ருந்தது.

சொத்து, பணம் சம்பந்தமாக இந்தியர்களுக்கும், இங்கு வாழ்ந்த ஆங்கிலேயர்களுக்கும் இடையே பூசல் எழுந்தால் உள் பகுதியில் இயங்கும் நீதிமன்றங்களில் இந்தியர் எவரும் ஆங்கி லேயர் மீது வழக்குத் தொடுக்க முடியாது. சென்னை மாநகரில் இயங்கும் உரிமையியல் நீதிமன்றங்களுக்கே அந்த வழக்கை விசாரிக்கும் தகுதியிருந்தது. ஒருவேளை உள்பகுதி நீதிமன்றங் கள் அந்தவழக்கை விசாரித்துத் தீர்ப்பு வழங்கினாலும், அதை எதிர்த்து ஆங்கிலேயர் உச்சநீதி மன்றத்துக்கு மேல் முறையீடு செய்து கொள்ள வாய்ப்பு இருந்தது.

ஆங்கிலப் பேரரசரால் வழங்கப்பட்ட பட்டையத்தின் கீழ் சென்னை மாநகரில் உச்சநீதி மன்றம் உருவாக்கப்பட்டது. பெரும்பாலும் ஆங்கில நாட்டுச் சட்டங்களே உச்சநீதிமன்றத் தின் அதிகாரவரம்பிலும் ஆளுகையிலும் இருந்தன. கிழக்கிந் திய கம்பெனி நிர்வாகமே அதலத் நீதிமன்றங்களை உருவாக் கியது. அந்த நீதிமன்றங்களில் நிலவிய சட்டங்களும் இசுலாமி யர் தனித்த சட்டங்களும் இந்து சாத்திரச்சட்டங்களும் ஆகும்.

அன்று சென்னை உச்சநீதி மன்றத்தில் தொழில் நடத்திய ஆங்கில வழக்கறிஞர்கள், ஆங்கிலக் குடிமக்கள் எந்த நாட்டில் வாழ்ந்தாலும் ஆங்கில நாட்டுச் சட்டங்கள் வழங்கும் பாது காப்பும் நீதியும் அவர்களது பிறப்புரிமை என்றும், அதனால் ஆங்கிலப் பேரரசரால் உருவாக்கப்பட்டதும், ஆங்கிலச் சட் டங்கள் கூறும் நீதியை வழங்கக் கூடியதுமான உச்சநீதி மன் றமே எங்களுக்கு உகந்தது என வாதிட்டனர். மேலும் கிழக் கியக் கம்பெனியால் உருவாக்கப்பட்ட நீதிமன்றங்கள் கம்

பெனிக்கு எதிரான வழக்குகளில் நியாயம் வழங்க இயலாதிருந்தன என்பதும் அவர்கள் சுட்டிக்காட்டிய கூற்றாகும். மூன்றாவதாக அவர்கள் எழுப்பியவாதம் இசுலாமியர் தனிப்பட்ட சட்டமும், இந்து சாத்திரமும் சொல்லுகின்ற முறையில் வழங்கும் நீதி ஆங்கில மக்களுக்குப் பொருந்திவராது என்பதாகும். இத்துடன் கம்பெனி நீதிமன்றங்களில் பணிபுரிவோர்களில் சிலர் கையூட்டுப் பெறும் ஊழல் பேர்வழிகளாக இருப்பதால் அங்கு செல்ல அஞ்சுவதாகவும் குறிப்பிட்டனர்.

மேதை மெக்காலே ஆங்கில வழக்கறிஞர்களின் வாதம் வலுவற்றது என்றும் கம்பெனி நீதிமன்றங்களிலும் அனுபவமும், புலமையும் மிகுந்த பலர் நீதிபதிகளாகப்பணியாற்றுவதால் ஆங்கிலேயர் அஞ்சத் தேவையில்லை யென்றும் மேலும் இசுலாமிய இந்து சட்டங்களைத் தவிர பொது சட்டங்களையும் அமுலுக்கு கொண்டு வருவதன் மூலம் எல்லோருக்கும் நீதி கிடைக்கும் வழி உண்டாகும் என்றும் சுட்டிக்காட்டினார்.

''இந்திய நாட்டில் இரண்டு வகை நீதி முறை என அறிவித்துள்ளோம். செப்பமும் நாகரீகமுமற்ற ஒருவகை நீதி முறை இந்தியர்களுக்குப் போதும்; ஆனால் நமக்கோ உயர்ந்த நீதி முறை தேவையென வைத்துக்கொண்டோம். இந்திய நாட்டில் இயங்கும் கம்பெனியின் பெரிய நீதி மன்றங்களை நம்ப மறுக்கின்றோம் என மிகுந்த ஆர்வத்துடன் காட்ட முயலும் நாம் அந்த நீதிமன்றங்களின் மீது எப்படி இந்திய மக்கள் நம்பிக்கை கொள்வார் என எதிர்பார்க்க முடியும்?'' என உரத்த குரலில மெக்காலோ கேட்டார்.

("We proclaim to the Indian people that there are two sorts of justice: a Coarse one which we think good enough for them, another of Superior quality which we keep for our selves. If we take pains to show that we distrust our highest Courts, how can we expect that the natives of the Country will place Confidence in them?"— Mecaulay in his Legislative minutes)

சதர் திவானி அதலத் நீதிமன்றத்தில் பழுத்த அனுபவமும், நிரம்பிய புலமையும் வாய்ந்தவர்களும் நீதிபதிகளாக் இருக்கின்றனர். ஏதோ அங்கொன்றும் இங்கொன்றுமாக கம்பெனி நீதிமன்றங்களில் பணிபுரியும் சிலர் ஊழல் பேர் வழிகளாகக் இருக்கின்றனர் என்பதைச் சாக்காகக் கொண்டு ஒரு சிறு பகுதியினராக உள்ள ஆங்கில குடிமக்களின் மீது அந்த நீதிமன்றங்களுக்கு அதிகாரவரம்பில்லை என ஒதுக்குவது பொருளற்றது; நகைப்புக்கிடமானது; கேடும் பயக்க

வல்லதுமாகும்.'' என மேலும் சட்டவித்தகர் மெக்காலே மனம் நொந்து குறிப்பிட்டார்.

("Nohing Can be more pernicious or absurd than because a Certain body of functionaries are corrupt to exempt from their jurisdiction a very small class (British nationals) distinguished by intre pidity and by hatred of oppression and fraud accustomed to a pure administration of justice and accustomed also to think little of the frown of power, certain to complain whenever they think themselvs wronged and certain to be heard whenever they Complain' —Mecanlay in his legislative minutes)

''ஆங்கிலேயர் என்றும் இந்தியர் என்றும் எதை வைத்துக் கொண்டு நீதிமன்றத்தில் பகுத்துக் காண முடியும்? அதுபோல் எந்தக் காரணத்தை வைத்துக் கொண்டு நமது நூறு மிலியன் இந்திய மக்களுக்கு மிகத்தரம் குறைந்த நீதிபோதும் என்றும் விரல் விட்டுஎண்ணக்கூடிய நமது ஆங்கில மக்களுக்குத் தூய்மை யான நீதி தேவையென்றும் கருதமுடியும்'' என்றும் பெருமகன் மெக்காலே ஆவேசத்துடன் முழங்கியுள்ளார்.

மெக்காலே எழுப்பிய வினா வீண் போகவில்லை, அவரது வலுவான, நியாயமான வாதம் ஏற்றுக்கொள்ளப்பட்டது. 1820ல் வெளியான சட்டத்தின்படி கம்பெனி நீதிமன்றங்கள் ஆங்கில மக்களுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்படும் உரிமை வழ்க்குகளில் விசாரணை செய்து தீர்ப்பு வழங்கும் அதிகாரம் பெற்றன.

குற்றவியல் வழக்குகளிலும் ஆங்கிலக் குற்றவாளிகளை விசாரிக்கும் அதிகாரவரம்பை மாவட்ட நீதிமன்றம் [Zilla Courts] போன்ற கம்பெனி நீதிமன்றங்கள் பெற சட்டம் வழி வகுத்தது. இல்பர்ட் என்ற ஆங்கில துரைமகனார் அந்த மசோதவை சட்டமன்றத்தில் முன்மொழிந்து பேசிய உரை வரலாற்றுச் சிறப்பு வாய்ந்ததாகும்.

நமது ஆங்கில வல்லரசு ஒரு சட்ட வல்லரசு என்பதை உண்மையாகவும் உணர்வு பூர்வமாகவும் நம்புகின்றோம். எல்லா நிலையும் தரமும் வாய்ந்த மனிதர் அனைவருக்கும் அவர்களைப் புரிந்துகொண்டு நமக்குள்ள திறமைக்கு ஏற்க நியாயம் வழங்க உண்மையான முயற்சி செய்து வருகின்றோம்

என்பதுதான் நம்மிடம் மறைந்து கிடக்கும் வலிவாகும். இந்தியாவில் நமக்குக் கிடைத்துள்ள சட்ட சிறப்புரிமைகள் நமது ஆங்கிலத் துரைத்தனத்தைத் தாங்கப் போவதில்லை என்பதுடன் ஒருவேளை அந்த சிறப்புரிமைகள் நம்மை விட்டு நீங்குவதாலும் ஆங்கிலத் துரைத்தனம் ஆட்டங்கொள்ளப் போவதுமில்லை. நமது மாட்சிமை தங்கிய அரசியாரின் கீழ் வாழும் குடிமக்கள் அனைவருக்கும் சமநீதி வழங்க உறுதி கொண்டுள்ளோம் என்ற சூளுரையை எது குலைத்துவிடுமோ அதுவே நமக்குக் கேடு தருவதாக முடியும்.''

இல்பர்ட் கொண்டு வந்த மசோதா சட்டமாக மலர்ந்த போது குற்றவியல் வழக்குகளிலும் வெள்ளைக்காரர்களுக்குக் காட்டப்பட்டு வந்த சட்ட சலுகைகள் நீக்கப்பட்டன, நீதி மன்றங்கள் முன் யாவரும் சமம் என்ற கொள்கை உறுதிப் படுத்தப்பட்டது எனலாம்.

1857 ல் துவங்கிய விடுதலைப்போரின் விளைவாக இந்திய அரசில் மிகப்பெரிய மாறுதல் ஏற்பட்டது. கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆட்சிமாறி ஆங்கிலப் பேரரசியார் இந்திய ஆட்சியை நேரடியாக ஏற்றுக்கொண்டார். இனி மாநகரில் உச்ச நீதிமன்ற நீதி முறையும் உள்பகுதியில் சதர் அசுவத் நீதிமன்றமுறையும் பயனற்றவைகளானதால் ஒரே சீரான நீதிமுறை தேவையெனப் பெருமக்கள் பலரால் உணரப் பட்டதின் விளைவே 1862 ஆகஸ்டு திங்களில் எல்லோருக்கும் சமமான நீதி என்ற ஒளிக்கதிர்களைப் பரப்பிய வண்ணம் நமது நெஞ்சையள்ளும் உயர்நீதிமன்றம் உதயசூரியனைப் போல் தோற்றமெடுத்தது அடிப்படையாக இருந்தது.

தருமமிகு சென்னையில் அன்றியங்கிய உச்ச நீதிமன்றம்
திருவள்ளுவர் செப்பிய ''கண்ணோடாது இறைபுரிந்து
யார் மாட்டும் தேர்ந்து செய்வதே முறை'' என்பதை
அலட்சியம் செய்து அருளுள்ளம் கொள்ளாதுஅன்னியர்பால்
கண்ணோடி ஆங்கிலேயர்க்கே உயர்நீதி உண்டு என
சமநீதி என்னும் நெறியினைச் சாய்த்து நம் சொந்த
இந்தியரை இருட்டிலே தள்ளியது குற்றமே எனக் கூறு
வோம்.

உலகுக்கு ஒளிகாட்டும் சமநீதிச் சூரியனை மறைக்கவா
முடியும்.

நம் உயர்நீதிமன்றம் சமுதாய நீதி என்ற ஒளிக்கதிர்களைப்
பரப்பி உதித்து உயர்ந்ததால் நம் நெஞ்சம் பூரிப்பால்
திளைத்ததம்மா!

---

4. "நெஞ்சையள்ளும் உயர்நீதிமன்றம்"

அ. "நீதியில் பூத்த பொன்னேடு"

நீதித் துறை வரலாற்றில் சென்னை உயர்நீதிமன்றம் தோன்றிய நிகழ்ச்சி பொன்னெழுத்துக்களால் பொறிக்கத் தக்கது. உயர்நீதிமன்றம் தோற்றமெடுப்பதற்கு முன் சென்னை மாநகரிலும் உள் பகுதிகளிலும் இயங்கி வந்த நீதிமன்றங்களில் சென்னை மாநகர் நீதிமன்றம் எங்களுக்கு, உள்பகுதி நீதி மன்றங்கள் உங்களுக்கு எனப் பாகுபாடு செய்த நிலை காணப் பட்டதைப் பார்த்தோம். முறை வேண்டி வருபவர்கள் இது நமக்குரியதா அல்லது அவர்களுக்குரியதா என்பதை ஆய்ந்து பார்த்துத் தெளிந்த பிறகே நீதி மன்றத்துக்குள் நுழைய வேண்டி இருந்தது. யார் மாட்டும் தேர்ந்து செய்வதே நீதி முறை எனபது இல்லாமல் ஆளைப்பார்த்து நீ வெள்ளையரா உள்ளே வா, அவர் இந்தியரா தள்ளிநில் என்று ஒதுக்கி வைக் கும் போக்கு இருந்தது. நமது ஊர்ப்புறங்களிலே நடந்த கோவலன்-கண்ணகி நாடகத்தில் கோவலன் "மாதவியாய் இருந்தால் மடிமேல்வா, கண்ணகியாய் இருந்தால் கடக்கப் போ" என்று பாடுவதுபோல் உயர்நீதிமன்றம் தோன்று முன் சில நீதிமன்றங்கள் வெள்ளையருக்கு மாத்திரம் கதவுகளைத் திறந்துவிட்டன; இந்தியர்களுக்குக் கதவைத் தாளிட்டன.

ஆனால் நமது உயர்நீதிமன்றம் பழயபோக்கை உதறித் தள்ளி எல்லோருக்கும் உரியதாய் தனது நீண்ட கதவுகளைத் திறந்தே வைத்திருக்கின்றது.

"ஓர்ந்து கண்ணோடாது இறைபுரிந்து யார் மாட்டும் தேர்ந்து செய்வதே முறை" எனத் திருவள்ளுவப் பேராசான் அருமையாகக் காட்டும் நீதி முறைக்கு இலக்கிய மாகத் திகழ்கின்றது நமது உயர்நீதிமன்றம் என்றால் அது மிகையல்ல. "யார் மாட்டும்" என்ற சொற்கள் எல்லோரிடத் திலும் சமமான நீதி காட்ட வேண்டுமென்ற குறிப்பையே வெளியிடுகின்றன எனக் கொள்ளலாம்.

6-8-1861ல் ஆங்கிலப் பேரரசால் இந்திய மாநிலத் தலை நகரங்களில் உயர்நீதிமன்றங்கள் அமைக்கும் நோக்குடன்

சட்டம் ஒன்று உருவாக்கப்பட்டது. அந்தச்சட்டத்தை ஒட்டி விக்டோரியா அரசி 26-6-1862ல் வெளியிட்ட முத்திரைப் பத்திரப்படி (Letters Patent) சென்னை மாநிலத்தில் உயர்நீதி மன்றம் அமைந்தது. தலைமை நீதிபதி ஒருவரும் அவருடன் இதர அய்ந்து நீதிபதிகளும் உயர்நீதி மன்றத்தில் அமர நியமனம் பெற்றனர். அப்படி நியமனம் பெற்ற முதல்தலைமை நீதிபதி சர். கோலிகார்மன் ஸ்காட்லேண்டு என்பவர். சர் ஆடம்பிட்டில்ஸ்டன், வில்லியம் அம்புரோசுமூர்கெட், தாமசு லம்சுடனஸ்டேஞ்ச், கென்றிடாமினிக் பிலிப்சு, காட்லி ப்ரிரி ஆகியோர் இதர அயந்து நீதிபதிகள் ஆவர்.

1862 ஆகஸ்டு 15ம் நாளன்று உயர் நீதிமன்றத் திறப்பு விழா முறையாக நடந்தது. இந்திய வரவாற்றில் ஆகஸ்டு 15 என்பது மகத்தான திருப்பங்களை நினைவு படுத்துகின்றது. 1947 ஆகஸ்டு 15ல் தான் இந்தியா ஆங்கிலேயரிடமிருந்து விடு தலை பெற்றது. அதற்கும் 85 ஆண்டுகளுக்கு முன்னரே நீதி மன்றங்கள் விடுதலை பெற்றன. 1862 ஆகஸ்டு 15ம் தேதி யன்று முன்பிருந்த இரட்டை நீதிமுறை ஆட்சியிலிருந்து நீதித் துறையும் விடுதலை பெற்று விட்டதால் நீதியின் முன் எல்லோ ரும் சமம் என்ற கோட்பாட்டை உயர்நீதிமன்றம் ஏற்றுக் கொண்டது. புதிய சகாப்தம் பிறந்தது. ஆகஸ்டு 15ந் தேதி யன்று உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதியும் இதர அய்ந்து நீதிபதிகளும் நீதிமன்றத்தில் வந்து அமர்ந்தனர். அவர்களுக்கு இருபுறமும் செரிப்பும் மாஸ்டரும் அமர்ந்து கொண்டனர். தலைமை நீதிபதி ஸ்காட்லேண்டு பின்வருமாறு உரை யாற்றினார்.

''சென்னையில் இயங்கிய உச்ச நீதிமன்றமும் சதர் நீதி மன்றங்களும் தம் பணியை நிறுத்திக் கொண்டன. அவைகள் இரண்டும் கொண்டாடிய தனித்தனி அதிகார வரம்புகள் ஒன் றாக இணைந்து நமது உயர் நீதிமன்றத்தின் கைகளுக்கு வந் துள்ளன. தேவையான மாற்று ஏற்பாடுகளும், திருத்தங் களும் உயர்நீதிமன்றம் மேற்கொண்டுள்ள பணிகளுக் கேற்ற வாறு செய்யச் சிறிது காலம் தேவை. குறைந்தது நான்கு மாதங்களுக்காவது உச்ச நீதிமன்றத்திலும் சதர் நீதிமன்றத்தி லும் பணிபுரியும் அலுவலர்கள் தொடர்ந்து அதே பணியைச் செய்து வரலாம். உச்ச நீதிமன்றத்திலும் சதர் நீதிமன்றத்தி லும் தொழில் நடத்திய பாரிஸ்டர்களும் சொலிசிட்டர்களும், அட்டர்னிகளும், வக்கீல்களும் இனி உயர்நீதிமன்றத்திலும் தொழில் புரியும் வழக்கறிஞர்களாகவும், வக்கீல்களாகவும்,

அட்டர்னிகளாகவும் பட்டியலில் பதிவு செய்யப்படுவார்கள். வழக்கறிஞர்கள் நீதிமன்றத்துக்கு வரும் எந்த வழக்கிலும் தோன்றி வாதாடலாம், சதர் நீதிமன்றங்களில் இதற்கு முன் கொண்டிருந்த அதிகார வரம்புக்குள்ளான வழக்குகளிலும் வக்கீல்கள் தோன்றி வாதாடவும், செயல்படவும் (to appear Plead & act) முடியும். அட்டர்னிகள் (Attorneys) நீதிமன்றத்துக்கு வரும் எல்லா வழக்குகளிலும் தோன்றி செயல்படலாம், (to appear and act)"

தலைமை நீதிபதி மேலும் தனது உரையில் நீதிபதிகள் அமர்ந்து செயல்படும் நீதிமன்ற அறைகளையும் அவர்கள் பார்க்க வேண்டிய வழக்குகளையும் சுட்டிக் காட்டினர்.

புதிதாக நியமிக்கப்பட்ட தலைமைநீதிபதி ஸ்காட்லேண்டு உயர் நீதிமன்றம் தோன்றுவதற்கு முன்னிருந்த உச்ச நீதிமன்றதிலும் தலைமை நீதிபதியாக இருந்தவர். நீதிபதி பிட்டிலிஸ்டன் உச்ச நீதிமன்றத்தில் நீதிபதியாக இருந்தவர். நீதிபதிகள் ஸ்ட்ரேஞ்சு, மூர்கெட், ப்ரிரி, பிலிப்ஸ் ஆகியோர் அய்.சி.எஸ். தேர்ந்தவர்கள் என்பதுடன் சதர் அதலத் நீதிமன்றத்திலும், பவுசுடரி அதலத் நீதிமன்றத்திலும் நீதிபதியாகப் பணியாற்றியவர்கள். பிலிப்ஸ் அந்த இரு நீதிமன்றங்களிலும் நீதிபதியாகச் செயல்பட்டவர். (Acting Judge)

1865ல் ஆங்கில அரசு வெளியிட்ட முத்திரைக் கடிதத்தின் படி உயர்நீதிமன்றம் ஆவண நீதிமன்றமாகவும் (Court of Record) தொடர்ந்து பணியாற்றும் என அறிவிக்கப்பட்டது. அதன்பிறகு 1911ல் உயர்நீதிமன்றச்சட்டம் ஒன்று உருவாக்கப் பட்டது. அதன்படி உயர்நீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கை உயர்ந்த பட்சம் 20 ஆக உயர்த்தப்பட்டதைப் பார்க்கின்றோம். அடுத்து 1915ம் ஆண்டு இந்திய அரசு சட்டம் தேவையென்றால் இரண்டு கூடுதல் நீதிபதிகளை இரண்டு ஆண்டுகளுக்கு மேற்படாமல் நியமிக்கலாம் என்றும் ஆனால் மொத்தமாக 20 நீதிபதிகளுக்கு மேல் போகக் கூடாது என்றும் கூறுகின்றது. அத்துடன் அந்த சட்டம் உயர்நீதிமன்ற நீதிபதியாக ஆகத்தேவையான தகுதிகளையும் குறிப்பிட்டிருக்கின்றது.

1. அய்ந்து ஆண்டுகளுக்கும் குறை வில்லாத காலம் இங்கிலாந்து அல்லது அயர்லாந்து, ஸ்காட்லேண்டு பகுதிகளில் வழக்குறிர் தொழில் செய்தவராக இருக்க வேண்டும்.

2. 10 ஆண்டுகளுக்கும் குறைவில்லாத காலம் அய்.சி. எஸ். பதவியில் இருப்பதுடன் மூன்றாண்டாவது மாவட்ட நீதி

பதியாகப் பணி செய்தவராகவோ அல்லது மாவட்ட நீதிபதியின் அதிகாரங்களைத்தன் கையில் வைத்துக் கொண்டிருந்தவராகவோ இருக்க வேண்டும்.

3. குறைந்தது பத்து ஆண்டுகாலம் துணை நீதிபதி அல்லது சிறு வழக்கு நீதிமன்ற நீதிபதிக்கும் கீழ்ப்படாது நீதித் துறையில் பதவி வகித்திருந்தவராக இருக்க வேண்டும்.

4. பத்து ஆண்டுக்கும் குறையாத காலம் உயர்நீதிமன்றத்தில் வழக்கறிஞர் தொழில் செய்தவராக இருக்க வேண்டும்.

மேலும் தலைமை நீதிபதி உள்பட உயர்நீதி மன்ற நீதிபதிகளில்மூன்றில் ஒரு பங்கினர் பாரிஸ்டர்களாகவும் வழக்கறிஞர்களாகவும் பணிபுரிந்தவர்களாக இருக்க வேண்டுமெனவும் அது போன்று மூன்றில் ஒரு பகுதியினர் அய்.சி.எஸ். பணியில் இருந்தவர்களாக இருக்க வேண்டுவெனவும் அந்த சட்டம் குறிப்பிட்டுள்ளது.

உயர்நீதிமன்ற நீதிபதிகள் மன்னர்பிரான் விரும்பும் வரையிலும் பதவி வகிக்க முடியும். பதவியில் மூத்தவர் தலைமை நீதிபதி. ம்ற்ற நீதிபதிகளும் நியமனம் பெற்ற தேதியை வைத்து மூத்த நிலையைப் பெறுவர்- (Rank according to the Seniority) அந்தச் சட்டத்தின் பிரிவு 106ன் படி உயர்நீதி மன்றம் ஆவண நீதிமன்றமாக இருப்பதுடன் கடலாண்மை (Admiralty jurisdiction) அதிகாரத்தையும் பெற்றது. பிரிவு 107கீழமை நீதிமன்றங்களின் மீது உயர்நீதிமன்றத்தின் மேலதிகாரத்துக்கு வழி வகுத்தது.

இந்த சட்டத்தின் மூலம் முன்னாளில் இருந்த நீதி மன்றங்களுக்குக் கிடைக்காத வாய்ப்பு உயர்நீதிமன்றத்துக்குக் கிடைத்துள்ளதைக் காண்கின்றோம். முன்னாளைய உச்ச நீதி மன்றம், சதர் நீதிமன்றங்கள் தீர்ப்புத் திரட்டுகளும் (Law Reports) தொகுக்குப்பட்ட சட்டத் தொகுப்புகளும், இல்லாத காலத்தில் நீதிவழங்க வேண்டியிருந்தது. இந்தியசட்டம்பற்றிய ஏடும் தனியாக எதுவும் இல்லை. சட்டங்கள் எங்கே உள்ளன. எனத் தேடிப் பார்த்தும சுவடிகளையும் அரேபிய ஏடுகளையும் பார்த்தே அன்று நீதிபதிகள் முடிவுசெய்ய வேண்டிய நிலையில் இருந்தனர். ஆனால்உயர்நீதிமன்ற நீதிபதிகளுக்கு அத்தகைய தொல்லைகள் இல்லாது போய் விட்டன. சட்டத் தொகுப்புக்களும் அரசாங்க அனுமதி பெற்ற சட்ட அறிக்கைகளும் அவர்

கள் முன் இருந்தன. ஆகவே தொகுக்கப்பட்ட சட்டங்களுக்குப் பொருள் விளக்கம் தருவதே உயர்நீதிமன்றத்தின் முக்கியமான பணியாக இருந்தது.

1935ம் ஆண்டு இந்திய அரசுச் சட்டம் உயர்நீதிமன்ற நீதிபதிகளின் ஓய்வு பெறும் வயது 60 ஆண்டு என வரயறை செய்தது. 1915ம் ஆண்டு சட்டம் மன்னர்பிரான் விரும்பும் வரையிலும் உயர்நீதிமன்ற நீதிபதியாக இருக்கலாம் என்று கூறும் விதியை மாற்றி ஓய்வு பெறும் வயதை 60 ஆண்டு என 1935ம் ஆண்டு சட்டம் வரையறை செய்தது குறிப்பிடத்தக்க தாகும். அத்துடன் புதிதாக நியமனம் பெறும் உயர்நீதிமன்ற நீதிபதிகளுக்குப் பதவிப் பிரமாணம் செய்துவைக்கும் பணியை மாநில ஆளுநரிடமிருந்து தலைமை நீதிபதிக்கே மாற்றியதும் ஒரு நல்ல மாற்றமாகும். ஆளுநருக்கே பதவி பிரமாணம் செய்து வைக்கும் உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதி உயர்நீதி மன்ற மற்ற நீதிபதிகளுக்குப் பதவிப் பிரமாணம் செய்வதே முறை என்பது ஏற்றுக் கொள்ளப்பட்டது உயர்நீதிமன்றத்தின் தனித்தன்மைக்கு ஒரு எடுத்துக்காட்டாகும்.

ஆ. இந்திய அரசியல் சட்டத்தில் நமது உயர் நீதிமன்றம்

இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் நீதிமன்றங்களுக்கு உரிய இடத்தைத் தந்துள்ளது. வரலாற்றில் கோடிட்டுக் காட்டக் கூடிய செய்தியாகும். 1862ல் தோற்றமெடுத்த உயர் நீதி மன்றம் படிப்படியாக வளர்ந்து 1935ம் ஆண்டு அரசியல் அமைப்பில் ஒரு பொலிவைப் பெற்றாலும் 1950 ம் ஆண்டில் விடுதலை பெற்ற இந்தியாவில் வகுக்கப்பெற்ற அரசியல் அமைப்புச் சட்டத்தின் கீழ் தான் வலிவையும் பொலிவையும் ஒரு சேரப் பெற்று பெயருக்கேற்ப உண்மையாகவே உயாவு பெற்றுள்ளதெனலாம்.

இந்திய அரசியல் சட்டத்தின் 5ம்அத்தியாயம் மாநில உயர் நீதிமன்றங்களைப் பற்றிய விவரங்களை விரித்துரைக்கின்றது. 214 லிருந்து 231 வரையுள்ள பிரிவுகள் (Articles 214 to 231) உயர் நீதிமன்றங்களைப் பற்றிக் கூறும் அத்தியாயத்தில் அடங் கியுள்ள பிரிவுகளாகும்.

பிரிவு 24ன் படி இந்தியத் திருநாட்டில் உள்ள ஒவ்வொரு மாநிலத்திலும் உயர் நீதிமன்றம் இயங்கும். 1862ல் முத்திரை சட்டம் (Letters Patent) கூறுகின்றபடி இந்தியாவில் அமைக்

கப்பட்ட மூன்று உயர்நீதி மன்றங்களில் நமது உயர்நீதி மன்றமும் ஒன்று எனக் கண்டோம். அந்தப்பெருமை ஒரு புறமுருக்க, நமது அரசியல் சட்டம் பிரிவு 214ல் குறிப்பிடுகின்றபடி, தமிழ் நாட்டில் இயங்கும் உயர்நீதி மன்றமாகவும் எண்ணப்படுகின்றது என்பதைக் குறிப்பிடலாம். பிரிவு 215 சுட்டிக் காட்டுகின்ற படி தனது அதிகாரத்தை யாரேனும் அவமதித்தால் அவருக்குச் சிறைத் தண்டனையோ அபராதமோ வழங்கும் அதிகாரம் பெற்ற மதிப்புறுத்தும் (Court of Record) நீதிமன்றமாகவும் நமது உயர்நீதி மன்றம் விளங்குகின்றது.

தமிழ் மாநில உயர்நீதி மன்றத்தில் தலைமை நீதிபதி உட்பட 25 நீதிபதிகள் பணிபுரிவர் என வரையறுக்கப்பட்டுள்ளது. 25யை 30 ஆக ஆக்கும் எண்ணமும் தற்போது உள்ளது என்பது தெரிகின்றது. பிரிவு 216 குறிப்பிடுகின்றபடி இந்தியக் குடியரசுத் தலைவரே உயர்நீதி மன்றத் தலைமை நீதிபதியையும் நீதிபதிகளையும் நியமிக்கும் அதிகாரத்தைப் பெற்றவர். குடியரசுத் தலைவர் நமது மாநில ஆளுநரையும் இந்திய உச்சநீதி மன்றத் தலைமை நீதிபதியையும், நமது உயர்நீதி மன்றத்தலைமை நீதிபதியையும் கலந்து ஆலோசித்த பிறகே உயர்நீதி மன்ற நீதிபதிகளை நியமிப்பார். அப்படி நியமிக்கப்பட்ட நீதிபதி வயது 62 அடையும் வரையிலும் பதவி வகிப்பார். அவர் ஓய்வு பெறுவதற்குள் அவரை உச்சநீதிமன்ற நீதிமதியாகவும், நியமிக்கவும் அல்லது வேறு மாநில உயர்நீதி மன்றத்துக்கு மாற்றவும் குடியரசுத் தலைவருக்கு அதிகாரம் உண்டு. அண்மைக் காலத்தில் நமது உயர் நீதிமன்றத்தில் தலைமை நீதிபதியாக விளங்கிய திரு. கைலாசம், நீதிபதிகளாகப் பணியாற்றிய மாண்புமிகு நீதிபதிகள் திரு. அழகிரிசாமி, திரு. வரதராசன், திரு. நடராசன் ஆகியோர் உச்ச நீதிமன்ற நீதிபதிகளாக நியமனம் பெற்றதும், அது போல் தலைமை நீதிபதியாகப் பணியாற்றிய திரு. கோகுலகிருட்டினன் குசராத் மாநில உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதியாக நியமனம் பெற்றதும் பெருமைக்குரிய நிகழ்ச்சிகளாகும்.

பிரிவு 217 குறிப்பிடுகின்றபடி குடியரசுத் தலைவருக்குக் கடிதம் எழுதி பதவியை இராசிநாமா (பதவி துறப்பது) செய்து விடலாம். அத்துடன் உயர்நீதிமன்ற நீதிபதி விரும்பத்தகாத நடத்தை உள்ளவர் என்றும், அல்லது பணியை ஆற்ற இயலாதவர் என்றும் இந்தியப் பாராளுமன்றத்தில் பெருவாரியான பாராளுமன்ற உறுப்பினர்கள் தீர்மானித்து அதைக் குடியரசுத் தலைவரிடம் சமர்ப்பித்தால் குடியரசுத் தலைவர் அத்தகைய

வரை பதவி நீக்கம் செய்வார். இந்தியப் பாராளுமன்றம் இது வரையிலும் நமது உயர் நீதிமன்ற நீதிபதி எவரிடத்திலும் குறை காண இயலாத அளவுக்கு உயர்ந்த மரபுகள் காக்கப் பட்டுவருகின்றன என்பது நமக்கெல்லாம் பெருமை தருவதாக இருப்பதுடன் நமது உயர் நீதிமன்ற நீதிபதிகளின் உயர்வுக்கும் சிறப்புக்கும் எடுத்துக் காட்டாகவும் விளங்குகின்றது.

உயர் நீதிமன்ற நீதிபதியாக நியமனம் பெற ஒருவர் இந்தியக் குடிமகனாவும், நீதித்துறையில் 10 ஆண்டுகள் நீதிபதியாகப் பணிபுரிந்தவராகவோ அல்லது 10ஆண்டுகள் வழக்குறைஞராகத் தொழில் நடத்தியவராகவோ இருத்தல் வேண்டுமெனப் பிரிவு 217 மேலும் கூறுகின்றது. நமது உயர் நீதிமன்றத்தில் நிரந்தர நீதிபதியாகப் பணியாற்றி ஓய்வு பெற்ற நீதிபதி உச்ச நீதிமன்றத்திலும் வேறு மாநில உயர் நீதிமன்றங்களிலும் மாத்திரம் வழக்குறைஞராகத் தொழில் நடத்தலாம். இவை தவிர இந்தியாவில் உள்ள வேறு எந்த நீதிமன்றத்தின் முன்னும் தொழில் நடத்த அனுமதியில்லையென பிரிவு 220 விளம்புகின்றது. குடியரசுத் தலைவர் நினைத்தால் நீதிபதி ஒருவரை ஒரு உயர் நீதிமன்றத்திலிருந்து வேறு உயர் நீதி மன்றத்துக்கு மாற்ற முடியும் எனப் பிரிவு 222 குறிப்பிடுகின்றது.

உயர் நீதிமன்றத்தில் பணிகள் அதிகரித்தாலும் வழக்குகள் தீர்க்கப்படாமல் குவிந்துவிட்டாலும் குடியரசுத் தலைவர் தகுதிவாய்ந்தவர்களை கூடுதல் நீதிபதிகளாக இரண்டு ஆண்டுகளுக்கு மேற்படாமல் நியமனம் செய்து வழக்குகளின் தேக்கத்தைக் குறைக்க வகை செய்ய முடியும். அதே போன்று உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதியும் ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற நீதிபதிகளைக் குடியரசுத் தலைவர் அனுமதியின் பேரில் நீதிபதியாக அமர்ந்து வழக்குகளை முடிக்கும் படி வேண்டிக் கொள்ளலாம். வேண்டிக் கொண்டதின் பேரில் பணியாற்றுகின்ற அந்த நீதிபதிக்கு உயர் நீதிமன்ற நீதிபதி போல் அதிகாரமும் உரிமைகளும், வரம்புகளும், ஊதியமும் கிடைத்தாலும் அவர் அந்த உயர் நீதிமன்றத்தின் நீதிபதியாகக் கருதப்படமாட்டார்.

உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதி மாநில நீதித்துறையின் தலைவர் ஆனதால் நீதித்துறையின் நிர்வாக அதிகாரத்தைப் பெற்றவராவார். அவரே நீதித்துறையைப் பொருத்துப் பொதுக் கொள்கைகளையும் வகுப்பவர். உயர் நீதிமன்ற நீதிபதிகள் மாநிலம் முழுதும் இயங்கும் கீழமை நீதிமன்றங்களையும் தீர்ப்புஆயுங்களையும் கண்காணிக்கின்றனர். மேலும்

அவைகளிடமிருந்து தேவையான அறிக்கைகளையும் ஆய்வு களையும் உயர்நீதிமன்றம் பெருகின்றதுடன், அவைகளை அம் வப்பொழுது உயர் நீதிமன்ற நீதிபதிகள் மூலம் பார்வையிடும் பணியையும் மேற்கொள்கின்றது.

உயர் நீதிமன்றம் கீழமை நீதிமன்ற நீதிபதிகளை தேவைப் படும்போது மாற்றுதல், பதவி உயர்வு அளித்தல், அவர் களுக்கு எதிராக ஒழுங்கு நடவடிக்கை எடுத்தல் ஆகியவை களையும் அவர்களது பணியின் தரத்தையும், அளவையும் கணிக் கின்ற பணியையும் மேற் கொள்கின்றது. புது நீதிமன்றங் களைத் தேவையான இடங்களில் அமைத்தல், நீதி மன்றக் கட்டிடங்கள்கட்ட அரசுக்குக் கோரிக்கை விடுத்தல், கீழமை நீதிமன்ற நீதிபதிகளின் நலன்களைக் காப்பாற்றும் பணிகளை மேற்கொள்ளல், போன்ற வைகளையும் பார்த்து வருகின்றது.

கீழமை நீதிமன்றங்கள் தம் பணியை எப்படி ஒழுங்குபடுத் திக் கொள்ள வேண்டுமென்பது குறித்தும், தவறுகளைச் சுட்டிக்காட்டியும் உயர் நீதிமன்றம் சுற்றறிக்கைகளை வெளி யிடுகின்றது. ஆண்டுதோறும் குறிப்பிட்ட இடங்களில் நீதித் துறை மாநாடுகளை நடத்தி நீதிபதிகளின் குறைகளைக் கேட் பதும், குறைகளைக் களைவதும, தீர்மானங்களை அரசுக்குப் பரிந்துரை செய்வதும் உயர் நீதி மன்றம் மேற்கொண்டுள்ள சிறந்த பணிகளாகும். ஏறக்குறைய கீழமை நீதிமன்ற நீதிபதி கள் அனைவரும் குடியிருக்க வீடுகள் கட்டியதும், தொலை பேசிகள் அமைத்துத் தந்ததும், சென்னை நகர நீதிபதிகள் நீதி மன்றங்கள் போய் வர பேருந்துகள் வாங்கித் தந்ததும் உயர் நீதி மன்றத்தின் சாதனைகளாகும்.

(இ) நீதிப் பேராணைகள் (Writs)

இந்திய உச்சநீதிமன்றம் பிரிவு 32ன்படி (Article 32) நீதிப் பேராணைகள் வழங்கும் அதிகாரம் பெற்றுள்ளது. அதுபோல் நமது உயர் நீதிமன்றம் பிரிவு 226ன் படி நீதிப்பேராணைகள் வழங்கும் அதிகாரம் பெற்றிருக்கின்றது. உயர் நீதிமன்றம் பெற்றுள்ள இந்த அதிகாரம் உச்ச நீதிமன்றத்தின்பேரதிகாரத் தைக் குறைப்பதற்கோ, அல்லது அதற்கு எதிரானதோ அன்று. அடிப்படை உரிமைகளை நிலை நாட்டவும், வேறு தகுதி யான உரிமைகளைப் பெறவும் அவரவர் வசதியையும் முன் னிட்டு பிரிவு 226ன் படி உயர் நீதிமன்றத்தையோ நாடலாம். உயர் நீதி மன்றம் வழங்கக் கூடிய நீதிப் போதனைகள் கீழே விவரிக்கப்படுகின்றன.

(1) ஆட்கொணர்விக்கும் நீதிப்பேராணை (Writs of habeas corpus) தம் இச்சைக்கு மாறாகச் சிறைப்படுத்தப்பட்ட வரை நீதிமன்றத்தின் முன்கொண்டு வந்து சிறைப்படுத்தியதற் கான காரணத்தை விளக்கும்படி சிறைபடுத்தியவருக்கு இடப் படும் ஆணை இதுவாகும்.

2. செயலுறுத்தும் நீதிப்பேராணை (Writs of Mandamus) பொதுக்கடமைக்கேற்ப சட்டம் விகித்தவாறு செய்ய வேண்டிய ஒரு குறிப்பிட்ட செயலைச் செய்யுமாறு அரசாங்கத் திற்கோ நீதிமன்றத்துக்கோ அல்லது அவைக்கோ பொது அதி காரமுடையவருக்கோ இடப்படும் ஆணையாகும்.

3. தடையுறுத்தும் நீதிப் பேராணை [Writ of Prohibition) அதன் அதிகார வரம்பை மீறியோ நாட்டின் பொதுச் சட்ட முறைக்கு முரணாகவோ குறித்த ஒரு நடவடிக்கை எடுக் காதவாறு கீழமை நீதி மன்றத்தைத் தடைசெய்யும் ஆணை.

4. தகுதிமுறை வினவும் நீதிப்பேராணை (Writ of Quo Warranto) பொது அதிகாரப் பதவி அல்லது பொது உரிமை அல்லது சுதந்திரம் இவற்றில் ஒன்றை உடையவரிடம் அல்லது கைப்பற்றியவரிடம் அவர் எந்த உரிமையின் அடிப்படையில் அந்தப் பாத்தியதை கொண்டாடுகின்றார் என வினவும் ஆணை.

5. நெறிமுறை உணர்த்தும் நீதிப் பேராணை (Writ of Certiorari) சட்டத்தை அல்லது அதிகாரவரம்பினைப் பின் பற்றுவதில் தவறு ஏதேனும் இருக்குமாகில் அதை மறு ஆய்து செய்து நீக்கம் செய்வதற்கான அந்த நடவடிக்கை ஆவணங் களை தமக்கு அனுப்புமாறு கீழமை நீதிமன்றத்துக்கோ தீர்ப் பாயத்துக்கோ இடப்படும் ஆணை.

இந்திய அரசியல் சட்டம் உருவாக்கப்பட்டு அமுலுக்கு வந்த பிறகு அதன்வழி உயர் நீதிமன்றத்தின் பணிகள் வெகு வாக வளர்ந்திருக்கின்றன. நீதிப்பேராணைகள் (Writs) மூலம் நமது உயர் நீதிமன்றத்துக்கு மகத்தான பொறுப்புகள் சுமத்தப்பட்டிருக்கின்றன. இந்திய அரசியல் சட்டம் மக்க ளுக்கு வழங்கியுள்ள உரிமைகளை மிக உன்னிப்பாகவும் விழியைமூடாமலும் நமது உயர்நீதிமன்றம்காத்துவருகின்றது. அந்த உரிமைகளில் கைவைக்கும் எவரையும் அவர் எவ்வளவு பெரிய பதவி வகிப்பவர் ஆனாலும் தட்டிக்கேட்கத் தயங்காது என்பதை நாம் கண்டு வருகின்றோம். கடைகோடியில்

வாழும் சாதாரணக்குடிமகன் கண்களிலிருந்து வழியும் கண்ணீரையும் துடைக்காத வரையிலும் நாம் பெற்ற சுதந்திரம் பயனுள்ளதாகக் கருதமுடியாது எனக் காந்தி அடிகள் குறிப்பிட்டார். அதே போன்றே ஏதோ ஒரு மூலையில் உள்ள குடிசையில் வாழும் ஒரு ஏழைக் குடிமகனும் தனக்கு நியாயம் கிடைக்க வேண்டுமென நீதிமன்றத்தை நாடினால் அவனுக்கும் நீதி கிடைக்க வழிவகுப்பதே தனக்குள் கடமையென நமது உயர் நீதிமன்றம் கருதி வருகின்றது. இன்றைக்குப் பல தொல்லைகளிடையே வாழும் மக்கள் "நமக்கும் நீதிமன்றம்" உண்டு என ஒரு நம்பிக்கையுடன் வாழ்கின்றனர். அந்த நம்பிக்கை தரும் வலுவே நமது உயர் நீதிமன்றத்துக்குள்ள பெரும் வலுவாகும்.

> "கருமம் சிதையாது கண்ணோட வல்லார்க்கு
> உரிமை உடைத்திவ் வுலகு."

---

5. நம் உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதிகள்

சென்னை உயர் நீதிமன்றத்தின் ஒளிமிக்க வரலாறுக்கு அதன் நீதிபதிகளும் தலைமை நீதிபதிகளும் பெரிதும் காரணம் என்பதை உணராதவர்கள் இருக்கமுடியாது. 1862ல் பிறந்த உயர் நீதிமன்றம் இன்று 125வது வயதை நெருங்கிக் கொண்டிருந்த போதிலும் என்றும் புதுமைப் பொலிவுடன் காட்சி தந்து கொண்டிருப்பதைக் காணலாம். இதற்கு மாயமோ மந்திரமோ காரணமல்ல. அறிவும், ஆற்றலும், அயராது உழைப்பும் கொண்ட பலர் தமது பங்கைக் குறைவரச் செலுத்தியுள்ளதே தலையான காரணமாகும். நீதிபதிகள், வழக்கறிஞர்கள், நீதிமன்ற அலுவலர் என முத்தரப்பினரும் காட்டிய விவேகமும் வேகமும் உயர் நீதிமன்றத்தை உயர்த்தியுள்ளது. இந்திய நீதித் துறையிலே நமது உயர் நீதிமன்றம் ஒரு தனியிடத்தை எட்டிப் பிடித்திருக்கின்றது என்றும் நெஞ்சை உயர்த்திச் சொல்லவும் முடியும்.

சென்னை உயர் நீதிமன்ற முன்னாள் தலைமை நீதிபதிகளின் வரலாற்றை உற்று நோக்கும்பொழுது அவர்களது விவேகமும் உழைப்பும் நீதிமன்ற உயர்வுக்கு எந்தளவுக்குக் காரமாக இருந்தன என்பதைக் காண முடிகின்றது.

முதல் தலைமை நீதிபதி ஸ்காட்லாண்டு

ஸ்காட்லாண்டு 1818ல் பிறந்தார். அயர்லாந்து நாட்டில் வளர்ந்த அவர் அங்கேயே கல்வியும் கற்றார். 1843 ல் வழக்கறிஞராகித் தொழில் தொடங்கினார். 1860ல் சென்னை உச்ச நீதி மன்றத் தலைமை நீதிபதியாக நியமிக்கப்பட்ட அவர் உயர் நீதிமன்றம் தோன்றிய போது உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதியாகவும் நியமனம் பெற்றார்.

உயர் நீதிமன்றம் அவர் நியமனம் பெற்ற காலத்தில் சென்னை முதல் கடற்கரை வீதியில் இருந்த பழைய கட்டிடத்தில் இயங்கி வந்தது. ஸ்காட்லாண்டு நீதிமன்றத்துக்கு குதிரை பூட்டிய வண்டியில் வந்துகொண்டிருந்தார். அந்த வண்டியின்

இருபக்கங்களிலும் நீதிமன்ற சேவகர்கள் தம்கைகளில் தண்டாயுதத்தைப் பிடித்து நின்றபடி கொண்டுவரும் காட்சி சுவையாக இருக்கும்.

சட்டக் கோட்பாடுகளில் நல்ல புலமை வாய்ந்தவராய் இருந்தார். அவரது தீர்ப்புகளில் காணப்படும் ஒரு நிறைவு வழக்கறிஞர்களுக்கும் பொது மக்களுக்கும் நிறைவு தந்தது. சென்னை பல்கலைக் கழகத்தின் துணை வேந்தராகவும் சில காலம் பணியாற்றியுள்ளார்.

சென்னையில் முதலில் இயங்கிய உச்ச நீதிமன்றத்திலும், பின்னர் தோன்றிய உயர்நீதிமன்றத்திலும் தலைமை நீதிபதியாகப் பணியாற்றும் வாய்ப்பைப் பெற்ற அவர் இரண்டையும் இணைக்கும் பாலமாகவும் விளக்கினார். உச்ச நீதிமன்றம் உயர் நீதிமன்றமான மாற்றத்தை அவரால் எளிதாகக் சமாளிக்க முடிந்தது. எதையும் தீர்க்கமாக முடிவு செய்யும் திறம் படைத்த அவரால் உயர் நீதிமன்றத்தின் ''புகழ் மிக்க முதல் தலைமை நீதிபதி'' என்ற பெயரையும் எடுக்க முடிந்தது.

இரண்டாவது தலைமை நீதிபதி வால்டர் மார்கன் (Walter Morgan)

1821ல் பிறந்த மார்கன், இலண்டன் மாநகரில் மன்னர் கல்லூரியில் கற்றுத் தேர்ந்து 1844ல் வழக்கறிஞராக மலர்ந்தார். 1852ல் கல்கத்தாவில் இயங்கி வந்த உச்ச நீதி மன்றத்தில் வழக்கறிஞராகப்பதிவு செய்து தொழிலில் மிகஆவலுடன் நுழைந்தார். 1862ல் கல்கத்தா உயர் நீதி மன்றம் தோற்றமெடுத்த போது அதில் நியமனம் பெற்ற 13 நீதிபதிகளில் மார்கனும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். அலகாபாத்திலும் புதிதாக அமைக்கப்பட்ட உயர் நீதிமன்றத்தில் 1866ல் தலைமை நீதிபதியாக மார்கன் நியமிக்கப்பட்டார். அங்கு அய்ந்து ஆண்டுகள் தலைமை நீதிபதியாகப் பணிபுரிந்து மிகுந்த அனுபவம் பெற்ற மார்கன் 1871ல் சென்னை உயர் நீதி மன்றத் தலைமை நீதிபதியாக நியமனம் பெற்றார். சுமார் 8½ ஆண்டுகள் தலைமை நீதிபதியாகப் பணியாற்றி உயர் நீதி மன்றத்தின் வலிவுக்கும் பொலிவுக்கும் காரணமாக இருந்தார்.

மார்கன் நல்ல திறமையும், நுண்ணிய அறிவும் சொல் வன்மையும் பெற்றிருந்தார். இத்தகைய ஆற்றல்களை

ஒருங்கே பெற்ற அவர் வழக்குகளின் முடிவில் எழுதப்பட வேண்டிய தீர்ப்புகளை ஏனோ எழுதும் பழக்கத்தை கைக் கொள்ளாது இருந்தார். இது ஒரு புதுமையாகவே நமக்குத் தோன்றுகிறது. ஆப்பிரிக்கா நாடுகளில் ஒன்றில் நீதிபதிகள் சம்பவ இடத்துக்கே சென்று சாட்சிகளை விசாரித்து அந்த இடத்தில் அப்போதே வாய்மொழியாகத் தீர்ப்புகளை வழங் கும் நிலை உள்ளதெனத் தெரிகின்றது. ஆனால் மார்கன் உயர்நீதிமன்றத்தில்அமர்ந்து எழுதாத தீர்ப்புகளைவழங்கியது வழக்குகளில்தோன்றும் காலதாமதத்தைத் தவிர்க்கவேபோலும் என எண்ணத் தோன்றுகிறது. நீதிபதி மார்கனது வாய்மொழி தீர்ப்புகள் மிக நீண்டதாக இருக்கும். குறிப்புகள் எதையும் வைத்துக்கொள்ளார். சொல்லேறுழ வரானதால் சொற்கள் மடை திறந்த வெள்ளம் போல் அவர் வாயிலிருந்து பாய்ந்து வரும். அவரது தீர்ப்புக்கெதிராக பிரிவி கவுன்சில் முன் செய் யப்பட்ட மேல் முறையீட்டில், பிரிவு கவுன்சில் நீதி மன்றம் மார்கனது தீர்ப்பு எங்கே எனக் கேட்டபோது எழுதாத தீர்ப்பே உள்ளது என மிகத் துணிவுடன் மறுமொழி தரப் பட்டது என்றால் மார்கன் ஒரு துணிச்சல் மிக்கவர் என்ப தையே இந்த சம்பவம் காட்டுகின்றது.

தலைமை நீதிபதி மார்கன் தன் முன் வந்த ஒருமேல் முறை யீட்டில் வாய்மொழியாக ஒரு தீர்ப்பை வழங்கினார். அந்த வழக்கில் தோன்றிய புகழ் மிக்க வழக்கறிஞர் மெயின் நீதி மன்றத்தில் நீதிபதியைப் பார்த்து ''உங்கள் தீர்ப்புக் குரிய காரணங்கள்யாவை'' என அமைதி இழந்தவராய்க் கேட் டார். ''காரணம்எதுவும் இல்லை'' என்ற விரைந்து மறு மொழியே மெயின்காதில் மோதியது.இரண்டு நீதிமன்றங்களில் தலைமை நீதிபதியாகப் பணியாற்றிய மார்கன் ஸ்காட் லாந்து விட்டுச் சென்ற பெரும் பணியைத் தொடரும் தகுதி பெற்றவராக இருந்ததில் வியப்பில்லை.

''விரைந்துதொழில் கேட்கும் ஞாலம் நிரந்தினிது
சொலல் வல்லார்ப் பெறின்''

மூன்றாவது தலைமை நீதிபதி சார்லசு டேர்னர்

டேர்னர் தனது 25வது வயதிலேயே வழக்கறிஞர் தொழி லைத் தொடங்கி விட்டார். 1866ல் இந்திய மண்ணில் காலடி வைத்ததும் டேர்னரின் வாழ்க்கையில் வியத்தகு முன்னேற்றங் கள் தோன்றத் தொடங்கின. கல்கத்தா உயர்நீதி மன்றத்தில் மூன்று தடவைகள் தலைமை நீதிபதியாக பணியாற்றும்

வாய்ப்பு அவருக்குக் கிடைத்தது. பின்னர் மார்கன் தலைமை நீதிபதியாக ஓய்வு பெற்ற சமயம் மார்கனுக்குக் கிடைத்த அதே வாய்ப்பு டேர்னரையும் நாடி வந்தது ''காக்கை உட்காரப் பனம் பழம் வீழ்ந்தது'' என்று சொல்லுகின்ற ஒரு தற்செயல் போன்றதல்ல. டேர்டரின் தகுதியும், ஆற்றலும், அறிவுமே இந்தப் பெரும் பதவியைத்தாங்கும் எல்லாத் தகுதியும் பெற்றவர் எனப் பறை சாட்டின,

அவர் நுண்மாண் நுழைபுலம் பெற்றிருந்ததுடன் நல்ல நெஞ்சும் கொண்டவராக இருந்தார். தகுந்த சமயங்களில் தனது உணர்ச்சிகளைக் கொட்டி விடவும் தயங்கமாட்டார். அதனால் தேவையற்ற நீண்ட வாதங்களைக் கேட்பதும். ஒன்றையே திருப்பித் திருப்பிச் சொல்லுகின்ற போக்கையும், அவரால் ஏற்றுக் கொள்ள இயலாமல் இருந்தது. அவரது தீர்ப்புகள் சுருங்கக் கூறி விளங்க வைப்பவையாய் இருந்தன.

ஏர்டிலி நார்ட்டன் என்ற கீர்த்தி மிக்க வழக்கறிஞர் ''என்னை நோக்கிப் புன்னகையும் சில வேளைகளில் வெறுப்பையும் வீசிய வலிமையான அறிவாளிகளில், டேர்டனரே மிகுந்த வலிவுடைய பெருமகன் என எண்ணுகிறேன்'' எனக் குறிப்பிட்டுள்ளார். மேலும் நார்ட்டன் ''மிகச்சிறந்த மூளையையும், மிகச் சிறந்த உடல் அமைப்பையும் கொண்டவர்'' என்றும் டேர்னரைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளதும் கவனத்துக்குரியதாகும்.

''ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா
ஊக்கம் உடையானுழை.''

நான்காவது தலைமை நீதிபதி
சர் ஆர்தர் காலின்சு

ஆர்தர் காலின்சு 1834 ல் பிறந்து, 1860 ல் வழக்கறிஞராகி 1885 ல் சென்னை உயர்நீதி மன்றத்தலைமை நீதிபதியாக நியமனம் பெற்றார். 14 வருடங்கள் அந்தப் பெரிய பதவியைச் சீறும் சிறப்புடனும் வகித்த பெருமை அவருக்குண்டு,

வழக்கறிஞர்களுக்கும் நீதிபதிகளுக்கும் இடையே வளர வேண்டிய நல்லுறவுக்கும் நல்லெண்ணத்துக்கும் ஆர்தர் காலத்தில் வலிவான தளம் அமைக்கப்பட்டது. சர். ஆர்தரே அதற்குப் பெரிதும் காரணமாக இருந்தார் என்பதில் அய்ய

மில்லை. என்றும் இயலாத அளவுக்கு அன்று இருசாரரிடையும் நல்லுறவு வளர்ந்தோங்கியது.

இன்று நீதிமன்றங்களில் வழக்குகளில் தோன்றி வாதிடும் தொழில் செய்கின்றவர்களை பொதுவாக ''வழக்கறிஞர்கள்'' (Advocates) எனக் கூறுகின்றோம். ஆனால் அன்று வழக்கறிஞர்களிடையே பாரிஸ்டர், வக்கீல், அட்டர்னி என்று மூன்று வகையினர், இருந்தனர். குறிப்பாக ''வக்கீல்'' என்போரின் தகுதி குறைவாகவே எண்ணப்பட்டிருந்த காலம் அது: உள்ளபடியே ''வக்கீல்கள் என்ற பெயரில் தொழில் செய்தவர்களை ஒதுக்கவும் உதாசீனம் செய்யவும் முயற்சி நடந்தது. எல்லாத் தகுதியும் பெற்றிருந்த வக்கீல்களுக்கு இந்தப் போக்கு வேதனையையும் தாழ்வையும் தந்தது. ஆகவே இந்த நிலை மாறி தாங்களும் பாரிஸ்டர், அட்டர்னி போன்றவர்களுடன் சமமாகக் கருதப்பட வேண்டுமென ''வக்கீல்கள்'' நினைத்ததில் வியப்பில்லை.

தலைமை நீதிபதி காலின்சு இந்த வித்தியாசம் இருப்பதைக் கண்டு வேதனையடைந்து அதைப் போக்கும் வழிகள் குறித்து ஆராயத் தொடங்கினார். அந்த மூன்று சாராரும் சமமானவர்கள் என்ற கருத்தை ஏற்று அப்படியே சமமாகவும் நடத்தினார் தலைமை நீதிபதி காலின்சு, அந்தக் கால வக்கீல்கள் பெரும்பாலும் இன்றுபோல் இல்லாமல் கோட்டுடன் வேட்டியே அணிந்து நீதிமன்றத்தில் தொழில் நடத்தி வந்தனர். வேட்டி கட்டுபவர்கள் கால்களில் பூட்சு அணிவது கூடாது என்ற ஒருவித தடை இருந்தது போலும்.

காலின்சு காலத்தில் இன்று அடியுடன் மறைந்துவிட்ட ''பிளேக்'' என்னும் கொடிய நோய் பரவியது. ''கால்களில் பூட்சு அணிந்தால் அந்தக் கொடிய நோய் எங்களைப்பற்றாது, ஆகவே அருள் கூர்ந்து நாங்களும் பூட்சு அணிய அனுமதியுங்கள்'' என தலைமை நீதிபதி காலின்சிடம் வக்கீல்கள் வேண்டினர். காலின்சு சிறிதும் தயங்காது உடனே அனுமதி வழங்கி வக்கீல்களின் அன்பைப் பெற்றார்.

வக்கீல்கள் தங்களிடையே ஒரு சங்கத்தை அமைத்து அலுவலக அறை தேவையென வேண்டியபோது உயர்நீதி மன்றக் கட்டிடத்தில் ஒரு நல்ல அலுவலக அறையை ஒதுக்கிய பண்பாளர் தலைமை நீதிபதி காலின்சு ஆவார்.

பாரிஸ்டர் நீதிபதிக்கும் வக்கீல் நீதிபதிக்கும் இடையே இருந்த வித்தியாசத்தையும் நீக்கியவர் தலைமை நீதிபதி காலின் சுதான் என்றும் கூறுவர். முதலேற்பு வழக்குகள் என்று சொல்லக் கூடிய அசல் வழக்குகளை (Original side) வக்கீல் நீதிபதி நடத்த முடியாத நிலை இருந்தது. வக்கீல்களும் அந்த வழக்குகளில் தோன்றி வாதிடும் வாய்ப்பைப் பெறாது இருந் தனர். காலின்சு அந்தத் தேவையற்ற வழக்கத்தை உடைத் தெறிந்து வக்கீலாக இருந்து வந்த நீதிபதிகளும் அத்தகைய வழக்குகளை அமர்த்து நடத்தலாம் என்ற நடைமுறையைக் கொண்டு வந்தார். எதையும் தாங்கும் இதயம் பெற்றவர் காலின்சு. மனதைப் புண்படுத்தும் சொற்களைக் கேட்டோ நிகழ்ச்சியைக் கண்டோ காலின்சு உணர்ச்சிவயப்படாது நல்ல மனதுடன் பெரிதுபடுத்தாமல் விட்டுவிடும் பாங்கு கொண் டவர். ஒருதடவை சான்ஸ்டோன் என்ற பாரிஸ்டர் தலைமை நீதிபதிமுன் நடந்த ஒரு வழக்கில் சூரிகள் (Juries) அறிந்து கொள்ளும் படியாக சில சட்டக் கருத்துக்களை எடுத்து உரை யாற்றிக் கொண்டிருந்தார். அவர் எடுத்து உரைத்த சட்டக் கருத்துக்களில் பல தவறுகள் காணப்பட்டதால், தலைமை நீதிபதி காலின்சு பொறுமை இழந்து

"அய்யா வழக்கறிஞரே இங்கே பாருங்கள் சூரிகளிடம் தவறான சட்டக் கருத்துக்களை அடுக்கிக் கொண்டே போவதை நிறுத்தி விடுங்கள்" என்று கொஞ்சம் கடுமையாகக் கூறினார்.

"மாண்புமிகு நீதிபதியிடமே அந்தப் பணியை விட்டுவிடு கின்றேன்" எனத்தான் கூறுவது என்ன என்பது தெரியாமலேய வழக்கறிஞர் சான்ஸ்டோன் கூறிவிட்டுப் பிறகு மனம் நொந்து கொண்டார்.

ஆர்தர் காலின்சு தலைமை நீதிபதிப் பதவியை சீறும் சிறப்புடனும் வகித்த காலத்தில்தான் உயர்நீதிமன்றம் விண்ணில் தவழ்ந்து செல்லும் மேகக் கூட்டங்களைத் தொடுவது போல் வானளாவ நிற்கும் இன்று காணும் கட்டி டத்துக்கு மாற்றப்பட்டது என்பது சிறப்புக்குரிய செய்தி யாகும்.

அன்றைய மாநில ஆளுநர் கட்டிடத்தின் திறவுகோலை தலைமை நீதிபதி காலின் சின் கையில் தந்து.

"மாண்புமிகு தலைமை நீதிபதி அவர்களே இந்த எழில் வாய்ந்த கட்டிடத்தை உங்களிடம் ஒப்படைக்கின்றோம்

என்பதற்கு அடையாளமாக இத்திறவுகோலை உங்களிடம் தருவதில் பெரிதும் மகிழ்ச்சியடைகின்றேன். சென்னை உயர் நீதிமன்றத்துக்கே என்றைக்கும் உள்ள வலிமையுடனும் நேர்மையுடனும் இந்த மாநில நீதிநிர்வாகம் தொடர்ந்து நடத்தப்படும் என்ற மிகுந்த நம்பிக்கையை அரசாங்கம் கொண்டிருக்கின்றது'' என அரசின் நம்பிக்கையைக் கோடிட்டுக் காட்டினர்.

தலைமை நீதிபதி ஆர்தர் காலின்சு திறவு கோலைத் தனது கையில் குனிந்து வாங்கி அமைதியாகவும் கூடியிருந்தோர் உள்ளங்களைத் தொடுமாறும் ஆளுநர் நம்பிக்கைக்கு உரம் ஊட்டும் வகையிலும் அருமையான உரை நிகழ்த்தினார்.

''யாரும் கண்டுபிடிக்க இயலாததும் தெரிந்துகொள்ள முடியாததுமான உலகை நானும் மேதகு ஆளுநராகிய நீங்களும் சென்று அடைந்தபிறகும், இந்த நீதிமன்றங்களில் இருந்து இனம், வகுப்பு, சமயம் என்ற வேறுபாடுகளைக் காணாது நீதி வழங்குகின்ற திறமையும் துணிவும் கொண்ட பெருமக்கள் தொடர்ந்து தோன்றிய வண்ணம் இருப்பார்கள் என்பதில் மிகுந்த நம்பிக்கை எனக்குண்டு'' என உரையை முடித்தார் காலின்சு.

ஆர்தர்காலின்சு சிறிதுகாலம் சென்னைப் பல்கலைக்கழகத் துணை வேந்தராகவும் செயல்பட்டார். சென்னை உயர்நீதி மன்றத்தலைமை நீதிபதிகளில் சிலர் அன்று சென்னைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர்களாகவும் செயல்பட முடிந்தது என்பது இன்றுவெறும் வரலாற்றுச் செய்திகளாகக் காணப்பட்டாலும், அன்று அந்த இரண்டு பெரும் நிறுவனங்களுக்கிடையே இருந்த நெருங்கிய உறவையும் அந்தச் செய்தி படம் பிடித்துக் காட்டுவதையும் நம்மால் காணமுடிகின்றது.

ஐந்தாவது தலைமை நீதிபதி ஆர்நால்டு வொயிட்

1858ம் ஆண்டில் பிறந்த ஆர்நால்டு ஆக்ஸ்போர்டின் புதிய கல்லூரியில் படித்து 1881ல் பட்டதாரி ஆனார். 1885ல் வழக்கறிஞராகித் தொழில் நடத்தினார். லங்காசெயர், செசயர், யார்க்செயர் போன்ற இடங்களில் நீதிபதியாகப் பணியாற்றியதால் அனுபவமும், அறிவும், ஆற்றலும் பெற்று இன்னும் சிறப்பான பொறுப்புக்களையும் சுமக்கக் கூடிய தகுதியையும் அடைந்தார். ஆகவே சாண்ட்விச் என்ற பகுதியில் ரிக்கார்டர் பதவி அவருக்கு வந்து சேர்ந்தது. ''ஆர்ச்சுபால்டு கவுண்டி நீதி

மன்ற நடைமுறை'', ''வில்சன்சு பிராக்டிசு ஆப் சுப்ரீம் கோர்ட்டு சூடிக்கேச்சர்'' ஆகிய இரண்டுஏடுகளை வெளியிடும் ஆசிரியராகவும் விளங்கினார் ஆர்நால்டு.

1898ல் ஆர்நால்டு சென்னையில் அட்வகேட் ஜெனரலாக நியமனம் பெற்று 16 மாதங்களே பணிபுரிந்தார். 1899 செப்டம்பர் திங்களில் சென்னை உயர்நீதி மன்றத்தலைமை நீதிபதியாக அவரது 41வது வயதில் நியமனம் பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கதாகும். இந்த இளம் வயதில் ஒரு பெரிய உயர்நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக ஆவது சாதாரணமானதல்ல என்பது ஒருபுறமிருக்க, ஆர்நால்டு அந்த இளம்வயதிலும் காட்டிய அன்பு, பணிவு, திறமை அவருக்கு நிலையான புகழையும் பெருமையையும் ஈட்டித்தந்துள்ளதுடன் அவர் தலைமை நீதிபதி என்ற சிறப்புக்குமுரியவர் என்பதையும் எடுத்துக் காட்டியிருக்கின்றன.

தலைமை நீதிபதி ஆர்நால்டு முன்வந்த பல வழக்குகளில் இரண்டு வழக்குகள் இன்றைக்கு எண்ணினாலும் சிறப்பான இடத்தைப் பெறுகின்றன. ஒன்று 1907ம் ஆண்டு ஆர்புத்நாட் வழக்கு. இந்தியத் திருநாட்டின் விடுதலைப்போர் கொழுந்து விட்டு எரிந்த காலகட்டத்தில் திருநெல்வெலி மாவட்ட ஆட்சியாளராக இருந்தவர் ஆசி (Ashe) என்ற வெள்ளைக்காரர். வாஞ்சிநாதன் என்ற விடுதலைவீரர் நெல்லை மணியாச்சி புகைவண்டி நிலையத்தில் புகைவண்டியில் முதல் வகுப்பில் பயணம் செய்து கொண்டிருந்த மாவட்ட ஆட்சியாளர் ஆசியைச் சுட்டுக் கொன்றார். இந்திய நாட்டை அடிமை நாடாக எண்ணியிருந்த வெள்ளையரைக் கொல்வது அன்று மிகுதியான நாட்டுப்பற்றுக்குச் சான்றாகக் கருதப்பட்ட காலம். கொலை செய்த விடுதலைவீரர் வாஞ்சி அவர்கள் அதே புகைவண்டி நிலையத்தில் ஆசி மடிந்தான் என்றதும் தற்கொலை செய்து கொண்டுமடிந்தார்.

இந்தக் கொலை வழக்கில் வாஞ்சியுடன் சேர்ந்து சதி செய்து கொலைக்குத் தூபம் போட்டதாகச் சிலர் நீதிமன்றத்தின் முன் நிறுத்தப்பட்டனர். முதல் குற்றவாளி நீலகண்ட பிரமச்சாரிக்காக வழக்கறிஞர் சூடம் என்பவரும், இரண்டாவது குற்றவாளி சங்கரகிருஷ்ண அய்யருக்காக அன்றைய புகழ் வாய்ந்த வழக்கறிஞரும், இந்திய விடுதலைக்குப்பின் சென்னை மாநிலத்தின் முதல்அமைச்சருமாக இருந்த பிரகாசம் நீதிமன்றத்தில் வழக்கை நடத்தினர்.

தலைமைநீதிபதி ஆர்நால்டு மிகப்பொருமையாக வழக்கில் சான்றுரையை மற்ற நீதிபதிகளுடன் கேட்டார். வழக்கின் முழு விவரங்களை நாம் இங்கு ஆராயத் தேவையில்லை. வழக்கின் முடிவில் எதிரிகளுக்குக் முறைந்த தண்டனைகளே வழங்கப்பட்டன.

ஆர்புத்நாட் வழக்கில் ஆர்நால்டு காட்டிய நடுவு நிலை மிகவும் சிறப்பாகப் பேசப்படுகின்றது. சர் ஆர்புத் நாட் என்ற வெள்ளையர் அன்று சென்னையில் மிகவும் புகழ்பெற்ற பெரிய மனிதராக விளங்கினார். புகழ்பெற்ற ஆர்புத்நாட் என்ற கம்பெனியின் முக்கிய புள்ளியாக இருந்தார். அந்தக் கம்பெனி வாங்கித் தொழில் செய்து வந்த கம்பெனியாகும். அதில் சென்னையில் உள்ள பலபேர் உறுப்பினர்களாகச் சேர்ந்து பணத்தைச் சேமிப்புக் கணக்கில் போட்டு வைத்தனர். ஆர்புத்நாட் மற்றவகையில் நல்லவராகத் தோற்றமளித்தாலும் வங்கியில் சேமிப்புப் செய்தவர்களை ஏமாற்றிவிட்டார் என்பது வழக்காகும்.

ஆர்புத் நாட் தலைமை நீதிபதி ஆர் நால்டுவின் நெருங்கிய நண்பர் எனக் கருதப்பட்டாலும் அந்த வழக்கில் நீதிபதி ஆர்நால்டு திருக்குறள் கூறும் உயரிய கோட்பாட்டின்படி நல்ல நடுநிலையாளராகச் செயல்பட்டார் என்பதைக் காண்கின்றோம்.

> ''ஓர்ந்து கண்ணோடாது இறைபுரிந்து யார் மாட்டும்
> தேர்ந்து செய்வதே முறை''

ஆர்புத்நாட் கைது செய்யப்பட்ட பின் அவரை பெயிலில் கூட வெளியே விட உயர்நீதி மன்றம் மறுத்துவிட்டது. வழக்கின் முடிவில் தலைமை நீதிபதி ஆர்நால்டு ஆர்புத்நாட் தனது நண்பரெனக் கண்ணோடாது நடுநிலை நின்று (இறை புரிந்து) தேர்ந்து குற்றத்துக்கேற்றபடி 18 மாதக் கடுங்காவல் தண்டனை ஆர்புத்நாட்டுக்கு அளித்தது நீதித்துறை வரலாற்றில் நடுநிலைக்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்கின்றது.

ஆறாவது தலைமை நீதிபதி சர். சான் வாலிசு.

1900ம் ஆண்டில் சென்னை அட்வகேட் செனரலாக வாலிசு நியமனம் ஆனார். ஆறு ஆண்டுகள் திறம்பட அப்பதவியை வகித்த வாச்சு 1906ல் சென்னை உயர்நீதிமன்ற நீதிபதியாக உயர்ந்தார். தலைமை நீதிபதியாக இருந்த ஆர்நால்டு 1914ல் ஒய்வு பெற்ற போது தலைமை நீதிபதிப் பதவி

வாலிசை நாடி வந்தது. உயர்நீதிமன்ற அலுவலகத்தில் ஆபீசியல் ரெபரி (Official Referee) என்ற புதுப் பதவியைத் தோற்றுவித்தது வாலிசின் தொலை தூரப்பார்வைக்கு எடுத்துக் காட்டாகும். ''சட்டத்தில் விரைவும், வழக்கு விவரங்களை அறிந்து கொள்வதில் மந்தப்போக்கும் உள்ளவர்'' (Ready at Law and slow at Facts) என அவரைப் பற்றிக் கூறுவர். வாலிசு சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தராகவும் சிறிது காலம் செயல்பட்டார். 1921ல் ஓய்வு பெற்ற அவர் பிரிவு கவுன்சில் நீதிபதியாகவும் பணியாற்றும் வாய்ப்புப்பெற்றார்.

ஏழாவது தலைமை நீதிபதி சர். வால்டர் சிவாபி

வாலிசு தலைமை நீதிபதியாக ஓய்வு பெற்றதும் அடுத்த உயர் நீதிமன்றத்தலைமை நீதிபதியாகும் வாய்ப்பு பெற்றவர் சர். வால்டர் ஆகும். வால்டர் நல்ல உயரமும் அழகான தோற்றமும் உடையவர். அவரிடத்தில் இருந்த ஒரு சிறப்பான அம்சம் இளைய வழக்கறிஞர்களிடம் அவர் காட்டிய அன்பும் ஊக்குவித்தலும் ஆகும். ஒரு தடவை ஒரு இளைய வழக்கறிஞர் தனது மூத்த வழக்கறிஞர் (Senior) வேறு நீதிமன்றத்தில் வழக்கு நடத்திக் கொண்டிருப்பதால் வாய்தா வேண்டும் என தலைமை நீதிபதி வால்டரிடம் வேண்டிக் கேட்டுக் கொண்டார்.

''இளைய வழக்கறிஞரே, இந்த நீதிமன்றம் இளைய வழக்கறிஞர் வழக்கு நடத்த ஊக்கம் தரும் நீதிமன்றம். ஆகவே நீர் சிறிதும் அச்சம் கொள்ளாது வழக்கை நடத்துங்கள்.'' எனத் தலைமை நீதிபதி வாய்தா கேட்டா வழக்கறிஞரை ஊக்கப் படுத்தினார். அவரும் துணிவைத் துணைக்கழத்து வழக்கில் வாதம் புரியத் தொடங்கினார்.

தலைமைநீதிபதி இன்னும் அவரை உற்சாகப்படுத்த ''மிக அருமையாக வழக்கு நடந்துகின்றீர். தொடர்ந்து செல்லுங்கள்'' எனக் குறிப்பிட்டார்.

தலைமை நீதிபதி வால்டரிடம் இருந்த ஒரு சிறிய குறை அவர் ஒரு வழக்கின் தொடக்கத்திலேயே ஒரு முடிவை மனதுக்குள் மேற்கொண்டு விடுவார் என்பதும், அந்த முடிவைப் பின்னர் எளிதில் மாற்ற மாட்டார் என்பதும் ஆகும்.

எட்டாவது தலைமை நீதிபதி சர். முர்ரே கூட்சுடிராட்டர்

கூட்சுடிராட்டர் 1915ல் சென்னை உயர்நீதிமன்ற நீதிபதியாக நியமனம் ஆனார். 1924ல் வால்டர் ஓய்வு பெற்றார்.

வால்டருக்கு அடுத்த வரிசையில் இருந்த டிராட்டர் 1924ல் தலைமை நீதிபதியாக நியமிக்கப்பட்டார். டிராட்டரிடம் பல சிறப்புகள் காணப்பட்டன. அவைகள் அவருக்குப் பொலிவை யும் வலிவையும் தந்தன என்று சொல்லலாம்.

டிராட்டர் ஒரு நகைச்சுவை மன்னர். அவரது நீதிமன்றத் தில் வழக்கறிஞர் கூட்டம் இருந்து கொண்டு அவர் இயல்பாக உதிர்த்துக் கொண்டிருக்கும் நகைச் சுவைகளை சுவைத்து சுவைத்து மகிழ்ந்த வண்ணம் இருக்கும்.

''நகல் வல்லார் அல்லார்க்கு மாயிரு ஞாலம்
பகலும் பாற்பட்டன்று இருள்'' (குறள் 999)

நீதிமன்றங்களிலும் நகைச் சுவைக்கு நிறைய இட முண்டு என்பதைச் செயலில் காட்டியவர்களில் முதன்மையானவர் கூட்சுடிராட்டர் என்றால் மிகையல்ல.

ஒரு சமயம் சர். சி.பி. இராமசாமி அய்யர் கூட்சு டிராட்டர் முன் வழக்கொன்று நடத்திக் கொண்டிருந்தார். நீதிபதியின் கையில் தந்திசேகவன் ஒரு தந்தியைக் கொடுத் தான். நீதிபதி அதை வாங்கிப் பார்த்து விட்டு சிரித்தார். சர் சி.பி. நீதிபதியைப் பார்த்து தந்தியில் காணும் நகைச்சுவை என்ன என்று கேட்டார்.

''ஒன்றுமில்லை. இன்றைய வழக் கொன்றில் இன்சால் வெண்டாக இருக்கும் ஒருவன் வாய்தா கேட்டு எனக்குத் தந்தி அனுப்பியுள்ளான். அதில் ''உயர் நீதிமன்ற இன்சால்வெண்டு நீதிபதி'' எனக் குறிப்பிட்டுள்ளான். தந்தி சேவகனும் தந்தியை நீதிபதிகளுக்குள் இன்சால்வெண்டு யார் என்பதைத் தெரிந்தே என்னிடம்கொடுத்திருக்கின்றான். எனது பொருளா தார நிலையை இவர்களும் தெரிந்து வைத்திருக்கின்றனர்'' என்று நகைச் சுவையுடன் சொன்னார் நீதிபதி. சர். சி.பி.யும் கூடியிருந்தவர்களும் நீதிபதியுடன் சேர்ந்து வாய் விட்டுச் சிரித்தனர்.

கூட்சுடிராட்டர் ஆங்கில இலக்கியத்தில் வல்லவர் ஆன தால், அவரது தீர்ப்புகளில் இலக்கிய மணம் வீசும். எவ்வளவு நீளமான தீர்ப்புக்களையும் எடுத்த எடுப்பிலேயே ஒரே சமயத் தில் தொடர்ந்து சொல்லி முடிக்கும் திறமும் பெற்றவராக இருந்தார். நீதிமன்ற முன்னையே தீர்ப்புகளைத் தன் மனதில் எழுதி வைத்திருந்தவர் போல் அவைகள் அவர் வழங்கும் தீர்ப்புகளில் தயக்கமின்றி அந்தந்த இடங்களில் வந்து ஒட்டிக் கொள்ளும்.

கூட்சுடிராட்டர் தனது இல்லத்தில் பெரிய நூல் நிலையம் வைத்திருந்தார். நேரம் கிடைக்கும் போதெல்லாம் நூல்கள் படிப்பதில் ஆர்வம் காட்டினர். அவரது சிறிய மண்டை பல நூல்களைப் படித்ததால் சேகரிக்கப்பட்ட விரிவான விவரங் களைத் தாங்கிக் கொண்டிருந்தது. உயர்நீதிமன்றத்தில் இன் றைக்கும் சிறப்பாகச் செயல்படும். 'மாஸ்டர்' என்ற பதவி யைத் தோற்றுவித்துப் புதுமை கண்டார். மிகவும் புகழ் பெற்ற ''மெயின் இந்து சட்டம்'' என்ற நூலின் 9வது பதிப்பின் ஆசிரியராகவும் இருந்து வெளியிட்டார் கூட்சு டிராட்டர். வழக்குகளிலும் நீதிமன்ற நிர்வாகத்திலும் இடை விடாது ஈடுபட்டிருந்த தலைமை நீதிபதி டிராட்டர் இசைத் துறையிலும் காட்டிய ஆர்வம் எல்லோருக்கும் வியப்பையே அளித்தது. சென்னை இசைக் சங்கத்தின் தலைவராகவும் அவரால் பணியாற்ற முடிந்தது.

1929 மே மாதத்தில் கூட்சுடிராட்டரின் உடல் நிலை சீர் கெட்டு மோசமடைந்தது. அவரால் படுக்கையிலிருந்து சில அடிகள்கூட நகர இயலாத நிலையிலும் சிறந்த தீர்ப்புகளை வழங்கிய வண்ணம் இருந்தார். சர்.ஓவன் பீசிலி என்ற நீதிபதி கூட்சுடிராட்டர் உடல் குன்றிய நிலையிலும் வழங்கிய தீர்ப்பு களை எண்ணி ''அவரால் உடல் குன்றிய நிலையிலும் எல் லோரும் விரும்பிக் கேட்கக் கூடியதும், அறிவு நிரம்பியதுமான தீர்ப்புகளை வழங்க முடிந்தது'' என்று குறிப்பிட்டுள்ளார்.

உடல்நிலை இன்னும் சீர்கேடு அடைந்ததால்சென்னையை விட்டு நல்லவர்களெல்லாம் வருந்த டிராட்டர் தனது நாடு நோக்கிப் புறப்பட்டார். 14 ஆண்டுகள் சென்னை உயர்நீதி மன்றத்தில் மிகத் திறம்படவும் அனைவரும் பாராட்டும் முறை யிலும் பணியாற்றிய அவரின் பிரிவைப் பலரால் தாங்க முடிய வில்லை, அவரும் உயர்நீதிமன்றத்தின் பிரிவைத் தாங்க இய லாது நெஞ்சை நெகிழ வைக்கும் கடிதம் ஒன்றை அன்றைய அட்வகேட் செனரலுக்கு எழுதியுள்ளார்.

''அன்புள்ள சென்னை வழக்கறிஞர் பெரு மக்களே!

மீண்டும் இந்திய நாட்டுக்குத் திரும்பி வர இயலாத முறை யில் நல்ல நண்பர்களை யெல்லாம் பிரிந்து செல்லும் படி மருத்துவர்கள் கட்டளையிட்டுள்ளனர். இது மிகுந்த வேதனைதரும் செய்தியாகும். தமது புலமையாலும் உழைப்பாலும் பல வழக்கறிஞர்கள் என் முன் நடந்த வழக்குகளில் மிகுந்த ஒத்துழைப்புத் தந்தமைக்கு சென்னை வழக்கறிஞர் சங்கத்தின் மூலம் எனது நன்றியைத் தெரி வித்துக் கொள்ள விரும்புகின்றேன். எனக்குக் கிடைத்த அத்

தகைய நம்பிக்கைக் குரிய ஒத்துழைப்பு இல்லையெனின் ஒரு நீதிபதியின் பணி முடங்கிப் போகும் என்பதுடன் உண்மையாக நடைமுறையில் பணி சாத்தியமில்லாமலும் போய்விடும் என்பதில் அய்யமில்லை.

மேலும் நான் பல குறைபாடுகளைக் கொண்டவன் என்பது தெரிந்தும் என்னிடம் நீங்கள் காட்டிய குறைவிலாமறியாதை மதிப்பு, பொறுமை ஆகியவைகளுக்கும் நான் நன்றி செலுத்துவதுடன், எனது குறைகளுக்காக உங்களிடம் மன்னிப்பும் கோருகின்றேன். என்னைப் பொறுத்தவரையில் பொறுமை என்ற குணம் என்னிடம் காணப்படாத தொன்று என நினைக்கின்றேன். உங்களை விட்டுப் பிரியக் காரணமான என்னைப் பற்றியுள்ள நோய் என்னிடம் நீண்டகாலத்துக்கு முன்னரே தோன்றிவிட்டது என மருத்துவர்கள் குறிப்பிடுகின்றனர். ஆகவே உங்களிடம் மரியாதைக் குறைவாகவும் பொறுமையுமின்றி நான் நடந்திருந்தால் அந்த நோய்தான் காரணமாக இருத்திருக்கக்கூடும் என்பதை நீங்கள் அருள்கூர்ந்து ஒத்துக் கொள்வீர்கள் என நம்புகின்றேன்.

நீதிமன்றக்குப்பாற்பட்டு நமக்குள்ளே ஏற்பட்டுள்ள நட்புறவை நான் பெரிதும் போற்றுகின்றேன். இங்கிருந்து மிகுந்த தயக்கத்துடன் உங்களை விட்டுப் பிரிகின்றேன். அங்கு எனது இல்லத்தில் உங்களில் பல பேரை எனது நினைவில் வைத்துக் கொண்டு இருப்பேன். நீங்கள் வழக்குகளில் கடுமையாக நிகழ்த்தில் வாதப் போர்களும் என் கண்ணில் நடமாடும். உங்கள் அனைவரின் வாழ்விலும் வெற்றியும் வளமும் தோன்ற எனது வாழ்த்துக்கள்.

வணக்கம்.''

இக்கடிதம் உள்ளபடியே கூட்சுடிராட்டரின் பண்பட்ட உயர்ந்த உள்ளத்தைப் படம் பிடித்துக் காட்டுகின்றது.

சென்னை உயர்நீதி மன்றத்தின் அணியென திகழ்ந்த தலைமை நீதிபதிகளில் கூட்சுடிராட்டர் தலையானவர் எனத் திரு. வி.சி. கோபாலரத்தினம் தனது ''நூற்றாண்டைமுடித்த சென்னை உயர் நீதிமன்றம்'' என்ற நூலில் பெருமிதத்துடன் குறிப்பிடுகின்றார்.

ஒன்பதாவது தலைமை நீதிபதி சர் ஒவன்பீஸ்லி

ஒவன்பீஸ்லி உயர் நீதிமன்றத்திலேயே பல ஆண்டுகள் நீதிபதியாகப்பணியாற்றியுள்ளதால் கூட்சுடிராட்டர் ஓய்வுபெற்ற

போது தலைமை நீதிபதிப்பதவி அவரை நாடி வந்ததில் வியப்பில்லை. 1929 லிருந்து 1937 வரை ஏறக்குறைய 9 ஆண்டுகள் ஓவன்பீஸ்லி தலைமை நீதிபதியாகப் பணியாற்றினார். இவர் தலைமை நீதிபதியாகப் பணியாற்றிய காலத்தில் குறிப்பிடத் தக்க நிகழ்ச்சி எதுவும் நடக்கவில்லை. உயர்ந்த மனச்சாட்சி உடையவர் என்றும் பெருமளவுக்குக் கட்டுப்பாடுகளை விதித்தார் என்றும் தெரிகின்றது.

கே. நரசிம்மாச்சாரி என்ற ஆசிரியர் ''தலைமை நீதிபதிகள்'' என்ற தலைப்பில் எழுதியுள்ள நூலில் (இந்த நூல் வெளியிடப்படவில்லை) 104வது பக்கத்தில் ஓவன்பீஸ்லி ''இரும்பு மனம் படைத்த தலைமை நீதிபதி'' (Iron Chief Justice) என்ற அவப்பெயரைப் பெற்றிருந்தார் எனக் குறிப்பிடுகின்றார். அத்துடன் பீஸ்ஸி நீண்ட காலம் உயர் நீதிமன்றத்தில் பணியாற்றும் வாய்ப்பைப்பெற்றிருந்தும் சென்னை வழக்கறிஞர்களைப் புரிந்து கொள்ளும் திறனைப் பெறாமலேயே பணியாற்றினார் என்றும் திரு. வி. சி. கோபலரத்தினம் ''நூற்றாண்டை முடித்த உயர் நீதிமன்றம்'' என்ற நூலில் சிறிது வேதனையுடன் குறிப்பிடுகின்றார். அதன் விளைவு அவர் முன் தோன்றி வாதாடிய வழக்கறிஞர்களுக்கும் அவருக்கும் இடையே சுமுகமான உறவு என்றும் காணப்பட்டதில்லை. இரு சாராரும் ஒருவருக்கொருவர் விரும்பத்தகாத சொற்களை வீசிக் கொண்டனர். தலைமை நீதிபதி பீஸ்லி ஓய்வு பெற்ற அன்று பிரிவு சார வார்த்தைகளைக் கூடக் கூறுவதற்கு அட்வகேட் செனரலோ அல்லது வழக்கறிஞர் எவருமே முன் வரவில்லை என்பது பீஸ்லியின் நீதித்துறை வாழ்க்கையில் ஏற்பட்ட சோக நிகழ்ச்சி என்பதில் அய்யமில்லை.

பீஸ்லிமுன் நடந்த வழக்குகளில் இம்பீரியல் வங்கி வழக்கு, கருங்குழி பார்சல் வழக்கு என்றஇரண்டு வழக்குகள் அக்காலத்தில் மிகுந்த பரபரப்பை ஊட்டிய வழக்குகளாகும்.

பத்தாவது தலைமை நீதிபதி லையனல்லீச்

இரங்கூன் உயர் நீதி மன்றத்தில் நீதிபதியாகநான்கு ஆண்டுகள் பணியாற்றி அனுபவம் பெற்ற லையனல்லீச் 1937ல் சென்னை உயர்நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாகநியமனம் பெற்றார். இந்திய நாடு விடுதலை பெறுவதற்கும் சிலமாதங்களுக்குமுன் 1947ல் பதவியிலிருந்து ஓய்வு பெற்றார்.

உயர் நீதிமன்றத்துக்கு அவர் ஆற்றிய சிறந்தபணிகள் பல. அவைகளில் குறிப்பிடத்தக்க மூன்று பணிகளை இங்கு சுட்டிக்

காட்டலாம். உயர் நீதிமன்றத்தில் குலைக்க முடியாத அளவுக் குக் குவிந்தகிடந்த பல வழக்குகளை முடித்து வைக்கப் பெரு முயற்சி செய்து வெற்றியும் பெற்றார். உயர் நீதிமன்ற நீதிபதி களே வழங்கிய தீர்ப்புகளில் பல ஒன்றுக்கொன்று முரண்பாடு கொண்டவைகளாய் இருந்ததைத் தலைமை நீதிபதி கண்டார். அந்த முரண்பாடுகளை நீக்க வேண்டுமென்றால் மூன்றும், மூன்றுக்கும் மேற்பட்ட நீதிபதிகள் அடங்கிய நீதிமன்றம் வழங் கும் தீர்ப்புகளால் தான் இயலும் என்று கருதிய தலைமை நீதி பதி தன் தலைமையிலேயே அத்தகைய நீதிமன்றங்களைத் தோற்றுவித்து முரண்பாடுகளை அகற்றி வழிகாட்டும் தலை சிறந்ததீர்ப்புகளை வழங்கியபெருமை லையனல்லீச்சுக்குண்டு.

மூன்றாவதாக மாவட்டங்களில் இயங்கி வரும் மாவட்ட நீதிமன்றம் உட்பட நீதிமன்றங்களை ஆண்டுதோரும் உயர்நீதி மன்ற நீதிபதிகள் பார்வையிடவும் அவைகளில் காணப்படும் குறைகளை நீக்க ஆலோசனை கூறவும் செய்த ஏற்பாடாகும். இந்த முறையில் கீழமை நீதிமன்றங்களின் நிர்வாகத்தை வலுப் படுத்த அவர் எடுத்த நடவடிக்கைகள் பலனனித்தன என்பதை வரலாறு காட்டுகின்றது.

தலைமை நீதிபதி லீச் ஓய்வுபெற்ற பிறகு பிரிவிகவுன்சில் நீதிபதியாகவும் பணியாற்றும் வாய்ப்பைப் பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

பதினொறாவது தலைமை நீதிபதி டாக்டர் இராசமன்னார்

தலைமை நீதிபதி லீச் ஓய்வு பெற்றதும் பெடரிக்செண்டில் என்ற சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி தலைமை நீதிபதி யாக நியமிக்கப்பட்டார். பெடரிக்செண்டில் சில மாதங்களே தலைமை நீதிபதியாகப் பணியாற்றி அன்றிருந்த அரசின் நிர்வாகிகளுக்கும் அவருக்கும் ஏற்பட்ட மோதல் விளைவாகப் பதவியை விட்டு விலகினார். 1945ல் உயர் நீதிமன்ற நீதிபதி யாகப் பதவியேற்ற இராசமன்னார் 1948ல் பெடரிக் செண்டில் பதவியை விட்டு விலகியதும் சென்னை உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதியாகப் பொறுப்பேற்றார்.

சென்னை உயர் நீதிமன்றம் 1878ல் முதன் முதலில் இந்தி யரான சர். முத்துசாமியை உயர் நீதிமன்ற நீதிபதியாக்கி வரலாறு படைத்தது. தனது நீண்ட வரலாற்றில் 70 ஆண்டு கள் ஓடிய பின்னர் 1948ல் சென்னை உயர் நீதிமன்றம் இரண்டாவது இந்தியர் திரு. இராச மன்னாரைத் தலைமை

நீதிபதியாக்கி மீண்டும் ஒரு பெருமை மிக்க வரலாற்று படைத்திருக்கின்றது. சென்னை உயர் நீதிமன்றத்தின் முதல் இந்தியத் தலைமை நீதிபதி என்ற பெருமையுடன் விடுதலை பெற்ற இந்தியத் திருநாட்டின் மாநில உயர் நீதிமன்றமுதல் தலைமை நீதிபதி என்ற சிறப்பையும் பெற்றார் இராசமன்னார்.

இராசமன்னார் 1948ல் தலைமை நீதிபதிப் பதவியை ஏற்று சுமார் 13 ஆண்டுகள் அப்பதவியைத் திறம்பட வகித்து 1861ல் ஓய்வு பெற்றார். அந்தப் பதிமூன்று ஆண்டுகளில் சென்னை உயர் நீதிமன்றத்திலும் அதன் அதிகாரத்திலும் நாட்டிலும் குறிப்பிடத் தக்க மாறுதல்கள் ஏற்பட்டன. அவைகளைப் பின்வருமாறு வரிசைப் படுத்திக் கூறலாம். மொழி அடிப்படையில் நாட்டில் மாநிலங்கள் உதயம் ஆயின. ஆந்திர மாநிலமும், கேரள மாநிமும் தோன்றியதன் விளைவாக ஆந்திர உயர் நீதிமன்றமும், கேரள உயர் நீதிமன்றமும் தனியாக உருவாக்கப்பட்டன. ஏக குடும்பத் தலைவர் போல் இயங்கிய சென்னை உயர்நீதிமன்றத்திலிருந்து ஆந்திர மாநில உயர்நிதிமன்றம் ஆந்திர மாநிலம் என்னும் நங்கை நல்லாளை மணந்தும் கேரள மாநில நிதிமன்றம் கேரள மாநிலம் என்னும் மாதரசியை மணந்தும் பிரிந்து தனிக்குடித்தனம் செய்யத் தொடங்கினர். நீதித்துறை முழுக்கமுழுக்க நிர்வாகத் துறையிலிருந்து பிரிந்துசெயல்படத் தொடங்கியது. நீதிப்பேராணைகள் (Writs) வழங்குவதில் தகுந்த வளர்ச்சியும் தேவையான முறைகளும் தோன்ற ஆரம்பித்தன. உயர் நீதிமன்றங்களே கொலை வழக்குகளைப் போன்றவைகளை நடத்தும் அமர்வு நீதிமன்றங்களாக இயங்கி வந்த (quarters Sessions) நிலை மாறியது. அமர்வு வழக்குகளில் சூரிகள் அமர்ந்து நீதிபதிகளுடன் சேர்ந்து வழக்குகளை நடத்தும் முறை (Jury System) நீக்கப்பட்டது.

மேலே சுட்டிக் காட்டப்பட்ட மிக முக்கியமான மாறுதல்களுடன், நாடு விடுதலையானதால் நாட்டில் ஏற்பட்ட மாறுதல்களும், மக்களின் எதிர்பார்ப்புகளும், ஆசைகளும் அவாக்களும், தேவைகளும் உயர்நீதி மன்றத்திலும் எதிரொலிக்கத் தொடங்கின. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட புதிய அரசுகள் மக்கள் நல்வாழ்வுக்கென புதிய திட்டங்களை வகுத்து செயல்படத் தொடங்கியபோது நீதிமன்றங்கள் தமது திட்டங்களுக்கு தடையாக நிற்கக் கூடாதென அவைகளும் எண்ணின. இவைகளெல்லாம் நீதிமன்றங்கள் புதிய பார்வையுடன் செயல்பட

வேண்டிய இன்றியமையாமையை வலியுறுத்தியுள்ளனஎன்பதில் அய்யமில்லை. நமது சென்னை உயர் நீதிமன்றம் இந்தத் தாக்குதல்களுக்கு ஈடுகொடுத்து எல்லோரின்நல்லெண்ணத்தை மதிப்பையும் பெறமுடிந்தது. இதற்குத் தலைமை நீதிபதி இராசமன்னாரும் அவருடன் சேர்ந்து ஒத்துழைத்த சக நீதிபதிகளும் காரணமாக இருந்தனர்.

முன்னாள் தலைமை நீதிபதி திரு. இராமச்சந்திர அய்யர் ''நூற்றாண்டைக் கடந்த சென்னை உயர் நீதிமன்றம்'' என்ற நூலில் இராசமன்னார் பங்கைப் பற்றிப் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

''இராசமான்னார் தலைமை நீதிபதியானகாலம் வரலாற்றில் மாறுதல்களை நோக்கியிருந்த காலமாகும். நாடுவிடுதலை பெற்றிருந்தது. நாட்டில் பெரும்பான்மையோர் நம்மை அடிமைப்படுத்தி வைத்திருந்த ஆங்கிலேயர் வகுத்த சட்டம் ஒழுங்கு நம்மை அடிமைப் படுத்தி வைக்கவே பயன் படுத்தியிருந்தனர் என்றே எண்ணினர். ஆகவே அத்தகைய சட்டம் ஒழுங்கு முறையையே மக்கள் சந்தேகக்கண் கொண்டும், நம்பிக்கையற்றும் நோக்கினர். இந்த நிலையில் நீதித்துறையின் தலைமை நீதிபதி இதுவரையிலும் உயர் நீதிமன்றம் கட்டிக் காத்து வந்த கண்ணியத்தைக் காப்பதுடன் புதிதாக உருவாகியுள்ள சனநாயக சக்திகளுக்கும் நிறைவுதரும் செயல்களையும் செய்தாக வேண்டியிருந்தது. இந்திய அரசியல் சட்டம் உயர்நீதிமன்றங்களுக்குப் பெரும் அதிகாரங்களையும் மிகுந்த பொறுப்புகளையும் வழங்கியிருந்தது. ஆகவே இத்தகைய அசாதாரணமான அதிகாரங்களையும் பெரும் பொறுப்புகளையும் பெற்ற உயர் நீதிமன்றம் மக்களின் நல்வாழ்வுத்திட்டங்களுக்குத் தடையாக நிற்குமோ எனப்பலர் இயல்பாக அச்சம் கொண்டனர். இன்னும் சிலர் உயர் நீதிமன்றம் இந்த அதிகாரங்களை அரசுக்கு எதிராகத் திருப்பி விடுமோ எனவும் அஞ்சினர். ஆனால் சில ஆண்டு அனுபவத்தில் இந்த அச்சமும் அவலமும் அய்யமும் தேவையற்றதென உணர்ந்தனர். உயர் நீதிமன்றம் மக்களின் உரிமைகளையும் சுதந்தரத்தையும் பாதுகாக்கும் தகுதி வாய்ந்த பாதுகாவலன் தானே தவிர மக்கள் முன்னேற்றத்துக்குத் தடைக்கல்லாக நிற்காது என்பதைத் தெரிந்து கொண்டனர்.''

இராசமன்னார் மத்திய மாநில அரசுகளின் உறவுகளையும் அவைகளுக்கிடையே அதிகாரப் பங்கீட்டையும் நிர்ணயம் செய்யத் தமிழ்நாடு அரசு அமைத்த குழுவின் தலைவராகவும்

இருந்து ஆய்வு செய்து அறிக்கை சமர்ப்பித்துள்ளார். அவர் இயல் இசை நாடகத்துறைகளில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தார். பல வழக்குகளில் அவர் வழங்கிய தீர்ப்புகள் முன் தீர்ப்புகளாகவும் இன்றும் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

இராசமன்னாருக்குப் பிறகு வந்த தலைமை நீதிபதிகள் திருமிகு. இராமச்சந்திர அய்யர், திருமிகு. அனந்தநாராயணன் திருமிகு. வீராசாமி, திருமிகு. கைலாசம், திருமிகு. கோவிந்தன் நாயர், திருமிகு. இராமப்பிரசாத்ராவ், திருமிகு. இசுமாயில், திருமிகு. கோகுலகிருஷ்ணன், திருமிகு. கே.பி.என். சிங், ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவார்கள். திரு. இராமச்சந்திர அய்யர் தலைமை நீதிபதியாக இருந்தபோது தான் 1962ல் நமது உயர்நீதி மன்றத்தின் நூற்றாண்டு விழா மிக விமர்ச்சையாக நடந்தது. உயர் நீதி மன்றம் என்ற வரலாற்றுப் பொன்னேட்டில் நூற்றாண்டு விழா நிகழ்ச்சி ஒரு சிறப்பான அத்தியத்தைப் பிடித்துள்ளது எனக் குறிப்பிடலாம். நூற்றாண்டு விழா மிகச் சிறப்பாக நடைபெற தலைமை நீதிபதி இராமச் சந்திர அய்யர் ஆற்றியபணி மகத்தானதாகும்.

தலைமை நீதிபதி திருமிகு. வீராசாமி தலைமை நீதிபதி கோகுலகிருஷ்ணன் ஆகியோர் கீழமை நீதி மன்ற நீதிபதிகளின் பால் அன்பு கொண்டு அவர்தம் நலனுக்காகப் பெரும்பணி ஆற்றியுள்ளனர். அவர்கள் செய்துள்ள பணிகளைத் தொகுக்க முனைந்தால் அது ஒரு அத்தியாயமே கொள்ளக் கூடியதாக இருக்கும். அத்துடன் அவர்கள் உயர் நீதிமன்றத்தின் உயர்வுக்கும் உயர்ந்த மரபுகளைக் காப்பதற்கும் உழைத்துள்ளனர் என்பதும் உண்மையாகும். தலைமை நீதிபதி கைலாசமும், தலைமை நீதிபதி இசுமாயிலும் உயர் நீதி மன்றத்தின் உயர்வுக்கு உழைத்ததுடன் கீழமை நீதிமன்றங்களின் பணியின் தரத்தையும் உயர்த்தவும் வெகுவாக முயன்றுள்ளனர். குறிப்பாக தலைமை நீதிபதி இசுமாயில் நீதிபதிகளுக்கும் வழக்குரைஞர்களுக்கும் இடையே நல்லுறவையும் நல்லெண்ணத்தையும் வளர்க்க நல்ல திட்டங்களை வைத்திருந்தார். அவர் தலைமை நீதிபதிப்பதவியைத் தானாக துறந்து, கவிச்சக்கரவர்த்தி கம்ப நாட்டாள்வர்புகழ் பரப்பும் இலக்கியப்பணியில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டது இளங்கோ அடிகள் மணிமுடி தரிக்கும் மன்னன் பதவியை வேண்டாது துறவுக் கோலம் பூண்ட நிகழ்ச்சியை நமக்கு நினைவுப்படுத்துகிறது. மேலும் ஆங்கில சாம்ராஜ்யத்தை ஆளும் வாய்ப்புப் பெற்ற எட்டாவது எட்வர்டுதான் காதலித்த ஒரு மாதரசிக்காக சாம்ராஜ்ய மணி

முடியைத் துறந்த நிகழ்ச்சியையும் நினைபடுத்துகின்றது என்றும் சொல்லலாம்.

தலைமை நீதிபதி கே.பி.என். சிங்கும் உயர்நீதிபதி மன்றத்தின் மரபுகளைக்காக்கப் பெரிதும் முயன்றார். கீழமை நீதிபதிகள்பால் அன்புகொண்டு அவர்களை நேசித்தார்.

நமது உயர் நீதிமன்ற இன்றைய தலைமை நீதிபதி மாண்புமிகு. எம்.என். சந்தூர்க்கர் அவர்கள் மிகத் திறமையாகவும் கூர்ந்தமதியுடனும் நல்ல பணிகளை ஆற்றி வருவது போற்றத் தக்கதாகும். எளியவருக்கு இலவச சட்ட உதவி வழங்குவதில் மிகுந்த ஆர்வம் காட்டி வருகின்றார். அவரது ஆர்வத்தாலும் முயற்சியாலும் விபத்துக்குள்ளானவர்களுக்கு உடனடியாக இழப்பீடு வழங்கும் அதலத் (மக்கள்) நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன. மேலும் உயர் நீதிமன்றத்தின் பணிகள் விரிவடைந்தும் வருகின்றன, இன்றைய தலைமைநீதிபதியின் காலத்தில் இன்னும் பல நல்ல பணிகள் நடைபெற இருக்கின்றன. உயர் நீதிமன்றத்தின் உயர்வும் நல்ல மரபுகளும் காக்கப்படும் என்பதிலும் அய்யம் இல்லை. இன்றைய உயர் நீதிமன்ற மாண்புமிகு நீதிபதிகளும் உயர் நீதிமன்றத்தின் சிறப்புக்குத் தம்பங்கைத் திறம்பட செய்துவருகின்றனர். தலைமை நீதிபதிக்கும் மற்றைய உயர் நீதிமன்ற நீதிபதிகளுக்கும் எமது அன்பையும் நன்றியையும் படைக்கின்றோம்.

6. "கண்ணையும் கருத்தையும் ஒருங்கே கவர்ந்த நூற்றாண்டு விழா"

1962 ஆகஸ்டு திங்கள் 6ம் நாள் மேகம் சூழ் வானத்தைத் தொட்டபடி கம்பீரமாக நிமிர்ந்து நின்ற உயர்நீதிமன்றக் கட்டிடத்தை கண்ணுற்ற எவரும் நூறு வயதான கட்டிடத்தைப் பார்ப்பதாக எண்ணவில்லை. என்றும் புதுமை என்று சொல்லும் படியாக புதுமை விளைக்கும் கட்டிடத்தையே கண்டனர். இம் மகத்தான கட்டிடம் நூறு வயதைத் தொட்டு விட்டதா என்ற வியப்பே பார்த்தவர் மனதில் ஏற்பட்டது, வரலாற்றை உருவாக்கி மறைந்த மாமேதைகள் பலரின் காலடிகள் பட்டதால் அகலிகை போல் புத்துயிர் பெற்று இளமையாக உள்ளது போலும் என்று பலருக்கு நினைக்கத் தோன்றியது.

வயது ஏறஏற இளமை குன்றாது என்றும் புதுமையை விளைவித்து எழுச்சியைப் பெறும் உயர்நீதிமன்றம் உள்ளே இயங்குவதால் கட்டிடமும் எழுச்சியுடன் காணப்படுகிறது. சென்னை உயர்நீதிமன்றம் 1862 ஆகஸ்டு திங்களில் உதயமானது எனக் கண்டோம். 1962 ஆகஸ்டு திங்களன்று உயர்நீதிமன்றம் நூறு வயதை எட்டிவிட்டது. இந்த வரலாற்று நிகழ்ச்சியை அதன் சிறப்பை எண்ணிக் கோலாகலமாகக் கொண்டாட உயர்நீதிமன்றத்தினர் எண்ணினர். அரசும் ஒப்புதல் அளித்தது. விழாவை மூன்று நாட்கள் தொடாந்து நடத்துவதென முடிவு செய்யப்பட்டபடி முதல் நாள் விழா ஆகஸ்டு 6 லும் 2வது நாள் விழா 7 லும்' 3வது நாள் விழா 8ந் தேதியிலும் நடந்தன.

பொதுவாக மாண்பு மிகு உயர்நீதிமன்ற நீதிபதிகள் உயர்நீதிமன்ற வழக்கறிஞர்கள், உயர்நீதிமன்றத்தில் பணியாற்றும் பணியாளர்கள் எனத் தொடர்புடைய மூன்று சாரார் மாத்திரம் விழா நடத்துவதில் ஆர்வமுடையவர்களாக் இருப்பர் என நினைக்கத் தோன்றும். பொது மக்களும் அரசும் பார்வையாளர்களாகக் கலந்து கொள்வர் என்ற கருந்துக்கு மாறாக அவர்களும் மிகுந்த கடமை யுணர்வுடனும் ஆர்வத்துடனும் விழாவில் கலந்து கொண்டனர். அதற்குக் காரணமில்லாமலில்லை. பொது மக்களிடையே எழுந்த பூசல்களைத் தீர்த்து

வைப்பதிலும், மக்களின் உரிமைகள் பறிக்கப்படும் போது உடனடியாகத் தலையிட்டு இழந்த உரிமைகளை வாங்கித்தருவதிலும், தமிழ்நாடு உயர்நீதிமன்றம் என்றுமே முன்னணியில் நிற்கின்ற பாங்கு மக்களைக் கவர்ந்துள்ளது. சனநாயக மரபுகளைத் தாங்கும் மூன்று தூண்களில் மிகவும் வலிவான தூணாக உயர்நீதிமன்றம் விளங்குவதால் அரசு அதன் இன்றியமையாமையை எண்ணி மெத்த மதிப்பும் நம்பிக்கையும் கொண்டுள்ளது. ஆகவே மக்களும் அரசும் உண்மையாகவே விழாவில் ஆர்வத்துடன் கலந்து கொள்ள முன் வந்ததில் வியப்பில்லை. விழா மக்களின் நெஞ்சைத் தொட இன்னொரு காரணமும் இருந்தது. விழாவில் ஆராவாரம், கேளிக்கை, வேடிக்கை விநோதங்கள் என்பது ஒரு பகுதிதான். மறுபகுதி கொள்கை விளக்கம். அத்துடன் நூற்றாண்டுகளில் உயர்நீதிமன்றம் நிகழ்த்திய அரிய சாதனைகள். போதித்த போதனைகள், உலகுக்கு அளித்த செய்திகள் ஆகியவைகளை விளக்கும் ஏற்பாடுகளும் இருந்தன.

மாண்புமிகு நீதிபதிளுக்கென ஒதுக்கியிருக்கும் நுழைவாயிலையும் பழைய கலங்கரைவிளக்கையும் ஒட்டியுள்ள பகுதியில் பிரமாண்டமான பந்தல் போடப்பட்டிருந்தது. 240 அடி நீளம் 70 அடி அகலம் 40 அடி உயரம் கீழ்மேலாக ஒருபெரிய மேடை. அது நுழைவாயிலைப் பார்த்தபடி இருந்தது. தஞ்சைத்தரணியியைச் சேர்ந்த கைதேர்ந்த பந்தல் அமைப்பாளர் பந்தல் மூகப்பை கோயில் கோபுர வடிவல் அமைத்திருந்தார். நீதி தேவர்கள் வதியும் கோயிலல்லவா? ஆகவே கோபுர வடிவில் முகப்பு அமைப்பது பொருத்தம் என்பது அவரும் அறிந்திருந்தார். உயர்நீதிக் கட்டிடம் சாரசனிக் முறையில் கூண்டு வடிவுகளைப்போல் இருப்பதால் பந்தல் முகப்பிலும் அதற்கு நிகராக கோபுர வடிவமைப்புக் கொண்டதாக இருந்தது. பந்தலின் நுழைவாயில் அருமையான முறையில் அழகு செய்யப்பட்டிருந்தது. வாழை, கமுகு கட்டப்பட்டும் தோரணங்கள்தொங்க விடப் பட்டும் இருந்தன. பந்தல் முகப்பில் உயரமான சில படிகள் அமைக்கப்பட்டு அவைகளில் ஏறி சாய்வாக பந்தலுக்குள் இறங்கலாம். பந்தலுக்குள் இருந்த இடம் முழுவதும் கயிர் கார்பெட் விரிப்புக் கிடந்தது. இருபக்கங்களிலும் பந்தலைத் தாங்கி நின்ற மரத்தூண்களைத் தவிர பந்தலுக்குள்ளும் இரு பக்கங்களிலும் மரத்தூண்கள் நிறுத்தப்பட்டிருந்தன. அந்தத் தூண்கள் ஒவ்வொன்றிலும் அய்ந்து விளக்குகள் பொருத்தப் பட்டு அழகு செய்தன. பந்தலுக்குள்இருபக்கங்களிலும் வரிசை

யாக நின்ற தூண்களுக்கிடையே இருந்த வழியில் மேடை வரையிலும் சிவப்பு விரிப்புகள் போடப்பட்டிருந்தன.

இந்த அழகிய பந்தலுக்குள் அழைப்பிதழ் பெற்றவர்கள் அமர 1700 இருக்கைகள் இருந்தன. மேடையின் நடுவில் அழகான மேசை காட்சியளித்தது. அதையொட்டி பெரிய மனிதர்களும் மாண்பு நீதிபதிகளும் அமர வெல்வெட்டுடன் இணைந்த குசன் நாற்காலிகள் வரிசையாக இருந்தன. மேசையின் இரு மருங்கிலும் அய்ந்து மின்விளக்குகள் பொருத்தப்பட்ட பெரிய குத்து விளக்குகள் அணி செய்தன. மேடைக்குப் பின்புறம் தொங்க விடப்பட்டிருந்த திரைச்சீலையில் உயர்நீதிமன்ற முத் திரைச் சிலையில் உயர்நீதிமன்ற திரைச் சின்னம் பொறிக்கப் படிட்ருந்தது. பந்தலின் நுழை வாயிலில் நமது இந்தியத் தேசீயக்கொடி உயரமான பரத் தூணில் தென்றலில் அசைந் தாடிப் பறந்து விழாவுக்கு வருவோரை ''வாருங்கள், வாருங்கள்'' என்று கைகளை அசைத்து அழைப்பது போல் காணப் பட்டது.

உயர்நீதிமன்றக் கட்டிடம் பலவண்ணங்களில் காட்சியளித்தது. கண்கள் கூசும்படி பலவண்ண மின்விளக்குகளும் கட்டிடத்தின் எப்பகுதி நோக்கினும் காணப்பட்டன. நீலவானில் கண்களைச் சிமிட்டிக் காதல புரியும் நட்சத்திர நங்கைகள் அனைவரும் வண்ண வண்ண உடைகளை மாட்டிக் கொண்டு உயர்நீதிமன்றக் கட்டிடத்திலும் பந்தலிலும் வந்து அமர்ந்து விட்டனவோ என எண்ணும் ''டியாக மின் விளக்குகள் தோற்றமளித்தன. இரவில் இந்த மின்விளக்கு சோடனையைக் கண்ணுரும் மக்கள் நீதிதேவர்கள் அமரும் கொலுமண்டபங்கள் இன்று நித்யதேவதைகள் ஊசலாடும் கூடாரமாக ஆகிவிட்டதோ என வியப்படைவர். மக்கள் கூட்டம் இரவிலே வழி வழிந்து கொண்டிருந்தது.

அ. அருங்கலைக் காட்சியகம்

தேவதைகள் வாழும் உலகில் சஞ்சரித்த மக்களுக்கு உயர் நீதிமன்றக் கட்டிடத்தின் ஒரு பகுதியில் அமைக்கப்பட்டிருந்த அருங்கலைக் காட்சியகத்தில் நுழைந்தபோது தாங்கள் நீதி தேவர்கள் அமரும் கொலுமண்டபத்தில் தான் உள்ளோம் என்ற நினைவு வந்தது. அருங்கலைக்காட்சி அகத்தில் உயர்நீதி மன்றம் துவங்கியதிலிருந்து இன்றுவரை அது அடைந்துள்ள வளர்ச்சி முன்னேற்றம் ஆகியவற்றைக்காட்டும் வரலாற்று

ஆவணங்கள், பொருள்கள் வைக்கப்பட்டிருந்தன. அத்துடன் நீதிபதிகளும், வழக்குரைஞர்களும் தங்கள் அன்றாடப்பணியைத் திறம்படச் செய்வதுடன் சமுதாயம் மெச்சும் வேறு பொதுப்பணிகளிலும் எப்படித் திறமையைக் காட்டியுள்ளனர் என்பதைக் காட்டும் ஆவணங்கள், ஏடுகள் குறிப்புகள் ஆகியவைகளும் காட்சியகத்தில் காணப்பட்டன. காட்சியகத்தில் புகுந்திருந்த ஒவ்வொன்றும் வந்திருந்த அனைவருக்கும் வரலாற்று நினைவுகளையும் பண்பாட்டின் பாங்கையும் எடுத்துக் காட்டின என்றால் மிகையல்ல.

ஆ. வரலாற்றைத் தாங்கிய பதினொரு காட்சியங்கள்

முதல் காட்சியகம்:

இதில் 1753ல் வெளியான மேயர்நீதிமன்றத்தின் பட்டயங்கள், 1798ல் ஆவண நீதிமன்றத்தின் பட்டயங்கள், உச்ச நீதிமன்றம், உயர்நீதிமன்றம் ஆகியவைகளின் அரசுப் பட்டயத் தனியுரிமைகள், வழக்கறிஞர்கள், அட்டர்னிகள் ஆகியோரின் பெயர்களைத் தாங்கிய பதிவோலைகள் ஒரு பக்கம் வைக்கப்பட்டிருந்தன. இன்னொரு பக்கம் பழைய செசன்சு உடைகள், தண்டாயுதம் (Mace), துடுப்பு (Oar) கடலுள்ளும் உயர்நீதிமன்றத்தின் நீதிஆணை பரந்திருந்தது என்பதைக்காட்டும் பொருட்களும் காட்சியளித்தன, நீதிபதி கிருஷ்ணசாமி அய்யர் புரிந்த பொதுத் தொண்டைப்பாராட்டி கைசாரிகிண்டு (Kaisari Hind) என்ற தங்க மெடலும் அவைகளுடன் சேர்ந்துஇருந்தது. 22-9-1914ல் செர்மானியக் கப்பல் எம்டனிலிருந்து வீசப்பட்ட குண்டுகள் நீதிமன்றத்தில் வடகிழக்குச் சுவரில் துளைத்துள்ள அடையாளத்தையும் காட்சிக்கு வைத்திருந்தனர்.

"இரண்டாவது காட்சியகம்"

இங்கு முன்காலத்தில் நடந்த வழக்குகளின் பதிவேடுகளும் நடைமுறைகளும் காட்சியளித்தன. திவானி என்ற நீதிமன்றத்தின் நடைமுறை தமிழில் இருந்தது என்பது குறிப்பிடத்தக்கதாகும். அது 1797ல் இயங்கியது. அத்துடன் சதர்அடவுலத்து, பௌஸ்டரி என்ற நீதிமன்றங்களின் நடை முறைகளும் காணப்பட்டன. மேலும் இந்திய நாட்டில் காலடி வைத்து தனது வீரதீரத்தைக் காட்டிய லார்டுகிளைவ் 1801ல் ஒரு கப்பல் வெளிநாடு சென்று மீள கையொப்பம் செய்திருந்த கையொப்ப பிர

தியும், 1807ல் அந்தக்கால ஆளுநர் தளபதி (கவர்னர் செனரல்) வாலாசா நவாப்பை ஏற்று உரிமையளித்த சான்றிதழும், 1819ல் சர். தாமஸ்மன்ரோ எழுதி வைத்த உயிலும் காட்சிக்கு வைக்கபட்டிருந்தன. வியப்புக்குரிய இன்னொன்று 29-8-1862ல் முதல் முதலாக நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கின் வாதுரை போன்றவையும் காணப்பட்டதாகும்.

இங்கு காணப்பட்ட ஆவணங்களில் உயர்நீதிமன்ற தலைமை நீதிபதிகள் ஆர்னால்டு வைட், கூட்ஸ் டிராட்டர் ஆகியோரும், நீதிபதிகள் கெர்னன், பாஸ்யம் அய்யங்கார், முத்துசாமி அய்யர் ஆகியோரும் தம் கைப்பட எழுதியுள்ள குறிப்புகளும், காணப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும். மங்கோலிய வீரன் தைமூர் நினைவுகளின் ஆங்கில மொழிபெயர்ப்பும் இருந்தது. மேலும் உச்சநீதிமன்றம் 1833ல் கணவன் மனைவி வழக்கொன்றில் விடுத்த வாரண்டும், கடல் வழக்கு சம்பந்தமாக 1854ல் வெளியான வாரண்டும் இருந்தன.

மூன்றாவது காட்சியகம்

1798—1863 ஆண்டுகளுக்கிடையே உச்ச நீதி மன்றமும், ஆவண நீதிமன்றமும் நடத்திய கடிதப் போக்குவரத்தின் பிரதிகள் அடங்கிய பதினைந்து புத்தகங்களும், 1835ல் வீராசாமி என்பவர் சந்திரிகா ஸ்மிருதியில் காணப்படும் வாரிசு உரிமை விற்பனை போன்ற இந்துச் சட்டத்தைப் பற்றி எழுதியிருந்த இந்துச் சட்டப் புத்தகமும், 1812ல் கோல்புரூக் எழுதியுள்ள ஒரு கடிதத்தின் நகலும் காட்சியில் காணப்பட்டன.

நாலாவது காட்சியகம்

வழக்கறிகள், மக்கள் ஆகியோரின் ஆர்வத்தைக் கவரத்தக்க முறையில் இப்பகுதியில் ஆவணங்களும் ஏடுகளும் இருந்தன. நீதிநிர்வாகத்தின் கூறுபாடுகள், வளர்ச்சி, அவைகளைப் பற்றிய உண்மைகள் ஆகியவைகளைப் பற்றியும் தெரிந்து கொள்ள வாய்ப்பும் இங்கு காணக் கிடைத்தன. சர். தாமஸ் ஸ்டிரேஞ்சுவின் இந்துச் சட்டப் புத்தகம் (1825) டி.வீரின் குற்றவியல் சட்டத்தின் முன்னோடித் தீர்ப்புகள் அடங்கிய புத்தகங்கள். 1805ம் ஆண்டின் சதர்திவானி அதெலெத் நீதி மன்றம் வழங்கிய சில குறிப்பிடத்தகுந்த தீர்ப்புகள். கிழக்கிந்திய கம்பெனியால் வழங்கப்பட்ட பட்டயங்கள் (1756—1772) மாண்டுகோமரியின் நீதிபதிகளின்

தொகுப்பு (1847) போன்றவைகள் இருந்தன. மேலும் 1860 இந்தியத் தண்டனைச் சட்டத்தின் தமிழாக்க ஏடு மதுரை கொண்ட சாமிப் புலவரால் 1926ல் தமிழாக்கம்செய்யப்பட்ட ஸ்மிருதி சந்திரிகா புத்தகம் ஆகிய இரு நூல்களும் இந்தப்பகுதியில் காணப்பட்ட சிறப்பு அம்சமாகும்.

அய்ந்தாவது காட்சியகம்

இந்தக் காட்சியகம் வழக்கறிஞர்கள் அறிவுக்கும் ஆற்றலுக்கும் சான்றாக உள்ள பிரிதிவாகும். வழக்கறிஞர்கள் சட்டம் என்னும் வட்டத்திலிருந்து சிலகாலங்களில் வெளியேறி பிற துறைகளிலும் தங்கள் முத்திரைகளைப்பொறிக்க இயலும் என்பதைக் காட்டியிருந்தனர். இராஜாஜி, பி.எஸ் சிவசாமி அய்யர். எஸ். சிரினிவாச அய்யங்கார், சி.பி. இராமசாமி அய்யர் ஆகியோர் சமுதாயம், சமயம் சம்பந்தமாக எழுதிய நூல்கள், வி. கிருஷ்ணசாமி அய்யர் வடமொழியில் தொகுத்தவை, டி.பிரகாசத்தின் சுய சரிதை, வி.வி. சிரினிவாச அய்யங்காரின் இலக்கிய ஏடுகள், கே.எஸ். வெங்கிட்டரமணியின் இலக்கிய ஏடுகள் ஒருபக்கம் இருந்தன. இன்னும் பி.என்.அப்புசாமி தமிழில் எழுதியுள்ள அறிவியல் புத்தகம்,டாக்டர்.ஆர்.பி சேதுப்பிள்ளை, டி.பி. மீனாட்சி சுந்தரனார் ஆகியோர் எழுதிய தமிழ் நூல்களும் இக்காட்சியகத்தை அணி செய்தன. அத்துடன் இசை, நடன சம்பந்தமான நூல்களும் நாடகத் துறையில் முன்னோடியாக விளங்கிய பம்மல் சம்பந்த முதலியாரின் நாடக நூல்களும் காட்சியில் காணப்பட்டன. அரப்பா நாகரீகம், தென்னிந்தியாவின் சிற்பக்கலை, சங்ககாலக்கலை வளர்ச்சி பற்றிய நூல்களும் காட்சியில் வைக்கப்பட்டிருந்தது சிறப்பாக இருந்தன.

ஆறாவது, ஏழாவது, எட்டாவது காட்சியங்களில் நீதிபதிகள் பஞ்சாபகேச அய்யர், ராசமன்னர் அனந்த நாராயணன், மகாராசன் போன்றவர்களின் இலக்கிய ஏடுகளும், நீதிபதிகள் உல்லாச பயணம் செய்த போதும், மரம் நடுதல் போன்ற பொது நிகழ்ச்சிகளின் போதும்எடுக்கப்பட்ட புகைப் படங்களும் காட்சியில் வைக்கப்பட்டிருந்தன.

மற்றும் 9, 10, 11 ஆகிய காட்சி யகங்களில் வர்ணம் தீட்டபட்ட நீதிபதிகள், வழக்கறிஞர் உருவப்படங்களும் இசைக் கருவிகளும், சென்னை அரசாங்க அருங்கலைச் காட்சியகத்தினரால் நூற்றாண்டு விழாவில் வைப்பதுக்கென வழங்கப்

பட்ட தாமிரப் பட்டயங்களும் காட்சிக்கென வைக்கப்பட்டிருந்தன. அந்தத் தாமிரப்பட்டயங்கள் தன்னை மகாராசாதிராசா என அழைத்துச்சொண்ட ஒரு சிற்றரசர் நிலவரி கொடுக்கவில்லை என்ற காரணத்தினால் வழங்கிய ஆணையை இரத்து செய்து இன்னொருவருக்கு நிலத்தை வழங்கியதுபற்றியும், கார்நூல் மாவட்டத்தில் உள்ள சிரிசைலம் கோயிலுக்கு மான்யமாகவழங்கப்பட்ட நிலங்களை பொருத்து வைசியர், சத்திரியர், பிராமணர் ஆகியோருக்கிடையே எழுந்தபூசலைத்தீர்த்து வைத்ததுபற்றியும்விவகாரங்களை எடுத்துக்காட்டின, அத்துடன் 8வது நூற்றாண்டில் பல்லவ மாமன்னனாக இருந்த நந்திவர்ம பல்லவ மல்லன்வெளியிட்ட IIகாசர் குடிப் பட்டயங்களும் காட்சியில் இருந்தன. அவைகள் மான்யங்களாக வழங்கப்பட்ட நிலங்களைப் பற்றியும், சில ஊர்களின் பெயர்கள் மாற்றம் பற்றியும் குறிப்பிட்டு இருந்தன. நமக்குஆர்வத்தை ஊட்டும் ஒரு குறிப்பும் காணப்பட்டது. அன்று இயங்கி வந்த நீதிமன்றங்கள் குற்றவாளிகளைத் தண்டிக்க விதித்த அபராதம் ''ஆதிகரணதண்டம்'' என்ற பெயர் கொண்டது என்பதையும் பட்டயங்களிலிருந்தே தெரிந்தது. இது பல்லவர் காலத்தில் நீதி நிர்வாகம் எத்தகையதாய் இருந்தது.என்பதை இன்றைய நீதி முறையைக் காணும் நமக்கு விளக்குகின்றது.

நூற்றாண்டு விழாத் துவக்கம்

(1962 ஆகஸ்டு திங்கள் ஆறு) அருங்கலைக் காட்சியகத்தில் கண்ட ஆவணங்கள், பொருள்கள், ஏடுகள், பட்டயங்கள் படங்கள் ஆகியவைகளைக் கண்டு களித்த மக்கள் உயர் நீதிமன்றத்தின் அருமையான முன்னைய வரலாற்றை ஒருவாறு தெரிந்து கொண்ட மன்நிறைவு பெற்றனர். ஆனால் உயர்நீதிமன்றத்தின் இன்றைய ஒளி மிகுந்த வரலாற்றை உருவாக்கி வரும் மாமனிதர்களைக் காணவும் அவர் தம் வாயிலிருந்து உதிரும் பொன்னான உரைகளைக் கேட்கவும் மக்கள் விரும்பியது இயல்பானதேயாகும்.

நல்லாரைக் காண்பதும் நலமிக்க
நலலார் சொற் கேட்பதும் நன்று —என்ற பாடலும்

''எனைத் தானும் நல்லவை கேட்டு அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்'' —எனக் கூறும் திருக்குறளும் நல்லவர்களின் உரையைக் கேட்பதில் வரும் நன்மையையும் பெருமையையும் கூறுகின்றன.

பிறற்பகலில் விழாத்துவங்க உள்ளது. விழாவின் மாபெரும் நாயகனான உயர் நீதிமன்றத்தை மையமாக வைத்து ஒரு சிறந்த காப்பியமே உருவாகப் போகின்றது. காப்பியம் துவங்குமுன் கடவுள் வாழ்த்து என்பது நமது மரபு. அந்த மரபு தவறாமல் காலையில் கடவுள் வாழ்த்துப் பாடல்கள் பாடப்பட்டன. இசை வாணர் தண்டபாணி தேசிகர் தேவாரம் திருவாசகப் பாடல்களை இசைக்க, இருக்குவேதம், யசுர்வேதம், சாம வேதப்பாடல்களும் பாடப்பட்டன. உயர் நீதிமன்றக் கட்டிடம் எழும்புவதற்கு முன் தற்போது விழாப் பந்தல் இருந்த இடத்தில் சென்னை கேசவப்பெருமாள் சென்னை மல்லேசுவர கோயில் இருந்தது. அக் கோயில் சென்னை சியார்சு டவுனுக்குக் குடிபெயர்க்கப்பட்டிருந்தது. அக் கோயில்களின் அறங்காவலர்கள் விழாப் பந்தலுக்குக் கோயில் குடையுடனும் சன்னிதான தீர்த்தத்துடனும் மேளதாளம் முழங்கவும் நாதசுவர இன்னிசை எழும்பவும் பல்லக்கில் வந்து சேர்ந்தனர். அக் குழுவினரை உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி சின்காவும் சென்னை உயர்நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி இராமச் சந்திர அய்யரும், மற்றும் பல மாண்பு மிகு நீதிபதிகளும் வரவேற்றனர், வரவேற்ற நீதி தேவர்களுக்குக் கோயில் மாலை மரியாதை அளிக்கப்பட்டதுடன் தீர்த்தம், குங்குமம், சந்தனம் பூசையில் வைக்கப்பட்டிருந்த பூக்களும் வழங்கப்பட்டன. தூபம் பரவ துந்துபி முழங்க காலையில் எல்லாம்வல்ல இறைவனுக்குப் பூசை நடந்தது. பாமாலை பாவணர்கள் பாடினர். தொடங்கப் போகும் காப்பியத்துக்குக் கடவுள் வாழ்த்துப் பாடியாய் விட்டது.

மாலை 3 மணியளவில் நூற்றாண்டு விழா மிக விமரிசையுடன் நாதசுவரத்துக்கோர் நாயகன் எனச் சொல்லப்படும் காருகுரிச்சி அருணாசலமும் அவரது குழுவினரும் இன்னிசை வழங்கத் தொடங்கினர். விழாத் தொடக்கத்திலேயே பந்தல் முழுதும் நிரம்பி விட்டது. பந்தலின் மேல்புரம் வழக்கறிஞர்கள் வழக்கறிஞர்க்குரிய உடைகளுடன் இருக்கைகளில் அமர்ந்திருந்தனர், வழக்கறிஞர் உடையில் பேசியே பழக்கப்பட்ட வழக்கறிஞர்கள் இன்று விழாவில் மற்றவர் பேசத்தாம் கேட்பதென்றநல்ல முடிவுடன் அமைதியாய் இருந்தது, விழா அருமையாக இருக்கப் போகின்ற தென்பதைக் காட்டும் அறிகுறியாகும். பந்தலின் கிழபுறமுள்ள இருக்கையில் சென்னை நகர சிரார்ந்த குடிமக்கள், தாழ்விலா செல்வர், அரசுப் பணியாளர்கள் போன்றோர் அமர்ந்திருந்தனர். மேடைக் கருகாமையில்

வட்ட வடிமாகப் போடப்பட்டிருந்த இருக்கைகளில் உயர்நீதி மன்ற முன்னாள் நீதிபதிகள், ஆந்திரம், கர்னாடகா, கேரள உயர்நீதிமன்ற நீதிபதிகள், வெளிநாட்டுத் தூதுவர்கள், அரசின் பல்வேறு துறைத் தலைவர்கள் அமர்ந்திருந்தனர், விழாவில் கலந்து கொண்ட மகளிர் அமரவும் தனியான இருக்கைகள் இருந்தன. பந்தல் நிறைந்து பந்தலுக்கு வெளியேயும் மக்கள் கூட்டம் பரவியிருந்தது,

இந்திய நாட்டுக் குடியரசுத் தலைவர் டாக்டர். இராதா கிருஷ்ணன் ஆளுநர் பிஷ்ணுராம் மேதி உடன் வர உயர்நீதி மன்றத்தின் வாயிலுக்குள் நுழைந்தார். அவரை நமது தலைமை நீதிபதி, உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி, நமது நீதிபதிகள். மற்ற மாநிலத் தலைமை நீதிபதிகள் புன்முறுவலுடன் வரவேற்றனர். நமது தலைமை நீதிபதி குடியரசுத் தலைவருக்கு வரவேற்கக் குழுமியிருந்த நீதிபதிகளை அறிமுகம் செய்வித்தார். குடியரசுத் தலைவரும் அறிமுகத்தால் பெருமிதம் அடைந்து நிறைந்த புன்னகையைப் பரிமாறினார்.

உயர்நீதிமன்ற ஜவான்கள் தண்டாயுதங்களுடன் முன் செல்லவும், அவர்களையடுத்து சென்னை நகரசெரிப்பு பதவிக்கேற்ற சீருடையுடன் குடியரசுத் தலைவரை மேடை வரை செல்லும் ஊர்வலத்தில் வழி நடத்திச் சென்றார். ஊர்வலத்தில் வரவேற்கச் சென்ற நீதிபதிகள் அனைவரும் நடந்து சென்றனர். அது தவிர சென்னை மாநில முதல் அமைச்சரும் அவருடன் வந்த அமைச்சர்களும் பெரு மக்களும் ஊர்வலத்தில் கலந்து கொண்டனர். பெருமக்கள் கலந்த இந்த ஊர்வலம் ஊர்ந்து செல்வதைக் கண்ட அனைவரின் உள்ளத்திலும் உவகையும், உள்ளக் களிப்பும், உற்சாகமும், அச்சம் கலந்த பய பக்தியும் உண்டாயின என்பதை அவர்களது முகபாவங்கள் காட்டின. ஊர்வலம் பந்தலுக்குள் நுழைந்து விரிக்கப்பட்டிருந்த சிவப்புக் கம்பளங்களின் மீது காலடி வைத்த போது இருக்கையிலிருந்து எழுந்த கூட்டம் கை கூப்பி வரவேற்றது. ஊர்வலம் மெதுவாக நகர்ந்து மேடை மீது ஏறியது.

மேடை மீது குடியரசுத் தலைவர் இருக்கையில் அமர்ந்தார். அவரது வலபுறம் சென்னை உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதியும் இடபுறம் உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதியும் இவருக்கருகில் ஆளுநர்மேதியும் அமர்ந்தனர். பின்னர் மேடையின் கிழ்புறம் முன்னாள் முதல் இந்தியத் தலைமை நீதிபதி இராசமன்னார், உயர்நீதிமன்ற நீதிபதிகள், உச்சநீதிமன்ற

நீதிபதிகள் சுப்பாராவ், இராசகோபால அய்யங்கார், பிற மாநில உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதிகள் சந்திராரெட்டி. (ஆந்திரா) நிட்டூர் சீனிவாச ராவ் (மைசூர்) எம்.எஸ்.மேனன் (கேரளா) இலக்குமி நரசிம்மன் (ஒரிசா) கோபால்ஜி மேக் ரோட்ரா (அசாம்) இந்திய அட்டர்னி செனரல் எம்.சி. செதல் வாட், ஆகியோர் அமர்ந்திருந்தனர். மேடையின் மேபுறம் இந்திய அரசியல் வித்தகர் இராசாசி, வழக்கறிஞர் சங்கத்தின் முன்னோடி சி.பி. இராமசாமி அய்யர், முதலமைச்சர் பெருந் தலைவர் காமராசு, மத்திய அமைச்சர் சி. சுப்பிரமண்யம், பக்தவச்சலம், வெங்கிட்டராமன் சென்னை மாநில அமைச்சர் கள், முன்னாள் உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி பதஞ்சலி சாத்திரியார், உச்சநீதிமன்ற முன்னாள் நீதிபதி டி.எல். வெங்கட்டராம அய்யர், சட்டமன்ற அவைத் தலைவர் செல்ல பாண்டியன், சட்டமன்ற மேலவைத் தலைவர் பி.வி. செரியன் ஆகியோர் வீற்றிருந்தனர்.

உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி வரவேற்புரை நிகழ்த்தி யதுடன் பிரதமர் நேரு பெருமகனாரிடமிருந்து வந்த வாழ்த் துரையையும் படித்தார். குடியரசுத் தலைவர், தலைவர் முன் னுரை வழங்குவதற்கு முன் நூற்றாண்டு விழா என்பதற்கு அறிகுறியாகப் பொத்தானை அழுத்த பந்தல் தூண்களிலும் இரண்டு குத்து விளக்குகளிலும் பொருத்தப்பட்டிருந்த நூறு மின்விளக்குகள் ஒளியை உமிழ்ந்தவாறு எரிய ஆரம்பித்தன. குடியரசுத் தலைவர் மிக அருமையான முறையில் தலைமை உரை நிகழ்த்தினார். அவரைப்பின்பற்றி விழாவில் சிறப்புரை நிகழ்த்தியவர்கள் உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி, ஆளுநர் மேதி, டாக்டர். ராமசாமி அய்யர், திரு. இராசமன்னார், ஆகியோர் ஆவர். விழாவில் உயர்நீதிமன்றத்தின் தபால்தலை வெளியிடப்பட்டது. திரு. வி.சி. கோபாலரத்தினம் எழுதிய ''முடிவடைந்த நூற்றாண்டு'' என்ற புத்தகத்தை இராமசாமி அய்யர் வெளியிட்டார்.

அரசாங்க வழக்கறிஞர் வி.கே. திருவேங்கடாச்சாரி அவர் கள் நன்றியுரை புகல 6ந் தேதி விழா தேசியகீதம் பாட இனிது முடிந்தது.

ஆகஸ்டு 7ந் தேதி விழா வழக்கறிஞர்களது விழாவாக அமைந்து விட்டது எனலாம். முந்தைய நாள் நடந்த விழாப் போல் இந்த விழாவும் வெகு உற்சாகத்துடனும் ஆர்வத்துட

னும் நடந்தது. இன்றைய விழாவிலும் தலைமை நீதிபதிகள் நீதிபதிகள் வழக்கறிஞர்களுடன் சேர்ந்து கொண்டாட்டத்தில் கலந்து கொண்டது சிறப்பானதாகும். திருவாங்கூர் முன்னாள் தலைமை நீதிபதியும் சென்னை உயர்நீதிமன்றத்தில் முன்னோடி வழக்கறிஞராகவும் பணியாற்றிய வருமான திருப்புகழ் மணி டி.எம். கிருஷ்ணசாமி அய்யர் தனது குழுவினருடன் விழாப் பந்தலில் பசனை நடத்தினார். அத்துடன் அவரது சிறப்புக்கு ஏற்றாப் போல் திருப்புகழை இனிமையாகப் பாடி இசை பொழிந்தார். தமிழிலும் வட மொழியிலும் பாடல் களைப் பக்தி சொட்ட சொட்டப் பாடினார், அவரது இனிய பாடல்களைக் கேட்டு உள்ளம் நெகிழாதவர் பந்தலில் யாருமில்லையெனலாம்.

அன்று மாலையில் இராசா அண்ணாமலை மன்றத்தில் உயர்நீதிமன்றம், உச்சநீதிமன்ற முன்னாள் நீதிபதி டி. எல். வெங்கட்ராம அய்யர், வழக்கறிஞர் டி. வி. இராசகோபாலனது துணைவியார் ருக்மணி ராசகோபாலன் ஆகியோர் இசை விருந்து நடை பெற்றது. வழக்கறிஞர்களே நடித்த ''ஈசுவர சங்கல்பம்'' என்ற நாடகம் கூடியிருந்தவர்களின் உள்ளங்களைக் குளிர்வித்ததுடன் கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தாகவும் அமைந்தது. வழக்கறிஞர் ஆராவமுத அய்யங்காரின் பேத்தி குமாரி இராதாவின் நடனம் பலபேரின் பாராட்டுதலையும் கைதட்டலையும் பெற்றதென்றால் மிகையானதல்ல.

அன்று இரவு விழாப் பந்தலில் மின்விளக்குகள் சொலிக்க மிக ஆராவாரமான சுவையுடன் கூடிய பெரிய விருந்து நடந்தது. நீதிபதிகளுடன் ஆயிரத்துக்கும் மேற்பட்ட வழக்கறிஞர்கள் விருந்தில் கலந்து சிறப்புச் செய்தன.

ஆகஸ்டு 8ம் தேதி விழாவும் விமரிசையாக நடந்தது. இவ்விழா உயர்நீதிமன்ற பணியாளர்களின் குதூகல விழா என்ற அளவுக்கு அமைந்துவிட்டது. தற்போது தமிழ்நாடு நீதித்துறையில் பணியாற்றும் திரு. சிவ. சிதம்பரம் எழுதிய ''பெற்றால் தானா பிள்ளை'' என்ற நாடகத்தை உயர்நீதிமன்ற பணியாளர்கள் மிக அருமையான முறையில் இராசா அண்ணாமலை மன்றத்தில் நடத்திக் காட்டினர். நாடகத்தையும் நடித்தவர்களின் நடிப்பையும் கண்ணுற்றவர் அனைவரும் பாராட்டினர்.

மூன்று நாள் விழாக்களிலும் முனைந்து பணிபுரிந்த பதிவாளர், மற்ற பணியாளர் அனைவருக்கும் பாராட்டுதலும்

நன்றியும் சொல்லுகின்ற விழவாகவும் மூன்றாவது நாள் விழா அமைந்தது ஒருவகையில் பொருத்தமாக இருந்தது.

"போற்றுதும் போற்றதும்"

உயர்நீதிமன்றம் போற்றுதும்
உயர்நீதிமன்றம் போற்றுதும்
அது தீங்கு எனும் உச்சி வெயில் காக்கும் குடைபோல் உள்ளதால்

மாண்புமிகு நீதிபதிகள் போற்றுதும்
மாண்புமிகு நீதிபதிகள் போற்றுதும்
அவர் மக்கள்மீது நீதி என்னும் அருள் வழங்குவதால்

உயர்நீதிமன்றப் பதிவாளர், பணிசெய்யும் அலுவலர் போற்றுதும்
உயர்நீதிமன்றப் பதிவாளர், பணிசெய்யும் அலுவலர் போற்றுதும்
அவர் அயராது அசைவிலா நற்பணிகள் செய்வதால்

விண்ணைமுட்டும் நீதிமன்றக் கட்டிடம் போற்றுதும்
விண்ணைமுட்டும் நீதிமன்றக் கட்டிடம் போற்றுதும்
அது நாம் எல்லாம் பணிசெய்ய இடம் கொடுப்பதால்
போற்றுவோம் போற்றுவோம் நாளும் போற்றுவோம்.

7. கோலாகல நூற்றாண்டு விழாவில் கொள்கை முழக்கம்

விழா கண்களுக்கு நிறைய விருந்தளித்தது என்றால் விழாவில் கலந்து கொண்ட பெருமக்களின் வாய்களிலிருந்து உதிர்ந்த உரைகள் கருத்துக்கு விருந்தாக அமைந்தன. நூற்றாண்டுகளைத் தாண்டும் எந்த அமைப்பும் தனக்கென ஒரு வரலாற்றையும் பாரம்பரியத்தையும் ஏற்படுத்திக் கொள்கின்றது. நமது உயர்நீதிமன்றம் தனது நூறாண்டு வரலாற்றில் மகத்தானதொரு பாரம்பரியத்தையும் சிலாகித்துப் பேசக் கூடிய மரபுகளையும் உருவாக்கியுள்ள பாங்கைக் காண்கின்றோம். அது உருவாக்கியுள்ள வரலாறு சாதாரணமானதன்று. அது புகழ் மிகுந்த அத்தியாயம். நீதித்துறையில் ஒரு பொன்னேடு என்றே கூறலாம்.

நூற்றாண்டு விழாவில் கலந்து கொண்ட விழா நாயகர்கள் பொன்னேட்டில் தம்மைக் கவர்ந்த பகுதிகளை மிகச் சிறப்பாக எடுத்துரைத்தனர். விழா வெற்றியடைய வாழ்த்துச் செய்தி அனுப்பிய பெருமக்களும் தாம் கண்ட கேட்ட சிறப்பியல்புகளை அழுத்தமாகக் கூறத் தவறவில்லை. விழாவில் வரவேற்புரை நிகழ்த்திய உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி திரு. இராமச் சந்திர அய்யர் அவர்கள் வாழ்த்துச் செய்திகளை வாசித்து விட்டு வரவேற்புரையும் நிகழ்த்தினார்.

அ. வாழ்த்துச் செய்திகள்

முதலமைச்சர் பெருந்தலைவர் காமராசர்

உயர் நீதிமன்றம் கடந்த நூறாண்டுகளில் தான் முயன்று பெற்ற பெரும்புகழும் இந்திய மண்ணில் நீதித் துறையின் பெருமைக்கு அது ஆற்றியுள்ளபங்கும் குறிப்பிடத்தக்கவைகளாகும். தொடர்ந்து உருவாகிவரும் அச்சமற்றவரும் புலமை வாய்ந்தவரும், ஆழ்ந்து கற்றவருமான நீதிபதிகளும், துணிவும், கூர்த்த மதியையுமுடைய பெரிய வழக்கறிஞர்களும் சேர்ந்து ஒளி திகழும் சட்ட முன்மாதிரிகளையும் மரபுகளையும் கட்டிக் காத்துவருகின்றனர். அந்தக் காலத்தில் சட்டப்பணியின்

போக்கு வேறு மாதிரி இருந்தது. அதனால் சட்ட அறிவும் கூர்த்த மதியும் அதற்கேற்ப வேறாக இருக்க வேண்டிவந்தன.

ஆனால் இன்று மத்திய மாநில சட்டமன்றங்கள் உருவாக்கும் சட்டங்களால் நீதிமன்றங்களின் பணியிலும் வரவேற்கத் தக்க முறையில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. நமது வழக்கறிஞர்கள், நீதிபதிகள் தமது முன்னோர்கள் போதித்த பாடத்தையும், வழிகாட்டு தலையும் காண்கின்ற அதே நேரத்தில் மாறி வரும் காலத்துக் கேற்றவாறு திறமையுடனும், உண்மையாகவும், தேவையான மதியுடனும் செயல்பட்டு வருகின்றனர். சட்டப் பொருள் விளக்கம் தருவதிலும் தீர்ப்புகள் வழங்குவதிலும் அவர்கள் காட்டும் அறிவும் ஆற்றலும் சமுதாய அரசியல் பொருளாதார நீதி நிலவக் கூடிய ஒரு புதிய சமுதாய அமைப்புத் தோன்ற வழி வருக்கும் என உறுதியாக இருக்கின்றேன். இப்புதியபாதையில் சென்னை உயர் நீதிமன்றம் மூன் வரிசையில் நடைபோடும் என்ற நம்பிக்கையும் கொண்டுள்ளேன்.

ஆ. முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் ராசேந்திர பிரசாத்

சென்னை உயர் நீதிமன்றம் சிறப்பு மிக்க பெயர் பெற்றுள்ளது. நாட்டின் கட்டுப்பாட்டுக்கும் சட்டம் ஒழுங்கு காப்பதிலும் அது நீண்ட உண்மையான தொண்டைச் செய்துவந்திருக்கின்றது. மிகச்சிறந்த நீதிபதிகளையும் வழக்கறிஞப் பெருமக்களையும் நாட்டுக்குத் தந்துள்ளது. அவர்கள் தாம் ஏற்றுக் கொண்ட துறைகளுக்குத் தெளிவையும் ஒளியையும் தந்து விளங்கவைத்திருக்கின்றனர். அத்தகைய சிறப்பைப்பெற்றுள்ள நீதிமன்றத்தின் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுவது பொருத்தமாகும். காலம் செல்லச் செல்ல உயர் நீதிமன்றம் தனது பெயரைக் காப்பாற்றுவதுடன் இன்னும் பெரும் சிறப்பைச் சேர்க்கும் என நம்புகின்றேன.

இ. ஆங்கலை நாட்டின் லார்டு மாமன்றத்தைச் சேர்ந்த லார்டு எவர்செட்

ஆங்கில நாட்டின் நீதித்துறையைச் சேர்ந்த அனைவரும் நீங்கள் ஆங்கிலச் சட்டத்துக்கும் மரபுகளுக்கும் கொடுக்கும் மதிப்பையறிந்து பெருமைப்படுகின்றோம். நமது இரண்டு நாடுகளுக்கும் இடையே ஏற்பட்டுள்ள சட்ட இணைப்பு நமது காமன்வெல்த்து (Common Wealth) நாடுகளை ஒன்றாக

இணைக்கும் பாலமாக உள்ளது. அந்த இணைப்பு வருங் காலத் தலைமுறையினர் அமைதியாகவும் இன்பத்துடனும் வாழ்வர் என்ற நம்பிக்கையை ஊட்டுகின்றது. நாம் மிகப் பெரியசட்ட மரபுகளைக் கொண்டவர்களாக இருக்கின்றோம். நமது சட்டமுறை மக்களின் அன்பையும் ஆதரவையும் பெற்றுள் ளதால் உண்மையான சுதந்திரத்தைக் காக்கும் உரம் பெற்ற தாக உள்ளது. ஆகவே நமது இரு நாடுகளும் நமது பாரம்பரியத்தைக்காக்கும் வாரிசுகளாக உயர்வோம்.

ஈ. தலைமை நீதிபதி வரவேற்புரை

இம்மாபெரும் நூற்றாண்டு விழாவைத் துவக்கி வைக்க நம்மிடையே எழுந்தருளியிருக்கும் அரசியல் வித்தகர்-தத்துவ ஞானி டாக்டர். இராதகிருஷ்ணன் அவர்கள் ஞானமும் தொண்டும் இணைந்த சின்னமாக விளங்குகின்றார். இந்த நாட்டின் நன்மைக்காக மாத்திரமல்லாமல் உலக நன்மை கருதி யும் அவர் இந்திய நாட்டின் குடியரசுத்தலைவர் பதவியை ஏற் றுள்ளார். அவர் அடைந்துள்ள உலகப் புகழ் பல்நாட்டு மக்க ளுக்கும் ஒளியெனத் திகழ்கின்றது. நமது இந்தியத்தலைமை நீதிபதி புவனேகவரர் பிரசாத்சின்கா நாடு முழுவதும் உள்ள நீதித்துறையின் சின்னமாகவும், தனக்கு நியாயமெனப்படு வதை அச்சமின்றி பிறர்க்கு வழங்கும் துணிவு பெற்ற நீதிபதி களின் சின்னமாகவும் இயங்குகின்றார் எனப் பெருமையாகக் கூறலாம். அவரது புலமையும், உண்மையும், நட்புள்ளமும் நமக்கெல்லாம் நன்கு தெரிந்தவையாகும், குடியரசுத் தலை வரும் இந்தியத்தலைமை நீதிபதியும் விழாவில் கலந்துகொள்ள இசைந்தமைக்கு மிகவும் நின்றி.

நமது மாநில முதல்வர், மத்திய அரசின் அமைச்சர்கள், உச்சநீதிமன்ற, உயர்நீதிமன்ற நீதிபதிகள், மாநிலங்களின் தலைமை நீதிபதிகள், நமது மாநில அமைச்சர்கள், அட்டர்னி ஜெனரல், ஓய்வுபெற்ற நீதிபதிகள், விழாவைச் சிறப்பிக்க வந்துள்ள பெருமக்கள் அனைவரையும் வரவேற்கின்றேன். நீங்கள் எல்லாம் விழாவில் கலந்து கொள்வது எங்களுக்குப் பெருமை தருவதாகக் கருதுவதுடன், நீண்ட தூரத்திலிருந்தும் சிரமத்தைப் பாராது நீங்கள் வந்துள்ளது இந்த நூற்றாண்டு விழாக்காணும் உயர்நீதி மன்றத்தின்மீதும் அதன் மரபுகள் மீதும் நீங்கள் வைத்துள்ள பெரும் மதிப்பைக் காட்டுவதாக வும் கருதுகின்றேன்.

நமது உயர்நீதிமன்றம் எளிமையான முறையில் தொடங்கப்பட்டது. அப்போதிருந்த கம்பெனி அரசு நீதி நிர்வாகத்தைக் குறைந்த அளவில் வைத்திருந்தது. பின்னர் படிப்படியாக அது வளர்ந்த நிலைபற்றி இரண்டு காரணங்களால் நான் விரிவாகக் கூறத் தேவையில்லை. அதன் வளர்ச்சியில் சில குறிப்பிடத்தக்க சம்பவங்களையும், நமது உள்ளத்தைத் தொடக்கூடிய சில நிகழ்ச்சிகளையும் மாத்திரம் உங்கள் முன் எடுத்து வைப்பேன்.

சென்னையில் வளர்ந்த நீதிமன்றங்களின் வரலாறு நான்கு கட்டமாகக் கூறப்படுகின்றது. 1600லிருந்து 1800வரை முதல் கட்டம். 1801லிருந்து 1862வரை இரண்டாவது கட்டம். நமது உயர்நீதிமன்றம் இரண்டாவது காலகட்டத்தில் தோன்றியது. 1862 லிருந்து நமது அரசியல் சட்ட அமைப்புவரை மூன்றாவது கட்டம். அரசு அமைப்புச் சட்டத்தின் கீழ் இயங்குவது 4வது கட்டம். நீதிமன்றங்களின் வளர்ச்சிப் பற்றித் தனியாக ஒரு புத்தகம் விழாவில் வெளியிடப்பட்டுள்ளது. விவரங்களை அதிலிருந்து நீங்கள் தெரிந்துகொள்ளமுடியும்.

நீதிமன்றங்கள் தோன்றிய பின்னர் 1687ல் தான் முதல் முதலாக முறையாகச் சட்டம் பயின்ற சர்சான் பிக்சு (Sir John Biggs) என்பவர் நீதிபதி வழக்கறிஞர் என்ற பெயரில் சென்னை நீதித் துறைக்குக் கொண்டுவரப்பட்டவராகும். அதே போன்று அலிங்கால் பிள்ளை (Allingall Pillai) என்ற இந்தியரே முதன்முதலாக நீதித்துறையில் அன்றிருந்த அரசால் நீதிபதியாக நியமிக்கப்பட்டவர் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். விக்டோரிய அரசி 26-6-1862ல் உயர் நீதிமன்றம் அமைக்கப் பட்டயம் வழங்கினார். அதன் அடிப்படையில் 1862 ஆகஸ்டு திங்கள் 15ந் தேதி நமது உயர் நீதி மன்றம் தொடங்கப்பட்டது. 1892 வரையிலும் கடற்கரை முதல் வீதியில் உள்ள கட்டிடத்தில் இயங்கி வந்த உயர்நீதிமன்றம் 1892 சூலை 8ல் இன்றுள்ள இந்த கட்டிடத்தில் இயங்க ஆரம்பித்தது. அந்தக் காலத்தில் பதிமூன்று லட்சம் ரூபாயில் இந்து சாரசனிக் முலையில் கட்டப்பட்ட இந்தக் கட்டிடத்தை அன்றைய தலைமை நீதிபதி சர். ஆர்தர்காலின்சிடம் ஒப்புவித்தார். சர். ஆர்தர்காலின்சு திறவுகோலை வாங்கி நாமெல்லாம் மறைந்த பின்னரும் இன வகுப்பு, கோட்பாடு என்ற வித்தியாசம் பாராமல் ஆற்றலும் துணிவும் கொண்டு நீதி வழங்கக்கூடிய பெருமக்கள் தொடர்ந்துஇந்நீதிமன்றத்தை அணி செய்வர் என அருமையாகக் குறிப்பிட்டார்.

போன நூற்றாண்டில் இந்த நீதிமன்றத்தை அணி செய்த பெருமக்கள் சர். டி. முத்துசாமி அய்யர். சர். வி. பாஸ்யம் அய்யங்கார், டாக்டர். எஸ். சுப்ரமண்ய அய்யர், திரு. வி. கிருஷ்ணசாமி அய்யர், போன்ற இந்தியரும், சர். கோலி ஸ்காட்லாந்து, சர். ஆர்நால்டுவைட், வில்லியம் காலோவே சேம்சுகெர்னன் போன்ற ஆங்கில தலைமை நீதிபதிகளுமாவர். அப்பெருமக்களே நமது உயர்நீதிமன்றத்தின் கட்டுக்கோப்புக்கு அடித்தளம் வகுத்தவர்கள். அந்த அடித்தளத்தின்பின்னர்வந்த நீதித்துறை வித்தகர்கள் கட்டுக்கோப்பையும் மரபுகளையும் எழுப்பினர். அவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் டி.சதாசிவம் அய்யர், பி.ஆர்.சுந்தரம்அய்யர், சர்.சி.வி. குமராசாமி சாஸ்திரி, சர். வே.பா.ராமேசம், சர்.எம் வெங்கிட்டசுப்பாராவ், சர். கி. மாதவன் நாயர் ஆகிய இந்தியரும், சர். முர்ரே. கூட்ஸ் டிராட்டர், சர். சி.ஜி. ஸ்பென்சர், சர். பிலிப்ஸ் போன்ற ஆங்கில வித்தகர்களுமாகும். அண்மைக் காலத்தில் சிறந்து விளங்கிய எஸ். வரதாச்சாரியார், எம். பதஞ்சலி சாஸ்திரி, கே. சுந்தரம் செட்டியார், சர். சிட்னி வேட்ஸ் வொர்த், சர். லைனல், கிளிபோர்டு கார்வில் ஆகியோரும் குறிப்பிடத்தக்கவர்கள்.

குற்ற இயல் வழக்குகளைக் கையாளுவதில் நிகரற்றவர்களாய்மிளிர்ந்த சிலபெயர்களைக் குறிப்பிடுவது இங்குபொருத்தமாய் இருக்கும் என நம்புகின்றேன். ஏர்டிலி நார்ட்டன், நியூ செண்ட்கிராண்டு, வி,எல். எத்திராசு, டாக்டர்.சுவாமி நாதன் போன்றவர்கள் அத்துறைக்கு மெருகு சேர்த்தார்கள். அது போன்று சிவில் துறையிலும் பெரியபுள்ளிகள் பி.எஸ். சிவ சாமி அய்யர், எஸ். சீனிவாச அய்யங்கார், சர். அல்லாடி கிருஷ்ணசாமி அய்யர் ஆவர்.

ரிட் மனுக்களில் நீதிவழங்கும் அதிகாரம் நீதித்துறைக்குக் கிடைத்தது மிக முக்கியமான அம்சமாகும். மக்கள் நல அரசுகள் இயங்கும் இந்நாளில் நிர்வாகத்தை நடத்தும் பல அதிகாரிகள் நீதி சார்ந்த ஆணைகளை வழங்கும் அதிகாரங்களைப் பெற்றுள்ளனர். அத்தகையோர் தங்கள் விருப்புவெறுப்புகளுக்கேற்ப ஆணைகள் வழங்க முற்படுகின்றனர். ரிட் மனுக்கள் மூலமே அவர்கள் தம் மனம்போன போக்கில் ஆணைகள் வெளியிடும் அதிகாரத்தைக் கட்டுப்படுத்தவும், அத்தகைய ஆணைகளால் மக்கள் பெரிதும் பாதிக்கப்படாமல் பார்த்துக் கொள்ளவும் இயலும். நிர்வாகத் துறையிலிருந்து நீதித்துறையைத் தனியாகப் பிரித்து இயங்க வைத்ததன் நோக்கம் இரண்டு

துறையினரும் நிரந்தரப் பூசலில் மாட்டிக் கொள்ளக் கூடா தென்பதேயாகும். பயனுள்ள பணியில் இருசாராருக்கும் அளிக்கப்பட்ட அதிகாரங்கள் ஈடுபடுத்தப்படுவதுடன் இருசாரா ரும் மோதிக் கொள்ளாமலும் இருப்பதே தேவையானதாகும்.

வழக்குகள் தேங்கிவிடாமல் பார்த்துக் கொள்வதும் தேவையானதாகும். தனி மனிதர்களைக் காக்கவேண்டி வகுக் கப்பட்ட சில நடைமுறை விதிமுறைகள் வழக்குகள் அவ்வப் போது தீர்க்கப்படாமல் இருப்பதற்கும் ஒரு வகையில் காரண மாகும். ஆனால் அதன் காரணமாக நடைமுறைவிதிகள்தேவை யற்றவையென நாம் ஒதுக்கிவிட முடியாது. அதே சமயத்தில் வழக்குகளை அவசர அவசரமாக முடிக்கின்ற முயற்சியால் தரம் கெட்டுவிடும். நீதி வழங்குவதில் பல குறைபாடுகளும் தோன்றும். ஆகவே அச்சுத் தீர்ப்புநகல் தேவையென்பதை விட்டு விட்டும் நிர்வாகத்தில் உள்ள குறைபாடுகளையும் நீக்கியும், மேல்மட்டத்தில் நீதித்துறையினர் பணிகளை ஆய்வு செய்தும் எடுக்கப்படுகின்ற வழிமுறைகள் நாம் விரும்புகின்ற பலனைக் கொடுக்கும். கீழமை நீதிமன்றங்களைப் பொருத்த வரையில் உயர்ந்த கடமையுணர்வுடன் கடுமையாக உழைக் கின்ற பாங்கைக் காணலாம். நமது மாநில அரசும் நமது வேண்டுகோளுக்குச் செவிமடுத்து தேவையான புதிய நீதி மன்றங்களை ஏற்படுத்த விரைவில் ஆணை பிறப்பிக்கின்றது. நமது உச்சநீதிமன்றத்தில் வழக்குகளின் தேக்கம் குறைவுதான். இன்னும் பொதுமக்கள், வழக்கறிஞர்கள் ஆகியோரின் ஒத்துழைப்பால் தேக்கத்தை முழுவதும் தவிர்த்து நீதியில் தாமதத்தைப் பெருமளவில் நீக்கிவிட முடியும்.

உயர் நீதிமன்ற நீதிபதியின் பணி உயர்ந்ததாகவும் அதே சமயத்தில் கடுமையானதாகவும், இருக்கின்றது. வியப்புகளை ஏற்படுத்தும் நாடகப்பணியில் அந்தப் பணியைச் செய்யவும் முடியாது. சட்டத்தின் ஆட்சி என்பது நீதிமன்றங்களின் மூலமே வெளிப்படுவதால் நீதிபதியின் பணி சனநாயகத்தின் உயிர்த்துடிப்பெனலாம். குடிமக்களின் உரிமைகள் மிதிக்கப் படும்போதோ, அல்லது பலி கொடுக்கப்படும்போதோ, அல்லது பாதுகாப்பற்று இருக்கும் போதோ, நீதிமன்றங்கள் குறுக்கீடு தேவைப்படுகின்றது. விளைவு மனிதனை மனிதன் கொடுமைப்படுத்துகின்ற இருட்டுக்குணம் தகர்த்தெறியப் பட்டுள்ளது. இந்த உணர்வில் நோக்கும்பொழுது வேறுஎந்தத் துறையினர் செய்யும் சமுதாயத் தொண்டினுக்கும் எவ்விதத் திலும் குறையாத சமுதாயத் தொண்டையே நீதித்துறையும்

செய்துவருவதைக் காணலாம். ஒருபடி மேலே சென்று பார்ப்போமானால் நீதித்துறை மிக உயர்ந்த செயல்பாட்டுடன் செயல்படுகின்றது என்றும் சொல்லலாம். மனிதன் வாழ உணவு எவ்வளவு முக்கியமோ, அதுபோல மனிதனுக்கும் சுதந்திரமும் தேவை. அத்தகைய சுதந்திரம் நிலவ சட்டத்தின் ஆட்சி தேவைப்படுவதால் நாம் அனைவரும் மகிழ்வுடனும் ஊக்கமுடனும் பணிவுடனும் நாம் கனவுகாணும் இந்திய நாட்டை உருவாக்கும் பெரும்பணியில் ஈடுபடுவோம்.

உ. இந்தியக் குடியரசுத் தலைவர் டாக்டர். இராதாகிருஷ்ணன் பேருரை

சென்னை உயர்நீதி மன்றத்துடன் எனக்குள்ள தொடர்பு நெருக்கமானதல்ல. புகழ் பெற்ற நீதிபதிகள், வழக்கறிஞர்கள் அடங்கிய இந்த மாமன்றத்தில் பேசவந்திருக்கும் எனக்கு ''ஞானி அகஸ்தியரின் ஒப்புதல்கள்'' என்ற ஏட்டில் கண்ட குறிப்பு நினைவுக்கு வருகின்றது. அந்த ஞானி சமயப் போதகர்கள் அடங்கிய ஒரு கூட்டத்தில் பேசவந்தார். ''கூட்டத்தில் என் உரையைக் கேட்க வந்திருச்கும் நீங்கள் பணிவுடன் என்னைப் பெருமைப்படுத்தியுள்ளீர்கள். ஆனால் உங்களைப் போன்ற சமயக் கோட்பாடுகளில் பெரும் புலமை வாய்ந்த பெருமக்கள் கூட்டத்தில் பேச நிற்கும் நான் எவ்வளவு பணிவுள்ளவன் என்பது ஆண்டவனுக்குத் தெரியும்'' என்றார். அதுபோல் உங்கள் முன் நிற்கும் நானும் பணிவுடன் சட்டத்தைப் பற்றிப் பேசுவதற்காக நிற்கின்றேன். தலைமை நீதிபதி குறிப்பிட்ட நீதிபதிகளும் வழக்கறிஞர்களும் உயர்நீதிமன்றத்தின் பழமையான புகழையும், உயர்ந்த மரபுகளையும், இன்று அது கொண்டுள்ள முன்னேற்றத்தையும் காக்க நல்ல தொண்டு செய்துள்ளனர். அவர்களை முன்மாதிரியாகக் கொண்டு இன்றுள்ளவர்களும் உழைத்தால் எதிர் காலத்திலும் உயர்நீதி மன்றம் மேலும் புகழ் அடையும்.

நான் சென்னைக் கிருத்துவக் கல்லூரியில் மாணவனாக இருந்த பொழுது புகழ் பெற்ற பாஸ்யம் அய்யங்கார் உயர்நீதி மன்றத்தில் தளர்ந்து வீழ்ந்து விட்டார் எனக் கேள்வியுற்று அப்பெருமகனாரின் பூத உடலைக் காண உயர்நீதிமன்றம் நோக்கி ஓடோடியும் வந்தோம். அவரைப் பற்றி ஒரு செய்தி கிடைத்தது. சென்னைக் கடற்கரையில் விடுதலை வீரர் பெபின்சந்திரபால் அந்நிய அரசாங்கத்தைத் தாக்கி உரை நிகழ்த்தினார். அரசு பாஸ்யம் அய்யங்காரிடம், பெபின் மீது

குற்ற வழக்குத் தொடர இடமுண்டா என ஆலோசனை கேட்டது.

''உரைகள் உணர்ச்சியைத் தூண்டக் கூடியவைகள் தான். ஆனால் ஆட்சிக்கு எதிராகப் பகை மூட்டும் உரைகள் எனக் கூற முடியாது'' என அரசிடம் கூறினார். இதுபோன்று தேசீய உணர்வுக்கு அய்யங்கார் போன்றவர்கள் உதவியாக இருந்தனர்.

இன்னொரு தடவையும் நான் உயர் நீதிமன்றத்தைநோக்கி ஓடோடி வந்ததும் உண்டு. ஆர்புத்நாத் வங்கி உடைந்ததால் பணத்தை இழந்த ஆயிரக்கணக்கான மக்களின சார்பாக வி. கிருஷ்ணசாமி அய்யர் எழுப்பிய வாதத்தைக் கேட்கவே அப்போது வந்தேன். அவருடைய தன்னலமற்ற பணியை அறிந்து பெருமைப்பட்டோம். ஆங்கில சூரிகள் ஆர்புத்நாத் குற்றவாளி என முடிவுக்கு வந்தனர். நீதிபதி சர். ஆர்னால் டுவைட் அந்த முடிவை ஏற்று அந்தக் காலத்தில் மிகவலிமையும் செல்வாக்கும் வாய்ந்த ஆர்புத்நாத்துக்குச் சிறைத்தண்டனை வழங்கினார். இனம், சாதி, சமுதாயம் என்ற பாகுபாடின்றி ஆங்கிலச் சட்டத்தின் மேன்மை இதன் மூலம் காக்கப்பட்டது. என நாங்கள் அன்று உணர்ந்தோம். இந்த ஒரு தனித்த செய்கையே மற்றைய பணிகள் எல்லாவற்றையும் விட ஆங்கில ஆட்சியின் தன்மானத்தைக் காத்தது எனலாம். பி. தியாகராச செட்டியார், கஸ்தூரி அய்யங்கார், குமாரசாமி சாஸ்திரி சங்கரன் நாயர், சத்தியமூர்த்தி, அல்லாடி கிருஷ்ணசாமி ஆகியோர் சட்டத்துறையிலும், பொதுத் தொண்டிலும், சமுதாய சீர்திருத்தத்திலும் சிறந்து விளங்கினர்.

நீதி சமுதாயத்தை இணைக்கும் காரையாகும். அதாவது சமுதாயம் விரிவுபடாமல் ஒன்றுபடுத்தி வைக்கும் ஒரு மூலப் பொருள் எனலாம். சமுதாயத்தில் உள்ள அனைவரும் சமம் என்றகோட்பாட்டைக்கொண்டு அது விளக்குகின்றது. காண்ட் என்ற ஆசிரியர் உறுதியான கட்டளைகள் எனக் கூறும் மிக முக்கியமான மூன்று கோட்பாடுகளை கூறியுள்ளார். நாம் ஒழுங்காக என்றும் ஒரு செயலைச் செய்யும் வழக்கத்தை மேற் கொண்டால் அது பொதுவான சட்டமாக மாறுகின்றது என்பது முதல்படியாகும். ஒவ்வொரு மனிதனையும் முழுமை யான முடிவான மனிதனாகஏற்றுக்கொண்டு அவனைப்போற்ற வேண்டும் என்பது இரண்டாவது படியாகும். மூன்றாவதாக ஒவ்வொரு மனிதனையும் மன்னனாகவும், குடிமகனாகவும் கருதுவதுவதாகும். இந்த மூன்றும் எல்லா மனிதர்களும் சமம்

என்ற கோட்பாட்டின் அடிப்படைகளாகும். உலகம் நல்லவையென எதை ஏற்றுக்கொள்கின்றதோ அதையே நாமும்செய்தல் வேண்டும். மனிதர் எவரையும் அடிமை எனக் கருதுதல் தகாது. ஆளுகின்ற வரும் சட்டத்துக்குட்பட்டவரேயாகும். உனக்கு நீயே கட்டுப்பாடு விதித்துக்கொள்ளாவிட்டால் சுதந்தரமாக இருக்க இயலாது. ஆகவே சுதந்திரமும் கட்டுப்பாடும், சட்டத்துக்குத் தலைவணங்குவதும் இணைந்தே செல்ல வேண்டும். இவைகள் சட்டத்தின் அல்லது அறத்தின் கோட்பாடுகள். ஆனால் இவைகள் உன்னதமான கோட்பாடுகள் என ஒத்துக்கொண்ட போதிலும் நடைமுறையில் நாம் எடுத்துக் கொள்வதில்லை. நீதிநிலவவும், மனித சமூத்துவம், மேன்மை நிலைபெறவும் வேண்டி நாம்தொடுக்கும் அறப்போர் நீதிமன்றங்களில் வெற்றி பெற நீதிபதிகளும்,வழக்கறிஞர்களும் முனைந்து தீர்ப்புகள், பொருள் விளக்கம் தருவது மூலம் செயல்பட வேண்டும்.

முன்னால் செயல்பட்ட ஆவண நீதிமன்றம், மேயர் நீதிமன்றம், சவுல்ட்டரி நீதிமன்றம் ஆகியவை படிப்படியாக வளர்ந்து இன்று நாம் காணும் உயர் நீதிமன்றமாகக் தோன்றியுள்ளது. சர். ஆர்தர்காலின்சு இந்த நீதிமன்றத்தில் தொடர்ந்து துணிவும் நீதியின் மேல் ஆர்வமும் கொண்டவர். வகுப்பு, இனம், கோட்பாடு என்று பாகுபாடு செய்யாமல் நீதி வழங்க முன்வருவர் என்று கூறிய வார்த்தைகள் பொய்த்து விடவில்லை. மிகுந்த புலவையும், பக்தியும், எளிய வாழ்வும் நீதியின் பால் முழுஈடுபாடும் கொண்டிருந்த பெரும் நீதிபதி சர். டி. முத்துசாமி அய்யரின் சிலையைக் காண்கின்றோம். அவர் முதல்இந்திய உயர் நீதிமன்ற நீதிபதியாவார். அதுபோல் முதல் இந்திய உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதியாக வந்த திரு. வி.வி. இராசமன்னார் இங்கு அமர்ந்துள்ளார். இதிலிருந்து தொடர்ச்சியாக வரும் மரபு காப்பாற்றப்படுகின்றது என்பது விளங்குகின்றது.

நமது நாட்டின் சட்ட வரலாற்றைச் சற்று உற்றுநோக்கும் போது வாரன் கேஸ்ட்டிங் சுவைப்பற்றி எழுதிய மெக்காலே அன்றைய உச்ச நீதிமன்றம் எப்படிஇயங்கியது என்பது பற்றித் தந்துள்ள ஒரு குறிப்பை நினைவு படுத்துகின்றேன். அந்த உச்ச நீதிமன்றம் (Supreme Court of Judicature at Calcutta) பயங்கரமாகச் செயல்பட்டது என மெக்காலே கூறுகின்றார். நிர்வாகத் துறையினர் தங்களுக்குள் சண்டை போட்டுத் தனித் தனியாக பிரிந்து நின்றபோது உச்ச நீதிமன்றமும் ஒரு பக்கமாகச் சாய்ந்தது என அறிகின்கிறோம். மராட்டியர் படை

யெடுப்பு விளைவித்த பயங்கரத்தைக்காட்டிலும் அதிபயங்கரத்தைக் கல்கத்தா உச்ச நீதிமன்றம் விளைவித்தது என்பர். இதிலிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டிய பாடம் நீதிபதிகள் அரசியலுக்கு அப்பால்பட்டவர்களாக இயங்கவேண்டுமென்பதாகும்.

நிர்வாகம், சட்டமன்றம், நீதிமன்றங்கள் ஒன்றுபட்டுச் செயல்படவேண்டும். மூன்றிலும் நீதித்துறையே மிக முக்கியமானது. நிர்வாகம் சட்டத்தைக் கொண்டுவரும் பணியைத் தொடங்குகின்றது. சட்டமன்றம் சட்டத்துக்கு உருத் தருகின்றது. அரசியல் அமைப்புச் சட்டத்துடன் ஒத்து வருகின்றதா என்பதைப் பார்க்க வேண்டியபணியையும் நீதிமன்றங்கள் செய்ய வேண்டியுள்ளது. நீதிமன்றங்கள் சட்டமன்றம் மேற்கொள்ளும் சில நடவடிக்கைகளையும் கண்காணிக்க வேண்டியுள்ளதால் நீதித்துறை ஒழுங்காகப் பணியாற்றுவதன் மூலமே பாதுகாப்பை தோற்றுவிக்க முடியும். நிர்வாகம் நீதிபதிகளை நியமிக்கின்றது. ஆழ்ந்த அறிவும், நிறைந்த புலமையும், நேர்மையான போக்கையும் கொண்டவர்களையே நீதிபதிகளாக நியமனம் செய்வதற்கெனப் போதுமான கவனம் தேவைப்படுகின்றது.

நான் ஆக்ஸ்போர்டில் இருந்தபோது பேராசியர் லீ நிகழ்த்திய சட்டக்கல்வி பற்றிய உரையைக்கேட்டேன். அவர் சட்டக் கல்விபற்றிமூன்றுவிதமான பார்வைகள் உண்டுஎன்று கூறினார். சட்டத் தொழில் செய்வதற்கான பயிற்சி இருந்தால் போதும் என்பது ஒருபார்வை. இரண்டாவது பார்வை எந்தச்சட்டத்தில் பயிற்சி கொடுக்கவேண்டும் என்பதாகும். மூன்றாவதுபார்வை பொதுவாக எல்லாச் சட்டத்திலும் பயிற்சி அளிப்பதாகும். இந்த மூன்றிலும் முதல் பயனற்றது. ஒருவர் எப்படி தொழில் நடத்துவது என்று பயிற்சி அளிப்பது மாத்திரம் போதாது என்பதுடன் சாத்திய மற்றதாகும். அது போன்றே இரண்டாவதும் போதுமானது என்று சொல்லிவிடமுடியாது. சட்டங்கள் பல வகையானவை. ஒரு சட்டத்தில் மாத்திரம் பயிற்சி அளிப்பது பொதுவாக சட்டத்தில் புலமை பெற்றது ஆகாது. மூன்றாவதுதான்ஏற்றுக்கொள்ளப்பட வேண்டியதொன்றாகும் பொதுவாக சட்டத்தில் புலமையும் பயிற்சியும் தருவதே சட்ட இயல் அறிவுறுத்தும் முறையாகும்.

மெயின்எழுதிய இந்துசட்டமும் பழக்க மரபும் (Hindu Law and usage) என்ற நூல் இன்றும் தரமிக்க நூலக ஏற்றுக்

கொள்ளப்பட்டுளது. சென்னை வழக்கறிஞர்கள் ''தாகூர் சட்ட விரிவுரை'' ஆற்ற முதலில் ஒப்புக்கொண்டு பின்னர் பின் வாங்கி விடுகின்றனர் என்பதையறிந்து நான் வேதனையடைகின்றேன். பொதுவாக சென்னை வழக்கறிஞர்கள் மிகுந்த திறமையும், சட்டத்தில் பெரும் புலமையும் கொண்டவர்களாக இருந்தும் பின் வாங்கி விடுகின்ற நிலை ஏன் என்பது புரியாததாக இருக்கின்றது. இந்தத் தலைமுறையில் வாழும் வழக்கறிஞப் பெருமக்கள் சட்டத்தில் ஆய்வு செய்து மிகச் சிறந்த நூல்களை வெளியிடுவார்கள் என நம்புகின்றேன்.

ரிட்மனுக்கள் நம்மையெல்லாம் திக்குமுக்காடச் செய்யும் அளவுக்கு வளர்ந்துள்ளது. ஏறக்குறைய எல்லாச் சிக்கல்களுக்கும் ரிட் மூலம் தீர்வு காண வேண்டுமென்ற துடிப்புக் காணப்படுகிறது. உயர் நீதிமன்றத்தில் அதற்கெனத் தனிப்பிரிவு ஏற்பட்டுள்ளது. சாதாரணப் பூசல்களுக்கும் ரிட் மனுக்கள் போடுவது தேவையற்றது. வலுவான காரணங்களுக்காக அத்தகைய மனுக்கள் போடும்போது சிக்கலைத் தீர்க்க வழி காணமுடியும். அரசியல் அமைப்புச்சட்டம், அனைத்துலகச்சட்டம் போன்றவை சிக்கலானவை. மனித வளர்ச்சி வரலாற்றில் சட்டங்களின் தோற்றம் முன்னேற்றப் படியாகும். கற்களை ஆயுதமாகக் கொண்டு மனிதர்கள் போராடிய கற்காலத்திலிருந்து அரசை அமைத்து அரசிடம் சில உரிமைகளை விட்டுவிட்ட இந்தக்காலம் வரை சட்டம் வளர்ந்துள்ளது. அதன் விளைவாக சமுதாயத்தில் ஒழுங்கு நிலவுகின்றது. உயர் நீதிமன்றம் முனைந்து எழுப்பியுள்ள பெரும் மரபுகளும், அது தோற்றுவித்த பெரிய வழக்கறிஞர்களும் நீதிபதிகளும், மற்ற மாநிலங்களைப்போல அல்லாது இங்கு இந்திய வக்கீலுக்கு ஏற்பட்டுள்ள புகழும் காப்பாற்றப்படும்என நம்புவதுடன், மேலும் நீங்கள் வலுவும் பொலிவும் பெற நல்லாசி வழங்குகின்றேன்.

ஊ. இந்தியத் தலைமை நீதிபதி சின்காவின் உரை

இந்த உயர் நீதிமன்றத்தின் நூற்றாண்டு விழா மிக முக்கியத்துவம் வாய்ந்த பொது நிகழ்ச்சியாகும். நூறாண்டுகளை மிகவும் பயனுள்ள வகையில் கழித்த இந்தப் பெரிய உயர்நீதிமன்றத்தின் நூற்றாண்டு விழாவில் கலந்து கொள்வதில் மெத்த மகிழ்ச்சியடைகின்றேன். இந்திய மண்ணில் தோற்றுவிக்கப்பட்ட கல்கத்தா, பம்பாய், சென்னை உயர் நீதிமன்றங்களும் அவைகளுக்கு முன்னோடியாக விளங்கிய மேயர் நீதிமன்றம்,

வேண்டுகோள் நீதிமன்றங்கள் (Courts of Requests) ஆவண நீதி மன்றம், உச்ச நீதிமன்றங்கள், சதர் திவானி நீதிமன்றம், சதர் பெவுடாதி அடலத்நீதிமன்றம் ஆகியவை சட்டத்தின் ஆட்சியை நிறுவ தமது கடமையை ஆற்றியுள்ளன. சென்னை உயர்நீதி மன்றம் பம்பாய், கல்கத்தா உயர் நீதி மன்றங்களுடன் சேர்ந்து நீதித்துறையில் சுதந்திரத் தன்மையையும் அச்சத்தை நீக்கி நடு நிலையுடன் கூடிய நீதிநிர்வாகத்தையும்ஏற்படுத்தி மரபுகளைத் தோற்றுவித்திருக்கின்றது. கடந்த நூறாண்டுகளில் நல்ல பணிபுரிந்து உயர் நீதிமன்றம் உயர்ந்த புகழை ஈட்டியுள்ளது. இங்கு பணியாற்றிய புகழ் மிக்க ஆங்கில நீதிபதிகளும் வழக்கறிஞர்களும் வரலாற்றில் இடம் பெற்றுள்ளனர். அவர்களது தீர்ப்புகள், வாதங்கள் எல்லாம் சட்டஅறிக்கைகளில் புதைந்து கிடக்கின்றன. உங்கள் உயர் நீதிமன்றம் பிரிவு கவுன்சிலுக்கு மாதவன் நாயரையும், பெடரல் நீதிமன்றத்துக்கு பதஞ்சலி சாஸ்திரியையும் தந்து பெருமை பெற்று விட்டது.

இந்தியாவில் உள்ள உயர் நீதிமன்றங்களில் முதன்முதலில் அட்வகேட் செனரலாக வந்தவர் திரு. பாஸ்யம் அய்யங்கார் தான். அவரைப் போன்ற முன்னோடிகளைத் தந்தது இந்த உயர் நீதிமன்றமே. அவர்கள் ஆங்கில வழக்கறிஞர்கள் முதலேற்பு வழக்குகளில் (Original Side) பெற்றிருந்த ஏக போக ஆதிக்கத்தைத் தகர்த்துத் தாங்களே அங்கும் தகுந்த இடத்தைப்பெற முடியும் என்று காட்டியுள்ளனர். அந்தக் காலத்தில் உயர் நீதி மன்ற நீதிபதியாக வருவதே ஒவ்வொரு வழக்கறிஞரும் ஏற்றுக்கொண்ட குறிக்கோளாக இருந்தது. (Summum bonum) உயர் நீதிமன்ற நீதிபதியின் மாதச்சம்பளம் ரூ. 4000/- இது இன்றைய சம்பளத்தின் பத்துமடங்கு மதிப்புப் பெற்றிருந்தது. 70 ஆண்டுகளாக அதே சம்பளம் நீடித்திருந்தது. ஆனால் இந்திய அரசியல் சட்டம் அமுலுக்கு வந்தபின் அந்த சம்பளம் குறைக்கப்பட்டு விட்டது. திறமையானவர்கள் உயர் நீதி மன்றத்தை அணி செய்ய சம்பளத்தை உயர்த்துவதுடன் ஓய்வுபெறும் வயதையும் 65 ஆகவும் ஆக்குவது தேவையானதாகும். வருமான வரிக்கான பிடித்தம் போக 50 ஆண்டுகளுக்கு முன் கொடுத்து வந்த சம்பளத்தில் 1/12 பாகம் தான் இன்றைய சம்பளத்தில் மிச்சம் ஆகின்றது. அதே போல் இன்றைய சம்பளத்தில் வருவானவரி போகக் கிடைப்பது ஆங்கிலேயர் இந்நாட்டை விட்டு அகலும் போது கிடைத்த சம்பளத்தில் 1/6 பாகம் தான் என்பதையும் தெரிந்துகொள்வோம். இதையெல்லாம் வெளிப்படையாகச் சொல்வதற்குக்கான காரணம் இங்கனம் குறைந்த சம்பளத்தின் விளைவாக உயர்

நீதிமன்ற நீதிபதிகள், ஓய்வு பெரும் தருணத்தில் ஆட்சியில் உள்ளவர்களின் தயவால் வருமானம் கிடைக்கும் வேறு பதவி களை நாட வேண்டி நேரிடுகின்றது. நீதித் துறையின் சுதந் திரத்தை அத்தகைய போக்குப் பெரிதும் பாதிக்கின்றது. என்பதையும் நாம் உணரலாம்.

அமெரிக்க நாட்டில் மேல்மட்ட நீதிபதிகள் ஆயுட்காலம் முழுதும் பதவி வகிக்கலாம். ஒருவேளை 65 அல்லது 70வயதில் 10 அல்லது 15 ஆண்டுகள் பணிபுரிந்த பின் ஓய்வு பெற விரும் பினால் பதவியில் உள்ளபோது கிடைத்த அதே மாதச் சம்ப ளத்தை உயிருள்ளவரையிலும் பெறுகின்றனர். அதே போல ஆங்கில நாட்டிலும் சர்ச்சில் பிரதம அமைச்சராக இருந்த போது உயர்நீதிமன்ற நீதிபதிகளின் சம்பளம் உயர்த்தப்பட் டுள்ளது. அவர்களின் பதவி ஓய்வு பெரும் வயது 75. சம்பளத் தில் 70% மாதப் பென்சனாகத் தரப்படுகின்றது. இவைகளை யெல்லாம் மனதில் கொண்டு நம் நாட்டில் நமது உயர்நீதிமன் றங்களில் பணிபுரியும் ந்திபதிகள் போதுமான வசதிகளையும், வாழ்க்கை நலன்களையும் பெற்று வாழவும், ஓய்வுக்குப் பின் பிறரின் தயவை எதிர்பார்க்காமல் இருக்கவும் அவர்கள் ஓய்வு பெரும் வயதையும், சம்பளத்தையும், பென்சனையும் பெருமள வுக்கு உயர்த்துவதே தகுந்த பரிகாரமாகும்.

எ. "மாநில ஆளுநர் மேதி உரை"

நூற்றாண்டின் விழாவின் போது நீதித்துறை ஆற்றும் பெரும்பங்கை எண்ணுவதுடன் சுதந்திரம், நடுநிலை போன்ற சிறந்த மரபுகளைக் கட்டிக்காத்துப் பெரும் சாதனைகள் புரி யும் நீதிபதிகளையும், வழக்கறிஞர்களையும் பாராட்டுவதும் நமது கடமையாகும். நாட்டு விடுதலைக்குப் பிறகு பொறுப்பு கள் வளர்ந்துள்ளன. அந்தப் பொறுப்புகளுக்கேற்ப இந்த உயர் நீதிமன்றம் கடந்த நூற்றாண்டு காலத்தில் கட்டிக்காத்துள்ள உயர்ந்த மரபுகளால் உந்தப்பட்டு இந்திய மண்ணில் முதல்தர மான நீதிமன்றமாக உயரவேண்டும், நமது உயர்நீதிமன்றம் நீதியில் நேர்மையும். சட்டத்தில் நுண்மாண் நுழைபுலமும், சுதந்திர உணர்வும், பெருந்தன்மையும்கொண்ட நீதிபதிகளால் தொடர்ந்து அணி செய்யப்பட்டு வருகின்றது. அவர்களை முன் மாதிரியாகக் கொண்டு இளம் தலைமுறையினர் நம்பிக் கையுடன் செயல்பட்டு தரத்தை மேலும் உயர்த்தவேண்டும்.

பாராளுமன்றத்திலும், மாநிலச் சட்டமன்றங்களிலும் வலுவான எதிர்க்கட்சிகள் இல்லாத நிலையில் நீதித்துறையின்

பணி வெகுவாக உயர்ந்துள்ளது. விழிப்புடனும் நடுநிலை நின்றும் ஆட்சியில்இருப்போரின் ஆணைகளை நீதிமுறை மேலாய்வு செய்வது இன்றியமையாததாகும். தனிமனிதர் சுதந்தரத்துக்கும் சோசியலிசப் பொருளாதார மேம்பாட்டுக்கும் இடையே ஏற்படும் மோதலைத் தவிர்த்துச் சரிக்கட்டுவது இன்றைய பெரிய அறை கூவலாகும். உயரிநீதிமன்ற உச்சநீதிமன்ற நீதிபதிகள் இந்த அறைகூவலைச் சமாளிக்க உதவ முன்வர வேண்டும். நமது உயர்நீதிமன்றம் ஏழை எளியவர்களுக்கு இலவச சட்ட உதவி அளிக்க அமெக்கஸ் குயுரே (Amicus Curiae) என்ற அமைப்பின் படி வழக்கறிஞர் பட்டியலைத் தயார் செய்துள்ளது பாராட்டுக் குறியதாகும். சென்னை வழக்கறிஞர்கள் விடுதலைப் போரின் போது மக்களுக்கு வழிகாட்டும் நாயகர்களாக இருந்தனர். அவர்கள் இந்திய சட்ட இயலை வளர்ப்பதிலும் முன்னணியில் நிற்பதைக் காணலாம். இந்திய நாட்டுக்குப் புகழ் பெற்ற நீதிபதிகளையும் வழக்கறிஞர்களையும் உயர்நீதிமன்றம் தருவதில் முன் நிற்கின்றது. இப்படி எதிலும் முன்னணியில் நிற்கும் இம்மாமன்றம் இம்மாநிலம் பெருமைப்படும்படி மக்களின் உரிமைகளையும் மாநில உரிமைகளையும் காத்து வளமான மக்கள் நல அரசைத் தோற்றுவிப்பதிலும் உரிய பங்கைச் செலுத்தி குடிமக்கள் அனைவரும் வளமாக வாழ வழிகாண முயலும் என உறுதியாக நம்புகின்றேன்.

ஏ. டாக்டர் சி.பி. இராமசாமி அய்யர்

1903ல் சென்னை உயர்நீதிமன்ற வக்கீலாகவும், 1923ல் வழக்கறிஞராகவும் பதிவு செய்து கொண்ட நான் 59 வருடங்களைத் தாண்டியிருக்கின்றேன். அதனால் தான் என்னவோ என்னை வழக்கறிஞர் சங்கத்தின் மூத்த உறுப்பினர் (Doyen) எனத் தலைமை நீதிபதி குறிப்பிட்டார். நீண்ட காலம் பணியாற்றியதால் சர். டி. முத்துசாமி அய்யரிடம் நெருங்கிப்பழகாவிட்டாலும் அவரை நேரிடையாகத் தெரிந்துவைத்திருந்தேன். அத்துடன் சென்னை நீதிவானில் பிரகாசித்த பல நீதிபதிகளையும் வழக்கறிஞர்களையும் நெருங்கித் தெரியும் வாய்ப்பும் கிடைத்தது. அவர்களிடம் நான் கண்ட குணங்கள் நேர்மை, சுதந்திர உணர்வு பெருந்தன்மை, பிறரை மதிப்பது என்பவையாகும்.

சில நூற்றாண்டுகளுக்கு முன் ஒரு இளைஞன் வழக்கறிஞர் தொழிலில் காலடி வைக்கும் போது ஆற்றல்மிக்க நீதிபதி ஒருவரிடம் கேள்வியொன்று கேட்டான். ''வழக்கறிஞர் தொழிலில் வெற்றியடைய வேண்டிய தேவைகள் எவை?'' விடை உடனே அவர் வாயிலிருந்து வந்தது. ''தேவை எதுவென்றால்

காளை போன்ற உடலும், கழுதை போன்ற பொறுமையுமே." அந்த நீதிபதி சொன்னது உண்மைதான். அத்துடன் துணிவும் தேவையெனச் சேர்த்துக் கொள்ளலாம். நீதிபதியும் சரி, வழக்கறிஞரும் சரி சில வேளைகளில் பொது இடங்களில் எழும் எதிர்ப்பையும் சமாளிக்க வேண்டிவரும். நான் உள்ளபடியே ஏதோ தவறு செய்துவிட்டேனோ என்ற எண்ணத்துடன் ஒன்றைக் குறிப்பிட விரும்புகின்றேன். உயர்நீதிமன்ற நீதிபதி பதவி எனக்கு ஒரு முறையல்ல பலமுறை வழங்கப்பட்டது. நான் அதை ஏற்றுக் கொள்ள இசையவில்லை. அப்பெரும் பதவியின் மேன்மையையும் கீர்த்தியையும் புரியாததால் இசைவு தரவில்லை என்று எண்ணவேண்டாம். அமைதியானதும் பெருந்தன்மை வாய்ந்ததுமான அந்த உயர்ந்த பதவியை ஏற்றுக் கொள்ள இடந் தராததின் காரணம் எனக்குள்ள தகுதி போதுமானதாக இல்லையென்பதும், எனது உள்ளத்தில் ஏற்பட்ட குறைபாடுகளுமாகும்.

சென்னை உயர்நீதிமன்றம் கட்டிக்காக்கின்ற பாரம்பரியம் மரபுகள் வேறு எந்த நீதிமன்றத்துக்கும் சளைத்ததல்ல. பாஷ்யம் அய்யங்கார். முத்துசாமி அய்யர், சுப்ரமண்ய அய்யர் ஆகியோரை சிறிது நேரம் நினைத்துப் பாருங்கள். முத்துசாமி அய்யர் அச்சமும் ஆர்வமும் நீக்கி சட்ட இயல் கோட்பாடுகளில் நிறைந்த புலமையும் பெற்றுத் திகழ்ந்தார். பாஷ்யம் அய்யங்கார் தளர்ச்சியடையாது வாதிடுவதில் வல்லவர். சட்டம் என்னும் நங்கையை முழுமையாகக்காதலித்து அவளது அன்பையும் அரவணைப்பையும் இடைவிடாதுபெற்றவர். ஒரு சமயத்தில் ஏர்டிலி நார்ட்டன் இவரைப் பார்த்து மார்லி எழுதிய சட்டப் புத்தகத்தைப் படித்துள்ளீரா என்ற கேட்ட போது அய்யங்கார் நார்ட்டன் பக்கம் திரும்பி அந்தப் புத்தகம் கடைசியாக வழங்கப் பட்டுள்ள தீர்ப்பைக் கொண்டுள்ளதா என்று கூறி நார்ட்டனையும் மடக்கினார். சட்டத்தில் புலமையும் முழுமையும் பெற சட்ட இலக்கியத்தையும் கடந்து ஆய்வு செய்து கொண்டிருந்தார். அய்யங்கார் அரசை ஆதரிப்பவர் என்று கருதப்படுபவர். ஒரு தடவை அவர் நீதிமன்ற வழக்கில் சான்றுரை பகர வேண்டி வந்தது. ''அய்யங்கார் அவர்களே நீங்கள் எப்போதும் அரசாங்கத்துடன் சேர்ந்து வாக்களித்து வருவது உண்மையல்லவா'' என்று கேள்வி எழுந்தது. அவர் கேள்வி கேட்டவரைப் பார்த்து ''இல்லை அது உண்மையல்ல அரசாங்கம் என்னுடன் சேர்ந்து எப்போதும் வாக்களித்து வருகின்றது'' என்றார். ஒரு சமயம் நமது மாநில ஆளுநர் அய்யங்காரிடம் மாநிலத்தில் எழுந்துள்ள முக்கியமான சட்ட சிக்கலை

பற்றி கலந்து ஆலோசிக்க விரும்பியதால் அவரை ஆளுநர் மாளிகைக்கு வரும்படி தாக்கீது அனுப்பப்பட்டது. அய்யங்கார் மறுத்து விட்டார். ''ஆளுநர் அரசு அலுவல் சம்பந்தமாக என்னிடம் ஆலோசனை கேட்க விரும்பினால் அவர் எனது மாளிகைக்கு வருவதே முறை. காரணம் அவர் ஒரு கட்சிக் காரர். நான் அவரது மாளிகைக்குப் போவது உசிதமல்ல''. முடிவில் ஆளுநரே அய்யங்காரின் மாளிகைக்குச் சென்று ஆலோசனைக் கேட்டார். அய்யங்காரின் மரபு இதுவாகும்.

அந்தக் காலத்தில் முதலேற்பு வழக்குகளை நடத்துகின்றவர்களுக்குப் போதிய மதிப்புத் தருவதில்லை. அவர்கள் உயர் நீதிபதியாக வரும் தகுதி பெற்றவர்களல்ல. என்ற எண்ணமும் நிலவி வந்தது. ஆனால் சி.வி. குமாரசாமி சாஸ்திரி இந்த எண்ணத்தை மாற்றினார். சென்னை உயர்நீதிமன்றத்தை அணி செய்த மிகப்பெரிய நீதிபதிகளில் ஒருவராக குமாரசாமி திகழ்ந்தார். சட்ட கோட்பாடுகளை விளக்குவதிலும் அடிப்படைக் கருத்துக்களைப் புரிந்துகொள்வதிலும் அவர் திறம் பெற்றிருந்தார். நானும் முதலேற்பு வழக்குகளை (original side) நடத்தியவன்தான். மூத்த உறுப்பினன் என்ற முறையில் இந்த மாநிலத்தில் சட்டத்தில் கூர்மையான மதியும், அச்சம்தவிர்த்த சுதந்தர உணர்வும், சட்டப் பகுத்தறிவும் பெருமளவுக்கு உயர்ந்துள்ளது என்பதற்கு ஒரு சின்னமாக இருக்கின்றேன்.

ஒரு காலத்தில் பொது வாழ்வில் உச்ச நிலையைப் பெற்றிருந்த வழக்கறிஞர்கள் இன்று தாழ்ந்து விட்டனரே என ஆயாசப்படத் தேவையில்லை. நமக்குக் கிடைத்திருக்கும் அரசியல் அமைப்புச்சட்டத்தின் கீழ் இயங்கும் வழக்கறிஞர்கள் மீண்டும் அதே நிலைக்கு வரமுடியும். அந்த நிலைக்கு வர நீதிபதிகளும் வழக்கறிஞர்களும் கூட்டாக ஒருமித்த கருத்துடன் செயல் படுவது நல்லது. இரு சாரரும் கூட்டாக செயல்படுவதன் மூலம் இன்னொரு சிக்கலுக்கும் வழிகாண இயலும். நீதித்துறைக்கும் நிர்வாகத்துறைக்கும், சட்டமன்றங்களுக்கும் இடையே சிக்கல் களையும் இருசாராரும் ஒன்றுபட்டால் தீர்க்கலாம்.

ஐ. டாக்டர் பி.வி. இராசமன்னார்

வழக்கறிஞர். நீதிபதி, தலைமை நீதிபதி என்ற முறையில் உயர்நீதிமன்றத்தின் 100 ஆண்டு காலத்தில் குறைந்தது 1/3 பாகம் எனக்குத் தொடர்புண்டு. இந்த உயர்நீதிமன்றத்துக்கு சில தனித்த மரபுகள் உண்டு. சட்டப் புலமை, நுண்மாண் நுழைபுலம் குறிப்பிடத்தக்க கூர்மையான மதி, முன்னைய

வழக்குகளின் தீர்ப்புகளைப் பற்றிய விரிந்த முழுமையான அறிவு ஆகியவைகளே அவைகள். அத்துடன் மற்ற உயர்நீதி மன்றங்களுடன் சேர்ந்து, நமது உயர்நீதிமன்றம், நியாயம், நடுவுநிலை, சுதந்தர உணர்வு, ஒரு சார்பின்மை ஆகிய மரபு களையும் நிறைந்த அளவில் பெற்றுள்ளது எனலாம்.

நீதிபதிகளிடையே பல்வேறு கருத்துக் கொண்டவர்கள் இருக்கலாம். சிக்கல்களை அணுகும் முறையிலும் உள்ளப் பாங்கிலும், நடத்தும் முறையிலும் சொற்களைக் கையாளும் முறையிலும் வேறுபாடுகள் தோன்றவே செய்யும். அமெரிக்க நாட்டு நீதிபதி ஒருவர் கூறுகின்ற படி ஒரு நீதிபதி வரலாற்று அடிப் படையில் சிக்கலை அணுகக் கூடும். மற்றொருவர் தத்துவ ஞானப்படி அதையே நோக்குவார். இன்னொருவர் சமுதாய நலன் என்ற கோணத்தில் பார்ப்பவராக இருக்கலாம். இன்னும் சிலர் பரந்த எண்ணத்திலும் சிலர் குறுகிய எண்ணத்திலும் பார்ப்பதும் உண்டு. அது போன்று நமது நீதிபதிகளில் சிலர் இந்து ரிவர்சனர்களை வெறுப்புடன் நோக்குவதுண்டு. வாழ்க்கைப் பொருளுதவி கேட்டு நீதிமன் றம் வருபவர்களிடம் பாசம் காட்டும் நீதிபதிகளும் உண்டு. இன்னும்சில நீதிபதிகள் குத்தகைதாரர்களிடத்திலும், மற்றும் சிலர் நிலச் சுவான்தாரர்களிடத்திலும், சிலர் உழைப்பாளி களிடத்திலும், மற்றும் சிலர் நிர்வாகத்தினரிடத்திலும் பரிவு காட்டுவதும் உண்டு. சில நீதிபதிகள் சமுதாய சீர்திருத்தத்தில் நம்பிக்கை கொண்டவர்களாக இருப்பர். சில நீதிபதிகள் மாற் றத்தை விரும்பாதவர்களாகவும் இருப்பர். ஆனால் மேலே சொன்ன அத்துனை நீதிபதிகளும் நீதிவழங்குவதில் தம்மிடம் உள்ள கருத்துக்கள் தடை செய்யாமல் பார்த்துக் கொள்வர். அவர்கள் அந்த முறையில் இந்த உயர்நீதி மன்றத்தின் உயர்வுக் குரிய பங்கைச் செலுத்தியுள்ளனர் என்பது பெருமைக்குரிய தொன்றாகும். உயர்நீதி மன்றத்தின் மரபுகளை இந்திய, ஆங் கில வழக்கறிஞர்கள், இந்திய நீதிபதிகள், ஆங்கில நீதபதிகள், கீழமை நீதிமன்றங்களிலிருந்து உயர்த்தப்பட்ட நீதிபதிகள் ஆகிய அனைவரும் சேர்ந்து உருவாக்கியது உண்மை. ஆனால் இந்த நீதிமன்றத்துக்கே உரித்தான ஆழ்ந்த புலமை பரந்த ஆராய்ச்சித்திறன், நிறைவான தீர்ப்புகள் நமது வழக்கறிஞர் களிலிருந்து நியமிக்கப்பட்ட நீதிபதிகளையே சாரும் என்பதில் அய்யமில்லை, ஒரே விதிவிலக்கு மிகப்பெரிய நீதிபதியாகத் திகழ்ந்த முத்துசாமி அய்யர்தான். அவர் சிறுவழக்கு நீதிமன் றத்திலிருந்து நியமிக்கப்பட்டவர். பாஷ்ய அய்யங்காருக்கு

இணையாக கூர்த்தமதியில் சென்னையில்மட்டுமின்றி இந்தியத் துணைக் கண்டற்திலும் யாருமில்லை என்று சொல்லுமளவுக்கு அவர் பெரிய வழக்கறிஞராக உயர்ந்திருந்தார். அவரைப் போன்று சுப்பிரமண்ய அய்யர், கிருஷ்ணசாமிஅய்யர், சுந்தரம் அய்யர், சிவசாமி அய்யர். கே. சீனிவாச அய்யங்கார், அல்லாடி கிருஷ்ணசாமி அய்யர், எஸ். சீனிவாச அய்யங்கார், எஸ். வரதாச்சாரியார், சி.பி. இராமசாமி அய்யர், பதஞ்சலி சாஸ்திரி, வி.எல். எத்திராசு, இராசா அய்யர், கே. பாஷ்யம் போன்றபெருமக்களும் பெருமை சேர்த்தியுள்ளனர்.

உச்சநீதிமன்றமும், உயர்நீதிமன்றங்களும் மக்கள் உரிமைகளைக்காக்கும் காவலர்களாகக் கருதப்படுகின்றனர். அரசியல் சட்டம் பிரிவுகள் 32&226 ஆகியவைகளின் கீழ் அடிப்படை உரிமைகள் காக்கும் அதிகாரம் கொடுக்கப்பட்டிருப்பது உண்மைதான். ஆனால் நடைமுறையில் சில கட்டுப்பாடுகள் இருக்கின்றன. பாதிக்கப்பட்டவர்கள் நீதிமன்றத்தை அணுகினால் தான் அந்த அதிகாரத்தை நீதிமன்றங்கள் பயன்படுத்த இயலும். நிர்வாகத் துறையினர் செய்யும் தவறுகளையோ, சட்டமன்றங்கள் உருவாக்கும் அரசியல் சட்டத்துக்கு முரணான சட்டங்களையோ பொதுப்படையாகக் கண்காணிக்கும் அதிகாரம் நீதிமன்றங்களுக்கில்லையென்பது உணரப்படவேண்டும். மேலும் நீதிமன்றங்களின் தீர்ப்புகளே பயனற்றுப்போகும்படி வேறு சட்டங்களை சட்டமன்றங்களும் பாராளுமன்றமும் உருவாக்க இயலும். அத்துடன் அரசியல் சட்டத் திருத்தத்தின் மூலமும் நீதிமன்றங்களின் தீர்ப்பு பயனற்றதாக்க முடியும். ஆகவே மக்களிடையே விழிப்பு இருந்தாலொழிய உச்சநீதிமன்றமோ உயர்நீதிமன்றங்களோ மக்களின் அடிப்படை உரிமைகளை முழுவதுமாகக் காப்பற்றி விடமுடியாது என முடித்தார்.

விழாநாயகர்களது உரைகள் மிகச்சிறப்பாக இருந்தன. நமது நெஞ்சையள்ளும் உயர்நீதிமன்றத்தின் மேம்பட்ட வரலாற்றைத் தொட்டுக்காட்டிய அந்த உரைகள் நமது நெஞ்சங்களைக் கொள்ளை கொண்டன என்றால் மிகையல்ல; முற்றிலும் உண்மையாகும்.

"உயர்ந்த சட்ட நெறிகள் காட்டும் திருக்குறளும்
நம் வரலாற்றின் சிறப்புக் காட்டும் சங்கநூல்களும்
நம் நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரமும்
பசி போக்கும் பாத்திரம் ஏந்திய மணிமேகலையும்
இனிய சுவை ஊட்டும் கம்பன் காவியமும்
சமநீதி வழங்கும் தமிழ்நாட்டின் உயர்நீதிமன்றமும்
ஒரே உயர்நோக்குடையன வெ எண்ணி உவகை
கொள்வோம்!"

——

"நீதிபதிகளின் நினைவுகள் நீங்குவதில்லை" I

சென்னை உயர்நீதிமன்றத்தில் நீதிபதியாகப் பணி செய்வது மிகவும் பெருமைக் குரியதாகவும் மதிப்பு மிகுந்ததாகவும் பாராட்டுதலுக்கும், புகழுக்கும் உரியதாகவும் எல்லாவற்றுக்கும் மேலாக ஒரு உயர்ந்த மேம்பட்ட பதவியை வகிப்பதாகவும் கருதப்படுகின்றது; அந்தக் கருத்து இன்று நேற்றுத் தோன்றியதல்ல. உயர்நீதிமன்றம் தோற்றமெடுத்த காலத்திலிருந்தே தொடர்ந்து இருந்து வருகின்ற கருத்தெனலாம். வழக்கறிஞர் தொழிலில் ஈடுபட்டு அதில் வெற்றியைக் குவிப்பவர் தொழிலில் உச்சியை அடைந்து அதன் முடிவாகப் பெற விரும்புவது மாண்புமிகு நீதிபதி பதவிதான் என்பது சென்னை வழக்கறிஞர் சங்க உறுப்பினர்கள் ஏற்றுக்கொண்ட தாரக மந்திரமாகும். பழைய காலத்தில் மன்னர்கள் போர்க்களத்தில் நின்று சிறிதும் தளர்ச்சியடையாமல் கடுமையாகப் போரிட்டு வென்று எதிரிகள் நாட்டைப் பிடித்து அங்கும் தம் தலையில் மணி முடி தரித்துக் கொள்வதைத் தமக்கு வந்தடைந்த கீர்த்தி என நினைத்து நிறைவடைவதுண்டு. அதுபோன்ற வழக்கறிஞரும் தொழிலைத் திறம்பட நடத்தி வெற்றிகளைக் குவித்து உயர்நீதிமன்றத்தில் இடம் பிடித்து முடிசூட்டிக்கொள்வதை வாழ்வின் குறிக்கோள் என எண்ணி வருகின்றனர். முன்னாள் தலைமை நீதிபதி இராமச்சந்திர அய்யர் அந்தஎண்ணத்துக்குக் காரணம் சென்னை உயர்நீதிமன்ற நீதிபதியைச் சுற்றி எழுந்துள்ள கீர்த்தியும் மரபுமே எனக் கூறியுள்ளார். (Due to the halo of prestige and tradition that inherently surrounds a seat upon the Bench of the Madras High Court)

உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி புவநேசுவர் பிரசாத் சின்கா அவர்களும் அதையே மிக அழுத்தமாகச் சொல்லியுள்ளார். நமது நாட்டில் உயர்நீதிமன்றங்கள் தோன்றிய பிறகு தொழில் நடத்தும் வழக்கறிஞர்களின் நியாயமான வேட்கை என்னவென்றால் தமது வாதத் திறமைக்கும் நேர்மையான குணநலனுக்கும் கிடைக்க வேண்டிய பரிசு உயர்நீதிமன்றத்தில் நீதிபதியாக அமர்வதே என்பதாகும். என்றும் அதுவே தமது வழக்கறிஞர்தொழிலில் ஈட்டும்பெரும் பொருளையும் தியாகம்

செய்யும் உள்ளத்துக்குக் கிடைக்கும் ஆறுதல் ஆகும் என்றும் சின்கா அவர்கள் குறிப்பிடுகின்றார். டாக்டர் சி.பி. இராமசாமி அய்யர் சென்னை உயர்நீதிமன்ற நீதிபதியின் உயர்வைக் குறிப்பிடும்போது ''அது மேன்மையான. அமைதியான, மதிப்பு மிக்க பதவி'' என வியந்து போற்றுகின்றார். (That exalted, peaceful, and dignified position)

நூறு ஆண்டுகளுக்கும் மேலாக நமது உயர்நீதிமன்றம் ஒளி மிகுந்த வரலாறைப் படைத்துக் கொண்டிருப்பதைப் போல் உயர்நீதிமன்றத்தில் அமர்ந்துள்ள ஒவ்வொரு நீதிபதியும் தனக்கென ஒரு வரலாற்றை உருவாக்குவதையும் காணலாம். அந்த வரலாற்றில் சுவைமிக்க அனுபவங்கள், நீங்காத நினைவுகள். போன்றவை நிறைந்து கிடக்கின்றன.

6000 மைலுக்கும் அப்பால் ஆங்கில நாட்டில் இருந்த மிகுந்த திறமையையும் நேர்மையையும் வாய்ந்த பல வழக்கறிஞர்கள் நமது உயர்நீதிமன்றத்தில் நீதிபதிகளாகப் பணியாற்றியுள்ளனர். தொடக்க காலத்தில் கிழக்கிந்திய கம்பெனியால் நடத்தப்பட்டு வந்த நீதிமன்றங்களில் நீதிபதியாகப் பணி செய்தவர்கள் சட்டத்தில் புலமை பெற்றவர்கள் அல்ல. உலக அனுபவம் போதுமென்ற நிலையே இருந்தது. ஆனால் 1683ல் இரண்டாம் சார்லசு மன்னனால் வழங்கப்பட்ட பட்டயத்தின் படி நீதிபதியாகப் பணியாற்றுகின்றவருக்குச் சட்டத்தில் புலமை தேவை என வலியுறுத்தப்பட்டது. அப்படி புலமை பெற்று ஆங்கில நாட்டிலிருந்து முதல் முதலாக சென்னை மாநகரில் காலடி வைத்தவர் சர்.சான்பிரிக்சு என்ற வழக்கறிஞராகும். அவர் நீதிபதியாகப் பணியாற்ற அமர்த்தப்பட்டாலும், அவர் வகித்தபதவியின் பெயர் ''நீதிபதி-வழக்கறிஞர்'' என்பதாகும். (Judge—Advocate) இன்று நமக்கு இது புதிராகத் தோணலாம். அன்று சட்டத்தில் புலமை பெற்ற வழக்கறிஞர்கள் இல்லாத காலத்தில் நீதிபதியாக பணியாற்றுகின்றவர் புலமை பெற்ற வழக்கறிஞர் வாதாட இல்லாத குறையையும் தீர்க்க வேண்டி வந்ததால் ''நீதிபதி—வழக்கறிஞர்'' என்ற இரு பெயரையும் பெற்றிருப்பார் என்றே நாம் கருத வேண்டியிருக்கின்றது. அடுத்து சர்.தாமஸ் ஆண்டிரூ ஸ்டிரேஞ்சு என்ற ஆங்கில பாரிஸ்டர் 1800 டிசம்பர் 26ல் வழங்கப்பட்ட பட்டயத்தின் படி சென்னையில் உருவாக்கப்பட்ட உச்சநீதிமன்றத்தின் முதல் தலைமை நீதிபதியாகப் பணிபுரிந்தார். இவர்களைத் தொடர்ந்து சென்னை உயர்நீதிமன்றத்தில் வந்து பணியாற்றிய ஆங்கில நீதிபதிகளின் பெயர்

கள் ஒரு நீண்ட பட்டியலாக வளரும். அவர்களின் அனுபவங்கள், நினைவுகள் பணிபுரிந்த காலத்தில் நிகழ்ந்த நிகழ்ச்சிகள் படிக்கப் படிக்கச் சுவையூட்டும அத்தியாயமாகத் திகழ்கின்றது.

"பண்பும், அன்பும், உதவியும்"
நீதிபதி சர். பெடரிக் செண்டில்

1936 லிருந்து 1941 வரையிலும் சென்னை உயர்நீதிமன்ற நீதிபதியாகவும்' 1947 லிருந்து 1948 வரை தலைமை நீதிபதியாகவும் பணியாற்றிய சர். பெடரிக் செண்டில் சென்னையில் நீதிபதியாகத் தான் கழித்த காலம் தனது வாழ்க்கையில் மிக மகிழ்ச்சி கரமான காலம் என்றும், பதவியிலிருந்து விலகிய போது வருத்தம் அடைந்ததாகவும் கூறுகின்றார். அவர் வருத்தம் அடைந்ததுக்குக் காரணம் தனக்குக் கிடைத்த வசதியும் வாய்ப்பும் போய்விட்டது என்பதால் அல்ல. சென்னை உயர் நீதிமன்றத்தில் நீதிபதியாகப் பணிபுரியும் வாய்ப்பு நீங்கி விட்டதே என்பதே வருத்தம் அடைந்தற்குத் தலையான காரணமாகும். இன்னொரு காரணமும் உண்டு. அவர் நீதிபதியாகப் பணியாற்றியது போது சக நீதிபதிகளும், வழக்கறிஞர்களும், நீதிமன்ற அலுவலர்களும் அவரிடம் காட்டிய பெரும் மதிப்பும் அன்பும், நல்ல உதவியும் பிரிய முடியாத அளவுக்கு ஒரு பிணைப்பை ஏற்படுத்தி விட்டதும் பிரியநேரிட்டபோது வருத்தத்தை தந்தது போலும்.

வேறொரு மாநிலத்தைச் சேர்ந்த ஒரு பெரிய வழக்கறிஞர் சர்பெடரிக்கைச் சந்தித்தபோது "சென்னை உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புகளை நாங்கள் பெரிதாகக் கருதுகின்றோம். எங்கள் மாநிலத்தில் எழும் சிக்கலான வழக்குகளுக்குச் சரியான தீர்வுகாண சென்னை உயர் நீதிமன்றத் தீர்ப்புகளையே நாடுகின்றோம்" என்று கூறினார். இது நமது உயர் நீதிமன்றத்துக்கு அளிக்கப்பட்ட புகளுரை என்பதில்அய்யமில்லை.

"மகிழ்ச்சிக்குரிய 27 ஆண்டுகள்"
நீதிபதி சர். ஓட்கர்சு

1921 லிருந்து 1930 வரையிலும் சென்னை உயர்நீதிமன்ற நீதிபதியாகப் பணியாற்றி சர். ஓட்கர்சு 1902ல் சென்னைச்

சட்டக் கல்லூரியில் பேராசியராகப் பணியாற்றியவர். இவர் நீதிபதியாகப் பதவி ஏற்ற காலை உயர் நீதிமன்றத்தில் நான்கு அய்ரோப்பிய நீதிபதிகளும், ஒரு இந்திய நீதிபதியும் இருந்தனர். அந்த இந்திய நீதிபதி சர். எஸ். சுப்ரமண்ய அய்யராவர். ஆறாவது நீதிபதியாக திறமையுடனும் வலிவுடனும் வழக்காடிப் பெரும் புகழ் சேர்த்த பாஷ்யம் அய்யங்கார் நியமிக்கப் பட்டார். எல்லோருக்கும் கிடைக்காத ஒரு சலுகை பாஷ்யம் அய்யங்காருக்குக் கிடைத்தது என நீதிபதி ஓட்கர்சு நினைவு கூறுகின்றார். நீதிபதிப் பதவியிலிருந்து ஓய்வு பெற்ற அய்யங் காரை மீண்டும் வழக்கறிஞர் பணிநடத்த அரசு அனுமதித்ததே அந்த சலுகையாகும். ஓட்கர்சின் நண்பர் சதாசிவ அய்யர் இரக்கமும் அன்பு மிகுந்த நீதிபதி. அவர் பெரிய டென்னிசு ஆட்டக்காரர். அவரது இன்னொரு நண்பர் நீதிபதி ராமேசம் கணக்கில் ஒரு மேதை. அவர் தனது வாதங்களையெல்லாம் ஒரு வாய்ப்பாடுக்குள் அடக்கி அதிலிருந்து யாரும் தப்பிக்காமல் பார்த்துக்கொள்ளும் திறம் படைத்தவர்.

குமாரசாமி சாஸ்திரியார் சென்னை நகர சிவில்நீதிமன்றத்தில் நீதிபதியாக இருந்தார். அவரது அளப்பரிய ஆற்றல் கண்டுபிடிக்கப்பட்டு உயர் நீதிமன்ற நீதிபதியாக ஆக்கப் பட்டார். நீதிபதி சங்கரன் நாயர், குறிப்பிடத்தக்க நீதிபதி. அவரது உறவினர் சர். சி. மாதவன் நாயர் சென்னை உயர் நீதிமன்றத்தில் நீதிபதியாக இருந்தார். மாதவன் நாயர் பின்னர் பிரிவு கவுன்சில் நீதிபதியாகவும் உயர்ந்தார். நீதிபதி ஓட்கர்சு மாதவன் நாயரை இலண்டனில் பல தடவை சந்தித் துள்ளார். இருவருக்கிடையே நட்பு மலர்ந்தது. நீண்ட நாளாக இருவரும் கடிதப் போக்குவரத்தும் வைத்துக் கொண்டனர்.

ஓட்கர்சு அப்போது நீதிபதியாக இருந்த இஸ்லாமிய நீதி பதி சர். அப்துர் ரகீம் ஓய்வு பெற்றுக்காலியான இடத்திலே நீதி பதியாக அமர்ந்தார். அப்துர் ரகீம் கல்கத்தாவில் இயங்கிய சட்ட மன்றத்துக்கு சபாநாயகராக நியமிக்கப்பட்டார். நீதிபதிகள் கிருஷ்ணன், தேவதாசு, வெங்கட்ட சுப்பாராவ் போன்ற இந்திய நீகிபதிகளும், சர். சான் வாலிசு சர். வில்லி யம் அய்லிங், ஆர்தர் கின்வென் போன்ற அய்ரோப்பிய நீதிபதி களும் நீதிபதி ஓட்காசின் நெருங்கிய நண்பர்கள்.

ஓட்கர்சு முதன் முதலில் சென்னை வந்தபோது நார்ட்டன் என்ற வழக்கறிஞர் பெயர் பிரபலமாக விளங்கியது. அவர் ஒரு

வலிமை வாய்ந்த வழக்கறிஞர். வாதத் திறமை கொண்டவர். வழக்குகள் அவரிடம் குவிந்து கிடந்தன. ஆனால் ஏனோ அவர் சென்னையை விட்டு கல்கத்தா சென்று விட்டார். அவர் சென்னையை விட்டு நீங்கியதால் நீயுசென்டுகிராண்ட் வழக்கறிஞர் தொழிலில் பிரபலமானார். சிறப்பாக கிரிமினல் வழக்குகளில் தனக்கென ஒரு பெயரை நிலை நாட்டினார். ஒட்கர்சின் நண்பர்களில் குறிப்பிடத்தக்க வழக்கறிஞர்கள் டி. இரங்காச்சாரியார், அல்லாடி கிருஷ்ணசாமி அய்யர் ஆகியோர். அல்லாடி அவர்களிடத்தில் நிறைய வழக்குகள் இருந்தன. எல்லோரும் விரும்பத்தகுந்த உணர்வுகளைப் பெற்றிருந்தார் அல்லாடி. சி.பி. இராமசாமி அய்யர் அல்லாடி யுடன் ஒப்பாக வைத்து எண்ணத்தக்கவர். ஒட்கர்சு வழக்கறி ஞராகப் பணியாற்றிய போது அவரும் சி.பி. இராமசாமியும் பல வழக்குகளில் எதிர் எதிராக நின்று சட்டப்போர் நிகழ்த்தி யுள்ளனர். சட்டப் போர்க்களத்தில் இருவரும் வாதம் என்னும் கருவியால் கடுமையாகத் தாக்கிக் கொண்டாலும், களத்தை விட்டு நீங்கியதும் நண்பர்கள், வெப்பத்தை மறந்து புன் முறுவலை பரிமாறிக்கொள்வர், அப்போதுபின்னர் சென்னை மாநிலத்தின் முதல் அமைச்சராக வந்த பிரகாசமும் வழக்கறி ஞராகப் பணியாற்றினார். சென்னையில் தான் வசித்த 27 ஆண்டுகள் தனது நீண்ட வாழ்க்கையில் மிக மகிழ்ச்சி தந்த ஆண்டுகள் என ஒட்கர்சு பெருமிதத்துடன் குறிப்பிடுகின்றார்.

'இந்திய மண்ணில் ஆங்கில நாட்டைக்கண்டேன்' நீதிபதி செ.பி. எட்டி

ஆங்கில நாட்டில் வழக்கறிஞராகப் பணி புரிந்து 48 வய தடைந்த எட்டி 1929 சென்னை உயர் நீதிமன்ற நீதிபதியாக நியமித்த ஆணையைக் கண்ணுற்றபோது கடல் கடந்துசென்று வீரமும் விவேகமும் நிறைந்த துணிச்சலான செயலைச் செய்ய வேண்டிய பணி என நினைத்துககொண்டார். வீரச்செயலைச் செய்ய 50 வயதை நெருங்குபவர் தயங்கினாலும் இந்திய நாட்டின் நீலவானமும், குழுமையான இயற்கைக் காட்சிகளும் எட்டியைக் கவர்ந்தன.

1920ல் இலண்டனில் வழக்கறிஞர்களை உருவாக்கும் நடுக்கோயில் மன்றத்தில் நிகழ்ந்த ஒரு காட்சியே இந்திய நாட்டின் மீது எட்டிக்கு ஆர்வத்தை ஊட்டியது. இரவழைப்பு (Call night) என்ற விழா நடந்தது. ஒரு இளைய பாரிஸ்டர்

வழக்கறிஞர் தொழிலைச் செய்யப் பதிவு செய்யுமுன் முன்னோடியாக இரவழைப்பு என்ற விழாவை நடத்துவது வழக்கம். ஒரு ஆங்கில இளைய பாரிஸ்டர் அந்த விழாவுக்கு ஏற்பாடு செய்திருந்தார். எட்டியும் அந்த விழாவில் கலந்துகொண்டு ஆங்கில இளைய பாரிஸ்டருக்குத் தனது நல்வாழ்த்துக்களைக் கூறி பிடித்திருந்த தனது டம்ளரை அவரது டம்ளருடன் ஒன்று சேர்த்திய பிறகு அருந்த முற்பட்டார்.

எட்டி அந்தச் சமயத்தில் ஒன்றைக் கவனித்தார். அடுத்த அறையில் ஒரு இந்திய இளைய பாரிஸ்டர் அதே போன்ற விழாவை நடத்திக்கொண்டிருந்தார். எட்டி அவரைப் பார்த்ததும் அதே டம்ளரை உயர்த்தி.

"இப்போது அடுத்த அறையில் உள்ள நமது நண்பருக்கும் நமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்" என்றார், எல்லோரும் எழுந்து நின்று தமது டம்ளர்களை உயர்த்தி இந்திய பாரிஸ்டருக்கும் ஆசியையும் நல்வாழ்த்துக் களையும் கூறினர்.

அன்று இரவு விருந்துவைபவம் முடிந்து அனைவரும் கலைந்து சென்ற பின்னர் அந்த இந்திய இளைய பாரிஸ்டர் எட்டியிடம் அமைதியாக வந்து உணர்ச்சி பொங்க

கடந்த மூன்று ஆண்டுகளாக இந்த நடுக்கோயில் மன்றத்தில் (Middle temple Hall) தொடர்ந்து இருந்து வருகின்றேன் என்பதை நீங்கள் அறிவீர்கள். என்னிடம் அன்புகாட்டி இனிய வார்த்தைகளைக் கூறியவர் நீங்கள் தான்" என்று பகர்ந்தார். "ஆங்கிலேயர் உங்களைத் தனிமைப்படுத்துவதைத் தவறாகக்கருத வேண்டாம். உங்களுக்கு நல்வாழ்த்துக் கூறுவதில் மற்றவரும்பங்குகொண்டதைக்கண்டோம்அல்லவா" என்று ஆறுதல் கூறினார் எட்டி. இந்த மறக்க இயலாத நிகழ்ச்சியைத் தனக்கேற்பட்ட பாடமாகக் கொண்டு எட்டி சென்னையில் காலடி வைத்தார்.

சென்னை உயர் நீதி மன்றத் தலைமை நீதிபதி சர். கூட்ஸ் டிராட்டர் இங்கிலாந்து நாட்டை நோக்கிக் கப்பலில் சென்று கொண்டிருந்தபோது 1929ம் ஆண்டில் நடுக் கடலில் மரணம் அடைந்தார். அவரது இடத்தை நீதிபதி சர். ஓவன் பீஸ்லி நிரப்பினார். ஓவன்பீஸ்லி காலி செய்த இடத்தை நிரப்பவே எட்டி நியமிக்கப்பட்டிருந்தார். எட்டி தாய் நாட்டை விட்டு

சென்னைக்கு தனது மனைவியுடன் புறப்பட்டுச் சிறிது தூரம் வந்த போது அவருடைய மனைவி வருத்தத்துடன் சொன்னார் "நமது நாட்டில் ஒய்யாரமாக ஓடிக்கொண்டிருந்த நமது வாழ்க்கைப் படகை தீயிட்டுக் கொளுத்தி விட்டோமே, அன்பரே"

"கண்ணே, கலங்காதே. நமது வாழ்க்கைப் படகு எரிய வில்லை. என்றைக்குத் திரும்பிவந்தாலும் அதில் ஏறி ஒய்யார மாகப் பவனி வரலாம்" என்று தனது மனைவியிடம் ஆறுதல் மொழிகளைக் குவித்தார் எட்டி.

சென்னை உயர்நீதிமன்றத்தில் முதலில் தலைமை நீதிபதி பீஸ்லியுடன் சேர்ந்து குற்றவியில் மேன்முறையீடுகளைக் கவ னித்தார் எட்டி. ஆங்கில நாட்டு நீதிக் கோட்பாடுகளுடன் இந்திய மண்ணில் விளைந்திருந்த நீதிக்கொள்கைகளையும் இணைத்து கிரிமினல் வழக்குகளில் தீர்ப்பு வழங்கும் வாய்ப்புத் தனக்குக்கிடைத்ததை எட்டிபெருமையாக் குறிப்பிடுகின்றார். கிரிமினல் வழக்குகளில் புலன் விசாரணை செய்யும் காவல் துறை அதிகாரிகளின் சான்றுரைக்கு இங்கு ஆங்கிலநாட்டில் போல் போதுமான மதிப்புக் கொடுப்பதில்லை என்பதை நீதி பதி எட்டி கண்டார். அதற்குக் காரணம் இல்லாமல் இல்லை. புலன் விசாரணையில் பல தவறுகள், ஓட்டை ஓடிசல்கள் இங்கு ஏற்படுகின்றன. புலன் விசாரணை மேற்கொள்ளும் காவல் துறை இயந்திரமே இந்த நிலைக்குப் பொருப்பாளியாகும்.

நீதிபதி எட்டி சிவில் வழக்குகள் பலவற்றிலும் சட்டத்தை மாத்திரம் கவனியாது நியாயம், நேர்மை அல்லது நடுநிலை, நெஞ்சம் கோணாமை (Justice. Equity and good censcience) ஆகிய மேம்பட்ட கொள்கைகளைக் கேற்பத் தீர்ப்புகள் வழங் கியுள்ளார்.

கண்ணம்மாபாய் × நாராயணசா என்ற வழக்கில் அவர் தந்த தீர்ப்பு உரைகல்லாகத் திகழ்கின்றது. எதிர்வாதிகள் தனது கற்புக்குக் களங்கம் கற்பித்து விளம்பரம் தந்ததால் தனக்கு சமுதாயத்தில் அவமதிப்பு ஏற்பட்டது என நட்டஈடு கோரி கண்ணம்மாள் அவதூறு வழக்குத் தொடர்ந்தாள். அவ தூறு வழக்கு எடுபடாது என எதிர்வாதிகள் வழக்காடினர். ஆங்கில நாட்டுப் பொதுச்சட்டத்தின்படி (Common law) பெண் கள் தொடரும் அவதூறு வழக்குகளில் தனித்துப் பண நட்டம் (Special damage) அவதூறின் காரணமாக ஏற்பட்டது என

மெய்ப்பித்தால் தான் நீதிமன்றம் வழக்கில் அவமதிக்குள்ளான பெண்களுக்குத் தீர்ப்பு வழங்க இயலும். ஆங்கில நாட்டினர் பொதுச்சட்டத்தில் ஏற்பட்ட இந்தக்குறையை எண்ணி 1891ல் மகளிர் அவதூறுச் சட்டம் என்ற ஒரு புதுச் சட்டத்தை உரு வாக்கி பெண்களின் குறையைப் போக்கினர். இந்தியாவைப் பொருத்த வரையில் பொதுச் சட்டத்தை ஒட்டியே தீர்ப்பு வழங்க வேண்டியிருந்தது. எட்டிக்கும் இது தெரிந்தது. எதிர் வாதிகளும் பொதுச் சட்டத்தையே தங்களுக்குக் கிடைத்த நல்ல ஆயுதம் எனக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு வாதிட் டனர். நீதிபதி எட்டி தளர்ந்து விடவில்லை. இந்திய நாட்டு உயர்நீதிமன்றங்களுக்கென சில சிறப்பான அதிகாரங்கள் வழங்கப் பட்டுள்ளன என்பதை அவர் புரிந்து கொண்டார். பொதுச் சட்டம் நியாயம் வழங்க முன் வராது போனால் உயர் நீதிமன்றங்கள் கைகட்டி என்ன செய்வது எனத்திகைத்து நிற்கத்தேவையில்லை. அவைகள் நியாயம் நடுநிலை நெஞ்சம் கோடாமை'' என்ற கோட்பாடுகளின்படி நீதிவழங்கும் சிறப்பு அதிகாரம் பெற்றவை. நீதிபதி எட்டி இந்தக் கோட் பாடுகளையும் தனது தீர்ப்புக்கென எடுத்துக் கொண்டார். ஆங்கிலப் பாராளுமன்றம் மகளிர் தொடரும் அவதூறு வழக்கு களில் தங்களுக்குத்தனித்த நட்டம் ஏற்பட்டதென மெய்பிக்கத் தேவையில்லை என உருவாக்கியுள்ளச் சட்டத்தையும் இந்தியா வில் எழும் அதே மாதிரி வழக்குகளில் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள முடியும் எனவும் எண்ணினார். முடிவில் அவதூறுக் குள்ளான கண்ணம்மாளுக்கு அந்தக் காலத்தில் ரூ. 2000/- நட்ட ஈடுதந்து தீர்ப்புக் கூறினார் நீதிபதி எட்டி.

இந்த தீர்ப்பை எதிர்த்து எதிர்வாதிகள் மேல் முறையீடு செய்தனர். இரண்டு ஆண்டுகள் கழித்துத்தான் மேல் முறை யீடு விசாரணைக்கு வந்தது, இதையே நீதிபதி எட்டி நீதிச் சக்கரம் வெகுதாமதமாக இந்தியாவில் சூழல்கின்றது என மனம் நொந்து குறிப்பிடுகின்றார். தலைமை நீதிபதி ஓவன் பீஸ்லி முன் அந்த மேல் முறையீட்டில் ''மிகப் பரந்த சுவை யான வாதம்'' எழுந்தது எனக் குறித்திருக்கின்றார். அம் மாதிரியான வழக்குகளில் நாம் எந்தச் சட்டத்தைப் பின்பற்ற வேண்டுமென வாதம் எதிர் வாதம்விரிவாக எழுப்பப்பெற்றது. முடிவில் நீதிபதி எட்டி மேற்கொண்டு முடிவு சரியானது என மேல் முறையீட்டில் முடிவு ஏற்பட்டது எட்டி மேற்கொண்ட கருத்துக்குக் கிடைத்த வெற்றியாகும்.

1905 ல் சென்னையில் மத்திய குற்றவியல் நீதிமன்றம் தொடக்கப்பட்டது. அதில் நீதிபதி எட்டி அமர்வு நீதிபதியாக

வும் (Sessons Judge) பணியாற்றினார். அந்தக்காலத்தில் சென்னை மாநகரத்தில் அமர்வு நீதிபதியாக உயர் நீதிமன்ற நீதிபதியே பணியாற்றியது குறிப்பிடத் தக்கதாகும். ஒரு வழக்கில் நீதிபதி எட்டி ஜூரிகளுக்கு வழக்கின் விவரங்களை நிரல்பட எடுத்துரைத்தபோது நீதி மன்றக்கட்டிடத்தின் நுழை வாயிலில் வலது கையில் வாளும் இடது கையில் தராசும் வைத்திருக்கும் நீதி தேவதையை ஜூரிகளின் கண் முன்கொண்டு வந்து நிறுத்தினார். அந்தச் சிலையின் அடித்தளத்தில் பொறிக் கப்பட்டிருந்த சொற்கள் பின் வருமாறு.

''எளிய மக்களின் குழந்தைகளைக் காத்திடு. தவறு செய் பவர்களைத் தண்டித்திடு''

குற்றவியல் வழக்குகளில் ஆங்கில நாட்டை விட இந்திய நீதிமன்றங்களில் கடுமையான தண்டனை பொதுவாக வழங்கப் பட்டு வந்தது. நாடு கடத்தல் என்ற தண்டனை இந்தியாவை ஆண்டுவந்த ஆங்கில அரசால் புகுத்தப்பட்ட கொடிய தண் டனை என நீதிபதி எட்டி கருதினார். அதுவும் அமெரிக்க அய் ரோப்பிய மக்களுக்கு அந்தத் தண்டனை விதிக்கக் கூடாதென வகுத்துள்ள போக்கு மேலும் வேதனை தருவதாகும். ஒரு கொலைவழக்கில் கொடியவன் ஒருவனுக்குத் தூக்குதண்டனை வழங்காது நாடு கடத்தல் தண்டனை தான் வழங்கவேண்டி வந்தது என நீதிபதி எட்டி கூறியுள்ளார்.

அமர்வு நீதிபதியாக இருந்து எட்டி வழங்கிய ஒரு தீர்ப் புக்கு மேல்முறையீடு செய்யப்பட்டு இருந்தது. மேல்முறையீட் டில் அய்ந்து நீதிபதிகள் அமர்ந்தனர். அவர்களில் நீதிபதி எட்டியும் ஒருவர். இது நீதிபதி எட்டிக்கு மிகுந்த சங்கடத் தைத் தந்தது. மேல்முறையீட்டில் சட்டக் கேள்வி எதுவென நீதிபதி எட்டி கேள்வி எழுப்பினார். ஆனால் யாரும் அவர் எழுப்பிய கேள்விக்குப் பதில் தரவில்லை. இருந்தாலும் முடி வில் அந்த மேல்முறையீடு ஏற்றுக் கொள்ளப்பட்டது. நீதிபதி எட்டி அதனால் வருத்தப்பட வில்லை. இது அவரது நல்ல பண் பையே காட்டுகின்றது எனலாம். இந்திய மண்ணில் ஆங்கில நாட்டைக் கண்டு கொண்டேன் என நீதிபதி எட்டி கூறியது அவர் இந்திய மக்கள் மீது வளர்த்துக் கொண்டிருந்த பற்றை யும் பாசத்தையும் வெளிப்படுத்துகின்றது.

நீதிபதிகளின் நினைவுகள் நீங்குவதில்லை II
''நான் நீதித்துறைக்குள் நுழைந்தேன்''
நீதிபதி சர். ஏ.சி. கேப்பெல்

சர். ஏ.சி. கேப்பல் சென்னை உயர்நீதிமன்ற நீதிபதியாக ஆவதறகு முன் மாவட்ட நீதிபதியாகவும் மூன்று ஆண்டுகள் உயர்நீதிமன்றப் பதிவாளராகவும் இருந்தார். 1926 லிருந்து 1929 வரையிலும் பதிவாளராகப் பணியாற்றிய போது சர். மூர்ரே கூட்ஸ் டிராட்டர் தலைமை நீதிபதியாக இருந்ததாக கேப்பல் குறிப்பிடுகின்றார். கூட்ஸ்டிராட்டர் கூர்மையான மதியுடையவராகவும், கவர்ச்சியுடையவராகவும், எல்லோரை யும் ஒரே கண்கொண்டு பார்ப்பவராகவும். இசையிலும் விளை யாட்டிலும் ஆர்வம்கொண்டவராகவும் இருந்ததாக பதிவாளர் கேப்பல் மதிப்பீடு செய்துள்ளார்.

கேப்பல் அய்.சி.எஸ் படித்தவர்! அய்,சி.எஸ். படித்தவர் அரசில் எந்தத் துறைக்கும் போகலாம், அய்.சி.எஸ். என்ற திறவு கோலைக் கொண்டு தான் விரும்பும் துறைக்குள் நுழைந்து உயர வாய்ப்பிருந்தும் கேப்பல் நீதித் துறைக்குள் நுழைந்ததாக பெருமிதத்துடன் நினைவு கூறுகின்றார். வழக் கறிஞர் தொழில் செய்யாமல் அய்.சி.எஸ் படித்தவர் என்ற முறையில் நீதித்துறையில் நுழைந்ததால் நீதிபதி உணர்வு குறைவாக அவரிடம் இருந்தது. பதிவாளரின் பணி பெரும் பாலும் நிர்வாகம் செய்வதாக இருந்தது. ஆனாலும் கேப்பல் உயர்நீதிமன்றத்தில் வழக்குகள் நடக்கும் போது வழக்கறிஞர் கள் இருக்கையில் அமர்ந்து அவைகளைக் கவனித்துவந்தாராம். எனவே வழக்கறிஞர் தொழில் செய்யாத குறை தன்னைவிட்டு நீங்கியது எனக் கருதினார். அத்துடன் வழக்குகள் நடைமுறை யையும், நீதிபதிகளின் நோக்கையும் மிக உன்னிப்பாகக் கவ னித்து வந்ததால், நீதித்துறையில் வீசும் தென்றலை நுகர முடிந்ததென்றும், நடைமுறையை நன்கு கற்றுக் கொள்ள வாய்ப்புப் பெற்றதாகவும் கேப்பல் குறிப்பிடுகின்றார்.

கேப்பல் பல மாவட்ட தலைநகர்களில் மாவட்ட நீதிபதி யாகப் பணிபுரிந்துள்ளார். ஆனால் அன்றைய தமிழ் பேசும் மாவட்டங்களில் சேலத்தைத் தவிர வேறு மாவட்டங்களில் பணிபுரிய வாய்ப்புக்கிடைக்கவில்லை அவருக்கு. சேலம்மாவட் டத்தில் பணிபுரியப் போனபோது அம் மாவட்டத்தில் மது

விலக்கு அமுலில் இருந்ததால் மது ஓடாத வரட்சி மாவட்ட மாக தென்பட்டதாகவும், ஆனால் தான் குடிக்கும் பழக்கம் கொண்டிருந்ததால் மது உண்டு வரட்சியை நீக்கிவிட்டதாக வும் நகைச்சுவையுடன் கேப்பல் விளம்புவது சுவைக்கும் படி யாக உள்ளது.

தலைமை நீதிபதி சர். லைனல்லீச் இரண்டாவது உலகப் போர் ஒரு வழியாக ஓய்ந்து அமைதி நிலவுகின்றது என்பதைத் தெரிந்தபோது உயர் நீதிமன்ற நீதிபகள் மாவட்ட நீதிமன்றங் களைப் ""பார்வையிடும்'' (Inspection) முறையைப் புகுத் தினார். இதன் பலனாக கேப்பல் உயர் நீதிமன்ற நீதிபதி யானதும் திருச்சி, தஞ்சாவூர், மதுரை போன்ற தமிழ் மாவட்டங்களில் இயங்கும் மாவட்ட நீதிமன்றங்களைப் பார்வையிடப் போனதால் அம் மாவட்டங்களைச் சுற்றிப் பார்க்கும் வாய்ப்பும் கிடைத்தது.

1940-1945 இடைப்பட்ட காலம் போர்மேகங்கள் சூழ்ந்து எங்கும் கலக்கத்தை ஏற்படுத்திய காலமாக இருந்தது. மக்களி டையே கொந்தளிப்பும் பீதியும் ஏற்பட்டிருந்தது. கொத்தளிப் பும் பீதியும் அதிகமாகவே உயர்நீதிமன்றம் 1942ல் கோய புத்தூரில் இயங்க வேண்டி வந்தது. எல்லா நீதிபதிகளும் கோயமுத்தூர் சென்று விடவில்லை. நீதிபதி கேப்பல் ஏர் ரெய்டு வார்டனாகவும் பணி புரிந்ததால் சென்னையிலேயே தங்கி விட்டார். பின்னர் உயர்நீதி மன்றம் சென்னையில் இயங்கத்தொடங்கியதும் கேப்பலும் நீதிபதியாகப்பணியாற்றி 1948ல் பதவியிலிருந்து ஓய்வு பெற்றார். கோவையில் உயர் நீதி மன்றம் இயங்கிய காலத்தில் எல்லா நீதிபதிகளும் முறை யாக இயங்க இயலாத நிலையில் வழக்குகள் குவிந்து விட்டன. மீண்டும் உயர் நீதிமன்றம் சென்னையில் இயங்கத்தொடங்கிய தும் போர் தணிந்து அமைதி நிலவியது. விளைவு குவிந்து கிடந்த வழக்குகளைத் தன்னாலும் பிற நீதிபதிகளாலும் பெரும்பாலும் குறைக்க முடிந்தது என நீதிபதி கேப்பல் குறிப் பிட்டு உள்ளார். அதனால் ஓய்வு பெற்று சென்னை நகரத்தை விட்டு நீங்கியபோது பெரிய சுமையை இறக்கிய மனநிறைவு டனும் சென்னை வழக்கறிஞர்கள், சக நீதிபதிகள் ஆகியோரு டன் பழகிய இனியகால நினைவுகளுடனும் சென்றதாகநீதிபதி கேப்பல் விளம்புகின்றார்.

"இன்பமானநாட்கள் இனிமையான நினைவுகள்" நீதிபதி ஜே.எ. பெல்.

1942 சனவரியில் நீதிபதி பெல் சென்னை உயர்நீதிமன்ற நீதிபதியாக பதவி பிரமாணம் எடுத்துக் கொண்டார். மிகுந்த ஆற்றலும் அறிவும வாய்ந்த வழக்கறிஞர் சர். அல்லாடி சென்னை வழக்கறிஞர் சங்கததின் சார்பாக நீதிபதி பெல்லை வரவேற்றுப் பேசினார். தலைசிறந்த வழக்கறிஞர் தன்னை வர வேற்றது நீதிபதி பெல்லுக்கு இதமாக இருந்தது. சிலநாள் தலைமை நீதிபதியுடன் உட்கார்ந்து தொடக்க காலத்தைத் தொடங்கினார். அங்கே குறிப்பிடத் தக்கதாய் எதுவும் நிகழ வில்லை. ஒரு வழக்கை நடததுவது வேறு. மேன்முறையீட்டில் வாதத்தை மாத்திரம் கேட்பது வேறு. நீதிபதி பெல் மேல் முறையீட்டில் வாதத்தைக் கேட்பதைவிட வழக்கு நடக்கும் பொழுது நீதிபதியாகத் தலைமை தாங்கி அதை முடித்து வைப் பதில் ஆர்வம் காட்டினார். அதுபோன்றே வழக்கைத் தொடக் கத்தில் நடந்துகின்ற வழக்கறிஞர்களிடம் தனியான அபிமானம் கொண்டிருந்தார். அவர்களிடம் தணியாத விருப்பத்தையும் வளர்த்து நட்பையும் ஏற்படுத்தி கொண்டார். நாகரீக நாட் டில் இயங்கும் எந்தப்பெரிய நீதிமன்றத்திலும் சோடை போகா மல் திறம்பட வாழ்க்கை நடத்தும் தகுதியும் ஆற்றலும் நமது சென்னை வழக்கறிஞர்கள் பெற்றிருந்தார்கள் என நீதிபதி பெல் குறிப்பிடுவது நமக்கெல்லாம் பெருமிதம் தரும் செய்தி யாகும்.

1942ம் ஆண்டில் சில காலம் இரண்டாம் உலகப் போரின் போது ஏற்பட்ட கொந்தளிப்பால் கோயம்புத்தூரில் உயர்நீதி மன்றம் இயங்க வேண்டி வந்தது. அந்த ஆண்டின் கடைசி யிலேயே உயர்நீதிமன்றம் சென்னையில் மீண்டும் பணிபுரியத் தொடங்கியதாக கூறும் நீதிபதிபெல் அந்த அனுபவம் வழக்கறி ஞர்களுக்கும் வழக்குகளில் ஈடுபட்டிருந்த மக்களுக்கும் பெரும் தொந்திரவைத் தராமல் போகவில்லை என்றும் மொழிகின் றார். ஆனால் நீதிபதிகளுக்கு அது கசப்பான அனுபவம் என்று சொல்ல முடியாது என்பது பெல்லின் கருத்து.

நீதிபதி பெல் மீண்டும் மேல் முறையீட்டு மன்றத்துக்குச் சென்றபோது அறிவும்புலமையும் ஒருங்கேபெற்ற நீதிபதி பதஞ் சலி சாஸ்த்திரியின் தொடர்பும் நட்பும் அவர்க்குக் கிடைத் தது மிகுந்த பயனுள்ளதாக அமைந்தது. அவரிடமிருந்து

நிறையக் கற்கும் வாய்ப்புக் கிடைத்தது. அந்தக் காலத்தில் செசன்சு வழக்குகளை உயர்நீதிமன்ற நீதிபதிகளே சூரிகளின் உதவியுடன் நடத்தி வந்தனர். நீதிபதி பெல் பல செசன்சு வழக்குகளை நடத்தினார். அன்று மிகுந்த புகழுடன் விளங்கிய வழக்கறிஞர் எத்திராசு செசன்சு வழக்குகளை நடத்தும் அரசு வழக்கறிஞராகப் பணியாற்றினார் என்பது குறிப்பிடத்தக்க தாகும். நீதிபதி பெல் குற்றவியல் சட்டங்களிலும் நடைமுறை யிலும் ஆழந்த புலமையும் அனுபவமும் பெற்ற வழக்கறிஞர் எத்திராசின் உதவி தனக்குக் கிடைத்தது என்றும் தொழிலில் எத்திராசு உயர்ந்த கோட்பாடுகளைக் கடைப் பிடித்து வந்தார் என்றும் சுட்டிக்காட்டுகின்றார்.

பல வழக்கறிஞர்களுள் குறிப்பிடத்தக்க இரண்டு வழக்கறி ஞர்களை நீதிபதி பெல் சுட்டிக் காட்டுகின்றார். அவர்கள் டி.ஆர். வெங்கிட்டராம சாஸ்திரியார், வி.வி. சீனிவாச அய் யங்கார் ஆகியோராகும். நீதிமன்றத்தில் அவர்கள் எழுப்பும் வாதங்கள் வலிவானவை. மிகுந்த கவனத்துடன் கேட்கப்பட வேண்டியவைகளாகும் என்பது அவரது கருத்து.

செசன்சுவழக்குகளில் மொழி பெயர்ப்பாளர்கள் தனக்குப் பெரிதும் உதவியாய் இருந்ததாக நீதிபதி பெல் விளம்புகின் றார். தலைமை மொழி பெயர்ப்பாளராக அன்று இருந்த கே. நரசிம்மாச்சாரி ''சென்னை நகர செரிப்புகள்'' என்ற புத்தகம் எழுதினார். அந்தப் புத்தகம் தனது நூலகத்தில் இடம் பெற் றிருப்பதாக நீதிபதி பெல் குறிப்பிடுகின்றார். அவர்களது மொழி பெயர்ப்புகள் என்றுமே சரியாக இருந்தது என்றும், யாரும் அதில் குற்றம் கண்டுபிடிக்க இயலவில்லையென்றும் பெல் கருத்துத் தெரிவித்து இருக்கின்றார்.

நீதிபதி பெல் தென்னிந்தியாவில் வரலாறு படைத்துள்ள பல கோயில்கள், குளங்கள், கோட்டங்கள் ஆகியவற்றைக் கண்டுகளிக்க வழக்கறிஞர் நண்பர்கள் உறவினர். திருவாங் கூரில் உள்ள முக்கிய இடங்களைக்காண அங்கு திவானாக இருந்த சர். சி.பி. இராமசாமி அய்யர் தனக்குப் பெரிதும் உத வியாய் இருந்ததாக பெல் குறிப்பிடுகின்றார். தென்னிந்தியா வையும் அங்குள்ள மக்களையும் நன்கு புரிந்து உலாவந்ததும் உசாவயுதும் நீதிபதி பெல்லுக்குப் பெரும் இன்பத்தையும் இனிமையான நினைவுகளையும் எழுப்பின என்று அவர் உரைப்பது எண்ணத் தக்கது.

"சுதந்திர இந்தியாவின் முதல் அய்ரோப்பிய நீதிபதி" நீதிபதி மேக்.

நமது இந்தியா ஆங்கிலப் பேரரசிடமிருந்து விடுதலை பெற்றபோது மேக் என்ற ஆங்கிலேயர் மாவட்ட நீதிபதியாகப் பணிபுரிந்து கொண்டிருந்தார். நீண்ட காலமாக மாவட்ட நீதி பதியாகப் பணிபுரியும் ஒருவர் உயர்நீதிமன்றத்தையும் எட்டிப் பிடிக்க எண்ணுவது இயல்பே. மேக் நீண்ட காலமாக மாவட்ட நீதிபதியாக இருந்தார். 1919ல் அய்.சி.எஸ். பட்டம் பெற்று இந்தியன் சிவில் பணியில் நுழைந்தவர் அவர். அவரோ ஒரு ஆங்கிலேயர். இந்த நிலையில் உயர்நீதிமன்றத்தில் தனக்கு அந்த மதிப்பு மிக்க பெரும்பதவியை விடுதலை பெற்ற இந்தியா வில் கொடுப்பார்களா என்று மேக்கே அய்யம் கொண்டிருந் தார். ஆனால் இந்தியரா, இந்தியரல்லாதவரா என்ற வித்தி யாசம் பார்க்காமல் உரியவருக்கு உரியதைத் தரத் தயங்காத அரசு 1948ல் மாவட்ட நீதிபதி மேக்கை உயர்நீதிமன்ற நீதிபதி யாக உயர்த்தியது.

மேக் ஏழு ஆண்டுகள் தொடர்ந்து மாவட்ட நீதிபதியாக பெல்லாரியில் இருந்தது ஒரு சாதனை என்றே சொல்லலாம். மேக் உயர்நீதிமன்ற நீதிபதியாகப் பதவி ஏற்றபோது அவரை வரவேற்றுப் பேசிய அல்லாடி கிருஷ்ணசாமி அய்யர் அந்த சாதனையையும் குறிப்பிட்டார். அல்லாடி அவர்கள் மேக்குக்கு எழுதிய வாழ்த்துக் கடிதத்தில் "அய்யா நீங்கள் இந்தியாவின் வாழ்வு தாழ்வுகளில் உங்களையும் இணைத்துக் கொண்டுள் ளீர்கள். இந்திய மக்கள் மீதும் அன்பு பூண்டு ஒழுகிவருகின்றீர் கள். இந்தியரல்லாத உங்களை விடுதலை பெற்ற இந்தியாவில் உயர்நீதிமன்ற நீதிபதியாக உயர்த்தியது முற்றிலும் நியாய மானது" என்று குறிப்பிட்டுள்ளார். நீதிபதி பேக்கும் தனக்கு அப்பெரும் பதவி கிடைத்தது தவப்பயன் என்றும், இந்தியா விடுதலை பெற்று உலக அரங்கில் மதிப்பும் புகழும் பெற்றுத் திகழ்ந்தான் என்றும் விருப்பமும் ஆர்வமும் காட்டி வந்ததாக வும் மகிழ்ச்சி பொங்கக் குறிப்பிடுகின்றார்.

1948ல் சென்னை உயர்நீதிமன்றத்தின் நீதிபதியாக உயர்ந்த மேக் 1921ல் சென்னை உயர்நீதி மன்றத்தில் ஒரு கட் சிக்காரர் என்ற முறையில் கைகட்டி நின்ற சம்பவத்தைச் சுவைபட எடுத்துக் கூறுகின்றார்.

1921ல் நெல்லூர் புகைவண்டி நிலையத்தில் வண்டி நின்ற போது சிறுநீர் கழிக்க அங்கிருந்த ஒரு கழிப்பிடத்துக்குச் சென்றார். அந்தக் கழிப்பிடம் சரியாகப் பராமரிக்கப்படவில்லை. அங்கு மின்விளக்கு இல்லாததால் இருட்டாகவும் இருந்தது. அங்கு போன மேக் இடறி விழுந்ததால் அவரது வலது பாதம் காயம் பட்டுச் சேதமடைந்தது. அதனால் பெல்லாரியில் சர்வே செட்டில்மெண்டு பயிற்சி செய்யும் போது நடக்க இயலாது பெரும் துன்பப்படநேர்ந்தது.

மேக் எம்.எஸ்.எம். இரயில்வே கம்பெனி மீது நட்டு ஈடு கோரி உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார். தனக்காக பின்னர் உயர்நீதிமன்ற நீதிபதியாக உயர்ந்த வீரி மாக்கெட் வழக்கு நடத்தினார். இரயில்வே கம்பெனிக்காக புகழ் பெற்ற நியூசெண்ட்கிராண்டு வாதாடினார். வழக்கு நீதிபதி கூட்ஸ் டிராட்டர் முன் வந்தது. மேக்கின் அதிர்ஷ்டம் கூட்ஸ் டிராட்டருக்கும் அதே போன்று கால் முறிவு அவர் ஆக்ஸ் போர்டில் விளையாடிய போது ஏற்பட்டிருந்தது. மேக்கும் வலது காலில் ஏற்பட்ட சேதத்துடன் ஆக்ஸ்போர்டுக்குச் சென்று விளையாடிய போது கால் இடறியதால் இன்னும் சேதம் ஏற்பட்டிருந்தது. கூட்ஸ்டிராட்டருக்கு மருத்துவம் பார்த்த டாக்டர் பிரிபாரனே ஆக்ஸ்போர்டில் மேக்குக்கும் மருத்துவம் பார்த்தவராக இருந்தார்.

நீதிமன்றத்தில் வழக்கு நடந்து கொண்டிருந்தது. நீதிமன்றத்தில் நீதிபதி கூட்ஸ்டிராட்டர் முன் நின்று கொண்டிருந்த மேக்குக்ப் பயம் ஏற்பட்டது. நடுக்கமும் சேர்ந்து கொண்டது. ''ஆக்ஸ்போர்டில் விளையாடிய போது எனக்கும் இது போன்று கால்ல் சேத மேற்பட்டது. எனக்கும் டாக்டர் பிரிபாரனே மருத்துவம் பார்த்தார்'' என நீதிபதி கூட்ஸ்டிராட்டர் விளம்பிய போது மேக்குக்கு பயம் தொலைந்தது நடுக்கமும் நின்றது. பயமும் நடுக்கமும் போனதால், சாட்சியம் அளிக்கும் போது மேக் நீதிமன்றத்தில் துணிவை வரவழைத்துக் கொண்டு எதிர் தரப்பு வழக்கறிஞர் நியூசெண்ட் கிராண்டுடன் அவர் கேள்விக்குப் பதிலளிக்காமல் உரத்தகுரலில் வாதம் செய்தார். கருணையுடன் தன்னை நோக்கிக் கொண்டிருந்த நீதிபதி சிறிது சினந்து ''மேக் இது நீதிமன்றமென்று தெரியவில்லையா உமக்கு'' என்று கண்டித்த உடன் மேக் பயந்து அமைதியடைந்தார். தன் வழக்கு என்ன ஆகுமோ எனப் பயந்து கொண்டிருந்தார் மேக். ஆனால் மேக் கேட்டிருந்த நட்டு ஈட்டுத் தொகை

அனைத்தையும் அளித்து நீதிபதி தீர்ப்பு வழங்கினார். பொதுவாக வழக்கறிஞர்களும் நீதிபதிகளும், ஒரு டாக்டரே நோயாளியாகும் போது எப்படி ஒழுங்கான சாட்சிகளாக நடந்து கொள்வதில்லை என்ற குறைக்குத்தானும் விதிவிலக்கல்ல என்று நீதிபதி மேக் தான் நீதிமன்றத்தில் சான்றுரை தந்தபோது அன்று நடந்த நிகழ்ச்சியை நினைத்து நொந்து கொள்வதுண்டு.

வழக்கறிஞர்கள் எத்திராசு. வி.டி. ரங்கசாமி அய்யங்கார் டி.எம். கிருஷ்ணசாமி அய்யர் ஆகியோருடனும், தலைமை நீதிபதி. இராசமன்னார். நீதிபதி சோமசுந்தரம் ஆகியோருடனும் தான் கொண்ட தொடர்பை உவகையுடன் நினைவு கூர்கின்றார் மேக். அவர் கருத்துப்படி இந்திய அரசியல் சட்டம் மிகப் பெரியது; அதை உருவாக்கியவர்களும் மிகப் பெரிய அறிஞர்கள் என்பதாகும். காமன்வெல்த் நாடுகளில் இயங்கும் நீதிமன்றங்களைப் பற்றியும் சட்ட முறைப்பற்றியும் மேக் ஒரு நூல் எழுதியுள்ளார். அந்த நூலில் இந்திய நாட்டுக்கும் இந்திய நீதிமன்றங்களுக்கும் பல பக்கங்களை அவர் ஒதுக்கியதுள்ளது இந்திய நாட்டின் மீது கொண்டுள்ள மதிப்புக்கும் நல்லெண்ணத்துக்கும் எடுத்துக்காட்டாகும்.

''நீதிபதிகளின் நினைவுகள் நீங்குவதில்லை'' III

நீதிபதிகளாகிய நாங்கள் நல்ல குடும்பம்''
நீதிபதி சர். வீரிமாக்கெட்

1934-லிருந்து 1945 வரையிலும் சென்னை உயர்நீதி மன்ற நீதிபதியாக சென்னையில் வசித்த நாட்கள் மிகவும் மகிழ்ச்சியுடையதாக இருந்ததெ்தன நீதிபதி மாக்கெட் தெரிவித்துள்ளார். தானும் தன்னுடன் சக நீதிபதிகளாகப் பணியாற்றிய நீதிபதிகளும் ஒரு நல்ல குடும்பம் போன்று மலர்ச்சியுடன் இருக்கவும் முடிந்தது என பெருமிதத்துடன் குறிப்பிடுகின்றார். 1908ல் கிரிமினல் வழக்குகளை விசாரிக்க கிரிமினல் மேல் முறையீட்டு மன்றம் துவக்கப்பட்டது. அப்போது இம்பீரியல் வங்கி வழக்கு என்ற புகழ்பெற்ற வழக்கு நடந்து கொண்டிருந்தது. மாக்கெட் வழக்கறிஞர் என்ற முறையில் அந்த வழக்கில் வங்கிக்காக வழக்கின் போக்கைக் கவனிக்கும் வழக்கறிஞராக நியமிக்கப்பட்டிருந்தார். நியூகெண்டு கிராண்ட் என்ற புகழ்பெற்ற வழக்கறிஞர் அரசுதரப்பில் ஆசராகி வழக்கை நடத்தினார். கல்கத்தாவிலிருந்து வரவழைக்கப்பட்ட ஒரு பிரபல வழக்கறிஞர் எதிரிகளுக்காக வாதாடினார்.

வீரிமாக்கெட் வழக்கின் போக்கைக் கவனிக்க அமர்த்தப்பட்டிருந்ததால் நீதிமன்றத்தில் எழுந்து பேசக்கூடாதென்பது சட்டம். அவர் பேசாமலிருந்தும் நீதிமன்றத்தில் அவர் ஆசராக இருந்ததே சர்ச்சைக்குறியதென அன்றைய சென்னை சட்ட மன்றத்தில் கேள்விகள் எழுப்பப்பட்டதாம். அது ஏன் என்பது தனக்கே புரியாத புதிர் என்று மாக்கெட் திகைப்பெய்தினார்.

அந்த வழக்கில் எதிரிகளுக்காக வாதம் புரிந்த வழக்கறிஞர் எனது அருமை நண்பர் கிரேண்ட் ''வங்கிக்கான கிரேண்ட்'' என்பது பற்றிக் குறிப்பிட்டார். இந்த வழக்கு முடிந்த பிறகு கிரேண்ட் இம்பீரியல் வங்கி என்ற ஒரு புத்தகத்தையும் எழுது வார் என எதிர்பார்க்கின்றேன்'' என சிலேடையாகவும் நகைச்சுவை ததும்பவும் குறிப்பிட்டார். நீதிமன்றத்தில் கூடி யிருந்த கூட்டம் இதை நன்கு ரசித்தது.

நீதிபதிகள் வரதாச்சாரி, இராமேசம் போன்ற நீதிபதி களுடன் தனக்கு நெருங்கிய நட்புண்டு என நீதிபதி மாக்கெட் நினைவுகூறுகின்றார். அரசு வழக்கறிஞர்கள் பீவசு, என்ப வரும், வி. எல். எத்திராசும் அரசுக்குச் சாதகமான அம்சங் களை எடுத்துக்காட்டத் தவறாத அதே வேளையில் குற்றம் சுமத்தப்பட்டவர்களுக்குச் சாதகமான அம்சங்களையும் எடுத்துச் சொல்லும் நேர்மைவாய்ந்தவர்கள் என நீதிபதி மாக்கெட் அவர்களது நேர்மையைப் புகழ்கின்றார்.

''1925ல் ஒளிவீசிய விண்மீன்கள்''

நீதிபதி சர். சிட்னி வேட்ஸ் வொர்த்

1935 முதல் *1947* வரையிலும் சென்னை உயர்நீதி மன்ற நீதிபதிபாக இருந்த சர். சிட்னிவேட்ஸ் வொர்த் 1925ல் உயர் நீதிமன்றத்தின் பதிவாளராக நியமிக்கப்பட்டிருந்தார். தான் பதிவாளராக ஆனபோது மிகத் திறம்படைத்த நீதிபதிகள் உயர்நீதி மன்றத்தை அணி செய்து கொண்டிருந்ததைக் கண்டு மகிழ்ந்ததாகக் குறிப்பிடுகின்றார் சிட்னி. 1925ல் அமைதியாக ஓடிக்கொண்டிருந்த உயர்நீதிமன்ற யந்திரம் பின்னர் அமைதியைச் சிறிது இழந்து தடுமாட்டம் கொண்ட தாகக் கூறும் சிட்னி அதன் காரணத்தையும் விவரிக்கத் தவற வில்லை. தலைமை நீதிபதியாக உயர்நீதி மன்றத்தை அணி செய்த முர்ரே கூட்ஸ் டிராட்டர் மதி நுட்பம் வாய்ந்தவர், புலமை பெற்றவர். இன்னும் சொல்லப்போனால் பிறரை மதித்து உறவாடும் பண்பினர். அன்புள்ளம் கொண்டவர். ஆனால் அவரிடம் இருந்தகுறை தலைமைவகித்து வழிநடத்தும் ஆற்றல் இல்லாததுதான். உயர்நீதி மன்ற நீதிபதிகள் ஒருமுக மாக ஒன்றுபட்டு பணிபுரிய ஊக்கம் தரும் தன்மையும் தலைமை நீதிபதி முர்ரேயிடம் இல்லாதிருந்தது. அத்துடன் உயர்நீதி மன்ற பதிவாளரிடமே உயர் நீதிமன்றம் சம்பந்தப் பட்ட பெரும்பாலான அதிகாரங்களை ஒப்படைத்ததும் அவர்

செய்த தவறுகளில் ஒன்றாகும். ஏற்கனவே கூட்ஸ் டிராட்டர் உடல் நலமின்றி வாடியதால், அவரால் கடுமையாக உழைக்க இயலவில்லை. இப்படிப் பல காரணங்களால் கோபுரம்போல் குவிந்து கிடந்த வழக்குகளைக் குறைக்கத் தலைமை நீதிபதி யால் முடியாது போயிற்று என நீதிபதி சிட்னி மிகுந்த ஆயாசத்துடன் குறிப்பிடுகின்றார்.

நீதிபதி சிட்னி 1925ல் உயர்நீதிமன்றத்தில் பணி புரிந்த நீதிபதிகளையும் சில வழக்குரைஞர்களையும் நினைவுகூர்ந்து அவர்கள் எல்லாம் ''ஒளி வீசிய விண்மீன்கள்'' என வியந்து கூறுகின்றார், சர். மாதவன் நாயர் எல்லோரும் அறிந்த திறம்படைத்த நீதிபதி. நீதிபதி இராமேசம் நண்மாண் நுழை புலம் படைத்தவர். தனிப்பட்ட முறையில் பிறரிடம் அன்பு காட்டுவதில் சிறந்து விளங்கினார் என்பதும் உண்மை. அவரிடமிருந்த அபரிதமான நினைவு ஆற்றலே சங்கடமான நிலையைத் தோற்றுவித்தது எனலாம். ஒரு நீதிபதியோ, அல்லது வழக்கறிஞரோ சில முக்கியமான வழிகாட்டும் தகுதி வாய்ந்த வழக்குகளை நினைவில் வைத்திருந்தால் போதும். ஆனால் இராமேசம் பல வழக்குகளின் தீர்ப்புகளை நினைவில் வைத்திருந்ததால் அந்த வழக்குகளையெல்லாம் மறந்து விடாமல் தனது தீர்ப்பில் நிரப்பிவிடுவார். விளைவு அவரது தீர்ப்புகள் பெரும்பாலும் அவரது நினைவில் நடனமாடிய வழக்குகளின் கூடாரமாகத் தென்படும்.

நீதிபதி கிருஷ்ணன் இயல்பான அறிவும், அனுபவத்திறமை யும் வாய்ந்து எல்லோரின் அன்பையும் பெற்றுத் திகழ்ந்தார். நீதிபதி பிலிப்ஸ் அதற்கு நேர்மாறான குணத்தைப் பெற்றவர். பிலிப்சும் ஆற்றல் வாய்ந்தவர்தான். மேலும் நேர்மையான உள்ளம் கொண்டவர் என்பதும் உண்மை. ஆனால் மிளகு போல் காரமான இயல்பு கொண்டவர். அதனால் வழக்கறிஞ ரிடையே செல்வாக்கைப் பெற அவரால் இயலவில்லை. அவர் ஒரு விளையாட்டு வீரர். ஓய்வு பெற்ற பிறகு டென்னிஸ் விளையாடிக் கொண்டிருந்தபோதே விளையாட்டு அரங்கில் அவர் உயிர் பிரிந்தது. நீதிபதி ஓவன்பீஸ்லியும் விளையாட் டில் புலி எனலாம். கேம்பிரிட்சு சாசர் விளையாட்டுக் குழு வின் தலைவராக இருந்து பல போட்டிகளில் கலந்துகொண் டவர். ஓய்வு பெற்ற பிறகும் ஓவன் கடுமையாக உழைப்பை நல்கி பென்சன் தொகையை நிர்ணயிக்கும் நீதிபதியாகப் பணி யாற்றி 80 ஆண்டு வரையிலும் உயிருடன் இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கதாகும். நீதிபதி ஓல்டு பீல்டும் திறமை

படைத்த நீதிபதியெனக் கருதப்பட்டார். தலைமை நீதிபதி கூட்ஸ் டிராட்டர் தான் கண்ட அருமையான நீதிபதிகளில் நீதிபதி ஒல்டு பீல்டும் ஒருவர் என்று குறிப்பிட்டுள்ளார். ஒல்டு பீல்டு சென்னை நீதிபதிப் பதவியிலிருந்து ஒய்வு பெற்ற பிறகு மான்செஸ்டர் பல்கலைக் கழகத்தில் ஒப்பியல் சட்டப் பேராசிரியராக நியமனம் பெற்றார். ஆனால் துரதிர்ஷ்ட வசமாக அவர் திடீரென மறைந்ததால் பல்கலைக்கழகம் திறமையான சட்டப் பேரறிஞரை இழந்துவிட்டது.

1925ல் மின்னும் விண்மீன்களாகத் திகழ்ந்த வழக்கறிஞர்கள் எஸ். வரதாச்சாரியார், சர். அல்லாடி கிருஷ்ணசாமி, அய்யர், எஸ். சீனிவாச அய்யங்கார், சி.பி. இராமசாமிஅய்யர் நியூசெண்ட் கிராண்டு ஆகியோர்களாகும். நீதிபதி வாலர் ஒருவரின் திறமைக்கணிப்பதில் வல்லவர். அவர் ஒரு சமயத்தில் ''எஸ். வரதாச் சாரியார் வழக்கறிஞர் சங்கத்தில் உள்ள வழக்கறிஞர்களுள் மிகத் திறமை படைத்த வழக்கறிஞர்'' எனக் குறிப்பிட்டபோது நீதிபதி சிட்னி வாலரின் கணிப்புச் சரியானதே என நினைத்தார். வாலர் குறிப்பிட்ட அந்தக் கருத்தை பொதுவாக எல்லோரும் ஏற்றனர். சட்ட வானிலே சர். அல்லாடி கிருஷ்ணசாமியின் வளர்ச்சி மிக வேகமாக இருந்தது. அவர் இளைய வழக்கறிஞராக இருந்த போதே வாதம் புரிவதில் வல்லவராகவும் வியத்தகு சட்டப் புலமையும் பெற்றவராகவும் இருத்தார் என நீதிபதி சிட்னி குறிப்பிடுகின்றார். மேலும் அல்லாடி நல்ல கவர்ச்சியும் பிறருக்குதவி செய்யும் பேருள்ளமும் பெற்றிருந்தார். புகழ் வாய்ந்த வழக்கறிஞர்களாகத் திகழ்ந்தபோதே சீனிவாசஅய்யங்காரும், சி.பி.இராமசாமியும் அரசியலிலும் பொதுத் தொண்டிலும் அடியெடுத்து வைத்தனர். வழக்கறிஞர் தொழிலில் பெற்ற வெற்றி மகள் அங்கும் அவர்களைத் தொடர்ந்து சென்று தழுவினாள். நியுசெண்ட்கிராண்டு வழக்கறிஞர் தொழிலில் உச்சியை அடைந்திருந்தார். அவர் தன்னைப் பெரிய வழக்கறிஞர் என பிரகடனப்படுத்திக் கொள்ளவில்லை. சாட்சிகளைக் குறுக்கு விசாரணை செய்வதில் ஈடு இணையற்றவராக விளக்கியதுடன் நீதிமன்றத்தில் அமர்ந்துள்ள நீதிபதியின் தனித் தன்மையைப் புரிந்து கொண்டு அதற்கேற்ப தனது வழக்கைச் சோடனை செய்யும் ஆற்றலையும் பெற்றிருந்தார்.

வழக்கறிஞர் கிராண்டு நீதிமன்றத்தில் தான் மேற்கொண்ட வழக்கில் வாதம் செய்யும் போது அவருக்கே உரித்-

தான ஒரு தந்திரத்தையும் கையாளுவார். வழக்கில் தனது கட்சிக் காரருக்குச்சாதகமாக நான்கு வலிவற்ற அம்சங்களும், ஒரு நல்ல வலிவான அம்சமும் இருப்பதாக எண்ணினால் அவர் வலிவற்ற நான்கு அம்சங்களை மிக வலியுறுத்தி வாதம் செய்து அய்ந்தாவதான வலிவுள்ள அம்சத்தை வலியுறுத்தி வாதம் செய்யாது விட்டுவிடுவார். அதாவது மிக வலிவான அந்த அய்ந்தாவது அம்சத்தை நீதிபதியே கண்டு பிடிக்கும் அளவுக்கு வாதத்தை உருவாக்கி விடுவார். இதில் தந்திரம் என்னவென்றால் அந்த வலிவான அய்ந்தாவது அம்சத்தை நீதிபதியே கண்டு கொள்ளும் நிலையை உண்டு பண்ணினால் நீதிபதி வழங்கும் தீர்ப்பில் அந்த அம்சம் இன்னும் வலிவு பெறும். அசைக்க முடியாததாகவும் அது ஆகிவிடும். நீதிக் களத்தில் கிராண்டின் பெரும் வெற்றிகளுக்கு இதுவும் ஒரு காரணம் என்றால் மிகையாகாது என சிட்னி குறிப்பிட்டுள்ளார்.

"சென்னையில் பசியுடன் நடந்து சென்றேன்"
நீதிபதி எல். சி. கார்வில்

நீதிபதி கார்வில் சென்னை உயர்நீதிமன்ற நீதிபதியாக 1940 லிருந்து 10 ஆண்டுகள் பணிபுரிந்தார். அவர் பெர்காம்பூரிலும் சில காலம் நீதிபதியாகப் பணியாற்றினார். பெர்காம்பூரில் வழக்கறிஞர் சங்கம் நடத்திய வழியனுப்பு விழாவில் உரையாற்றிய அரசு வழக்கறிஞர் "அய்யா நீதிபதியவர்களே சென்னை வழக்கறிஞர்கள் பெர்காம்பூர் வழக்கறிஞர்களைப் போல் அமைதியும் பணிவும் கொண்டவர்கள் அல்ல. அவர்களைச் சமாளிப்பதென்பது கடினமானது. அவர்கள் எதிர்த்துத்தாக்கும் போர்க் குணம் கொண்டவர்கள்". என்று மொழிந்தார். அவர் பேச்சைக் கேட்ட நீதிபதி கார்வில் கொஞ்சம் மனது தளர்ந்தார். சென்னை சென்றால் நீதிமன்றத்தில் மிகவும் எச்சரிக்கையாவும், விழிப்புடனும், மன உறுதியுடனும் இருப்பது நல்லது என்று எண்ணினார்.

கார்வில் அருகில் அமர்ந்திருந்த ஒரு மூத்த வழக்கறிஞர், நீதிபதியின் காதில் மெதுவாக, "அரசு வழக்கறிஞர் சொன்னதை வைத்து ஆயாசப்படவேண்டாம். சென்னை வழக்கறிஞர்கள் தகுதியும் திறமையும் பெற்றவர்கள்; அவர்களுடன் ஒத்துப் போவது கடினமல்ல. மாறாக பெர்காம்பூரில் நீங்கள் கண்ட சுமுகமான உறவை அங்கேயும் காண முடியும்" என்று சொன்னபோது நீதிபதி கார்வில் முகம் மலர்ந்தது. சென்னையில் வழக்கறிஞர்க்கும் தனக்கும் பணி செய்த காலம் முழுதும்

நல்ல மகிழ்ச்சிகரமான உறவே நீடித்திருந்தது என நீதிபதி கார்வில் பெருமிதத்துடன் குறிப்பிடுகின்றார்.

புதிதாக உயர்நீதி மன்றத்துக்கு நியமிக்கப்பட்ட நீதிபதி தலைமை நீதிபதியுடன் ஒன்றாக உட்கார்ந்து வழக்குகளைக் கேட்பது என்பது ஒரு பயிற்சியாகவும் கருதப்படுகின்றது. அது ஒரு மரபாகவும் போற்றப்படுகின்றது. அப்படி ஒன்றாக தலைமை நீதிபதியுடன் உட்காரும் புதிய நீதிபதி இருவரும் சேர்ந்து கேட்ட வழக்குகளில் வழங்கப்படும் தீர்ப்புகளில் தலைமை நீதிபதியுடன் மாறுபடாமல் ஒருமித்து கருத்துடன் இருப்பதே உசிதம். பெரிதும் மூத்தநிலையிலுள்ள தலைமை நீதிபதியுடன் தொடக்க காலத்திலேயே மாறுபாடு கொள்வது விரும்பத்தக்கதல்ல என்பது கார்வில்லின் கருத்தாகும். ஆனால் பொதுவாக தலைமை நீதிபதிகள் தம்முடன் ஒன்றாக நீதிமன் றத்தில் உட்காரும் புதிய நீதிபதிகளையும் மதித்து அவர்களது கருத்துக்களையும் தெரிந்து தீர்ப்பு வழங்கும் பாங்கைக் கொண்டுள்ளனர்.

நீதிபதி கார்வில் ஒரு சமயம் நான்கு பேர் அடங்கிய நீதி பதிக் குழுவில் ஒருவராக அமர்ந்து வழக்குகளைக் கேட்க வேண்டி வந்தது. நான்கு பேரில் நீதிபதி அப்துர் ரகுமானும் ஒருவர். தீர்ப்பில் மற்ற மூன்று நீதிபதிகள் கொண்ட ஒருமித்த கருத்துக்கு மாறாக நீதிபதி கார்வில் ஒரு கருத்தைக் கொண் டிருந்தார். அப்படி மாறானகருத்தை மேற்கொள்ளும் அளவுக் குத் துணிவு கொண்டதைக் கண்டு அப்துர் ரகுமானைத் தவிர மற்ற இரு நீதிபதிகளும் நீதிபதி கார்வில்லை ‘‘கட்டுப்படாத போக்கிரிப் பையன்’’ என வர்ணித்தனர். ஆனால் கார்வில் லின் துணிவைப்பார்த்துப் பாராட்டி நீதிபதி அப்துர் ரகுமான் உறுதியுடன் நில் என்று கூறினார். கார்வில்லும் அந்த வழக் கில் வெற்றி பெறத் தவறிய வழக்கறிஞருக்குத் அவரது வாதத்தை நீதிமன்றத்தின் முன் வைக்கப் போதுமான வாய்ப் பைத் தரவில்லை என்ற கருத்தைத் துணிவுடன் எடுத்துரைத் தார். அது போன்றே இன்னொரு தடவை நீதிபதி வரதாச் சாரியுடன் உட்கார்ந்து வழக்கொன்றைக் கேட்டார் நீதிபதி கார்வில். நீதிபதி வரதாச்சாரியார் மிகுந்த சட்டப்புலமை உடையவர். மிகுந்த நேர்மையும் கொண்டவர். எதையும் புரிந்து கொள்வதிலும் வல்லவர். நீதிப்தி கார்வில் அவரது கருத்துக்கு மாறாக அந்த வழக்கில் ஒரு கருத்தை மேற்கொண்டார். அதனால் மூன்றாவது ஒரு நீதிபதியின் கருத்துக்கு அந்த வழக்கு விடப்பட்டது. அந்த மூன்றாவது நீதி

பதி இருவரது கருத்துக்களையும் ஆராய்ந்து நீதிபதி வரதாச்சாரியின் கருத்தே சரியானது எனத்தான் உடன்படுவதாகக் கூறினார். நீதிபதி கார்வில் பின்னர் நீதிபதி வரதாச்சாரியுடன் முரண்பட்டது தவறு எனத் தன்னை நொந்து கொண்டார். நீதிபதி வெங்கிட்டரமணராவுடன் தான் நீதிபதி கார்வில் நீண்டகாலமாக நீதிமன்றத்தில் ஒன்றாக உட்கார நேர்ந்தது. ஒரு வழக்கிலும் நீதிபதி கார்வில் நீதிபதி வெங்கிட்டரமணராவுடன் மாறுபடத் தேவையில்லாது போயிற்று. காரணம் நீதிபதி கார்வில் ஒவ்வொரு வழக்கிலும் என்ன கருத்தை மேற்கொண்டாரோ அந்தக் கருத்துக்கு அவரும் உடன்பட்டவராக ராவும் இருந்தார் என்பதேயாகும். அது போன்று நீதிபதி இலச்சுமணராகவும் நீதிபதி கார்வில் கருத்துக்கு ஒத்தவராக இருந்தார். நீதிபதி இலச்சுமணராவ் கூடிய வரையில் தன்னுடன் உட்காரும் நீதிபதிகளின் கருத்துக்கு மாறுபடாமல் இருக்கும் போக்கைக் கொண்டவர். தங்கள் முன் வாதமிடும் வழக்கறிஞர்களைக் காட்டிலும் வழக்கிலுள்ள சான்றுரையை முழுமையாகப் படித்துத்தெரிந்து வைப்பவர் இலச்சுமணராவ். கார்வில்லும் ராவும் நீதிமன்றத்தில் கூட்டாக உட்காருவதைப் போல், டென்னிசு மன்றத்திலும் ஒரு பக்கம் நின்று விளையாடும் வழக்கத்தைக் கொண்டிருந்தனர். நீதிபதி கார்வில் சில காலம் நீதிபதி கோவிந்தமேனனுடன் சேர்ந்து குற்றவியல் வழக்குகளைக் கேட்கும் வாய்ப்பைப் பெற்றார். கோவிந்தமேனன் உணர்ச்சிவயப்படாது ஒரு பக்கம் சாயாமலும் நடுநிலை நின்று ஆராயும் உளப்பாங்கு கொண்டவராக இருப்பதைத்தான் கண்டதாக நீதிபதி கார்வில் குறிப்பிடுகின்றார்.

இரண்டாவது உலகப் போர் தொடங்கி சில காலத்தில் சென்னைக்கே போர் அபாயம் வரத் தொடங்கியது. மக்கள் சென்னையை விட்டு ஓடத் துவங்கினர். வீடுகளிலும் வீதிகளிலும் மக்கள் நடமாட்டம் குறைந்துவிட்டது. சென்னை மக்களால் கைவிடப்பட்ட ஒருபேயறைந்த நகரமாக மாறியது. நீதிமன்றமும் நீதிபதிகளும் இதுக்கு விதிவிலக்கல்ல. அவர்களும் சென்னையை விட்டுச் சில காலம் வெளியேற வேண்டி வந்தது. சில காலம் கழித்து நீதிபதிகள் சென்னைக்குத் திரும்பி வந்தனர். சென்னை அடுத்துள்ள ஒரு புகைவண்டி நிலையத்துக்கு வண்டி வந்து சேர்ந்தபோது கடும் மழை பிடித்துக்கொண்டது. எங்கும் வெள்ளக்காடு தண்ணீர் அனைத்தையும் அடித்துச் சென்றது. சப்பானியர் விமானத் தாக்குதல் செய்யும் அளவுக்கு நிலை முற்றிவிட்டது. வழியி

லுள்ள அந்தப் புகைவண்டி நிலையத்தில் நீதிபதிகள் 18 மணி நேரம் காத்துக் கிடந்தனர். அப்போது கொடுக்கப்பட்ட உணவு தலைமை நீதிபதிக்கே போதுமானதாக இருந்ததால் நீதிபதி கார்வில் பட்டினி கிடக்க நேர்ந்தது. சென்னை வந்து சேர்ந்தபோது நீதிபதி கார்வில் தன் மாளிகை செல்ல வண்டியும் இல்லாது துன்பப்பட்டார். வயிற்றைக் கிள்ளும் பசியுடன் தன் வீடு நோக்கி நடந்தே சென்றார். மழை நின்றுவிட்டிருந்தது. தென்றலும் குளிர்ச்சியும் சேர்ந்து சென்னை நகர வீதியில் நடப்பவர்களுக்குத் தெம்பை உண்டாக்கின. பசியுடன் நீண்ட தூரம் நடந்த நீதிபதி கார்விலுக்கு அது ஆறுதலைத் தந்தது.

"நீதிபதிகளின் நினைவுகள் நீங்குவதில்லை" IV

"இந்து சட்டத்தின் உயர்ந்த கருத்துக்களைச் சுமந்து சென்றேன்"

நீதிபதி. கில்பெர்ட்ஸ்டோன்.

1930-ல் கில்பர்ஸ்டோன் சென்னை உயர்நீதிமன்ற நீதிபதியாக நியமிக்கப்பட்டார். கீழை நாடுகளைப் பற்றி அவருக்குப் போதுமான அனுபவம் இல்லை. சுதந்திர உணர்வு கொழுந்து விட்டு எரிந்து கொண்டிருந்த காலம் அது. இருந்த போதிலும் சென்னை உயர்நீதிமன்ற நீதிபதியாக ஆறுவருடங்கள் பணி மாற்றி வேறு மாநில உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதியாக மாற்றப்படும் வரையிலும் நமது உயர் நீதிமன்ற நீதிபதிகளும் வழக்கறிஞர்களும் அவரிடம் அன்பையும் ஆதரவையும் குவித்தனர் எனப் பெருமிதத்துடன் குறிப்பிடுகின்றார்.

நமது சட்டங்கள் ஆங்கிலச் சட்டங்களுக்கு எவ்விதத்திலும் குறைந்தல்ல என்று கருதும் நீதிபதி கில்செர்ட் இந்திய சட்ட இயலைக் கற்பதில் ஆர்வமும் காட்டினார், நமது சட்டம் ஆங்கிலச் சட்டமான ஈக்கியுட்டி (English Equity) யைப் போல நிறைவு பெற்றது என்பது அவரது கணிப்பாகும். அது நம்மை உணர்ச்சி வழி செலுத்தாமல் போதுமான அளவுக்குச் சிந்திக்க வைக்கின்றது. இங்குதான் இந்தியாவுக்கும் இங்கிலாந்துக்கும் உள்ள வேறுபாடு தெரிகின்றது. ஆங்கில நாட்டின் திறம் படைத்த வழக்கறிஞர் ஒரு வழக்கில் வலிவான ஒன்றிரண்டு வாதங்களையே வெற்றி பெற நீதிமன்றத்தின் முன் எடுத்து வைக்கின்றார். பல வலிவற்ற வாதங்களை எடுத்துச் சொல்வதைக் காட்டிலும், ஒன்றிரண்டு வலிவான வாதங்களை உடும்புப் பிடியாகப் பிடித்துக் கொள்வது நலம் என்று ஆங்கில நாட்டு ஆற்றல் படைத்த வழக்கறிஞர் கருதுகின்றார்.

ஆனால் இந்திய வழக்கறிர் வலிவான, வலிவற்ற வாதங்கள் என வேறுபாடு பார்ப்பதில்லை. வழக்கில் உள்ள தனக்குச் சாதகமான எல்லா வாதங்களையும் நீதி மன்றத்தின் முன் வைத்து விடுவது என்பது அவரது போக்கு என நீதிபதி கில்பர்ட் தனது அனுபவத்தில் கண்டார். இன்னொரு அனுபவத்தையும் அவர் குறிப்பிடுகின்றார். பொதுவாக இங்கு நீண்ட நேரம் வழக்கில் விவாதம் நடைபெறுகின்றது. சில வழக்குகளில் பல நாள் தொடர்ந்து வாதம் செய்வதும் இங்கு நடை பெறுகின்றது. ஆனால் ஆங்கில நாட்டு நீதிமன்றங்களில் சாதாரணமாக நீண்டநேர வாதங்கள் இருப்பதில்லை. வழக்கறிஞரின் வாதத் திறமை வேறு கோணத்தில் அங்கு மதிப்பிடப் படுவதே காரணம்.

சட்டத்தில் பெரும் புலமை பெற்றவர்கள் சென்னை வழக்கறிஞர்கள் என்றும், இந்தியத் துணைகண்டத்தில் இயங்கும் உயர்நீதிமன்றங்கள் வழங்கும் எல்லாத் தீர்ப்புகளையும் நமது வழக்கறிஞர்கள் தமது கை முனைகளில் வைத்துள்ளனர் என்றும் நீதிபதி கில்பெர்ட் நினைவுகூர்ந்துள்ளார். நமது உயர்நீதி மன்ற நீதிபதிகள் இந்திய நாட்டுச் சட்டங்களின் சிற்பிகளாகத் திகழ்ந்த அய்யர், அய்யங்கார், மற்ற சமுதாயங்களையும் சேர்ந்த நீதிபதிகளின் சிறந்த வாரிசுகள் என நீதிபதி கில்பர்ட் குறிப்பிட்டிருக்கின்றார். சென்னையிலிருந்து இந்து சட்டத்தின் உயர்ந்த கருத்துக்களை என் நாட்டுக்குச் சுமந்து சென்றேன் என்றும் அவர் குறிப்பிடுவது நமக்குப் பெருமை தரும் செய்தியாகும்.

''நீண்ட இடைவெளிகளைக் கொண்ட சென்னை மாநகரம்''

நீதிபதி பக்கின்காம் வால்ஸ்

நீதிபதி பக்கின்காம் வால்ஸ் 1932-1935ல் சென்னை உயர்நீதி மன்ற நீதிபதியாகப் பணியாற்றியவர். சென்னைக்கு அவர் புதியவரல்ல. நீதிபதியாவதற்கும் முன் 1899-லேயே சென்னைக்கு வந்துவிட்டார். அப்போது இன்று நுங்கபாக்கத்தில் மகளிர் கல்லூரியாக விளங்கும் பெரிய மாளிகையில் வசித்து தந்த நீதிபதி பென்சன் குடும்பத்துடன் வால்ஸ் தங்கினார். அந்தக் காலத்தில் பிளசர்கார்கள் இல்லாத காலம். சென்னையும் நீண்ட இடை வெளிகளைக் கொண்ட நகரமாகவும் இருந்தது. அதனால் நீதிபதி பென்சனை நுங்கம்பாக்கத்திலிருந்து உயர்நீதிமன்றத்துக்கு அழைத்துச்செல்ல இரண்டு

குதிரைகள் பூட்டிய ரதம் இருந்தது. அத்துடன் அவரது குடும்பத்தினரையும் மனைவியையும் கடைக்கும், மாலை வேளையில் மகளிர் சங்கத்துக்கு அழைத்துச் செல்ல இரண்டு குதிரைகள் பூட்டியரதம் ஒன்று தனியாக இருந்தது. இது தவிர நீதிபதி பென்சன் மாளிகையில் வேறொரு குதிரையும் அவசர காலத்துக்கென நிறுத்திவைக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு குதிரைக்கும் குதிரை தேய்ப்பவன், புல்கொள்ளுவைப்பவன் என இரண்டு ஆட்கள் வீதம் பத்து ஆட்களும் வண்டிகளை ஓட்டுவதற்கென சில ஆட்களும் இருந்தனர். அது தவிர தொலைபேசி வசதி இல்லாத காலமானதால் அரசு ஊழியர்கள் மாத்திரம் நீதிபதி பென்சன் வீட்டில் ஒரு பாடு இருந்தனர். பென்சனுடன் தங்கியிருந்த வேல்ஸ் பென்சன் மாளிகையில் காணப்பட்ட ஆள், அம்பு, பரிவாரங்களைக் கண்டு வியந்து போனார். அந்தக் கால உயர் நீதிமன்ற நீதிபதிக் கென இருந்த பரிகள், பரிவாரங்கள், ஆடை அணிகலன்கள் ஒருஅரசு குடும்பத்துக்குச் சேர்ந்த இளவரசன், அல்லது சீமான்களுக்கு இருந்தது போல் இருந்தன. அந்தக் காலத் தேவையை ஒட்டி தேவைப்பட்டது போலும்.

பின்னர் வேல்ஸ் திருநெல்வேலியில் மாவட்ட நீதிபதியாகச் சில காலம் பணியாற்றிய போது அவர் முன் ஒரு இன்சால்வென்சி மனு விவசாரணைக்கு வந்தது. அந்த மனுவில் ஒரு கம்பெனி மேலாளர் சென்னை உயர் நீதிமன்றத்துக்கு வழக்கை மாற்றுவதற்கென தலைமை நீதிபதி முர்ரே கூட்ஸ்டிராட்டர் முன் மனுத் தொடர்ந்தார். வழக்கைச் சென்னைக்கு மாற்றினால் வசதிபடைத்த ஒருவர் கம்பெனியின் உதவிக்கு வருவார் என்ற எண்ணத்தில் மேலாளர் தலைமை நீதிபதியின் முன் மனுப் போட்டிருந்தார். ஆனால் தலைமை நீதிபதி கூட்ஸ்டிராட்டர் திருநெல்வேலியிலிருந்து இல்சால்வென்சி வழக்கை சென்னைக்கு மாற்ற விரும்பவில்லை. காரணம் அந்தக்கம்பெனியின் சோக வரலாறேயாகும். அத்தகைய கம்பெனிக்கு உதவ சென்னையில் யாரும் முன் வரமாட்டார்கள் என்பது தலைமை நீதிபதியின் முடிவு. தலைமை நீதிபதி தனது தீர்ப்பில் நகைச் சுவை மிளிரப் பின்வருமாறு குறிப்பிட்டார். ''மாநிலத்தலை நகரில் கம்பெனியின் ஈமச்சடங்கை நடத்துவதை விட மாவட்டத்தலை நகரில் கம்பெனியை விளம்பரமின்றி நல்ல முறையில் கல்லறையில் புதைத்து விடுவது சாலச் சிறந்தது''.

வால்ஸ் உயர் நீதிமன்ற நீதிபதியான பொழுது, ஒரு உயர் நீதிமன்ற நீதிபதியின் தீர்ப்பு மரநிலம் முழுதும் எப்படிப்

பாதிக்கும் என்பதைக் கண்டார். நீதிபதி பாஸ்யம் அய்யங்காரின் ஒரு தீர்ப்பு மாநிலவருவாய்த் துறையில் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. புறம் போக்கு நிலங்களை ஆக்கிரமிப்புச் செய்தவர்களிடம் தண்டத்தீர்வை'' வசூலிப்பது நீண்ட காலமாக இருந்து வருடம் ஒரு சட்ட முறையாகும், இந்த முறையை

எதிர்த்து கூர்த்த மதியுடைய ஒருவர் வழக்குத் தொடர்ந்தார். புறம்போக்கு நிலம் தீர்வைக்குள்ளாகாத நிலமாதலால், தீர்வை விதிக்க முடியாது. அதுவும் தண்டத்தீர்வையும் விதிக்க இயலாது என்பதே வழக்குத் தொடர்ந்தவரின் வலுவான வாதம். அந்த வழக்குச் சில படிகளைக் கடந்து கடைசியில் நீதிபதி பாஸ்யம் அய்யங்கார் முன் வந்தது. அந்த வலுவான வாதத்தைப் பாஸ்யம் ஏற்றுக் கொண்டு தண்டத் தீர்வை விதிப்பது சட்டத்துக்கு முரணானது என தீர்ப்பு அளித்தார். வருவாய்த்துறையினர் என்ன செய்வது என விழித்தனர். புறம் போக்கை ஆக்கிரமிப்புச்செய்த ஒவ்வொருவர் மீதும் வழக்குத் தொடருவது சாத்தியமில்லை எனக் கண்ட வருவாய்த்துறையினர் பழைய முறையையே தொடர்ந்து நடைமுறையில் செய்துவந்தனர். மாற்று முறை எதுவும் தென்படவில்லை.

பின்னர் பாஸ்யம் அய்யங்கார் ஓய்வுபெற்றார். அவரையே இந்தச் சிக்கலைத் தீர்க்க ஒரு நடைமுறையைக் காணும்படி அரசாங்கம் வேண்டிக் கொண்டது. அவரும் சங்கடப்படாது இதை விளையாட்டாக எடுத்துக் கொண்டு அரசு கேட்டுக் கொண்டபடி ஒரு எளிய, பயனுள்ள நடைமுறை வாய்ந்த சட்ட ஆலோசனைகளைத் தந்து உதவினார் என நீதிபதி வால்சு குறிப்பிடுகின்றார். அவர் தந்த சட்ட ஆலோசனைகளின் படி ஒரு சட்டம் சட்டமன்றத்தால் உருவாக்கப்பட்டது. நீதிபதி பாஸ்யம் வழங்கிய தீர்ப்பால் எழுந்த சட்டசிக்கல் வழக்கறிஞர் பாஸ்யத்தால் தீர்தது வைக்கப்பட்டது சட்ட வரலாற்றில் சுவையான சம்பவமாகும்.

கேரளாவில் அந்தக காலத்தில் மாப்பிள்ளைக் கலவரம் ஏற்பட்டது. அது சம்பந்தமாக எழுந்த வழக்குகளில் ஒன்றை நீதிபதி பக்கின்காம் வால்சும், இன்னொரு வழக்கை நீதிபதி சேக்சனும் காலிகட்டில் தனித்தனியாக நடத்திக் கொண்டிருந்தனர். சாக்சன் முன் நடந்த வழக்கில் சாட்சி சொன்ன ஒரு பையன் ஒரு நாயர் வீட்டை மாப்பிள்ளைகள் தாக்கியதைத் தான் ஒரு அடுப்புக்குள் ஒளிந்திருந்து பார்த்தாகச் சொன்னான். நீதிபதி சாக்சன் அந்தப் பையனது சாட்சியத்தை நம்பாமல் ஒதுக்கிவிட்டார். நீதிபதி வால்சு முன் நடந்தவழக்கில்

அதே பையன் சாட்சி சொன்னான். நீதிபதி வால்சு பையன் சொல்லும் சாட்சி உண்மையாக இருக்குமா என்பதைக் கண்டறிய அந்த வீட்டை நேரில் சென்று பார்த்தார். அந்தப் பையன் சொன்ன சான்றுரை முற்றிலும் உண்மை கலவாதது என்பது அவர் கொண்ட முடிவாகும். ஒன்று அடுப்பு அந்தப் பையன் நுழைய இயலாத சிறிய அடுப்பாகும். இரண்டாவதாகச் சம்பவம் நடந்ததாகச் சொல்லப்படும் நாயர் வீட்டுக்கும், பையன் ஒளிந்திருந்து பார்த்ததாகச் சொல்லப்படும் அடுப்புக்கும் இடையே ஒரு சிறிய குன்று இருப்பதாகும்.

நீதிபதி வால்சு நீதிபதி சாக்சனுடன் உரையாட நேர்ந்த போது ''நீங்கள் அந்தப் பையனது சாட்சியத்தை நம்ப மறுத்தது முற்றிலும் சரியே. நானே சம்பவ இடத்தைப் போய்ப் பார்த்தேன்'' என்று சொன்னார்.

நீதிபதி சாக்சன், ''நண்பரே மகிழ்ச்சி. நான் சம்பவ இடத்தைப் பார்க்கவுமில்லை. ஆனால் அந்தப் பையனை நம்பவுமில்லை. ஒரு வகையில் இது நான் செய்த புண்ணியம் தான்.'' என ஆறுதல் அடைந்தார்.

''நான் உடன்படுகின்றேன். வெறொன்றும் சொல்வதுக்கில்லை''

நீதிபதி. பர்ன்.

நீதிபதி பர்ன் 1934—1942 ல் சென்னை உயர்நீதிமன்ற நீதிபதியாக விளங்கினார். அப்போது தலைமை நீதிபதியாக வீற்றிருந்த சர்லைனல் லீச்சுடன் நீதிமன்றத்தில் உட்கார்ந்து வழக்குகளை நடத்தினார் பர்ன். லைனல்லீச் தீர்ப்பைப் பின்னர் எழுதுவோம் எனத் தள்ளிவைப்பதில்லை. உடனுக்குடன் தீர்ப்பை வழங்கக் கூடிய நினைவாற்றல் பெற்றிருந்தார். ஆனால் அவரால் விரைவாகப் பேச இயலாது. தீர்ப்பைச் சொல்லும் போது நிறுத்தி நிறுத்தித்தான் சொல்வார். சில வேலைகளில் பொருத்தமான சொற்கள் கிடைக்காமல் திண்டாடுவார். ஆனால் குறிப்பிடத்தக்க அம்சம் என்னவென்றால் தீர்ப்பை வாயால் சொல்லும் போது தடுமாற்றமும், நீண்டும் இருந்தாலும் அச்சாகி வரும் போது அந்தத் தீர்ப்பு வியத்தகு முறையில் படிக்கச் சுவையாக இருக்கும்.

நீதிபதி பர்ன் லைனல்லீச்சுடன் சேர்ந்து உட்காருவதற்கு முன் அவரது நண்பர் ஒருவர் நீதிமன்றத்தில் நீண்ட விவாதத்திலும் விளக்கத்திலும் ஈடுபட வேண்டாம் என எச்சரித்திருந்

தார். அந்த அறிவுரை தனக்கு நல்லபயனைத் தந்தது என பர்ன் கூறுகின்றார். தலைமை நீதிபதியுடன் சேர்ந்து வழங்கும் தீர்ப்புகளில் ''நான் உடன்படுகின்றேன். அதற்கு மேல் சொல்லத் தேவையில்லை'' என்று முடித்து விடுவார்.

நீதிபதி சர்.எஸ். வரதாச்சாரியாரிடமிருந்து வழக்கறிஞர்களைப்பற்றியும், வாதாடும் திறம் பற்றியும் அறிந்துகொண்டதாக நீதிபதி பர்ன்குறிப்பிடுகின்றார். நீதிபதி வரதாச்சாரியர் வழக்குகளில் கூறப்பட்டுள்ள அத்துணை விவரங்களையும் நினைவில் வைத்திருக்கும் அபாரமான நினைவாற்றல் படைத்தவர். நீதிமன்றத்தில் சுட்டப்படும் முந்தைய தீர்ப்புகளின் பக்கங்களையும் கூட நினைவில் வைத்திருப்பார். வாதம்புரியும் வழக்கறிஞரிடத்தில் அமைதியாகவும் பண்புடனும் கேள்விகள் கேட்டு அவரது வாதத்தில் ஓட்டை ஓடிசல் உள்ளதென்று குறிப்பாக உணர்த்தும் திறன் படைத்தவர். வரதாச்சாரி பெடரல் நீதிமன்ற நீதிபதியாக உயர்த்தப்பட்டபோது சென்னை உயர் நீதிமன்றத்துக்கு அது பேரிழப்பென நீதிபதி பர்னும் மற்றவர்களும் கருதினர்.

நீதிபதி பர்ன் உயர்நீதிமன்ற நீதிபதியாக இருந்த காலை ஒரே ஒரு செசன்சு வழக்கை நடத்தவேண்டி வந்தது. அது புகழ்பெற்ற லச்சுமிகாந்தன் வழக்கு. லச்சுமிகாந்தன் ஏமாற்றினார் என பல குற்ற வழக்குகள் அவர்மீது சாட்டப்பட்டிருந்தன. முதலில் தலைமை நீதிபதி சர். ஓவன் பீஸ்லி முன் அந்த வழக்குகள் இருந்தன. அவருக்கு நேரம் போதவில்லையென அந்த வழக்குகளை நீதிபதி பர்னிடம் போட்டிருந்தனர். சூரிகளும் அந்த வழக்கில் இருந்தனர். லச்சுமிகாந்தனே வழக்கறிஞர் அமர்த்தாமல் வாதாடினார். போதுமான சட்டப் புலமை இல்லாததால் சாட்சிகளின் குருக்கு விசாரணையில் தொடர்ந்து சில கேள்விகளைத் திருப்பித் திருப்பிக் கேட்டுக் கொண்டிருந்தார். நீதிக பர்ன் நிலையை அறிந்து வேண்டுமளவுக்குப் பொருமையாக இருந்தார்.

''அந்தத் தேதியில் எனது அலுவலகத்தில் நீர் பார்த்ததாகச் சொல்லும் அந்த ஆள் நான்தான் என்று நிச்சயமாகச் சொல்ல முடியுமா அல்லது என்னைப்போல் இருந்த வரைப் பார்த்தீரா'' என்ற ஒரு கேள்வியை லச்சுமிகாந்தன் சாட்சியிடம் கேட்ட போது நீதிபதி பர்ன் பெருமையிழந்து கேள்விகளுக்கு முற்றுப்புள்ளி வைத்தார். லச்சுமிகாந்தன் வழக்கு தொடர்ந்து பல நாள் நடந்தது முடிவில் அய்ந்தே மணித்

துளியில் லச்சுமிகாந்தன் குற்றவாளி என சூரிகள் முடிவுக்கு வந்தனர். இதே லச்சுமிகாந்தன் சிறையிலிருந்து காவலர்களை ஏமாற்றி ஓடிவிட்டார். ஆனால் மீண்டும் அவர் கைது செய்யப்பட்டபோது அவரது கை விரல் முனைகள் வாயால் மெல்லப்பட்டிருந்தன. விரல் ரேகைகள் எடுக்கவிடாமல் செய்வதற்கே இப்படிச் செய்து கொண்டார் போலும் என நீதிபதி பர்ன் வியப்புடன் பகர்ந்துள்ளார்.

நீதிபதி பர்னுடன் டென்னிசு விளையாடியவர்கள் டெனிசு விளையாட்டில் புலியாக இருந்த நீதிபதி இலச்சுமண ராவ், நீதிபதி ஓவன் பீஸ்லி, நீதிபதி லைனல் லீச் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். நீதிமன்றத்துக்குரிய புனிதக் கருப்பு அணிகளைக் களைந்து டென்னிசு மன்றத்தில் குதிப்பது சுவையான நிகழ்ச்சி எனக் கருதும் நீதிபதி பர்ன் டென்னிசே நீதிபதிகளுக்கேற்ற விளையாட்டு என்றும்குறிப்பிடுவது நீதிபதிகளின் மேலான கவனத்துக் குறியதாகும்.

—

"உயர் நீதிமன்றம் ஆற்றும் உயரிய பணிகள்"

தமிழ் நாடு உயர் நீதிமன்றத்தின் பணி பெருகிவருகின்றது என்பதை முன்னரே பார்த்தோம். 1962 ல் தலைமை நீதிபதியுடன் 11 நிரந்தர நீதிபதிகள் இயங்கிவந்தனர். சுமார் 25 ஆண்டுகள் கடந்த இன்று தலைமை நீதிபதியுடன் 24 நிரந்தர நீதிபதிகள் உயர் நீதிமன்றத்தில் அமர்ந்து பணியாற்ற வேண்டிய அளவுக்குப் பணிகள் வளர்ந்துள்ளன என்பதைக் காண்கின்றோம்.

1962 ல் உயர் நீதிமன்றத்தின் பணியில் 7 அரசிதழ் (Gazetted), 386 அலுவலர்கள் (Ministerial Officials), 126 கடைநிலை ஊழியர்கள், 43 தற்காலிக ஊழியர்கள் இருந்தனர். இன்று உயர் நீதிமன்றத்தில் நடக்கின்ற விரிந்த பணிக் கேற்ப அலுவலர்களும் பெருமளவுக்குப் பெருகியுள்ளனர். இன்று 16 அரசு இதழ் பதிவு அதிகாரிகளும் (Gazetted) பல நூறு அலுவலர்களும் தற்காலிக ஊழியர்களும், கடை நிலை ஊழியர்களும் ஆணிவேறாக இருந்து உயர் நீதிமன்றம் என்ற வலிவும் பொலிவும் பொருந்திய அழகிய பெரிய மரத்தைத் தாங்கி செயல்பட்டு வருகின்றனர். உயர் நீதிமன்றத்தில் பணிபுரியும் அலுவலர் அழகிய மரத்தின் வேர்கள். அடிமரம் உயர் நீதிமன்ற எழில் உமிழும் கட்டிடம். தழைத்தோங்கும் தழைகள் அடங்கிய கிளைகள் உயர்நீதிமன்றத்தில் அமர்ந்து நீதி பரிபாலனம் புரியும் மாண்புமிகு நீதிபதிகள். கிளைகளில் தொங்கி பார்ப்பவரின் நெஞ்சங்களை அள்ளும் இனிய பழங்கள் உயர்நீதிமன்றம் வழங்கும் நீதியாகும். நீதி என்ற பழங்களை நோக்கியே மாந்தர் உயர்நீதி மன்றத்தை நாடுகின்றனர். நமது உயர் நீதிமன்றம் 1862ல் இந்திய மண்ணில் உருவான மூன்று நீதிமன்றங்களில் ஒன்று. சென்னை மாநகரில் முதலேற்பு வழக்குகளிலும், தமிழ் நாடு மாநிலம் முழுவதிலும் எழும் குற்றவியல், உரிமையியல் மேல் முறையீடுகளிலும், மேலும் வழக்கமாக உள்ளவைகளுக்கும் அதிகமான அளவில் உரிமையியல், குற்றவியல் முதலேற்பு வழக்குகளிலும் (Extra

ordinary Jurisdiction) இந்திய அரசியல் சட்ட அமைப்பின் கீழ் வழங்கப்பட்டுள்ள நீதிப் பேராணைகளிலும் (Writs) ஈடுபட்டு அவைகளை நடத்த நமது உயர்நீதி மன்றம் அதிகாரம் பெற்றுள்ளது.

கடலாண்மை வழக்குகள் (Admirality Jurisdiction) திருமண வழக்குகள், விருப்பாவணம், எழுதியும், விருப்பாவணம் எழுதாமலும் (Testamentary & Intestate Jurisdiction) இறப்பவரின் சொத்து சம்பந்தமான வழக்குகள், நொடித்த நிலையினர், கம்பெனி சம்பந்தமான வழக்குகள், இந்தியப் பித்தர் சட்டம் (Indian Lunacy Act) கார்டியன்வார்டு சட்டம் ஆகியவைகளின் கீழ் எழும் வழக்குகள் ஆகியவைகளிலும் உயர் நீதிமன்றம் தனித்த அதிகார வரம்பு படைத்துள்ளது. மேலும் உயர்நீதி மன்றத்தை அவமதிப்பவர்களைத் தண்டிக்கும் அதிகாரம் இந்திய அரசியல் சட்டம் பிரிவு 215-ன் படியும், கீழமை நீதிமன்றங்களை அவமதிப்பவர்களைத் தண்டிக்கும் அதிகாரம் நீதிமன்றங்கள் அவமதிப்புச்-சட்டதின்படியும் பெற்றுள்ளதையும் காணலாம். உயர்நீதி மன்றத்துக்கு உரிமையியல் நடைமுறை விசாரணைச் சட்டம், குற்றவியல் நடைமுறை விசாரணைச் சட்டம், சில தனித்தியங்கும் சட்டங்கள், அரசுப்பட்டயம் (Letters Patent) போன்றவைகளின் கீழ் மேலே சொன்ன அதிகாரங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன.

இவைகளைத் தவிர உயர்நீதி மன்றம் மேற்கொள்ளும் மேலும் சில பணிகளையும் இங்கு காணலாம்.

(1) இந்திய அரசியல் சட்டம் பிரிவு 226ன் கீழ் நீதிப் பேராணைகள் வழங்குதல்.

(2) இந்திய அரசியல் சட்டம் பிரிவுகள் 227, 235 ஆகியவைகளின் கீழ் மாநிலத்தில் இயங்கும் எல்லா நீதிமன்றங்களையும் கண்காணிக்கும் உரிமை படைத்துள்ளது.

(3) இந்திய அரசியல் சட்டம் பிரிவு 228ன் படி உயர்நீதி மன்றமே மற்ற நீதிமன்றங்களில் இருக்கும் வழக்குகளைத் தன் வசம் கொண்டு வருதல்.

(4) வருமான வரிச்சட்டம், விற்பனை வரிச்சட்டம், சொத்துரிமைச் சட்டம் (Estate Duty Act) பொருள் வள வரிச் சட்டம் (Wealth Tax Act) ஆகியவைகள் குறித்தும் உயர்நீதி மன்றம் அதிகாரவரம் கொண்டிருத்தல்.

(5) வழக்கறிஞர் சட்டம், சார்ட்டேர்டு கணக்காளர் சட்டம் ஆகியவைகளின் கீழ் ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளும் அதிகாரம்.

உயர் நீதிமன்றத்தில் மாஸ்டர் என்ற பதவி உண்டு. அப் பதவி கீழமை நீதிமன்றத்தில் நீதிபதியாகப் பணியாற்றிய ஒருவரே பெரும்பாலும் வகித்து வருகின்றார்.

உயர்நீதி மன்ற நீதிபதிகள் வழக்குகளில் தொடக்க காலத்தில் செய்யவேண்டிய பணிகளை மாஸ்டர் தானே மேற்கொண்டு செய்வதால் நீதிபதிகளின் சுமை கொஞ்சம் குறைக்கப்படுகின்றதெனலாம். உயர்நீதி மன்றத்தில் நிர்வாக முதல்வராக விளங்கும் பதிவாளர்(Registrer)பதவிக்கு அடுத்த நிலையில் இந்த மாஸ்டர் பதவி கருதப்படுகின்றகு.

"மாஸ்டரின் முக்கிய பணிகள்"

(1) கடனுறுதிச் சீட்டுகள், போன்றவைகளின் கீழ் எழும் வழக்குகளில் தீர்ப்பு வழங்குதல்.

(2) வழக்குகள், மேல் முறையீடுகள், மனுக்கள், இரு சாராரின் ஒப்புதலுடன் தள்ளுபடியாகவோ அல்லது ஒப்புதலுடன் தீர்ப்பு ஆகவோ அனுமதி வழங்குதல்.

(3) வழக்குகளில் எதிர்வாதி வாதம் செய்ய அனுமதி வழங்கலும், வாதுரைகளைத் திருத்தம் செய்யவும், சாட்சிகளை விசாரிக்கத் தேவையென்றால் ஆணையர் நியமனம் செய்தலும்.

(4) வழக்குகள் நடப்பது சம்பந்தமாக இருதரப்பினரும் தாக்கல் செய்யும் மனுக்கள் மீது ஆணை வழங்குதல்.

(5) சாட்சிகளை விசாரணை செய்தல்

(6) தீர்ப்புகளை நிறைவேற்றம் செய்யத் தாக்கல் செய்யும் மனுக்களில் தீர்ப்புக் கடனாளிகளைக் கைது செய்ய உத்திரவிடல், சொத்துக்களை சப்தி செய்தல், போன்ற பணிகள்.

(7) தீர்ப்புகளை நிறைவேற்றும்போது விற்பனையாகும் கிரயங்களை உறுதி செய்தல்.

(8) கம்பெனி சட்டத்தின் கீழ் பொது விசாரணை செய்தல்.

(9) இன்சால்வென்சி வழக்குகளில் கடன் வாங்கியவர்கள் தாக்கல் செய்யும் மனுக்களின்மீது ஆணைகள் வழங்குதல், இன்சால்வெண்டுகள் (நொடித்த நிலையினர்) கைது செய்யப் படுவதிலிருந்து பாதுகாத்தல், அவர்கள் நீதிமன்றம் வகுத்த கடமைகளிலிருந்து தவறினால், கைது செய்ய ஆணை வழங்குதல்.

(10) உயர்நீதி மன்றத்தில் தாக்கல் ஆகும் வழக்குகள் மேல் முறையீடுகள் ஆகியவைகளில் கட்டப்படும் நீதிமன்றக் கட்டணங்களை, நிர்ணயம் செய்து தொகைகளைப்பெறுதல்.

இறந்து போகின்றவர்களின் சொத்துகள்குறித்து மாவட்ட ஆட்சியர் நீதிமன்றத்தை நாடினால் அச்சொத்துக்களின் உண்மையான மதிப்பீட்டைக் கண்டுபிடித்தல்.

மேல் முறையீடுகள் சம்பந்தமான பணிகள் செய்ய துணை பதிவாளர், உதவிப் பதிவாளர்கள், கீழமை உதவிப் பதிவாளர் கள் போன்றவர்கள் உள்ளார்கள்.

குற்றவியல் பிரிவு

உயர்நீதி மன்றத்தில் உள்ள குற்றவியல் (Criminal) பிரிவு திறம்படச் செயல்புரிகின்றது. குற்றவியல் மேல்முறையீடுகளை யும், குற்றவியல் பல்வகை மனுக்களையும், குற்றவியல் சீராய்வு மனுக்களையும் பெற்று அவைகளைச் சரிபார்த்து நீதிமன்றத் தில் விசாரணைக்கென வைப்பதும், கீழமை நீதிமன்றங்கள் குறிப்பாக அமர்வு நீதிமன்றங்கள் ஏழு ஆண்டுகளுக்கு மேல் வழங்கும் தண்டனைகளை எதிர்த்துச் செய்யப்படும் வழக்கு களை விசாரணைக்கென வைப்பதும் இப்பிரிவின் முக்கிய பணி களில் குறிப்பிடத்தக்கவையாகும்.

உயர்நீதி மன்றத்தில் வழக்கறிஞர் பட்டியல் உண்டு. அமர்வு நீதிமன்றங்களால் கொலைத்தண்டனை வழங்கப்பட்ட வழக்குகளிலும், குற்றவாளிகளை விடுதலை செய்து வழங்கப் பட்ட தீர்ப்புகளை எதிர்த்துச் செய்யப்படும் வழக்குகளிலும் குற்றம் சுமத்தப்பட்டவர்களின் சார்பாக வாதாட முன் வந் துள்ள சில வழக்கறிஞர்களைக் கொண்ட பட்டியலே அது வாகும். அந்த வழக்கறிஞர்கள் நீதிமன்றங்களில் தோன்றி வழக்காடினால் அவர்களுக்கு அரசின் சார்பாக ஊதியமும் தரப்படுகின்றது. ''அமிகஸ்குயூரி'' என்ற வழக்கறிஞர் பட்டிய லும் உண்டு. இந்த வழக்கறிஞர்கள் உரிமை வழக்குகளிலும், குற்றவியல் வழக்குகளிலும் வாதாட அமர்த்தப்படுவர்.

"நிர்வாகப்பணி-உயர்நீதி மன்றப் பதிவாளர்"

உயர்நீதி மன்றம் நிர்வாகத் துறையிலும் பல பணிகளை ஆற்றி வருகின்றது. நிர்வாகத் தலைமைப் பொறுப்பு உயர்நீதி மன்றப் பதிவாளர் (Registrer) கையில் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றது. அவருக்கு உதவியாகப் பல துணைப்பதிவாளர்களும், உதவிப் பதிவாளர்களும் உள்ளனர். உயர்நீதி மன்ற நிர்வாகத்துறை அவரது நேரடி நிர்வாகத்திலும், முதலேற்புத் துறைப் (Original side) பகுதியும், மேல்முறையீட்டுத் துறைப் பகுதி (Appellate side)யும் அவரது மேற்பார்வையின் கீழும் இயங்கி வருகின்றன.

பதிவாளர், அரசிதழ் பதிவு பெறாத அலுவலர்களை நியமனம் செய்யும் பொறுப்பு வாய்ந்தவர். உயர்நீதி மன்ற உத்திரவுகளையும், செயல்பாடுகளையும் வெளியிடுவதுடன், அரசாங்கத்துடனும், பிற உயர்நீதி மன்றங்களுடனும், கீழமை நீதிமன்றங்களுடனும், கடிதப் போக்குவரத்து வைத்துக்கொள்ளும் செயலையும் பதிவாளரே மேற்கொண்டுள்ளார். விண்ணை முட்டும் எழில்வாய்ந்த உயர்நீதி மன்றக் கட்டிடம், உயர்நீதி மன்ற நூலகம் ஆகியவைகளும் அவரது பொறுப்பில் இருக்கின்றன.

அரசு உயர்நீதி மன்ற நிர்வாகத்துக்கென வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கும் தொகையை உயர்நீதிமன்றத்தில் செய்ய வேண்டிய பல்வேறு பணிகளுக்கு என ஒதுக்கும் அதிகாரமும் பதிவாளருடையதே. அத் துணை நீதிமன்ற வழக்குகளில் கட்சிக்காரரர்கள் நீதிமன்ற உத்தரவுகளுக்கேற்ப தரும் தொகைகளை வங்கிகளில் போட்டுக் காப்பதும் பதிவாளரின் வேலையாகும்.

உயர்நீதி மன்ற நீதிபதிகள் எந்தெந்த நீதிமன்றங்களில் அமர்ந்து வழக்குகளைக் கவனிக்கவும், தனி ஆயங்களை உருவாக்கவும் (Constitution of Benches) தலைமை நீதிபதி வழங்கும் உத்தரவுகளைச் செயல்படுத்துவதும் பதிவாளரின் பணியாகும்.

உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி மாநிலத்தில் இயங்கும் நீதித்துறை, நீதித்துறைக்கென இயங்கும் நிர்வாகத்துறை ஆகியவைகளின் தலைவர். நீதி நிர்வாகத் துறையின் பொதுக் கொள்கைகளை வகுக்கும் தலையாய பொறுப்பும் தலைமை நீதிபதியினுடையதாகும். அது சம்பந்தமான அத்துணை கோப்புகளையும் தலைமை நீதிபதியே பார்ப்பார். தலைமை நீதிபதி தாம் மேற்கொண்டுள்ள மகத்தான பணிகளை மற்ற

உயர்நீதிமன்ற நீதிபதிகளுடன் பகிர்ந்து கொண்டு அவர்களிடமும் சில முக்கிய பொறுப்புகளை ஒப்படைத்துள்ளதையும் காணலாம்.

ஒவ்வொரு மாவட்டம் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட மாவட்டங்களில் இயங்கும் கீழமை நீதிமன்றங்களைப் பார்வையிடும் பொறுப்பு நீதிபதிகளிடம் ஒப்படைக்கின்றது. நீதிபதிகள் மாவட்டங்களில் இயங்கும் கீழமை நீதிமன்றங்களைப் பார்வையிட்டு அவைகள் இயங்குகின்ற விதம், அங்கு காணப்படும் குறைபாடுகள், அவைகளை நீக்குகின்ற வழிமுறைகள், போன்றவைகள் குறித்து அறிக்கை தயார் செய்து உயர்நீதிமன்றத்தில் வைக்கின்றனர். இப்போது புதிதாக மாவட்ட நீதிபதிகள் ஏற்றுள்ள இலவச சட்ட ஆலோசனைக் கழகங்களின் பணிகளிலும் உயர்நீதிமன்ற நீதிபதிகள் ஆர்வம் காட்டிவருகின்ற நிலையும் வளர்ந்து வருகின்றது.

நிர்வாகப்பணிகளில் முக்கியம் பெற்றவை

1. மாவட்ட முன்சீப்புகள், உதவி நீதிபதிகள், குற்றவியல் நடுவர்கள் ஆகியோரைக் குறிப்பிட்ட இடங்களில் பணி செய்ய அனுப்புதல், பின்னர் மூன்று ஆண்டுகளுக்கு ஒருதடவை மாற்றுதல், அவர்களுக்கு பதவி உயர்வு அளித்தல்.

2. கீழமை நீதிமன்ற நீதிபதிகளின் மேல் தேவையென்றால் ஒழுங்கு நடவடிக்கை எடுத்தல்.

3. அரசு ஒதுக்கும்தொகையை ஒழுங்காக வகுத்துப் பல்வேறு பணிகளுக்குப் பயன்படுத்துதல்.

4. கீழமை நீதிமன்ற நீதிபதிகள் தாம் செய்து முடித்து அனுப்பும் பணிக் குறிப்புகளைப் பார்வையிடுதலும், அவை சம்பந்தமாகத் தமது கருத்துக்களைக் குறித்தலும்.

5. நீதிமன்றங்களுக்குத் தேவையான கட்டிடங்களுக்கான பரிந்துரை செய்தல், அத்துடன் வழக்கறிஞர் சங்கங்களுக்குத் தேவையான கட்டிடங்களுக்கான பரிந்துரையும் செய்தல்.

6. இன்சால்வெண்டு கடன்காரர்களின் சொத்துக்களைப் பேணும் சொத்துப் பேணுநரின் பணிகளை மேற்பார்வை செய்தல்.

7. கீழமை நீதிமன்றங்களைப் பார்வையிடுதல்.

8. உயர்நீதிமன்ற வழக்கறிஞர்கள் நடத்தை சம்பந்தமாக வரும் மனுக்களைப் பரிசீலனை செய்தல்.

9. கீழமை நீதிமன்றங்களில் பணி செய்யும் பணியாளர்கள் செய்யும் முறையீடுகளைப் பரிசீலனை செய்தல்.

10. அரசாங்கம் சில மசோதாக்கள் மீது உயர்நீதிமன்றத்தின் கருத்துரை கேட்கும் வேளையில் அவ்வேண்டுகோளை ஏற்றுக் கருத்துத் தெரிவிதத‌ல்.

11. கீழமை நீதிமன்றங்களுக்குச் சட்டப் புத்தகங்களையும், சட்ட இதழ்களையும் படிவங்களையும், பதிவேடுகளையும், தட்டச்சுகளையும் தட்டுமுட்டுச்சாமான்களையும், வழங்குதல்.

12. நீதிமன்றங்களின் விடுமுறை நாட்களையும், வெயில் கால விடுமுறைகளையும் குறிப்பிடுதல்.

13. உரிமையில் நீதிமன்றங்களின் அதிகார வரம்புகளை நிர்ணயம் செய்தல்.

14. உரிமையியல், குற்றவியல் சம்பந்தமான ஆண்டுப் புள்ளி விவரங்களைத் தயார் செய்தல்.

15. கீழமை நீதிமன்றங்களுக்கு அவ்வப்பொழுது தேவையான அறிவுரைகள் வழங்குதல்.

"சென்னை வழக்கறிஞர் மாமன்றம்"

சென்னை உயர் நீதி மன்ற வரலாற்றில் அதில் அமர்ந்து நீதி வழங்கும் நீதிபதிகள் எந்தளவு முக்கிய பங்கை வகிக்கின் றார்களோ அந்தளவுக்கு அதில் தோன்றி வாதாடும் வழக்கறி ஞர்களின் பங்கும் முக்கியமானதாகும். வழக்கறிஞர்கள் இன்றி நீதிபதிகளும் இல்லை. இருக்கவும் முடியாது என்பது உண்மை யாகும். நீதித்துறை சிறப்புடன் இயங்க நீதிபதிகளும் சட்டங் களும் மாத்திரம் போதாது. சட்டங்களில் புலமை பெற்று அவைகளைக் குறிப்பிட்ட வழக்குகளில் நீதி மன்றங்களின் முன் எடுத்து வைக்கும் வழக்கறிஞர்களும் தேவையாகும். நீதிமன் றங்களின் ஒருபகுதியாகச் செயல்படும் வழக்கறிஞர்களுக்குள்ள பல சிறப்புகளில் குறிப்பிடத்தக்க சிறப்பு அவர்களது அரிய தொண்டு பல்வேறு துறைகளிலும் வேண்டப்படுவதாகும்.

"இராசதந்திரம் வாய்ந்த வழக்கறிஞர்கள் என்றுமில்லாத படி இன்று நாட்டுக்கு மிகவும் தேவைப்படுகின்றனர். சமு தாயம், நாடு ஆகியவைகளைச் சிந்திக்கின்ற வழக்கறிஞர்கள் நீதிமன்றத்திலும், சட்டமன்றங்களிலும், உயர் நிர்வாகத் துறை யிலும் பணியாற்ற நாடு அவர்களை அழைக்கின்றது" என ஒரு சமயம் அமெரிக்கக் குடியரசுத் தலைவர் டேப்ட் சுட்டிக் காட்டினார். (The Country needs lawyers who are also statesmen more than before. It needs them in Courts, in its legislatures, in its Seats of Executive authority lawyers who can think in terms of Society—President taff of U.S.A). அவரது அழைப்பு நம் நாட்டுக்கும் மிகவும் பொருந்தக் கூடியதாகும். சட்டத் துறை வழக்கறிஞர்களையும், வழக்கறிஞர் சமுதாயம் நீதிபதிகளையும் தோற்றுவிக்கின்றன. வழக்கறிஞர்களின் இயல்பைக் கொண்டு நீதிபதிகளின் இயல்பை அறிந்து கொள்ள முடியும். இன்றைய வழக்கறிஞர்கள் நாளைய நீதிபதிகள் என்பதால் வழக்கறிஞர் சங்கத்தின்முக்கிய பங்கை நாம் ஒரு வாறு உணர முடிகின்றது.

ஆங்கில நாட்டின் லார்டுசான்சிலர் லார்டு ஆல்டன் ஒரு சமயம் அமெரிக்க வழக்கறிஞர் சங்கத்தில் உரையாற்றும்

போது அந்த உண்மையை மிக அழுத்தம் திருத்தமாகக் குறிப்பிட்டுக் காட்டினார்.

நீங்கள் (வழக்கறிஞர்கள்) எப்படி இருந்தீர்களோ நாங்கள் அப்படி இருக்கின்றோம். நீங்கள் இப்போது எப்படி இருக்கின்றீர்களோ நாங்கள் அப்படி இருப்போம்'' (We may well proclaim in the words of Spartans. "We are as you were. We Shall be as what you are-" Lord Haldane (Lord chancellor of England) in his address to American Bar Association)

வழக்கறிஞர்கள் பற்றி ரோம நாட்டு சஸ்டினியன் சட்டத் தொகுப்பு நமக்கு பின் வருமாறு நினைவுபடுத்துகின்றது. ''சட்டம் நல்லதையும் நியாயத்தையும் கூறும் கலை. வழக்கறிஞர்கள் அத்தகைய சட்டத்தின் தகுதி படைத்த பூசாரிகளாய் இருக்கின்றனர். அவர்கள் நியாயத்தைச் சீர்படுத்துவதுடன் எது நல்லது. நியாயமானது என்பதையும் தெரிந்து வைக்கும் வாய்ப்பைப் பெற்றிருக்கின்றனர். நியாயத்திலிருந்து அநியாயத்தையும் சட்டத்திலிருந்து சட்டத்துக்கு எதிரானவைகளையும பகுத்தறிந்து பார்க்கும் தகுதியும் பெற்றவர்கள்.''

உலகில் மனிதர்கள் என்று சமுதாயமாக வாழத்தலைப் பட்டார்களோ அப்பொழுதே மனிதர்களில் வலிவற்ற வாய் பேசத் தெரியாத பலருக்காக வாதாடசிலர் தேவைப்பட்டனர். அந்தச் சிலர்தான் வழக்கறிஞர்கள், ஆகவே வழக்கறிஞர் தொழில்தான் உலகில் முதன் முதலாகத் தோன்றிய தொழில் என்றும் கூறுவார்கள். தமிழக வரலாற்றை நோக்கினாலும் மக்களுக்காக மன்னர்களிடத்திலும்அரசின் உயர் அதிகாரிகளிடத்திலும் வாதாடுவதற்கென நல்லிசைப் புலவர்பலர் வழக்கறிஞர்களாகச் செயல்பட்டதை நாம் காண முடிகின்றது. செந்நாப் புலவர் பலர் ஊதியம் பெறாத வழக்கறிஞர்களாகச் செயல்பட்டதை வரலாறு நயம்பட உரைக்கின்றது.

சோழன் கிள்ளி வளவன் நடைபெற்ற ஒரு போரில் கடையேழுவள்ளல்களுள் வரையாது வழங்கிப் பெரும் புகழ் ஈட்டிய மலையமான் திருமுடிக்காரியின் இளம் மக்களைக் கைப்பற்றினான். ஒன்றும் அறியாத அவ்விளங்குழந்தைகளுக்கு வளவன் வழங்கிய தண்டனை யானையின் காலில் இட்டுக் குழந்தைகளைக் கொல்வதாகும். குழந்தைகளுக்காக வாதாட யாரும் முன் வராத நிலையில் கோவூர்க் கிழார் என்ற செந்நாப்புலவர் ஆற்றல் வாய்ந்த மன்னன் முன்தோன்றி.

''சோழர் பெருங்குடியில் தோன்றிய மன்னர் பிரானே, நீதான் ஓர் புறாவின் துன்பத்தை நீக்கத் தன் உயிரையே கொடையாகத் தந்த கருணை வள்ளல் சோழன் மரபில் தோன்றியுள்ளாய். இச் சிறார்களோ அறிவால் உழுதுண்ணும் கற்றோரது வறுமைத் துன்பத்துக்கு அஞ்சி தம்மிடம் உள்ள பொருள் அனைத்தையும் பகுத்தளிக்கும் தண்ணிய அருளையுடையவரின் மரபில் உதித்துள்ளனர், இவர் இப்பொழுது களிற்றைக் கண்ட வியப்பால் முன்பு வெருவியழுத அழுகையை மறந்து நிற்கின்ற சிறுபிள்ளைகள். மக்கள் கூடிய இம் மன்றத்தினை மருண்டு நோக்கி முன்பு அறியாத புதியதோர் மருட்சியும் வேதனையும் அடைந்துள்ளனர்.''

என்று கிள்ளிவளவன் உள்ளத்தைத் தொடும்படி நயம்பட வாதாடினார். நியாயத்தையும் கருணையையும் வேண்டி புலவர் பெருமகன் புரிந்த வாதம் மன்னரின் உள்ளத்தை நெகிழ வைத்தது. முடிவு மன்னர் தான் விதித்த தண்டனையே மாற்றி குழந்தைகளை விடுதலை செய்தார்.

இதே மாமன்னன் கிள்ளிவளவன் பிறிதொரு தடவை சேர நாட்டைச் சேர்ந்த கருவூர் நகரை முற்றுகையிட்டான். சேர மன்னனோ கிள்ளிவளவனுடன் போர்புரியும் ஆற்றலும் துணிவுமின்றி மதிலை அடைத்துக் கொண்டு உள்ளேயிருந்தான். மதில் சூழ்ந்த நகருக்குள் வாழ்ந்த மக்கள் படும் துன்பமோ எல்லையற்று இருந்தது. ஆனால் அதை எடுத்துச் சொல்லி அவர்கள் துன்பம் துடைக்க யாரும் இல்லாத நிலையில் ஆலந்தூர் கிழார் என்ற செந்நாப்புலவர் கிள்ளிவளவனிடம் மதில் சுவர்களுக்குள் மக்கள் விடும் கண்ணீரைச் சுட்டிக்காட்டி வீரமும், விவேகமும் இல்லாத ஒரு மன்னன் கீழ் வாழும் மக்களுக்கு நீ வழங்கிய தண்டனை போதும், விடுதலை தாராய் மாமன்னனே எனவாதாடினார். கிள்ளிவளவனும் முற்றுகையை விலக்கி மக்களுக்கு விடுதலை தந்தான் என்பது வரலாறாகும்.

இருபெரும் புலவர்கள் தம்மை வழக்கறிஞர்களாக்கிக் கொண்டு நம் தலைசிறந்த வழக்கறிஞர்கள் தமது வாதத் திறமையால் பலரின் கண்ணீரைத் துடைப்பது போல் அன்றும் பலரின் கண்ணீரைத் துடைத்த செய்தி வழக்கறிஞர் பால் நாம் கொள்ள வேண்டிய மதிப்பை உயர்த்துகின்றது.

சென்னையில் படிப்படியாக பல நீதிமன்றங்கள் தோன்றிய வரலாறு நமக்கு ஓரளவு கிடைத்துள்ளதைப் பார்த்தோம். ஆனால அந்த நீதிமன்றங்களில் தோன்றி வாதாடிய வழக்கறிஞர் குழுவைப் பற்றித் தெரிந்து கொள்ளத் தெளிவான ஆதாரம் காணப்படவில்லை. இந்த நாட்டில் ஆங்கிலேயர் காலடி

வைப்பதற்கு முன்னும் சில நீதிமன்றங்கள் இருந்தன. ஆங்கிலேயர் சென்னையில் நுழைந்து காலூன்றிய காலத்தில் சவுலட்டரி நீதிமன்றம் தோன்றியது. இதுமுன்னரே இயங்கிய சத்திர நீதிமன்றங்களின் புது வடிவமே என்பதில் அய்யமில்லை. பின்னர் சென்னையில் படிப்படியாக சூடிக்கேச்சர் நீதிமன்றம், மேயர் நீதிமன்றம் போன்றவைகளும் தோன்றின. மேலே சொன்ன நீதிமன்றங்களில் வழக்கறிஞர் தொழில் செய்தவர்களைப் பற்றிய விவரங்கள் நாம் தெரிந்து கொள்ளும் அளவுக்குப் போதுமானதாக இல்லை.

1798ல் ரிக்கார்டர் என்ற நீதிமன்றம் சென்னையில் உருவானபோது நிர்வாகத்தில் ஒரு புதிய மலர்ச்சிஏற்பட்டது. ரிக்கார்டர் நீதிமன்றத்துக்கு வழக்கறிஞர் தொழில் செய்யக் கூடிய தகுதி வாய்ந்தவர்களைக் கண்டுபிடித்து அவர்களது பட்டியல் தயார் செய்து தொழிலில் ஈடுபடுத்தும் அதிகாரம் கொடுக்கப்பட்டிருந்தது. அவர்கள் மேயர் நீதிமன்றத்தில் உண்மையாகவே தொழில் செய்திருக்க வேண்டும். இங்கிலாந்திலோ அல்லது அயர்லாந்திலோ படித்த பாரிஸ்டர்களாகவும் இருக்கலாம். இத்தகையோரைத்தான் அட்வகேட்டுகளாகவும் அட்டர்னிகளாகவும் ஏற்றுத் தொழில் செய்யும் தகுதியை அவர்களுக்கு அளிக்கும் பொறுப்பை ரிக்காக்ட்ர் நீதிமன்றத்தில் விடப்பட்டிருந்தது.

1798 நவம்பர் 3-ந் தேதி தயார் செய்த வழக்கறிஞர் பட்டியலில் 12 பேர்தான் அட்வகேட்டுகளாகவும் அட்டர்னிகளாகவும் இடம்பெற்றனர். இவர்கள் அனைவரும் நோட்டரி பப்ளிக்காகவும் பின்னர் புரோக்டர் (Procter) என்ற பதவி வகிப்பவர்களாகவும் கருதப்பட்டனர். ரிக்கார்டர் நீதிமன்றத்தில் இந்தப் பனிரெண்டு பேர் கட்சிக்காரர்களுக்காக வழக்குகளில் தோன்றி வாதாடவும், வழக்குகளை நடத்தவும் உரிமை பெற்றிருந்தனர். சென்னையில் உச்சநீதி மன்றம் (Supreme Court) தோற்றுவிக்கப்படும் வரையிலும் பட்டியலில் இடம் பெற்ற இந்தப் பனிரெண்டுபேர் "சென்னை வழக்கறிஞர் மன்றம்" (the Bar of Madras) எனச் செயல்பட்டனர் என்பதை "தி மெட்ராசு சூரிஸ்டு" என்ற ஏடு குறிப்பிடுகின்றது.

ஏசு பெருமானுக்கு 12 சீடர்கள் இருந்தனர் என்பதும் அந்த 12 சீடர்களே பெரு இயக்கமாக வளர்ந்தனர் என்பதும் வரலாறாகும். ரிக்கார்டர் நீதிமன்றத்தின் பட்டியலில் இடம் பெற்ற 12 வழக்கறிஞர்களே பின்னர் சென்னை வழக்கறிஞர்

மாமன்றம் என்ற மகத்தான இயக்கம் வளரக் காரணமாக இருந்தனர் என்பது ஒரு சுவைமிக்க] வரலாறாகவே தென்படுகின்றது. அந்தப் பனிரெண்டுபேர் வழக்கறிஞர் மன்றத்துக்கு அடிகோலியவர்கள் என்றும் வர்ணிக்கப்படுகின்றனர்.

1800ல் உருவாக்கப்பட்ட சென்னை உச்சநீதி மன்றம் (Supreme Court) வழக்கறிஞர்களைப் பொருக்குவதில் விரிவான அதிகாரம் பெற்றிருந்தது. உச்சநீதி மன்றம்தானே வழக்கறிஞர் தொழிலுக்கு வருவோர்க்கென சில சட்ட விதிகளையும், தகுதிகளையும் உருவாக்கியது. ரிக்கார்டர் நீதி மன்றத்தில் உண்மையாகவே தொழில் நடத்தினர் என்பதைத் தவிர உருவாக்கப்பட்ட சட்ட விதிகள். தகுதிகளின் அடிப்படையிலும் புதிதாக வழக்கறிஞர்களாகச் சிலர் இடம்பெற முடிந்தது. மேலும் இங்கிலாந்து, அயர்லாந்து போன்ற இடங்களில் பாரிஸ்டர்களாக இருந்தவர்களும், வெஸ்டு மினிஸ்டர் என்ற இடத்தில் இயங்கும் நீதிமன்றத்தில் தொழில் நடத்தும் அட்டர்னிகளும் சொலிசிட்டர்களும் சென்னை உச்சநீதி மன்றத்தில் வழக்கறிஞர்களாகப் பணியாற்றும் தகுதி பெற்றிருந்தனர்.

மேலே குறிப்பிட்டவர்கள் மாத்திரம் வழக்குகளில் உச்ச நீதிமன்றத்தில் தோன்றி வாதாடவும் வழக்குகளை நடத்தவும் இயலும் என்பதும். விரும்பத்தகாத செயல்களில் ஈடுபடுபவர்களை வழக்கறிஞர் பட்டியலிலிருந்து நீக்கிவிடும் அதிகாரத்தை உச்சநீதி மன்றம் பெற்றிருந்தது என்பதும் குறிப்பிடத்தக்கவைகளாகும்.

உச்சநீதிமன்றம் (supreme court) சென்னை நகருக்கென்றே இயங்கி வந்ததால், மாநிலத்தின் உள்பகுதிகளில் அதலெத் மக்கள் நீதிமன்றங்கள் உருவாக்கப்பட்டன. அந்த நீதிமன்றங்களின் தீர்ப்புகளுக்கெதிராக செய்யப்படும் மேல்முறையீடுகளைக் கவனிக்க சென்னையில் சதர் அதலெத் நீதிமன்றங்கள் மேல் முறையீட்டு நீதிமன்றங்களாகச் செயல்பட்டன. சென்னையில் இயங்கிய உச்சநீதி மன்றத் தீர்ப்புகளுக்கு எதிராக மேல்முறையீடுகள் இலண்டனில் உள்ள பிரிவு கவுன்சிலுக்கே எடுத்துச் செல்லப்பட்டன.

இந்த இரண்டு வகை நீதிமுறையே (dual Judicial Systems one Supreme Court for the British nationals and another Adawlut Court for the Indians) தொடக்கத்தில் ஆங்கிலேயர்களே நிரம்பிய பாரிஸ்டர்கள் என்ற குழுவும், இந்தியர்களே முழுவதுமாக நிரம்பிய வக்கீல் என்ற குழுவும் தோன்றுவதற்கு

காரணமாக இருந்தது என்று கூறலாம். தொடக்க காலத்தில் நீதித் துறையில் கொண்டுவரப்பட்ட இந்த இருவகை நீதி முறைபோல, பின்னர் மாநிலங்களில் நிர்வாகத் துறையிலும், ஆங்கில அமைச்சர்கள், இந்திய அமைச்சர்கள் என்ற இரட்டை ஆட்சி (dual system) முறை ஏற்பட்டது நம் நினைவுக்கு வருகின்றது. நிர்வாகத் துறையில் ஏற்பட்ட இந்த இரட்டை ஆட்சி முறைக்கு நீதித் துறையில் ஏற்பட்டிருந்த இருவகை நீதி முறை முன்னோடியாக இருந்தது போலும்.

சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கறிஞர்கள்

சென்னையில் உயர்நீதிமன்றத்தின் தோற்றம் ஒரு புதிய அத்தியாயத்தைத் தோற்றுவித்தது என்பதை முன்னரே கண்டோம். சென்னை வழக்கறிஞர் வாழ்விலும் உயர்நீதி மன்றம் புதிய தெம்பையும், உற்சாகத்தையும், ஊக்கத்தையும் தோற்றுவித்ததில் வியப்பில்லை.

1962 ஆகஸ்டு திங்கள் 15ந் தேதியன்று புதிய உயர் நீதி மன்றம் தொடங்கப்பட்ட அன்று முதல் தலைமை நீதிபதியாக பதவியேற்றிருந்த சர். ஸ்காட்லேண்டு பின்வருமாறு அறிவித்தார். ''சென்னை உச்ச நீதி மன்றத்தில் தொழில் செய்த பாரிஸ்டர்கள், அட்வகேட்டுகள், சொலிசிட்டர்கள், அட்டர்னிகள் ஆகியோரும், சதர் நீதிமன்றங்களில் தொழில் புரிந்த வக்கீல்களும் இனி உயர்நீதிமன்றப் பதிவேட்டில் அட்வகேட்டுகளாகவும், வக்கீல்களாகவும், அட்டர்னிகளாகவும் குறிக்கப் படுவார்கள். அட்வகேட்டுகள் கட்சிக்காரர்கள் சார்பில் உயர் நீதி மன்றத்தில் தோன்றி வாதாடவும் (appear & Plead) அட்டர்னிகள் வழக்குகளில் கட்சிக்காரர்களுக்காகத் தோன்றவும். செயல் புரியவும் (appear & act) உரிமையுண்டு. வக்கீல்கள் சதர் நீதி மன்றங்களில் நடந்தது போல் மேல் முறையீட்டு வழக்குகளில் கட்சிக்காரர்களுக்காகத் தோன்றி வாதாடவும், செயல் புரியவும் (appear, plead & act) உரிமை பெற்றவர்கள். இனி வரும் நாட்களில் வழக்கறிஞர் தொழில் நடத்த விரும்புவர்களின் கல்வித் தகுதிகள், அனுமதி தருதல் போன்றவைகளை சமயம் வாய்க்கும் போது நிர்ணயம் செய்ய விதிகள் வகுக்கப்படும்.''

தலைமை நீதிபதியின் அறிவிப்பிலிருந்து உயர் நீதி மன்றத்தின் முன் வரும் முதலேற்பு வழக்குகளில் (Origmal Cases) வக்கீல்கள் எனப்படுவோர் வாதாட இயலாது என்பதை அறிய முடிகின்றது. அத்தகைய வழக்குகளில் வக்கீல்கள் ஒதுக்கப்

பட்டுள்ளனர் என்பது தான் பொருளாகும். அதாவது ஆங்கிலேய வழக்கறிஞர்கள் உச்ச நீதி மன்றத்தில் பெற்றிருந்த செல்வாக்கு, ஆதிபத்தியம் உயர் நீதி மன்றத்திலும் நீடிக்கப்பட்டது. ஆனால் இந்த ''ஒதுக்கலை'' வக்கீல்கள் தாங்கிக் கொள்ளத் தயாராக இல்லை என்பதையே பின்னர் நடந்த சம்பவங்கள் காட்டுகின்றன.

1866ல் உயர் நீதி மன்றம் உருவாக்கிய விதிகள் 4&5 உயர் நீதி மன்றத்தில் தொழில் செய்யும் பாரிஸ்டர்கள். அட்டர்னிகள், வக்கீல்கள் ஆகிய எல்லோரும் சமமான வசதிகளையும், உரிமைகளையும் பெற்றவர்கள் என அறிவித்தன, அட்டர்னிகள் இதை எதிர்த்துக் குரல் கொடுத்தனர். வக்கீல்களுக்கும் சமவாய்ப்புக் கொடுக்கப்பட்டால் தங்களுக்கிருக்கும் வாய்ப்புக்கள் குறைந்து விடும் என்ற அஞ்சியே அட்டர்னிகள் தலைமை நீதிபதிக்கும் மற்ற நீதிபதிகளுக்கும் 4&5 விதிகளை மாற்றி அமைக்கும்படி மனுச் செய்தனர்.

தலைமை நீதிபதி மார்கன் நீதிபதிகள் இன்னசு, கெர்னன், கிண்டர்ஸ்லி ஆகியோர் மூன்னிலையில் இந்த மனு விசாரணைக்கு வந்தது. அட்டர்னிகளுக்காக மிகுந்த ஆற்றலும் புகழும் பெற்றிருந்த திரு.ஓசுல்லிவன் வாதாடினார், வக்கீல்கள் சார்பாக இராசா இராமராவ், அனந்தாச் சார்லு ஆகிய புலமை வாய்ந்த வக்கீல்கள் வாதிட்டனர்.

நீதிபதிகள் இரு சாராரின் வாதங்களையும் கேட்டு, வழங்கிய தீர்ப்பில் விதிகள் 4&5 உயர் நீதிமன்றத்தின் அதிகார எல்லைகளைத் தாண்டவில்லை எனக்குறிப்பிட்டனர். வக்கீல்களும் முதலேற்பு வழக்குகளிலும் உயர் நீதி மன்றத்தில் கட்சிக்காரர்களுக்காகத் தோன்றி வாதாட வாய்ப்புண்டு என்பதை தீர்ப்பு உறுதி செய்தது. இந்த முடிவு ஒரு மனுவின் பேரில் ஏற்பட்டதால் பின்னர் தோன்றிய சில வழக்குகளிலும் வக்கீல்களுக்கு ஏற்பட்டிருந்த இந்தக் குறைபாடுகள் தீர்வுக்கு வர வேண்டிய நிலை ஏற்பட்டது.

தலைமை நீதிபதி கூட்சு டிராட்டர் ஒரு வழக்கில் இந்த சிக்கலை வரலாற்றுக் கண்கொண்டு பார்த்து ஆய்ந்து தீர்ப்பு வழங்கினார். அவர் சுல்லிவன் X நார்டன் (I.L.R.I Madras-24 என்ற வழக்கில் தரப்பட்ட தீர்ப்பை முன் மாதிரியாக ஏற்றுக் கொண்டு வக்கீல்களும் முதலேற்பு வழக்குகளில் தோன்றி வாதாடும் உரிமையுள்ளவர்களே என உறுதி செய்தார்.

இப்படி வக்கீல்களின் உரிமைக்காகப் போராடிய காலத்தில் உயர் நீதி மன்றத்தில் வக்கீல்களின் தொகை வெறும் 34

தான் என்பது நமக்கு வியப்பாக இருக்கின்றது. அன்று அந்த 34 பேர் துணிந்து உரிமைக்காகப் போராடியதன் விளைவு வக்கீல்களும் பாரிஸ்டர்களுக்குக் குறைந்தவர்களல்ல என்ற நிலை ஏற்பட்டதாகும்.

வக்கீல்களுக்கு இன்னொரு குறைபாடும் இருந்தது. அவர்கள் இன்சால் வென்சி வழக்குகளிலும் தோன்றி வாதாட முடியாது என்பதே அக்குறைபாடாகும். 1907ல் ஆர்புத்நாட் கம்பெனி என்ற இன்சால் வென்சி வழக்கில் வக்கீல்வி. கிருஸ்ணசாமி அய்யர் தோன்றி வாதாட அமர்த்தப்பட்டார். அவருக்கு எதிர்ப் புறம் வாதாடிய வழக்கறிஞர்கள் வி. கிருஷ்ணசாமி வக்கீல் என்ற முறையில் இன்சால் வென்சி வழக்கில் தோன்றி வாதாட உரிமையில்லை என வாதாடினர். அன்றிருந்த நிலையில் உயர் நீதிமன்றமும் அந்த வாதத்தை ஏற்றுக்கொண்டது. கிருஷ்ணசாமி வெகுண்டெழுந்தார். ''மாண்புமிகு நீதிபதியவர்களே வக்கீல் என்ற முறையில் நான் அணிந்திருக்கும் கவுனைக் கழற்றி விடுகின்றேன், இந்த வழக்கில் கட்சிக்காரன் என்ற முறையில் நீதிமன்றத்தின் முன் தோன்றி வாதாடுகின்றேன்'' என்று சமயோசிதமாக வாய்ப்பைத் தானாக ஏற்படுத்திக் கொண்டு வாதிட்டார் எனத் தெரிகின்றது.

1926,ல் பார்கவுன்சில் சட்டம் (XXXVIII of 1926) உயர்நீதி மன்றத்தில் வழக்கறிஞர்களாகப் பதிவு செய்த வழக்கறிஞர்கள் அனைவரும் இன்சால்வென்சி வழக்கிலும் ஆசராகலாம் என்று கூறியது. தலைமை நீதிபதி கூட்சு டிராட்டர், நீதிபதிகள் குமாரசாமி சாஸ்திரி, பெக்கன்காம், வால்ஸ் ஆகியோர் அடங்கிய நீதி ஆயம் ஒரு வழக்கில் (I.L.R, 52 சென்னை 92) வக்கில்களும் இன்சால்வென்சி வழக்குகளில் தோன்றி வாதாடும் உரிமை உண்டு என்று தீர்ப்பு வழங்கி நீண்டகாலமாக இருந்து வந்த குறைபாட்டை நீக்கியது.

சென்னை வக்கில்கள் இன்னொரு குறையும் தங்களுக்குள்ளது என்று கருதியிருந்தனர். அட்வகேட் சென்ரல், அரசாங்க வழக்கறிஞர்கள், பப்ளிக் பிராசிக்கூட்டர், அபீசியல் அசைனி, அட்மினிஸ்டிராட்டர் சென்ரல் போன்ற பதவிகள் அனைத்தையும் ஆங்கில பாரிஸ்டர்களே தம் கைவசம் வைத்திருந்தனர். இந்திய வக்கில்களுக்கு அவை எட்டாத தூரத்திலேயே இருந்தன. அட்வகேட் சென்ரல் பதவி மிக முக்கியமானதாகும். வழக்கறிஞர் மன்றத்தை வழி நடத்தும் முன்னணிவீரர் (Leader of the Bar) என்றே அவரைக் கருதுவர். அத்துடன் அறங்காவலர் பதவிகளுக்கு நியமனம் செய்யவும்

அற நிறுவனங்களை நிர்வகிக்க திட்டங்களை வகுக்கவும் உயர் நீதிமன்றத்தில் வழக்குகளை அட்வகேட் செனரலே தாக்கல் செய்யும் அதிகாரம் பெற்றிருந்தார். அதுபோன்ற முக்கிய பதவிகளும், வக்கீல்களுக்கும் கிடைத்தாக வேண்டும் என்பது அவர்களது கோரிக்கைகளாகும்.

1897 மெட்ராசு லா சேர்னல் வால்யூம் III பக்கம் 394ல் ஒரு கட்டுரை எழுதப்பட்டிருந்தது. ஸ்பிரிங் பிரேன்சன் என்ற அட்வகேட் செனரலாக இருந்த ஆங்கில பாரிஸ்டர் திடீரென மறைந்துவிட்டார். அந்தக் கட்டுரையில் பிரேன்சன் மறைந்து விட்டதால் அந்தப் பதவிக்குத் தகுதியான ஒருவரை நியமிப்பது தேவை என்றும், வக்கீல் தொழில் செய்பவர்களுக்கு அது கிடைக்க வேண்டியது நியாயமென்றும், இதுவரையிலும் அவர்களது கோரிக்கை கவனிக்கப்படாமல் இருந்ததுபோல் இந்தத் தடவையும் புறக்கணிக்கப்படுமானால் போராட்டம் வெடிக்கக்கூடும் என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது. இந்தக் குறைபாடும் விரைவில் தீரும் என்ற நம்பிக்கை வக்கீல்களிடம் தோன்றியது.

ஆற்றலும் விவேகமுமிக்க வி.பாஸ்யம் அய்யங்கார் ஆக்டிங் அட்வகேட் செனரலாக சிறிது காலம் இருந்தார். பின்னர் சிவசாமி அய்யர் போன்றவர்களும் தொடர்ந்து அந்தப் பதவியை வகிக்கும் வாய்ப்பைப் பெற்றனர். அதுபோன்றே மற்ற அரசாங்க சட்டத்துறை வழக்கறிஞர் பதவிகளும் வக்கீல்களுக்கு கிடைக்கத் தொடங்கின.

அன்று வக்கீல்களிடையே இருந்து வந்த இந்தக் குறையையும் அதன் பின்னர் வலுவான கோரிக்கைகள் எழுப்பப்பட்டதின் விளைவாக ஏற்பட்ட நிலை பற்றியும் ''ஒரு நூற்றாண்டைக் கடந்த உயர்நீதி மன்றம்'' என்ற நூலின் 131வது பக்கத்தில் பின் வருமாறு குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

''சென்னை வக்கீல்கள் மன்றம் நடத்திய போராட்டத்தின் விளைவாக ஒருவர் இந்தியனாகவும் வக்கீல் ஆகவும் இருப்பதனால் அட்வகேட் செனரல் பதவிக்குத் தகுதியற்றவர் என்ற எண்ணத்தைக் கைவிட வேண்டும் என்பதை அன்றிருந்த ஆங்கில அரசின் இந்தியச் செயலாளர் ஏற்றுக்கொண்டார். இந்த மாற்றம் மேல்மட்டத்தில் ஏற்பட்ட பிறகும் இரண்டொரு அய்ரோப்பியர்களே அந்தப் பெரும்பதவியை வகிக்க முடிந்தது. பின்னர் தொடர்ந்து வக்கீல்களாகத் தொழில் செய்தவர்களே அட்வகேட் செனரல் பதவியைத் தொடர்ந்து

வகித்துவந்தனர். மேலும் சர். எஸ். சுப்ரமண்ய அய்யர் உயர் நீதிமன்றநீதிபதியாக உயர்த்தப்படும்முன்பு அரசாங்கப்பொது வழக்கறிஞர் (Government Pleader) பதவி முதன்முதலில் இந்திய ரான அவருக்குக் கொடுக்கப்பட்டது. அதன் பின் பல வக்கீல் களே அந்தப்பதவியை வகிக்கும் வாய்ப்புக்களைத் தொடர்ந்து பெற்றனர். ஆனால் நீண்டகாலமாக பப்ளிக் பிராசிக்கூட்டர் பதவியை அய்ரோப்பியர்களே தொடர்ந்து வகித்து வந்தனர். முதன் முதலில் இந்தியரான பாரிஸ்டர் வி. எல். எத்திராஜுக்கு அந்தப் பதவி கொடுக்கப்பட்டது. அவர் பாரிஸ்டர் ஆனதால் அப்பதவி கொடுக்கப்பட்டதாகக் கருதத் தோன்றினாலும் அவர் ஒரு இந்தியர் என்ற முறையில் அப்பதவியை வகிக்கும் வாய்ப்புப் பெற்றதையே சிறப்பாகக் கருதுகின்றோம்.

சென்னை ரிக்கார்டர் நீதிமன்றத்திலும், பின்னர் உச்சநீதி மன்றத்திலும் தொழில் புரிந்த அய்ரோப்பிய பாரிஸ்டர்கள் உயர்நீதி மன்றம் தோன்றிய பின்னர் 1866-ல் ''பார் அசோசியன்'' (Bar Association) என்ற வழக்கறிஞர் மன்றத் தைத் தொடங்கினர். அந்த மன்றத்தில் இந்திய பாரிஸ்டர் களையும் உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொண்டனர். சென்னை வக்கீல்கள் இந்த மன்றத்தைப் போல் தாமும் ஒரு மன்றத்தைத் துவக்க எண்ணினாலும் 1900த்தில்தான் வக்கீல் கள் மன்றம் உருவெடுத்தது. 1889 மார்ச் ஒன்றாம் தேதி சுமார் 24 வக்கீல்கள் பி. ஆனந்தசார்லு என்ற தலை சிறந்த வக்கீல் தலைமையில் கூடி தமக்கும் ஒரு மன்றம் தேவையென முடிவு எடுத்தனர். 1860ம் ஆண்டு 21-வது சட்டத்தின் கீழ் ''வக்கீல்கள் மன்றம்'' 1900ம் ஆண்டில் பதிவாகி ஓங்கி வளர்ந்தது.

வக்கீல்கள் மன்றம் போராடிப் போராடி தமக்கேற்பட் டிருந்த பல குறைகளைத் தீர்த்துக்கொண்டதுடன் தாம் பாரிஸ்டர்களுக்குள்ள தகுதியில் எவ்விதத்திலும் குறைந்தவர் களல்ல என்பதையும் உலகுக்கும் ஊருக்கும் எடுத்துக் காட்டினர்.

வழக்கறிஞர் அவை (Bar Council)

1879-ல் வழக்கறிஞர் சட்டம் (Legal Practioners Act) அமுலுக்கு வந்தது. அந்த சட்டம் அன்று அட்வகேட்டுகள், வக்கீல்கள், அட்டார்னிகள், பிளீடர்கள், முக்தார்கள் என இருந்த பிரிவுகளை நீக்காது அப்படியே ஏற்றுக் கொண் டிருந்தது. உயர்நீதி மன்றமே வழக்கறிஞர் தொழில் செய்

வோருக்குள்ளே எழும் பூசல்களையும் தீர்க்கவும், கட்டுப்பாடு ஒழுங்கைக் காப்பாற்றவும், தவறுபவர்கள்மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கவுமான பணியைச் செய்து வந்தது—இது உயர்நீதி மன்றத்தின் பணியைப் பெருக்கியது.

ஆகவே 1926ல் இந்தியன் பார்கவுன்சில்சட்டம் நிறைவேற்றப்பட்டது. இந்த சட்டத்தின் கீழ் முதல் சென்னை பார்கவுன்சில் 1928 அக்டோபர் திங்கள் 9ந்தேதி அமைக்கப்பட்டது. அன்றைய அட்வகேட் செனரலாக இருந்த சி. வி. அனந்த கிருஷ்ண அய்யர் அதன் முதல் தலைவராகும். தலைமை நீதிபதி கூட்சுடிராட்டர் அந்த அமைப்பைத் துவக்கி வைத்தார். ஆனால் இந்த சட்டமும் வழக்கறிஞர் தொழில் செய்வோரின் தேவைகளையும், அபிலாசைகளையும் பெருமளவுக்கு நிறைவு செய்வதாக இல்லை. வழக்கறிஞர்களுக்கு உள்ளபடியே சமுதாயத்திலும் நாட்டிலும் செல்வாக்கும் மதிப்பும் ஏற்பட்டிருந்தது அவர்கள் பணியும் மெச்சும்படியாக இருந்ததுடன் அவர்கள் சொல்லுக்கும் செவிசாய்ப்பவரின் தொகை பெருகிக் கொண்டு போனது. இந்த நிலையில் அவர்களது நலனைப் பேணவும், அவர்களிடையே ஒழுங்கைக் காப்பாற்றவும் தனியாக இயங்கக் கூடியதும் வலிமையும் அதிகாரமும் பெற்றதுமான அமைப்புத் தேவையென்ற உணர்வு ஏற்பட்டது. வழக்கறிஞர்களுக் கேற்பட்டுள்ள செல்வாக்கையும் மதிப்பையும் அந்த அமைப்புக் கட்டிக் காக்கக் கூடியதாகவும் இருக்க வேண்டுமென அவர்கள் நினைத்ததும் நியாயமானதே.

ஆகவே 1961ம் ஆண்டு அட்வகேட்டுகள் சட்டம் நிறைவேற்றப்பட்டது. வழக்கழிஞர் சி. ஆர். பட்டாபிராமன் அவர்கள் இந்த சட்டம் நிறைவேறக் காரணமாக இருந்தார் எனக் கூறப்படுகின்றது.

இந்த சட்டப்படி இந்திய பார்கவுன்சில் மாநில பார்கவுன்சில்களுக்கும் மேம்பட்ட அமைப்பாக கருதப்படுகின்றது. அது வழக்கறிஞர் அடங்கிய ஒரு பொதுப் பதிவேடு வைத்திருக்கின்றது. அதில் இடம் பெற்ற வழக்கறிஞர்கள் இந்தியாவில் எந்த நீதிமன்றத்திலும் தோன்றி வழக்குகள் நடத்தலாம். சென்னையிலும் (பார்கவுன்சில்) வழக்கறிஞர் அவை அமைக்கப்பட்டுள்ளது,

சென்னை வழக்கறிஞர் அவை வழக்கறிஞர் பதிவேட்டை வைத்துக்கொண்டு புதிதாகவழக்கறிஞர்களை ஏற்றுக்கொண்டு அதில் அவர்கள் பெயரைப் பதிவு செய்கின்றது, வழக்கறிஞர்களின் உரிமைகளையும், சலுகைகளையும், நலன்களையும்

பாதுகாக்கும் பொறுப்பும் வழக்கறிஞர் அவையைச் சேர்ந்த தாகும். சட்டத்தில் தேவையான சீர்திருத்தங்களைக்கொண்டு வர தனது கருத்துக்களை எடுத்துக் கூறவும் வழக்கறிஞர் அவைக்கு வாய்ப்புண்டு. அத்துடன் முறைதவறி நடக்கும் வழக்கறிஞர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கவும், வழக் கறிஞர் நலனைப்பேண நிதி ஏற்படுத்தவும், முடமாகிவிட்ட வழக்கறிஞர்களுக்கும், ஏழ்மையில் வாடும் வழக்கறிஞர்களுக் கும் பொருளாதார உதவி செய்யவும் வழக்கறிஞர் அவை உரிய பணிகளைச் செய்து வருகின்றது.

மேலும் வழக்கறிஞர் அவை வழக்கறிஞர்களுக்கென நூல கம் ஒன்று நடத்துகின்றது. சட்ட சிக்கல்களைப் புரிந்து கொள்ள அவ்வப்பொழுது சொற்பொழிவுகளுக்கும் கருத்த ரங்களுக்கும் ஏற்பாடு செய்யும் பொறுப்பையும் வழக்கறிஞர் அவை ஏற்றுள்ளது.

வழக்கறிஞர்களின் சட்டப்புலமையை வளர்க்கவும் பொருளாதார மேம்பாட்டைப் பேணவும் சென்னை வழக்க றிஞர் அவை தொடர்ந்து பணி செய்து வருகின்றது. குழு இன்சுயூரன்சுத் திட்டம். நீதிமன்றக் கட்டணத்தில் ஒரு சிறு சதவிகிதத்தொகையை ஒதுக்குவது. சர்சார்சு அல்லது செஸ் தொகை வசூல் செய்வது போன்றவைகளும் வழக்கறிஞர் நலனை எண்ணி செயல்பட இருக்கின்றன. சட்டமேதை நார்ட்டன் மற்றும் பல வழக்கறிஞர்களின் பெயரில் 13 அறக் கட்டளைகள் உள்ளன.

1926 ல் சென்னை மாநிலம் முழுவதும் 1670 வழக்கறிஞர் கள் இருந்தனர். அத்தொகை 1960ல் 4420 ஆக்கவும், 1970ல் 8700 ஆக்கவும், 1979 சனவரியில் 1200. ஆகவும் உயர்ந்தது. இன்று வழக்கறிஞர் தொகை இன்னும் பெருகியிருக்கின்றது. பெருகியும் வருகின்றது.

வழக்கறிஞர் சமுதாயம் தனது முந்தைய தலை முறை யினரைப் போல் சமுதாயத்திலும் நாட்டிலும் செல்வாக்கும் மதிப்பும் பெற்று வருகின்றதைக் காண்கின்றோம். சட்டமன் றத்திலும் அமைச்சரைவயிலும், நிர்வாகத்திலும் பல தகுதி வாய்ந்த வழக்கறிஞர்கள் இடம் பெற்றிருக்கின்றனர். சென்னை வழக்கறிஞர்கள் சங்கத்தின் ஆற்றலும் நல்ல புலமை யும் வாய்ந்த உறுப்பினர்கள் திரு. ப. சிதம்பரம் நடுவண் அர சில் அமைச்சராகவும், திரு. பராசரன் அட்டர்னி செனரல் ஆகவும், திரு. கே. ஆர் நடராசன், என். வி.என் சோமு,

பாராளு மன்ற உறுப்பினர்களாகவும், திரு. பி.எச். பாண்டியன் தமிழ்நாடு சட்ட மன்றத் தலைவராகவும் இருக்கின்றனர்.

வழக்கறிஞர்களாகப் பணியாற்றும் இன்னும் பலபேர் சட்டமன்ற உறுப்பினர்களாக உள்ளனர் என்பதுடன் மாநில அமைச்சர்களாகவும் உள்ளனர். திருமிகு. அரங்கநாயகம், திருமிகு. கே.எ. கிருஷ்ணசாமி, திருமிகு. நல்லுசாமி, திருமிகு திருநாவுக்கரசு, திருமிகு. பொன்னையன், திருமிகு. அருணாசலம் ஆகியோர் மாநில அமைச்சரவையில் அமைச்சர்களாக இருக்கின்றனர்.

இப்படிப் பல்வேறு துறைகளில் வழக்கறிஞர்கள் சிறப்புப் பெற்று மிளிரும் இந்நாளில் வழக்கறிஞர்களிடையே போதிய கட்டுப்பாடின்மையும் சிறிது ஒழுக்கக் குறைவும் காணப்படுவதையும் சுட்டிக்காட்டாமல் இருக்கமுடியாது. இதற்குப் பல காரணங்கள் சொல்லப்பட்டாலும், முக்கியமான மூன்று காரணங்களைக் குறிப்பிடுவது பயனுள்ளதாக அமையும்.

வழக்கறிஞராகப் பதிவு செய்யும் முன் ''பயிற்சிக் காலம்'' (apprentice period) என்று முன்பிருந்த ஒரு நிலையைத் தற்போது நீக்கிவிட்டனர். சட்டக் கல்லூரியை விட்டு வெளி வந்ததும் மாணவர்கள் வழக்கறிஞர்களாகப் பதிவு செய்து கொண்டு நீதிமன்றத்தின் முன் வந்து நிற்கும் நிலையே இன்றைய நிலையாகும். மூத்த வழக்கறிஞரிடம் (Senior Lawyar) பயிற்சி பெறும் வாய்ப்பு இல்லாது போனதாலும், மூத்த வழக்கறிஞர்கள் நீதிமன்றங்களில் காட்டும் பணிவையும் வாதம் செய்வதில் வெளிப்படுத்தும் திறமையையும் நேர்மையையும் வழக்கு சாட்சிகளிடம் குறுக்கு விசாரணை செய்யும் பொழுது மேற்கொள்ளும் போக்கையும் சட்டத் துறையில் இன்னும் தெரிந்துகொள்ள வேண்டுமென்று காட்டும் கடும் உழைப்பையும் ஆர்வத்தையும் காணும் வாய்ப்புகளை இழந்து விட்டதாலும் புதிய வழக்கறிஞர்கள் பல குறைபாடுகளுடன் தங்கள் தொழிலைத் தொடங்குகின்ற நிலையே இன்றுள்ளது. விளைவு, நீதிமன்றங்களிலே அவர்கள் காட்டவேண்டிய பணிவு சரியானதாக இல்லை என்பதுடன், நீதிமன்றங்களுக்கு ஆற்ற வேண்டிய கடமை எது என்பதையும் கட்சிக்காரர்களுக்கு ஆற்றவேண்டிய கடமை எது என்பதையும் இரண்டு கடமைகளையும் எப்படி இணைத்துச் சீராக்குவது என்பதையும் பெரிதும் புரியாது திகைக்க வேண்டியவர்களாய் இருக்கின்றனர். பயிற்சிக் காலத்தை மீண்டும் அமுலுக்குக் கொண்டுவந்தால் இக்குறைபாடுகளைப் பெருமளவு நீக்கமுடியும் என மூத்த வழக்கறிஞர்களும் மாண்புமிகு நீதிபதிகளும் கருதுகின்றனர்.

இரண்டாவது புதிய வழக்கறிஞர்களுக்குத் தொழிலில் நம்பிக்கையும், ஆர்வமும், ஊக்கமும் ஏற்படும் அளவுக்கு நிலைமை இல்லை என்பதாகும். தமிழ்நாடு பார்கவுன்சில் இந்நிலையை மாற்ற நல்ல திட்டங்களை வகுத்துச் செயல் படின் நிலைமை பெரிதும் மாறும். வழக்கறிஞர்களும் தொழி லில் நம்பிக்கையும், ஆர்வமும், ஊக்கமும் கொள்வர் என்பதி லும் கட்டுப்பாட்டைக் காப்பதுடன் ஒழுக்கத்தைப் பேணுவதி லும் ஈடுபடுவர் என்பதிலும் ஐயமில்லை.

வழக்கறிஞர்தொழிலில் சாம்பவான்களான முன்னோர்கள் கட்டிக் காத்த மரபுகளையும், பண்பாடுகளையும், நாகரீகத் தையும், நேர்மையையும், வாழ்க்கை முறையையும் இக்கால வழக்கறிஞர்கள் அறிந்து, புரிந்து பின்பற்றும் வகையில் பாடத் திட்டங்கள் அமைந்தால் பெரிதும் பயனளிக்கும்என நம்பலாம். தாம் ஒரு மகத்தானதும் உயர்ந்ததுமான பாரம்பரியமிக்க தொழிலைச் சேர்ந்தவர்கள் என்ற எண்ணமும் அல்லாடி கிருஷ்ணசாமி அய்யர், சர். சி. பி. இராமசாமி அய்யர், இராசாசி, வி. எல். எத்திராசு, மோகன் குமார மங்கலம் போன்ற மேதைகள் செம்மாந்து முழங்கிய நீதிமன்றங்களில் தாமும் குரல் எழுப்பப்போகின்றோம் என்ற எக்களிப்பும் வழக் கறிஞர்கள் உள்ளத்தில் ஏற்பட வேண்டும்.

உலகுக்கு அறத்தை வழங்கிய மாபெரும் மனிதர் திருவள் ளுவப் பேராசானும், நீதியை விலங்குகளுக்கும் வழங்கிய மனு நீதிச் சோழனும் பிறந்த இந்த தமிழ் மண்ணுக்குப் பாரம்பரிய மிக்க நீதித் துறை வரலாறுண்டு. அந்தப் பாரம்பரியத்தைக் கட்டிக் காப்பதில் நீதிபதிகளுக்குள்ள அதே பங்கு வழக்கறிஞர் களுக்கும் உண்டு.

''சென்னையில் பணியாற்றும் இளம் வழக்கறிஞர்களும் தாமாகச் சிந்தித்துச் செயல்படும் ஆற்றல் படைத்தவர்கள். அது அவர்களுக்கே உரிய தனிப் பண்பு. பல வேளைகளில் நீதிபதிகளிடமிருந்து திணர வைக்கும் கேள்விக் கணைகள் எழுந்தவண்ணம் இருந்தாலும், திணராது, திகைக்காது, சிந்தித்துத் துணிவுடன் கேள்விக் கணைகளைத் தாங்கி சட்ட நுணுக்கங்களையும், அதுவரையிலும் விளங்காது இருந்த விவரங்களையும் விளங்க வைக்கும் திறன் சென்னை வழக் கறிஞர்களுக்கு உண்டு என்பதை நீதிமன்றத்தில் இருப்பவர்கள் அறிவர்.

இத்தகைய சொல்லோவியமும் சமயோசித புத்திக் கூர்மை யும் படைத்த வழக்கறிஞர்கள் எந்த நாட்டுக்கும் நல்லசெல்வம்

ஆகும். தனித் தன்மையும், நுண்மாண் நுழைபுலத்துடன் இணைந்தால் முன்னைய பாரம்பரியத்தை நமது சென்னை வழக்கறிஞர் மாமன்றம் கட்டிக் காப்பதுடன் தமது ஆற்றலாலும் அறிவாலும் அந்தப் பாரம்பரியத்தை வருங்காலத்தில் வலிவும் பொலிவும் ஆக்குவர் என்றும் மிகுந்த நம்பிக்கை நம்மால் கொள்ள முடியும்''

—சென்னை உயர்நீதி மன்றம். *1862—1962.*

வழக்கறிஞர்கள் நீதிமன்றத்தில் தோன்றி வாதாடுவது அவர்கள் பெற்றுள்ள சிறப்புரிமையாகும். அந்த உரிமையே அவர்களது கடமையாகும். ஒன்றே உரிமையாகவும் கடமையாகவும் இருப்பது வேறு தொழில்களுக்குக் கிடைக்காத சிறப்பு அம்சமாகும்.

''The Practice of the law is not a business, open to all who wish to engage in it. It is a personal right or privilege. It is in the nature of a franchise from the state. That you are a member of the leagal profession is your privilege; That you can represent your client is yout privilege; that you can in that capacity claim audience in court is your privilege. Yours is an exalted profession in which your privilege is your duty and your duty is your privilege.''

''Contempt by the Bar'' என்ற ஏட்டில் திரு. இராமச் சந்திரன். எம்.எ.பி.எல் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

''வழக்குரைஞர் சங்கத்துக்கும் நீதிமன்றங்களுக்கும் உள்ள உறவு மிக முக்கியமானதாகும். வலுவான வழக்குரைஞர் சங்கமும், நல்ல உறுதியான நீதிபதிகளும் இருந்தால்தான் உண்மையான நீதி மக்களுக்குக் கிடைக்க வழியுண்டு. அந்த இருதரப்பினரிடையே தோன்றும் உவகையான கூட்டுறவு ஒழுங்கான நீதி நிர்வாகத்துக்கு இன்றியமையாத தேவையாகும்.''

——

"உயர்நீதி மன்றத்தில் உதித்த இலவச சட்ட இயக்கம்" I

நீதிமன்றங்களுக்குக் கொண்டுவரப்படும் உரிமை வழக்குகள் (Civil Cases). குற்றவியல் வழக்குகள் (Criminal cases) ஆகிய அத்துணையும் உண்மையானவை எனக் கூறிவிட இயலாது. சில சோடிக்கப்பட்டவைகளாகவும் இருக்கலாம். உண்மையானவைகளாகவும் இருந்தாலும், சோடிக்கப் பட்டவைகளாக இருந்தாலும் வழக்குகளில் எந்தப் பக்கம் நியாயம், நீதி, உள்ளன என்பது நீதிமன்றத்தால் கண்டு பிடிக்கப்பட வேண்டிய தேவையான பணியாகும்.

நீதிபதி வழக்குகளில் எந்தப் பக்கம் நீதி உள்ளது என்று கண்டுபிடித்து வெளியிடும் பொறுப்பில் இருக்கின்றார் என்பது உண்மை. ஆனால் ஒருவரே தனியாக நின்று கண்டுபிடிப்பது என்பது சாத்தியமன்று. அவரது பெரிய புனிதமான பணிக்கு உதவ வழக்கறிஞர்கள் தேவை என்பதை உணர்ந்திருக் கின்றோம். சட்டம் என்பது ஒரு இருட்டறை; அதில் வழக் கறிஞர் வாதம் விளக்கு'' என்றார் ஒரு அறிஞர். வழக்கு களில் வழக்கறிஞர்களின் உதவி இல்லையென்றால், இருட் டறையில் ஒரு பொருளைத் தேடுபவனுக்கு ஏற்படும் அனுபவமே நீதிபதிக்கும் நீதியைக் கண்டுபிடிப்பதில் ஏற்படும் என்பதில் அய்யமில்லை. வழக்கு நடக்குபோது நீதிபதி அமைதியாக இருந்து வழக்கில் நீதிமன்றத்தின் முன் வைக்கப் படும் வாய்மொழிச் சான்றுரை, ஆவணச் சான்றுகள் ஆகிவை களே உன்னிப்பாகக் கவனிப்பதுடன் அவைகளைப் பற்றிய கணிப்புகளை அமைதியாகஉள்ளத்தில் ஏற்றிக்கொள்கின்றார். வழக்குகளில் எந்தப் பக்கத்திலும் ஆர்வமும் அச்சமும் கொள் ளாமல் நீதியைக் கண்டுபிடிப்பதே தனது தலையாய கடமை என்ற நோக்கில் செயல்படுகின்றவரே நீதிபதியாகும்.

மதுரைக் காஞ்சி என்ற சங்க கால நூல் நீதிபதி வழக்கு களில் காட்ட வேண்டிய குணங்களைப் படம் பிடித்துக் காட்டுகின்றது.

''அச்சமும் அவலமும் ஆர்வமும் நீக்கி
செற்றமும் உவகையும் செய்யாது காத்து
நெமன்கோல் அன்ன செம்மைத்தாகி
சிறந்தகொள்கை அறங்கூறு அவையமும்''

(ம.கா. 489—492)

மதுரைக் காஞ்சி நீதிபதிக்குத் தேவையான நுட்பமான குணங்களை மிக நயத்துடன் கூறுவதைக் காணலாம். ஆகவே நீதிபதி வழக்குகளில் இத்தகைய குணங்களை மேற்கொள்ள வேண்டுமென்பதும், பயிற்சி பெற்ற வழக்குரைஞர்கள் தத்தம் வழக்குகளை நீதிமன்றத்தின் முன் வைக்கவேண்டுமென்பதும் தேவையானவை என்பதை நம்மால் புரிந்துகொள்ள முடிகின்றது.

ஆங்கிலச் சட்ட இயலின்படி (English Jurisprudence) ஒரு நீதிபதி வழக்கில் இருசாராரும் நீதிமன்றத்தின் முன் வைக்கும் விவரங்கள்ள மாத்திரம் ஆய்ந்து நீதியைக் கண்டுபிடிக்க வேண்டும். இந்த முறையை எதிரெதிர் நடைமுறை (Adversery System) என்பர். இந்த நடைமுறையில் காணப்படும் குறைகளைக்களைய உருசியா போன்ற நாடுகளில் காணப்படும் முறை சூழ்ந்து ஆய்வு செய்யும் நடைமுறை (Inquisitorial system) என்று கூறுவர். நீதிபதி இருசாராரும் நீதிமன்றத்தின் முன் வைக்கப்பட்டிருக்கும் விவரங்களை ஆய்வு செய்வதுடன் நீதி எந்தப்பக்கம் உள்ளது என்பதைக் கண்டுகொள்ள தேவைப் பட்டால் இருசாராருக்கும் எட்டாத இடங்களில் இருக்கும் விவரங்களையும் சேகரித்து அவைகளையும் ஆய்வு செய்து நீதி வழங்கலாம் என்பதே இந்த நடைமுறையின் நோக்கமாகும். இந்த இரண்டு நடைமுறைகளில் எதை மேற்கொண்டாலும் வழக்குகளில் நீதியைக் காண வழக்குரைஞர்களின் உதவி மிகத் தேவையென்பது உணரப்பட்டிருக்கின்றது.

அனைவருக்கும் நீதி (Equal Justice)

சட்டமும் நீதியும் அனைவருக்கும் பொதுவானது. நமது அரசியல் சட்டம் அனைவரும் சட்டத்தின் முன் சமமாகக் கருதப்படுவர் எனக் கூறுகின்றது. (14-வது பிரிவு) அது போன்றே அனைவருக்கும் சமமான நீதி கிடைக்கவேண்டும் என்றும் அரசியல் சட்டம் குறிப்பிடுவதைக் காணலாம். அறம்

என்று திருக்குறள் குறிப்பிடும் உன்னதக் கோட்பாட்டையே நாம் சமுதாய நீதி என்ற சொல்லால் வழங்குகின்றோம்.

நீதிமன்றத்தில் இருசாராரில் யார் பக்கம் உண்மை உள்ளதோ அதன் அடிப்படையில் அவருக்குரியதை வழங்கு வதை நீதி என்று குறிப்பிடலாம். மக்கள் மன்றத்தில் (சமுதாயத்தில்) யாராருக்கு எவையெவை தேவையோ அவை யவை அவர்களுக்குக் கிடைக்க வழிவகுப்பதை அறம் (Social justice) எனக்குறிப்பிடலாம். முறை வேண்டி நீதிமன்றங் களை நாடுபவர்களுக்கு நீதிமன்றம் வழங்குவதை நீதிமுறை என்கிறோம். இதை ஆங்கிலத்தில் (Corrective Justice) முறை வேண்டி வந்தார்க்கு வழங்கும் நீதி என்பர். யாராருக்கு எவை தேவை என்பதை அறிந்து அவர்களிடத்தில் சென்று வழங்குவதை அறம் அல்லது சமுதாய நீதி என்பர். (Distributive Justice)

நீதியும், நிறைவும், இன்பமும்.

நீதிமன்றம் வழங்கும் நீதியால் தனிப்பட்ட குடிமக்கள் ஆறு தலையும் மனநிறைவையும் பெறுகின்றனர். சமுதாய நீதியால் (அறம்) சமுதாயத்திலுள்ள அனைவரும் இன்பம் அடைகின்ற னர். சமுதாய நீதியை சமுதாயத்தில் உள்ள அனைவரும் தொடர்ந்து விரும்புவதற்குக் காரணம் அதன் மூலம் சமுதாய இன்பம் வந்து சேரும் என்ற நம்பிக்கையால் தான் என்பதில் அய்யமில்லை. நியாயமான சமுதாய அமைப்பே இன்பத்துக் வழிவகுக்கும். இதை எண்ணியே

அறத்தான் வருவதே இன்பம் மற்றெல்லாம்
புறத்த புகழும் இல (குறள் 39)

எனத் திருக்குறள் ஓதுவதைக் காணலாம். சால்மண்டு என்ற சட்ட வித்தகரும் ''நீதி சமுதாயத்தில் நிலவுகின்றதா என்பதை மக்களிடையே காணும் மகிழ்ச்சியைக்கொண்டு அறி யலாம்'' என்று குறிப்பிடுகின்றார். சமுதாயத்தில் உள்ள பல் வேறு துறைகளிலும் நீதி கிடைக்க வேண்டியது இன்றியமையா தது எனக் கருதும் நாம், நாட்டில் நல்ல அரசும் சமுதாய நலத்தை எண்ணும் நல்லவர்களும் இருக்க வேண்டுமென எண் ணுவதிலும் தவறில்லை. நல்ல அரசு இயங்கினால் சரியான நீதிமுறையும், நல்ல மக்கள் வாழ்ந்தால் சீரான சமுதாய நீதி யும் கிடைக்கும்.

பழந்தமிழக வரலாற்றில் நல்ல நீதிமுறையும் நல்லவர் பலர் இருந்ததால் சமுதாய நீதியும் நிலவி வந்ததை நம்மால் காணமுடிகின்றது. பிசிராந்தையார் என்ற செந்நாப்புலவர் கிழவயதை அடைந்தும் அவருக்குத் தலைமுடி சிறிதும் நரைக்க வில்லை என்பது சிலருக்கு வியப்பைத்தந்தது. காரணம்கேட்ட போது அவர் சொன்னார், ''எனது பணியாட்கள் நான் கூப் பிட்ட குரலுக்கு ஓடிவருகின்றனர். எனது மனைவி மக்கள் என் னிடம் அன்பு காட்டுகின்றனர். நாட்டில் இயங்கும் அரசும் நீதி அல்லாததைச் செய்யாது. எல்லாவற்றுக்கும் மேலாக நான் வாழும் ஊரில் நல்லவர் பலர் வாழ்கின்றனர்'' சமுதா யத்தில் நல்லவர் வாழ்வதால் அவர் இன்பமாக வாழமுடிகின் றது என்பதையே அவரது சொல்லோவியம் நமக்குச் சுட்டிக் காட்டுகின்றது.

சோழ மாமன்னன் தனது கட்டுக்காவல் மிகுந்த அரண் மனையின் வாயிலில் ஆராய்ச்சி மணி ஒன்றைக் கட்டி வைத் திருந்தான். அந்தக் காலத்தில் ஆட்சியில் இருப்போர் செய்யும் த்வறை எடுத்துக்காட்டி நீதியைப் பெறுவது என்பது சாதா ரணமானதல்ல. உயர்ந்த மதில் சூழ் அரண்மனைக்குள் நுழைவது என்பதும், நுழைந்து விட்டாலும் மணிமுடி தரித்த மன்னர்பிரானைக் கண்டு குறைகளைச் சொல்லி முறை வேண்டி நிற்பது என்பதும் முடியாது என்பதை உணர்ந்தே அரண்மனைவாயிலில் ஆராய்ச்சி மணியைக் கட்டிவைத்திருந் தான். முறைவேண்டுவோர் வாயிலில் கட்டப்பட்டிருக்கும் மணியினை அசைத்தால் மாமன்னனே ஓடிவந்து வழக்கினைக் கேட்டு முறை செய்வான் என்பதை மக்களுக்கு உணர்த்தியிருந் தான்.

மாமன்னனின் அருமந்த மகன் இளவரசன் சென்ற தேர்க் காலில் பட்டு இறந்த கன்றின் தாய்ப் பசு அரண்மனை வாயி லில் கட்டியிருந்த மணியைஅசைத்தது. மணியின் அலரல் வேந் தனில் காதின் மோத ஓடிவந்த சோழ பேரரசன் பசுவின் கண் ணீரைத் துடைக்கத் தனது கண்ணான அருமை இளவரசனை அதே தேர்க்காலில் இட்டுக் கொல்லும்படி மரண தண்டனை விதித்தான் என்பது வரலாறாகும்.

''வாயிற் கடைமணி றடுநா நடுங்க
ஆவின் கடைமணி உகுநீர் நெஞ்சு சுடத்தான் தன்
அறம் பெறல் புதல்வனை ஆழியில் மடித்தோன்.''

(சிலப்பதிகாரம் வழக்குரை கதை)

விலங்குக்கும் நீதியுண்டு என உலகுக்குக் காட்டிய சோழப் பெரு மன்னன் காலத்தில் சமுதாய நீதி இன்னும் வலிவும் பொலிவும் பெற்று இருந்திருக்கும் என்று நாம் கருதினால் தவறு இருக்க முடியாது.

எண் பதத் தான் ஓராமுறை செய்யா மன்னவன்
தண் பதத் தான் தானே கெடும். (குறள் 548)

முறை வேண்டி வரும் யாவருக்கும் எளிதான முறையில் காட்சியளித்து அவரது வழக்கை நடுநிலை நின்று ஆய்ந்து நீதி வழங்க வேண்டும் என்று குறள் கூறும் அறிவுரையை நடைமுறையில் காட்டியுள்ளான் சோழ வேந்தன்.

நீதி அரண்மனையுடன் நின்றுவிடாது மக்கள் வாழும் மனைகளுக்குள்ளும் புகும் என்பதும் அன்றைக்கும் உண்மையாக இருந்தது என்ற செய்தியும் கிடைத்துள்ளது. மறையவன் ஒருவன் தனது மனைவியைத் தனியாக மனையில் விட்டுவிட்டு வெளிநாடு போகவேண்டி வந்தது. மனைவி நகரத்தில் தனியாக வீட்டில் இருந்தால் கொடுமைக் காரர்களிடமிருந்து தன்னைக் காப்பாற்றிக்கொள்ள முடியுமா என அஞ்சினாள். நகரத்தில் நல்லவர்கள் நிறைய இருக்கின்றனர், அரசும் அநீதி நடக்காமல் பார்த்துக் கொள்ளும் வலிவும் எண்ணமும் கொண்டது என்று கூறி கணவன் விடைபெற்றுப் போய்விட்டான். மாறு வேடத்தில் நகர் வலம் வந்த வேந்தன் காதில் இந்த உரையாடல் பட்டது. மறையவன் திரும்பி வரும் வரையிலும் ஒவ்வொரு நாளும் நாடாளும் வேந்தனே அம் மாதரசிக்குத் தீங்கு எதுவும் நேராமல் காத்து நாட்டில் நீதி நிலவுகின்றது என்ற நல்ல பெயரைக் காப்பாற்றினான் என்பர்.

நீதி வளைந்துவிடாமல் காப்பதற்காக பொன்னான உயிரையும் தியாகம் செய்யவும் துணிந்த நன்மக்களையும் படைத்தது தமிழ்நாடு என்பதையும் வரலாறு காட்டுகின்றது. பொன் செய் கொல்லன் ஒருவன் கோவலன் அரசியின் காற்சிலம்பைக் களவாடியவன் என்று சாட்டிய குற்றச் சாட்டை நம்பிய பாண்டிய மன்னன் அரசியின் காற்சிலம்பு கன்றிய கள்வன் கோவலன் கையில் இருப்பது உண்மையாயின் கொன்று அச்சிலம்பு கொண்டுவாருங்கள் என அரசாணை பிறப்பித்தான்.

ஒரு தரப்பினர் சொன்ன குற்றச்சாட்டை மாத்திரம் அப்படியே ஏற்றுக்கொண்டு குற்றம்சுமத்தப்பட்ட கோவலனை

நீதிபதியான அரசன் நேரில் விசாரிக்கவுமில்லை. கோவலன் தான் குற்றவாளியன்று என மெய்ப்பிக்கவும் வாய்ப்புத் தரவும் இல்லை.

குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்பட்ட ஒவ்வொருவருக்கும் வழக்கறிஞர் உதவி இல்லாது போனால் அவரைத் தண்டிப்பது தவறு எனக் கருதும் அளவுக்கு இன்று எண்ணங்கள் வளர்ந் திருக்கின்றன. பாண்டிய மன்னனோ குற்றம் சாட்டப்பட்ட வனை விசாரிக்காமல்கூட தண்டனை வழங்க முற்பட்டது வளையாத நீதி வளைந்துவிட்டதற்கொப்பாகும் என்பதில் அய்யமில்லை.

''ஓர்ந்துகண் ணோடாது இறைபுரிந்து யார் மாட்டும்
தேர்ந்து செய்வதே முறை'' (குறள் 541)

என்ற குறளில் வரும் ''தேர்ந்து'' என்ற சொல்லின் பொருள் இருசாராரின் வாதங்களையும் நன்கு ஆய்ந்து முடிவு செய்ய வேண்டுமென்பதாகும். நாடாளும் நீதியரசர் கோவலனையே கேட்காமல் முடிவுக்கு வந்ததால்தான், கோவலன் மனைவி மங்கை நல்லாள் கண்ணகி ஆவேசத்துடன் நீதியரசர் முன் தோன்றி ''தேரா மன்னன் செப்புவது உடையேன்'' என முழக்கம் செய்தாள். ''பொன் செய் கொல்லன் தன் சொல் கேட்ட யானோ அரசன் யானே கள்வன்'' என மன்னவன் தனது தவறை உணர்ந்து வளைந்த நீதியை நிமிர்த்தத் தன் இன்னுயிரையே தியாகம் செய்தான். ஒருதரப்பினர் சொன்ன சொல்லை மாத்திரம் கேட்டு முடிவு செய்த நானே குற்றவாளி என நீதி அரசர் உணர்ந்து கோவலனுக்கு வழங்கிய அதே தண்டனையைத் தனக்கும் வழங்கிக் கொண்டான் என்றால் நீதியின் பால் அவன் கொண்ட பற்றுதலை நாம் ஒருவாறு உணர முடிகின்றது.

உச்சநீதி மன்ற நீதிபதி வி.ஆர். கிருஷ்ணஅய்யர் கண்ணகி நீதியரசர் பாண்டியன் அவைக் களத்தில் அஞ்சாது நின்று நீதிக்காக எழுப்பிய முழக்கத்தை ''நீதியின் முதல் முழக்கம்'' என சிறப்பித்துப் பேசுகின்றார்.

The first clarion call for justice came from Madurai. Kannagi demanded justice from king Nedunchezhian after having proved the innocence of her husband Kovalan who was falsely accesed of theft and sentenced to death.''

வணிகன் ஒருவன் வெளிநாடு சென்று வியாபாரம் செய்து திரவியம் தேடி வந்தான். அவன் சென்னைக்கு அருகாமையில் உள்ள திருவாலங்காடு என்ற ஒரு பெரிய ஊர் வழியாக நடந்து சென்றான். அவனைத் தொடர்ந்து ஒரு அழகிய நங்கை கண்ணீர் வழிந்தோட அழுது கொண்டே சென்று கொண்டிருந்தாள். ஊரில் உள்ள பெருமக்கள் இக்காட்சியைப் பார்த்து மனம் பதைத்தனர். அவர்களில் சிலர் அந்த அழகிய மங்கையைப் பார்த்து "''ஏனம்மா கண்களிலிருந்து கண்ணீரைச் சாரை சாரையாய் வடிக்கின்றாய், உனக்கேற்பட்ட துன்பம் என்ன'' என சோகம் ததும்பக் கேட்டனர். ''என் பெயர் நீலி அதோ போகின்றாரே அவர் எனது அருமைக் கணவர். என்னை வேண்டாமென்று ஒதுக்கி விட்டு ஓடுகின்றார். வாழ்ந்தால் அவருடன் வாழ்வேன். இல்லையேல் சாவு தான் இதோ உங்கள் முன் சாவைத் தழுவுகின்றேன்'' என நீலி கண்ணீர் மல்க முறையிட்டாள்.

அந்தப் பெரிய ஊரில் உள்ள எழுபது பெரிய மனிதர்கள் ஊர் மன்றத்தில் கூடினர். வணிகனை விசாரித்தனர். அவள் எனது மனைவியல்ல. என்னிடம் உள்ள பொருள்களைப் பறிக்க வந்த பேய்'' என விசாரணையில் உறுதியாகச் சொன்னான். நீலியோ கண்ணீர் வடித்த வண்ணம் நின்று கொண்டிருந்தாள். அவளது கண்ணீரே பேசியது, நீதிபதிகள் எழுபது பேரையும் நம்ப வைத்தது.

''வணிகரே இம்மங்கை நல்லாளின் முறையீட்டை நாங்கள் நம்புகின்றோம். இன்று இரவு நீங்கள் இருவரும் ஊர்ச் சத்திரத்தில் ஒன்றாகத் தங்குங்கள் உங்களுக்குக்குள் ஏற்பட்டுள்ள பிணக்குத் தீர்ந்து விடும்'' என எழுபது பேரும் தீர்ப்புத் தந்தனர்.

''எனது பொருளைப் பறிப்பதுடன், எனது உயிரையும் பறிப்பாள் என்பது நிச்சயம்'' என நீதிபதிகளிடம் சொல்லி மன்றாடினான்.

அப்படி ஒன்றும் நடக்காது, நீதி வளைந்தால் எங்கள் உயிரும் வளைந்து விடும் என நீதிபதிகள் எழுபது பேரும் ஒரே குரலில் கூறினர். அடுத்த நாள் சத்திரத்தைத் திறந்து பார்த்தனர். வணிகனது குரல் வளை நெறிக்கப்பட்டு இறந்து கிடந்தான். நீலியைக் காணவில்லை. உண்மையாகவே நீதி வளைந்து விட்டது என்பதை உணர்ந்த நீதிபதிகள் வணிக

கனுக்காக வருந்தியதுடன் எழுபது நீதிபதிகளும் நீதிக்காகத் தமது உயிரையே தியாகம் செய்து அழியாப் புகழைத் தேடிக் கொண்ட செய்தி நீதியில் நாட்டம் கொண்ட அனைவரின் உள்ளத்தையும் தொடுகின்றது.

நமது சென்னை உயர் நீதி மன்றத்தின் தலைமை நீதிபதியாகப் பதவியேற்றதும் திரு. அனந்த நாராயணன் அவர்கள் அந்த எழுபது நீதிபதிகள் இன்னுயிரைத்தியாகம் செய்த இடம் சென்று அப்பெருமக்களை வணங்கிய பிறகே தனது பணியைத் தொடங்கினார் என்பதை அறிகின்றோம்.

(இந்த நூல் ஆசிரியரும் அந்தப் புனித இடத்துக்குச்சென்று தனது பணிவான வணக்கத்தைச் செலுத்தியுள்ளார்)

வணிகனது உயிரைக் குடித்த அந்த நீலியின் கண்ணீரே இன்றைக்கு நீலிக் கண்ணீர் என பெயர் பெற்று வழங்குகின்றது.

"இலவச சட்ட இயக்கம் இயங்குகின்ற முறை"

பழங்காலத்தில் நீதிக்காகப் போராடிய கண்ணகி, நீதிக்காக உயிரைத் தியாகம் செய்த பாண்டியன் நெடுஞ்செழியன் போன்ற தனிப்பட்டவர்களைக் கண்டோம். இன்று சமுதாயத்தில் பூசல்கள் பெருகியுள்ளன. அவைகளுக்கு இணையாக சட்டங்களும் பெருகி வருகின்றன. புதிய சட்டங்கள் உருவாக உருவாக அவைகளை மீறுவோர் தொகையும்அதிகமாகக் காணப்படுகின்றது. சமுதாயச் சிக்கல்கள், அவைகளைத் தீர்க்கத் தேவையான சட்டங்கள், சட்டங்களின் ஓட்டை ஒடிசல்களைப் பயன்படுத்தித் தப்பிப்போர், சட்டங்களைப் பயன்படுத்துவோரிடம் மாட்டிக்கொள்ளும் சாதாரண மக்கள் இப்படி ஒரு வட்டம் உருவாகி வருகின்றது. இந்த நிலையில் வசதியற்ற, ஒன்றும் புரிந்து கொள்ள இயலாத அப்பாவி மக்கள் பலர் சரியான நீதி கிடைக்காது வாடும் நிலை ஏற்பட்டுள்ளது என்பதையும் நம் கண் முன்னால் காண்கின்றோம்.

நாட்டில் உள்ள சமுதாய, பொருளாதார நிலையால் பெரும்பான்மையான குடிமக்கள் நீதியை நீதிமன்றத்திலிருந்தும், மக்கள் மன்றத்திலிருந்தும் பெற வாய்ப்பின்றி வாடுகின்ற நிலையில் வசதி பெற்றவர்களும் பணம் படைத்தவர்களும் சமுதாயத்திலும் செல்வாக்கைப் பெருக்கி நீதிமன்றங்

களையும் நாடி தமது உரிமைகளைக் காத்துக்கொள்ள முடிகின்றது.

இந்திய அரசியல் சட்ட சிற்பி பேரறிஞர் அம்பேத்கார் அவர்கள் இந்திய நாடு விடுதலை பெற்றதால் அரசியல் நீதி பெற்றுள்ளோம் என்பது உண்மையானாலும், இன்னும் சமுதாய நீதி, பொருளாதார நீதி வெகுதூராத்தில் உள்ளன என்றும், சமுதாயப் பொருளாதாரக் கொடுமைகளால் அல்லல் படும் மக்கள் எழுச்சிபெற்றுப் போராட்டம் நிகழ்த்த முற்பட்டால் நாம் அரும்பாடு பெற்ற அரசியல் விடுதலையும், பெரும் முயற்சியுடன் கட்டிக்காத்து வரும் சனநாயக அமைப்புகளும் பெரும் கேடுகளைச் சந்திக்க வேண்டி வரும் என்றும் எச்சரித்ததுடன், சமுதாயப் பொருளாதார நீதிகளை மக்கள் பெற்று மகிழ முயல வேண்டுமெனவும் அறிவுரை வழங்கியுள்ளார். பேராசிரியர் வில்லியம் வான்சு என்ற சட்ட அறிஞரும் சட்டத்தின் முன் எல்லோரும் சமம் என்று சொல்லிவிட்டால் மாத்திரம் போதாது என்றும் வலிமை வாய்ந்த எதிரியின் முன் எளியவரும் நீதிமன்றத்தில் வாதாடும் வாய்ப்பை ஏற்படுத்தித் தருவதே சொல்லைச் செயல்படுத்தும் வழி என்றும் குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்க உச்சநீதி மன்ற முன்னாள் தலைமை நீதிபதி குறிப்பிட்டுள்ளதும் நமது கவனத்துக்குரியதாகும்.

''நீதிமன்றங்கள் முறை வேண்டி தம்மை நாடிவரும் ஒவ்வொருவருக்கும் தங்குதடையின்றி வழக்குகளை எடுத்துக் கூறும் வாய்ப்பை வழங்குதல் தேவையாகும். தனிப்பட்ட ஒருவர் தனது வறுமை காரணமாக தன்னையும் தனது நலன்களையும் பாதுகாத்துக்கொள்ள இயலாதபடி சட்ட விதிகள் தடைகளாக இருக்குமானால் அவைகள் அனைவரின் நன்மையைக் கருதி செயல்படுகின்றன எனக் கருத இடமில்லை. ஒவ்வொரு குடிமகனும் அவன் எவ்வளவு ஏழ்மையில் இருந்தாலும் அவனும் வழக்கறிஞர் அமர்த்தவும் நீதிமன்றச் செலவுக்கான தொகை கிடைக்கவும் அதன்மூலம் அவனும் உண்மையான நீதியைப் பெறவும் வழி கண்டுபிடித்தாக வேண்டும்.''

இவைகளையெல்லாம் கருத்தில் கொண்டுதான் நமது அரசியல் சட்டம் பிரிவு 39A. 3-1-77ல் ஏற்பட்ட சட்டத் திருத்தம் மூலம் புகுத்தப்பட்டுள்ளது. சமமான வாய்ப்பு என்ற அடிப்படையில் சட்டத் துறை இயங்குவதால் அரசு நீதி

கிடைக்க வகை செய்தலும், குறிப்பாக பொருளாதார அல்லது வேறு வகைகளால் உண்டாகும் தடைகளால் ஒரு குடிமகனுக்கு நீதி கிடைக்கும் வாய்ப்பு இல்லாது போகும் நிலையை மாற்றி தகுந்த சட்டங்கள் அல்லது திட்டங்கள் அல்லது எந்த வகையைக் கொண்டாவது இலவச சட்ட உதவியை அளிக்க ஏற்பாடு செய்தலும் தேவை எனக் கூறுகின்றது.

அரசும் பெருமக்களும், நமது அரசியல் சட்டம் பிரிவு-39A கூறியுள்ள வழிகாட்டும் நெறி வீண் போகக்கூடாதென்பதை உணர்ந்துள்ளனர். பல மாநிலங்களில் இலவச சட்ட இயக்கம் உயர்நீதி மன்றங்களின் ஆசியுடன் துவக்கப்பட்டிருக்கின்றது. நமது மாநிலத்திலும் 1977ம் ஆண்டில் தமிழ்நாடு மாநில சட்ட உதவியும் ஆலோசனையும் தரும் கழகம் சென்னை உயர் நீதிமன்ற வளாகத்தில் அன்றைய உயர்நீதி மன்றத் தலைமை நீதிபதி திரு. கைலாசம் அவர்களால் துவக்கப்பட்டது. இதன் துவக்கம் நமது உயர்நீதி மன்ற வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயத்தைத் தோற்றுவித்துள்ளது என்று கருதலாம். மாநில ஆளுநர் கழகத்தின் தலைவர், உயர்நீதி மன்றத் தலைமை நீதிபதி கழகத்தின் தலைமைப் புரவலர். சட்ட அமைச்சர் புரவலர், ஒய்வு பெற்ற உயர்நீதி மன்ற நீதிபதிகள் திரு. இராமகிருஷ்ணன் அவர்களும், திரு. கிருஷ்ணசாமி ரெட்டியார் அவர்களும் கழகத்தின் செயல்படும் தலைவராகவும் (Chairman) துணைத் தலைவராகவும் இருக்கின்றனர். செயலாளராக திரு. இராசா செயல்படுகின்றார். இலவச சட்ட ஆலோசனைக் கழகத்தின் தலைமையகம் சென்னை உயர்நீதி மன்ற வளாகத்தில் இயங்கி வருகின்றது.

கழகத்தின் செயல் தலைவர் 14-1-1979ல் வெளியான சட்ட உதவிக் கையேட்டில் (Hand Book on Legal Aid) எழுதிய முன்னுரையில் பின் வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

எளிய மக்களுக்குத் தேவையான இலவச சட்ட உதவியும் ஆலோசனையும் வழங்குவதற்கென 1979ல் திட்டம் ஒன்றை தமிழ் நாடு இலவச சட்ட உதவியும் ஆலோசனையும் தரும் கழகம் புகுத்தியுள்ளது. சமுதாயத்தொண்டுசெய்யும் நிறுவனங்கள் வழக்கறிஞர் சங்கங்கள், மாநில அரசு, எல்லாவற்றுக்கும் மேலாக நீதித்துறை ஆகிய அனைத்தும் ஒன்று சேர்ந்து உழைக்கும்படியான ஒரு விரிவான முயற்சிக்கு அத்திட்டம் வழிவகுத்திருக்கின்றது. சமுதாயத்தில் சில பகுதியினருக்குச்

சாதகமாக இருக்கும் சமுதாயப் பழக்க வழக்கங்களாலும், போதுமான கல்வி பரவாததாலும் சமுதாயத்தில் பெரும் பகுதியினர் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். ஆகவே மேலே குறிப்பிட்டுள்ள விரிவான முயற்சி அத்தகையோருக்குத் தொண்டு செய்யும் ஒரே பொதுக் குறிக்கோளுடன் மேற்கொள்ளப்படும்.''

இலவச சட்ட உதவி ஆலோசனைக் கழகம் அந்த நல்ல குறிக்கோளை முன்வைத்து செயல்படுவதற்கான விதிகளையும். திட்டங்களையும் வகுத்திருக்கிறது. மேலே சுட்டிக்காட்டிய கையேட்டில் விதிகளும் திட்டங்களும், நோக்கங்களும் விரிவாகத் தரப்பட்டிருக்கின்றன. இது தவிர ஒவ்வொரு ஆண்டும் கழகம் செய்துள்ள பணிகளைக் குறித்த அறிக்கைகளும், சுற்றறிக்கைகளும் (Reports & Circulars) தொடர்ந்து வெளியிடப்படுகின்றன. இவைகளுடன் குறியீடுகள், செயல்திட்டங்கள், நிகழ் முறைகள் (Objectives, Programmes, Methodology) ஆகியவைகள் பற்றியும் அவ்வப்போழுது நூல்கள் மூலம் மக்களுக்குத் தெரிவிக்கப்படுகின்றன. அந்த நூல்களில் குறிப்பிட்டுள்ளவைகளை விரிவாக ஆராய்ந்தால் ஒரு பெரிய நூலாகவே எழுதவேண்டியிருக்கும் எனவே இங்கு குறிப்பிட்ட சில மாத்திரம் தொட்டுக் காட்டப்பட்டிருக்கின்றன.

மாநிலக்குழு

ஆலோசனைக் கழகத்துக்கென மாநில அளவில் குழு அமைக்கப்பட்டிருக்கின்றது. குழுவில் அங்கம் வகிப்பவர்கள்:-

அ. ஆலோசனைக் கழகத்தைத் தோற்றுவித்த முன்னோடிகள்.

ஆ. சட்டத்துறை. சமுதாய நலம், வணிகம், தொழில், பொதுத்துறை ஆகியவைகளில் நாட்டம் கொண்டு செல்வாக்குப் பெற்றவர்கள் மொத்தமாக ரூ. 200/- செலுத்தியதால் ஆன ஆயுள் உறுப்பினர்கள்.

(i) தமிழ் நாட்டின் அட்வகேட் செனரல்.

(ii) மாநில வருவாய்த்துறைக்குழுவின்முதல்உறுப்பினர்.

(iii) மாநில அரசின் உள்துறை, நீதித்துறை, சட்டத்துறை. சமுதாய நலத்துறை செயலர்கள்.

(iv) சென்னை உயர் நீதிமன்றப் பதிவாளர்.

(v) சிறைகளின் துறைத் தலைவர்.

(vi) தலைமை நன்னடத்தை அதிகாரி.

ஊ. ரூ 10,000-மும் அதற்கு மேலும் நன்கொடையாகத் தந்தவர்கள்.

எ. ஆண்டு ஒன்றுக்கு ரூ. 100/- சந்தா தரும் பல்வேறு நிறுவனங்களைச் சேர்ந்த உறுப்பினர்கள்.

ஏ. ஆண்டு ஒன்றுக்கு ரூ. 25/- சந்தா தரும் சாதாரண உறுப்பினர்கள்.

ஐ. கழகத் தலைவர், தலைமைப் புரவலர், புரவலர், மேலும் செயற் குழுவால் ஏற்றுக் கொள்ளப்பட்ட முக்கியமானவர்கள்.

ஒ. தலைவரால் நியமனம் பெறும் உறுப்பினர்கள் பொது குழுவில் மேலேவிவரித்த அத்துணை பேரும் உறுப்பினர் ஆவர்.

செயற்குழுவில் அங்கம் வகிக்கும் உறுப்பினர்கள்:

அ. செயல்படும் தலைவர், துணைத் தலைவர்

ஆ. மாநிலக் குழுவில் (உ)ல் காட்டப்பட்டுள்ள அத் துணை பேரும்.

இ. ஆலோசனைக் கழகத் தலைவர் சென்னை உயர் நீதி மன்ற தலைமை நீதிபதியின் அறிவுரையின்படி நிய மிக்கும் இரண்டு உறுப்பினர்கள்.

ஈ. பொதுக் குழு உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப் பட்ட ஆறு உறுப்பினர்கள்.

நிர்வாகிகள்

தமிழ் நாடு இலவச சட்ட உதவியும் ஆலோசனையும் தரும் கழகத்தின் தலைமை அலுவலக நிர்வாகி செயலாளர் ஆவார். செயலாளரை செயல்படும் தலைவர் கழகத் தலைவ ரின் ஒப்புதலுடன் நியமனம் செய்வார். செயலாளரின் கீழ் பல அலுவலர் பணியாற்றுகின்றனர். மாநில அரசு, மைய அரசு, உள்ளாட்சி நிர்வாகம் ஆகியவைகள் தரும் தொகை யும், நன்கொடையாகவும், சந்தாவாகவும் வரும் தொகை யும் தலைமைக் கழகத்துக்குக் கிடைக்கும் நிதியாகும்.

சென்னை மாநகரில் நகர உரிமையியல் நீதிமன்ற முதன்மை நீதிபதியின் தலைமையில் இலவச சட்ட உதவி

ஆலோசனைக் குழு இயங்குகின்றது. மாவட்டங்களில் மாவட்ட நீதிபதியின் தலைமையிலும், தாலுக்காவில் அங்கு பணிபுரியும் உதவி நீதிபதியின் தலைமையிலும் ஆலோசனைக் குழுக்கள் இயங்குகின்றன.

"இரண்டாவது விடுதலைப் போர்"

இந்தியத் தாய்த் திரு நாட்டை அன்னியர் பிடியிலிருந்து விடுவித்ததை முதல் விடுதலைப் போர் என்றும், இன்று மக்களைக் கவ்வியிருக்கும் அநீதியின் பிடியிலிருந்து விடுவிக்கும் பெரும் முயற்சியை இரண்டாவது விடுதலைப் போர் என்றும் உச்ச நீதிமன்ற நீதிபதி கிருஷ்ண அய்யர் அவர்கள் வர்ணிக்கின்றார். முதல் விடுதலைப் போரில் காணப்படாத சிறப்பு இந்த விடுதலைப் போரில் காணக் கிடைக்கின்றது. முதல் விடுதலைப் போரில் மக்களுடன் வழக்கறிஞர்களும் ஈடுபட்டிருந்தனர். இரண்டாவது விடுதலைப் போரில் வழக்கறிஞர்களுடன் நீதிபதிகளும் பங்கு பெறுவது மிகவும் குறிப்பிடத்தக்க அம்சமாகும். அன்று கிடைக்காத வாய்ப்பு இன்று நீதிபதிகளுக்குக் கிடைத்துள்ளது.

நீதிபதிகளுக்குக் கிடைத்துள்ள இந்த சிறப்பான வாய்ப்பை 1982 டிசம்பர் 11ந் தேதி சென்னையில் நடந்த "சட்ட உதவி பணி பயிற்சிக் கூட்டத்தில்" கலந்து தலைமைப் பேருரை நிகழ்த்திய நீதிபதி கோகுலகிருஷ்ணன் அவர்கள் பின்வருமாறு சுட்டிக்காட்டினார்.

"நமது நீதிபதிகள் இந்த இயக்கத்தில்காட்டும் குறிப்பிடத்தக்க ஆர்வம் எனக்கு மகிழ்வைத்திருக்கின்றது. வழக்குகள் தேங்கிக் கிடக்கும் நிலையிலும் தமக்குக் கிடைக்கும் சிறிய ஓய்வு நேரத்தையும் இலவச சட்ட இயக்கத்துக்குச் செலவிடும் தியாக உள்ளம் படைத்தவர்களாக இருக்கின்றனர்."

அதே பயிற்சி முகாமில் முடிவுரை நிகழ்த்திய நீதிபதி நடராசன் அவர்கள் தனது உரையில் "நாம் மேற்கொண்டுள்ள மிகச் சிறப்பான சோதனை ஆய்வின் இறுதிக் கட்டத்துக்கு வந்துள்ளோம். இது சிறப்பானது என்று கருதுவதற்குக் காரணம் முதல் தடவையாக இந்திய மண்ணில் பெரு வாரியான நீதிபதிகள் ஒன்றாக்கூடி ஏழைகளுக்கு எப்படி இலவச சட்ட ஆலோசனையும் உதவியும் அளித்து நீதி அவர்களுக்குக் கிடைக்கும்படி செய்வது என்பதைப் பற்றிச் சிந்திக்கின்றனர் என்பதாகும்." என்று அருமையாகக் குறிப்பிட்டார்.

வழக்கறிஞர்களும் நீதிபதிகளும் செயல் இணைந்து படு வதன் மூலம் சட்ட ஆட்சியும் (Rule of Law) சமுதாய நீதியும் கொண்டு வர இயலும் என உச்ச நீதிமன்றத்தலைமை நீதிபதி பகவதி அவர்கள் விளக்கியுள்ளார். ''சட்டம் மக்களின் பணி யாள்'' என்ற தலைப்பில் உரையாற்றிய அவர், பின் வருமாறு வழக்கறிஞர்களும் நீதிபதிகளும் அடங்கிய கூட்டத்தில் தெளிவு படுத்தினார்.

''வழக்குகள் ஒரு புறமிருக்க அவைகளில் ஈடுபட்டுள்ள மனிதர்களைப் பற்றிய கவலை நீதிபதிகளுக்கு ஏற்பட வேண்டும். வழக்கறிஞர்களும் நீதிபதிகளும் இலவச சட்ட இயக்கத்தை சமுதாயத்தில் பெருமாற்றங்களைக் கொண்டு வரும் கருவியாகப் பயன்படுத்த இயலும் எனக் கருதி செயல் பட்டால் ஒழிய அது வெற்றிபெற வாய்ப்பில்லை! மக்களின் குறைகளை நீக்க அவர்களை நேரடியாக அணுகத்திட்டங்களை வகுத்து வேகத்துடனும் தீவிரமாகவும் செயல்படுவதன் மூலம் சட்ட ஆட்சியையும் சமுதாய நீதியையும் கொண்டு வர முடியும்''

வறுமையிலும் அறியாமையிலும் உழலும் மக்களுக்கு அநீதியும் ஏற்படாமல் பார்த்துக் கொள்ளும் பொறுப்பு வழக் கறிஞர்களுக்கும் நீதிபதிகளுக்கும் உண்டு. ஆகவே அநீதியைத் தடுத்து நிறுத்தும் தொண்டு செய்தலே மிகவும் தேவையான தாகும் என்று நீதிபதி பகவதி அவர்கள் மேலும் விளக்கினார்.

If we want to bring out Socioeconomic change in the Coutry through the process of law preventive Legal Service is more important and essential than the traditional Court oriented legal Service programme. The preventive Service programme aims at prevention and elimination of various kinds of injustiecs which the poor as a class suffer because of poverty.

இலவச சட்ட இயக்க முகாம்கள்

நமது உயர் நீதி மன்றமும் நீதிபதிகளும், இலவச சட்ட இயக்கமும் வகுத்த திட்டங்களில் ஊர்ப்புறங்களில் இலவச சட்ட இயக்க முகாம்களை நடத்துவது என்ற திட்டம் மிகவும் பயனுள்ளதாக இருக்கின்றது. வறுமையிலும் அறியாமையி லும் வாடும் மக்களை நேரடியாக அணுக இதைவிடச் சிறந்த வழி இருக்க முடியாது. முகாமகளுக்கு வரும் ஏழை எளிய

மக்கள் தங்களுக்கு ஏற்பட்டுள்ள குறைகள் என்ன. வாட்டு கின்ற அநீதிகள் எவை என்பதை அச்சமின்றி துணிவுடன் சொல்ல நிறைய வாய்ப்புகள் தரப்படுகின்றன.

இந்நூல் ஆசிரியர் குமரி மாவட்ட நீதிபதியாகப் பணியாற் றியபோது, குமரி மாவட்டத்தில் பல சிற்றூர்களில் இலவச சட்ட முகாம்களை நடத்தும் வாய்ப்பைப் பெற்றிருந்தார். அப்படி நடந்த முகாம்களில் பெருவாரியான எளிய மக்கள் திரண்டு வந்து தங்கள் குறைகளையும், தங்களுக்கேற்பட்டுள்ள அநீதிகளையும், வாய்மொழியாகவும், மனுக்கள் மூலமாகவும் எடுத்துக் காட்டினர், பெரிய குறைகள் ஒரு புறமிருக்க அந் தந்தப்பகுதியிலேயே பணி புரியும் தாசில்தார், ரெவின்யூ இன்ஸ்பெக்டர் போன்றோர் முயன்றால் உடனடியாக தீர்க்கக் கூடிய சிறிய சிக்கல்களையும் முகாமில் கூடிய மக்கள் சுட்டிக் காட்டியது எந்தளவுக்கு மக்களின் குறைபாடுகளைத் தீர்ப் பதில் அந்தப் பகுதியில் பணி புரியும் சிறு அதிகாரிகள் அக்கரை கொள்வதில்லையென்ற போககைத் தெளிவாகக் காட்டியது. அந்த அதிகாரிகளை மக்களின் வாழ்க்கையில் அன்றாடம் தோன்றும் சிறு சிக்கல்களைத் தீர்க்கும் நல்முயற்சியில் ஈடு படச் செய்வது நல்லது என்பதைச் சுட்டிக்காட்டலாம்.

காட்டுப்புதூர் என்ற ஒரு சிறியசிற்றூரில் நடந்த முகாமில் திரண்டிருந்த கூட்டத்தில் இருந்த நான்கு விதவைத் தாய்மார் கள் பனை மரம் ஏறும் தொழிலில் ஈடுபட்டிருந்த தங்கள் கணவன்மார்கள் பனை மரங்களிலிருந்து விழுந்ததால் இறந்து போய் விட்டனர் என்ற குறையைக் குறித்துக் காட்டினர். அப்படி இறப்பவர்களின் குடும்பங்களுக்குத் தமிழ்நாடு அரசு உதவிப் பணம் வழங்குகின்றது என்ற செய்தி அவர்களுக்குத் தெரியாத நிலையில் முகாமிலேயே விண்ணப்பங்கள் எழுதி உரிய அதிகாரிகளிடம் அவைகளைத் தந்து அவர்கள் சார்பாக வாதாடவும் வழக்கறிஞர்கள் நியமிக்கப்பட்டனர்.இன்னொரு ஊரில் ரேசன் கடைகள் அருகில் இல்லாததால் கர்ப்பிணிகளும் வயதான மூதாட்டிகளும் நீண்ட தூரம் நடந்துசென்று ரேசன் வாங்க இயலாத குறையை நீக்க அதே ஊரில் ஒருரேசன் கடை திறக்கும் பணியை மாவட்ட இலவச சட்ட உதவிக் கழகம் மேற்கொண்டது.

குடிசைகளுக்கு வீட்டு எண் போடப்படாததால் ரேசன் கார்டுகள் அவர்களுக்கு வழங்க அதிகாரிகள் முன்வரவில்லை என்ற குறையைத் தீர்க்க அவர்கள் அனைவருக்கும் ரேசன்

கார்டுகள் வாங்கிக் கொடுக்க வழக்கறிஞர்கள் நியமிக்கப்பட்டனர். கடற்கரையோரமுள்ள ஓர் ஊருக்கு இரவு 9 மணிக்கு மேல் பேருந்து வருவதில்லை என்றும் அதனால் நாகர்கோவிலுக்கு வியாபார சம்பந்தமாக சென்றுவிட்டு இரவில் ஊருக்குத் திரும்பி வர இயலாது தவிக்கும் எளிய வியாபாரம் செய்யும் ஆண்களும் பெண்களும் துன்பப்படுகின்றனர் என்ற குறையைத் தீர்க்க வழக்கறிஞர் நியமித்து உரிய போக்குவரத்துக் கழக நிர்வாக இயக்குநரிடம் வாதாடி அவ்வூருக்கு இரவு 10 மணியளவில் கடைசி பேருந்து வந்து போகும்படி ஏற்பாடு செய்யப்பட்டது.

இன்னும் எத்தனையோ வகைகளில் மக்களின் குறைகளைத் தீர்க்க குமரி மாவட்ட இலவச சட்ட உதவிக் கழகம் தன்னை ஈடுபடுத்தி நல்ல பணிகளைச் செய்துள்ளது எனக் கூறமுடியும். இது போன்ற மற்ற வட்டங்களிலும் மாவட்ட இலவச சட்ட ஆலோசனைக் கழகம் பணி செய்து வருகின்றன.

குமரி மாவட்டத்தில் 25-9-83ல் மிகப் பெரிய அளவில் இலவச சட்ட உதவி இயக்கக் கருத்தரங்கு நடந்தது. அந்தக் கருத்தரங்கில் மாண்புமிகு நீதிபதிகள் திருமிகு. கோகுல கிருஷ்ணன், திருமிகு. வி. ஆர். கிருஷ்ண அய்யர், திருமிகு. இரத்தினவேல் பாண்டியன், திருமிகு. இராமாநுசம், திருமிகு. கிருஷ்ணசாமி ரெட்டியார், கேரள உயர்நீதி மன்ற நீதிபதி திருமிகு. சிவராமன் நாயர் ஆகியோர் கலந்துகொண்டனர். நீதிபதிகள் தமது உரைகளில் மிகமுக்கியமாக எளிய மக்களுக்கு பல்வேறு வகைகளில் ஏற்பட்டுள்ள அநீதிகளைக் களைவதில் இலவச சட்ட இயக்கம் ஆர்வத்துடனும் செயல் திறமையுடனும் ஈடுபட வேண்டுமென அறிவுரை தந்தனர். அந்த அறிவுரைகளெல்லாம் வீண் போகவில்லை, தமிழ்நாடெங்கும் இலவச சட்ட இயக்கத்தை எளிய மக்கள் தமது உற்ற நண்பன் எனக் கருதி அதன்மூலம் தமக்கேற்படும் குறைகளையும் அநீதிகளையும் களைய முனைந்து நிற்பதைக் காண முடிகின்றது.

தமிழ்நாடு இலவச சட்ட உதவியும் ஆலோசனையும் வழங்கும் கழகம் உயர்நீதிமன்ற நீதிபதி. இராமகிருஷ்ணன், நீதிபதி. கிருஷ்ணசாமி ரெட்டியார் ஆகியோர் தலைமையில் திருமிகு. இராசாவைச் செயலாளராகக் கொண்டு மிகத் திறமையுடனும் மிகுந்த பயனுள்ள வகையிலும் இயங்கி வருகின்றது. மற்ற மாநிலங்கள் நமது மாநிலத்தில் இயங்கும் இலவச சட்ட இயக்கத்தை முன் மாதிரியாக ஏற்றுக்கொண்டுள்ளனர்.

குமரிமாவட்டத்தில் காவல்துறைக் கண்காணிப்பாளராகப் பணிபுரிந்த திரு. எ. என். சவானி அய்.பி.எஸ். (A.N. Sawani I.P.S.) குமரி மாவட்டத்தில் நடந்த இலவச சட்ட கருத்தரங்கு மலருக்கு அனுப்பிய செய்தியில் பின்வருமாறு குறிப்பிட்டிருக் கின்றார்.

ஏழையாக இருப்பவனுக்கும், மெலிந்தவனுக்கும், பிறரால் ஏமாற்றபப்படுபவனுக்கும், கொடுமையால் வாடுபவனுக்கும், உரிமைகள் இழந்தவனுக்கும் மாவட்ட இலவச இயக்கம் அன்புடன் நீட்டும் நேசக்கரங்கள் நம்பிக்கை ஒளியைத் தருகின்றது. நீதி வேண்டும் என்பது இந்தியக் குடிமகன் ஒவ்வொருவரின் உரிமையாகும். இலவச சட்ட இயக்கம் அரிது முயன்றும் நீதி கிடைக்காமல் திண்டாடும் மக்களுக்கும் நீதி கிடைக்க வழி வகுக்கின்றது. இந்தத் துறையில் கன்னியாகுமரி மாவட்ட இலவச சட்ட இயக்கம் மிகச்சிறந்த தொண்டைச் செய்துள்ளது.

(For him who is poor, for him who is weak for them who is exploited, for him who is wronged, for him who is deprived the warm supportive hand of the District Legal Aid organisation shows a ray of hope. To seek justice is the right of every Indian in citizen. Legal Aid ensures this right for those for whom justice is too costly. In this Regard Kanyakumari District Legal Aid Committee has done excellent Service A. N. Sawani I.P.S. 19-9-83.)

திரு. சவானி அய். பி. எஸ். கூறியது மற்ற மாவட்டங்களில் இயங்கும் மாவட்ட இலவச சட்ட ஆலோசனைக் கழகங்களுக்கும், தமிழ்நாடு இலவச சட்ட உதவிக் கழகத்துக்கும் பொருந்தும்.

தமிழ்நாடு இலவசச் சட்ட உதவி மற்றும் ஆலோசனைக் கழகத்துக்கு நமது உயர்நீதிமன்றமே வழிகாட்டி. உயர்நீதி மன்றத்தின் தலைமை நீதிபதி அதன் புரவலர். உயர்நீதிமன்றத்தின் நீதிபதிகள் அனைவரும் அதில் ஆர்வம் காட்டுகின்றனர். ஒய்வு பெற்ற நீதிபதிகள் திருமிகு. இராமகிருஷ்ணன் திருமிகு. கிருஷ்ணசாமி ரெட்டியார் ஆகிய இருவரும் அதை வழி நடத்திச் செல்கின்ற ஆற்றமிக்க நிர்வாகிகள். இங்கனம் உயர்நீதிமன்றமே முழுமையாக ஈடுபட்டுள்ளதால் இயக்கம் வாழ,வளர, உயர பெரும் வாய்ப்புக்கள் நிறைந்திருக்கின்றன.

''நாள்தோறும் நாடி முறை செய்யாமன்னவன்
நாள்தொறும் நாடு கெடும்'' (குறள்)

''நீதிபதிகளை மாற்றும் அதிகார உரிமை வழக்கு'' 1

(Judges, Transfer Case)

அடிப்படை உரிமைகள் வழக்கைப் போல் (Fundamental Rights case) இந்த வழக்கும் அதி முக்கியத்துவம் பெற்றுவிட்டது. அடிப்படை உரிமைகள் வழக்கு மக்களின் உரிமைகளைப் பற்றியதாகும். இந்த வழக்கோ மாண்புமிகு நீதிபதிகளின் உரிமைகள் பற்றிய வழக்காகும். ஆகவே தான் நீதித்துறை வரலாற்றில் அடிப்படை உரிமைவழக்கு ஒரு அத்தியாயத்தைப் பிடித்துக் கொண்டது போல் இந்த வழக்கும் இன்னொரு அத்தியாயத்தின் நாயகமாய் விளங்கும் தகுதி பெற்றிருக்கின்றன.

இந்த வழக்கு உச்சநீதிமன்றத்தில் முடிவெடுக்கப்பட்ட வழக்கானாலும், உயர்நீதிமன்ற நீதிபதிகளின் மாறுதல் சம்பந்தமானதால், தமிழ்நாடு உயர்நீதிமன்ற வரலாற்றில் இந்த வழக்கைக் குறிப்பிடுவது நலம் என்று கருதுகின்றேன். மேலும் உச்சநீதிமன்றத்தின் முன் இருந்த பல நீதிப்பேராணை மனுக்களுள் ஒன்றில் முன்னாள் தலைமை நீதிபதி திரு. கே.பி.என். சிங் அவர்களும் ஒரு கட்சிக்காரராக இருந்தார் என்பதும் குறிப்பிடத் தக்கதாகும்.

உச்ச நீதிமன்றத்தின் முன்வந்த பெரும் வழக்குகளில் இந்த வழக்கும் ஒரு பெரிய வழக்கு என்பதில் அய்யமில்லை. இந்த வழக்கில் ஆய்வுக்கு எழுந்த வினாக்களெல்லாம் இந்திய அரசியல் சட்டப் பொருள் விளக்கம் சம்பந்தமான பெரும் வினாக்கள் என்றே கூறலாம். அவைகள் பெரிதும் நீதித்துறையின் சுதந்தரம் பற்றிய வினாக்கள் ஆனதால் மக்களும் மாண்புமிகு நீதிபதிகளும், நீதித்துறையின் சுதந்திரத்தில் அக்கறை கொண்டு பெருமக்களும் மிகுந்த ஆர்வம் காட்டினர்.

ஆகவே இத்தகைய பெரிய வழக்கின்போது சில சமயங்களில் பெருமக்களின் உணர்ச்சியும் பேராார்வமும் பொங்கி

வழிந்ததையும் காண முடிந்தது என அந்த வழக்கில் நீதிபதிகளில் ஒருவரும் இன்றைய உச்சநீதி மன்றத் தலைமை நீதிபதியுமான திரு. பகவதி அவர்கள் குறிப்பிட்டிருக்கின்றார்.

இந்த வழக்கை ஏழு உச்சநீதி மன்ற நீதிபதிகள் அடங்கிய ஆயம் எடுத்து நடத்தியது. அந்த நீதிபதிகள் (1) திருமிகு. பி.என். பகவதி, (2) திருமிகு. எ.சி. குப்தா, (3) திருமிகு. எஸ். முர்தாசா பேசல் அலி, (4) திருமிகு. வி.டி. துல்சாபூர்க்கர், (5) திருமிகு. டி.எ. தேசாய், (6) திருமிகு. ஆர்.எஸ். பதக்கு, (7) திருமிகு. இ. எஸ். வெங்கிட்டராமையா, ஆகியோர் ஆவர்.

மிக்க திறம் வாய்ந்த பல வழக்குரைஞர்கள் மனுதாரர்கள் சார்பாகவும், அரசின் சார்பாக அட்டர்னி செனரல் எல. என். சின்காவும், சொலிசிட்டர் செனரல் பராசுரனும், அவர்கள் இருவருக்கும் உதவியாக திரு. கே. எஸ். குருமூர்த்தியும் நீதிமன்றத்தில் தோன்றி வாதம் புரிந்தனர். வலிவுமிக்க வாதம் தொடர்ந்து 35 நாட்களாக நீதிபதிகளின் முன் வைக்கப்பட்டது. பல தொகுதிகள் அடங்கிய ஏராளமான ஏடுகள் நீதிபதிகளின் ஆய்வுக்கு வைக்கப்பட்டதுடன் இந்திய நீதிமன்றங்கள் அயல்நாட்டு நீதிமன்றங்கள் வழங்கியுள்ள முன் தீர்ப்புகளும் நீதிபதிகள் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டன.

இந்த வழக்கில் எட்டு நீதிப் பேராணை மனுக்கள் (Writ petitions) ஆய்வுக்குரியவைகளாக இருந்தன. முதலில் அவைகளில் பல பல்வேறு உயர்நீதி மன்றங்களில் தொடரப்பட்டிருந்தன. பின்னரே அந்த எட்டு நீதிப் பேராணை மனுக்களும் உச்சநீதி மன்றத்துக்கு மாற்றப்பட்டன. உயர்நீதி மன்றங்களில் விசாரிப்பது உசிதமல்ல என்று கருதி அவை அனைத்தையும் ஒருங்கே உச்சநீதிமன்றமே விசாரிப்பது முறையானதாகும் என்பதே ஏற்றுக்கொள்ளப்பட்டது என்பது தெரிகின்றது. எட்டு நீதிப்பேராணை மனுக்கள் எப்படி உருவெடுத்தன என்ற விவரத்தைக் காண்போம்.

முதல் நீதிப் பேராணை மனு

பம்பாய் உயர்நீதி மன்றத்தில் வழக்குரைஞராகப் பணிபுரிந்த இக்பால் சாக்லா என்ற வழக்குரைஞரும் இன்னும் சில வழக்குஞர்களும் சேர்ந்து பம்பாய் உயர்நீதி மன்றத்தில் நீதிப் பேராணை தாக்கல் செய்தனர். அப்போதைய சட்ட அமைச்சர் திருமிகு. சிவசங்கர் 18—3—1981ல் பஞ்சாப்

ஆளுநருக்கும், மற்ற மாநில முதலமைச்சர்களுக்கும் ஒரு சுற்றறிக்கை அனுப்பியிருந்தார். அந்த சுற்றறிக்கையை எதிர்த்துப் போட்ட மனுத்தான் அந்த நீதிப் பேராணை மனுவாகும். சட்ட அமைச்சர் சுற்றறிக்கையில் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார்.

சட்டம் நீதி அமைச்சகம்
புதுடில்லி-110001
மார்ச்சு 18, 1981

அன்புள்ள அய்யா

மாநிலங்களைத் திருத்தி அமைக்கும் குழு, பல வழக்குரைஞர் சங்கங்கள், நடுவண் அரசு சட்டக்குழு, இன்னும் பல நிறுவனங்கள், அமைப்புகள் ஆகியவைகள் எல்லாம் தொடர்ந்து திருப்பி திருப்பி ஒன்றைக் கூறிவருகின்றன. தேசிய ஒற்றுமையை மேலும் வளர்க்கவும், சாதி, உறவு, அந்தந்தப் பகுதி ஆகியவைகள் தொடர்பால் கொள்ளும் குறுகிய போக்கையும் மாற்றவும் ஒரு உயர்நீதி மன்றத்தில் பணிபுரியும் நீதிபதிகளில் 1/3 பாக நீதிபதிகள் அந்த மாநிலத்தைவிட்டுப் பிற மாநிலங்களைச் சேர்ந்தவர்களாக இருக்கவேண்டும் என்பதே மேலே சொன்ன அமைப்புகள் வலியுறுத்தி வருகிறதொன்றாகும்.

என்ன காரணத்தாலோ கடந்த காலத்தில் அந்தக் கோரிக்கை கவனிக்கப்படாமல் இருந்துவிட்டது. ஆனால் அக்கோரிக்கைக்குச் செயல் வடிவம் விரைவில் கொடுக்க வேண்டுமென்கின்ற எண்ணம் நியாயமாக வலுப்பெற்று வருகின்றது. இந்த சூழ்நிலையில் உங்கள் மாநில உயர்நீதி மன்றத்தில் பணிபுரியும் கூடுதல் நீதிபதிகள் (Additional Judges) வேறு மாநில உயர்நீதி மன்றங்களில் நிரந்தர நீதிபதிகளாக நியமனம் பெறுவதற்கான ஒப்புதலைப் பெறவும், அவர்கள் விரும்புகின்ற மூன்று உயர்நீதி மன்றங்களை வரிசைப்படுத்தி கூறும்படியும் கேட்டுக்கொள்ளுங்கள்.

இரண்டாவதாக புதிதாக நியமனம் பெறத் தகுதியுள்ள நீதிபதிகளிடமும் அவர்கள் விரும்பும் மூன்று உயர்நீதி மன்றங்களை வரிசைப்படுத்திக் கூறும்படியும் கேட்டுக்கொள்ளவும். ஆனால் புதிதாக நியமிக்கப்பட வேண்டியவர்கள் மூன்று உயர் நீதிமன்றங்களை வரிசைப்படுத்திக் கூறிவிடுவதாலேயே அவர்களுக்கு நிச்சயம் நியமனம் கிடைத்துவிடும் என்ற நம்பிக்கை கொள்ளவேண்டாம் என்பதைத் தெளிவாக்கி விடுங்கள்,

மிக விரைவில் கூடுதல் நீதிபதிகளிடமும் நியமனத்தை நோக்கி இருப்பவர்களிடமும் எழுத்து மூலம் ஒப்புதல் பெற்று

இன்றிலிருந்து 15 நாளைக்குள் அனுப்பி வைத்தால் நான் நன்றியுடையவனாக இருப்பேன்.

இக்கடிதத்தின் நகலை உங்கள் மாநில உயர்நீதி மன்றத் தலைமை நீதிபதிக்கு அனுப்பிவைக்கின்றேன்.

இங்ஙனம்
உண்மையுள்ள,
பி. சிவசங்கர்

இக்கடிதத்தின் நகல் பம்பாய் உயர்நீதி மன்றத் தலைமை நீதிபதிக்குக் கிடைத்ததும், அவர் அந்த உயர்நீதி மன்றத்தில் பணிபுரியும் 10 கூடுதல் நீதிபதிகளின் ஒப்புதல் கேட்டு மடல் எழுதினார். அதற்குள் இச்செய்தி வழக்குரைஞர் சங்கங்களுக்கு எட்டவே, ஒப்புதல் கேட்பது முறையற்றது என்றும், நீதிபதிகளின் சுதந்தரத்தைப் பறிப்பதாகும் என்றும், உரத்த குரல் எழுப்பி தமது கண்டனத்தைத் தெரிவித்தனர். அத்துடன் சில வழக்குரைஞர்கள் சட்ட அமைச்சரின் சுற்றறிக்கை அரசியல் சட்டத்துக்கும் நீதிபதிகளின் சுதந்தரத்துக்கும் உலை வைப்பதாகும் எனக் கருதி உயர்நீதி மன்றத்தில் அதை எதிர்த்து நீதிப்பேராணை மனு ஒன்றும் தாக்கல் செய்தனர். இந்த மனுவில் சட்ட அமைச்சரையும், மத்திய அரசையும், பம்பாய் உயர்நீதிமன்ற 10 கூடுதல் நீதிபதிகளையும் சேர்த்து 12 பேரை எதிர் மனுதாரர்களாகச் சேர்த்து இருந்தனர். இறுதியில் இந்த ரிட்மனு உச்சநீதி மன்றத்துக்கு மாற்றப்பட்டு மேலே சொன்ன 7 உச்சநீதி மன்ற நீதிபதிகளின் முன் வந்தது.

இரண்டாவது நீதிப்பேராணை மனு

Writ of mandamus)

டில்லி உச்ச நீதிமன்றத்தில் வழக்குரைஞர் தொழில் செய்து வரும் வி.எம். தார்குண்டே என்ற முதுபெரும் வழக்குரைஞர் டில்லி உயர் நீதிமன்றத்தில் இந்த ரிட் மனுவைத் தாக்கல் செய்தார். இந்த ரிட்மனுவில் சட்ட அமைச்சரின் சுற்றறிக்கையை எதிர்ப்பதுடன் டில்லி உட்பட பல உயர் நீதிமன்றங்களில் பணி புரியும் கூடுதல் நீதிபதிகளை நிரந்தர நீதிபதிகளாக அந்தந்த உயர் நீதி மன்றங்களில் நியமனம் செய்யவேண்டும் என்றும் வேண்டியிருந்தார்.

டில்லி உயர் நீதி மன்றத்தில் ஓ.என். வாக்ரா, எஸ். என். குமார், எஸ்,பி.வேட் (S.P. Wad) என்ற மூன்று கூடுதல்நீதிபதி

கள் பணி புரிந்தனர். அவர்கள் மூன்று பேரும் 7-3-1979 லிருந்து இரண்டு ஆண்டுகளுக்கே நியமிக்கப்பட்டு இருந்தனர். ஆகவே, அவர்களது பதவிக்கால் 6-3-81ம் அன்று முடிவடையும் தருவாயில் இருந்தது. தார்குண்டே தனது ரிட் மனுவில் மனு முடிவடையும் வரையிலும் மூன்று பேரும் தொடர்ந்து பதவியில் இருக்க ஆணை பிறப்பிக்கும்படியும் கேட்டிருந்தார். மத்திய அரசு எஸ். பி. வேட் என்ற நீதிபதிக்கே காலத்தை நீட்டிக் கொடுத்தனர். மற்ற இருவருக்கும் பதவியை நீடிக்க மறுத்து விட்டனர். மத்திய அரசுடன் நீதிபதிகள் குமாரும், வோக்ராவும் எதிர் மனுதாரர்களாகச்சேர்க்கப்பட்டிருந்தனர். ஆனால் வோக்ரா வழக்கில் அக்கரை காட்டாது நின்று விட்டார். கூடுதல் நீதிபதி குமார் வழக்கில் ஆசராகி வாழ்க்கை நடத்தினார்,

இந்த ரிட்மனுவும் இறுதியில் உச்ச நீதி மன்றத்தில் மேலே குறிப்பிட்ட நீதிபதிகளின் முன் ஆய்வுக்கு வந்தது.

மூன்றாவது நீதிப் பேராணை மனு

டில்லி உயர் நீதி மன்றத்தில் வழக்குரைஞராக இருந்த ஜே. எல். கால்ராவும் இன்னும் சில வழக்குரைஞர்களும் டில்லி உயர் நீதி மன்றத்தில் வழக்குகள் தேங்கிக் கிடப்பதால் தேவையான நிரந்தர நீதிபதிகளையும் கூடுதல் நீதிபதிகளையும் நியமிக்க உத்திரவிடுமாறு டில்லி உயர் நீதி மன்றத்தில் ரிட்மனுப்போட்டனர். இந்த ரிட் மனுவும் இறுதியில் உச்ச நீதி மன்றத்தில் ஏழு நீதிபதிகளின் முன் ஆய்வுக்கு வந்தது.

நான்காவது நீதிப்பேராணை மனு

வழக்குரைஞர் எஸ்.பி. குப்தா அலகாபாத் உயர் நீதி மன்றத்தில் ரிட் மனு தாக்கல் செய்திருந்தார். அதில் சட்ட அமைச்சர் அனுப்பிய சுற்றறிக்கை செல்லாது என்று கோருவதுடன் அலகாபாத் உயர் நீதிமன்றத்தில் பணி புரியும் கூடுதல் நீதிபதிகள் முரளிதர், எ.என். வெர்மா, என்.என். மிட்டல் ஆகிய மூன்று பேரும் அவர்கள் நியமனம் பெற்ற காலத்தி லிருந்தே நிரந்தர நீதிபதிகளாகக் கருதபடவேண்டுமெனவும் வேண்டியிருந்தனர். இந்த ரிட் மனுவும் இறுதியில் உச்ச நீதி மன்றத்தில் ஏழு நீதிபதிகளின் ஆய்வுக்குக் கொண்டுவரப் பட்டது.

இந்த நான்கு நீதிப்பேராணை மனுக்களிலும் ஒரே மாதிரி யான கோரிக்கைகள் எழுதப்பட்டிருந்தால் இவை நான்கையும் ஒன்று சேர்த்து ''முதல் தொகுதி ரிட் மனுக்கள்'' என உச்ச நீதி மன்றம் கருதி ஆய்வுக்கு எடுத்துக் கொண்டது. மத்திய சட்ட அமைச்சரின் சுற்றறிக்கை அரசியல் சட்டத்துக்கு முரண் பாடானது என்பதும் உயர் நீதிமன்றக் கூடுதல் நீதிபதிகளை (Additional Judges) அந்தந்த உயர் நீதிமன்றங்களில் நிரந்தர நீதிபதிகளாக நியமிக்க வேண்டுமென்பதும் இந்த நான்கு நீதிப் பேராணைகளில் எழுந்துள்ள சிக்கல்களாகும்.

அய்ந்தாவது நீதிப் பேராணை மனு

உச்ச நீதி மன்றத்தில் வழக்குரைஞர் தொழில் புரிந்த செல்வி. லில்லிதாமசு உச்ச நீதிமன்றத்தில் ரிட் மனுப்போட்டி ருந்தார். சென்னை உயர் நீதி மன்றத் தலைமை நீதிபதி திரு மிகு. எம்.எம் இசுமாயில் அவர்களைக் குடியரசுத் தலைவர் கேரள உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதியாக நியமித்து. உத் தரவு அனுப்பியிருந்தார். அதே வேளையில் பாட்னா உயர் நீதி மன்றத் தலைமை நீதிபதி திருமிகு. கே.பி. என் சிங் அவர் களை சென்னை உயா நீதி மன்றத் தலைமை நீதிபதியாகவும் நியமனம் செய்து குடியரசுத் தலைவர் உத்திரவு அனுப்பியிருந் தார்.

வில்லிதாமசு தனது ரிட் மனுவில் தலைமை நீதிபதி இசுமாயில் அவர்களை கேரள உயர் நீதி மன்றத்துக்கு மாற்றி யது மூன்று வகையில் தவறுடையது எனக் குறிப்பிட்டிருந்தார். (1) நீதிபதி இசுமாயில் அவர்களின் ஒப்புதல் பெறவில்லை. (2) அவரது மாறுதல் பொது நன்மை (Public Interest) முன் னிட்டு என்று குறிப்பிட்டிருந்தாலும், என்ன பொது நன்மை என்பது விளக்கப்படவில்லை. (3) உச்ச நீதிமன்றததலைமை நீதிபதியை முழுமையாகவும் உண்மையாகவும் (Full & effective Consultation)கலந்து ஆலோசிக்காமல் போட்ட உத்திரவாகும். இம் மூன்று வகையில்அவரது மாறுதலைஎதிர்த்து லில்லிதாமசு உச்ச நீதிமன்றத்தில் குரல் எழுப்பினார். தலைமை நீதிபதி இசுமாயில் அந்த மனுவில் இரண்டாவது 'எதிர் மனுதாராகச் சேர்க்கப்பட்டிருந்தார்.

ஆனால் தலைமை நீதிபதி இசுமாயில் உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்த உறுதி மொழி ஆணைப்பத்திரத்தில் (Affidavit) குடியரசுத் தலைவர் தன்னை இடம் மாற்றிப் போட்ட உத் திரவை உதான் எதிர்க்கவில்லையென்றும், தனக்காக இந்த ரிட்

மனுவில் யாரும் வாதாடத் தேவையில்லையென்றும் குறிப்பிட்டிருந்தார். மேலும் இந்த ரிட் மனுவில் வாதம் தொடங்கும் சமயத்தில் இசுமாயில் அவர்கள் தலைமை நீதிபதிப் பதவியைத் துறந்து இளங்கோ அடிகள் போல் இலக்கியத் துறைக்குத் தன்னை அர்ப்பணித்துக்கொண்டது சென்னை உயர் நீதிமன்ற வரலாற்றில் ஒரு குறிப்பிடத்தக்க நிகழ்ச்சியாகக் கருதப்படுகின்றது.

உச்ச நீதி மன்றம் இந்த ரிட் மனு தேவையற்றதாகி விட்டதெனத் தனது தீர்ப்பில் கூறியிருக்கின்றது. மற்ற ஏழு மனுக்களுடன் இந்த மனுவையும் சேர்த்தியே ஆய்ந்து தீர்ப்பு வழங்கியிருக்கின்றது.

ஆறாவது நீதிப்பேராணை மனு

சென்னை உயர் நீதி மன்ற வழக்குரைஞர் திரு. எ. இராசப்பா சென்னை உயர் நீதி மன்றத்தில் ரிட்மனு தாக்கல் செய்தார். அந்த மனுவில் தலைமை நீதிபதி எம்.எம். இசுமாயில் அவர்களை கேரள உயர் நீதி மன்றத்துக்கு மாற்றியதையும், பாட்னா உயர் நீதி மன்றத் தலைமை நீதிபதி கே,பி,என். சிங் அவர்களை சென்னை உயர்நீதி மன்றத்துக்கு மாற்றியதையும் எதிர்த்து குடியரசுத் தலைவரின் அந்த இரு உத்திரவுகளும் செல்லாது எனக்குறிப்பிட்டார். அந்தந்த மாநில ஆளுநர்களைக் கலந்து ஆலோசிக்காமல் இரண்டு உத்திரவுகளையும் குடியரசுத் தலைவர் வழங்கியுள்ளதால் அரசியல் சட்டம் பிரிவு 217(1) ல் கூறியுள்ளதை மீறியுள்ள செயலாகும் என்பதும், நீதிபதி கே.பி.என் சிங் அவர்களுக்குத் தமிழ் மொழி தெரியாததால் அவரை இங்கு மாற்றியது பொதுமக்களின் நலனுக்கு எதிரானது என்பதும்இராசப்பா மனுவில் குறிப்பிட்டகருத்துக்கள் ஆகும்.

இந்த மனுவும் இறுதியில் உச்ச நீதி மன்றத்துக்கு மற்ற மனுக்களுடன் ஆய்வு செய்ய கொண்டு வரப்பட்டது.

ஏழாவது நீதிப்பேராணை மனு

சென்னை உயர் நீதிமன்ற வழக்குரைஞர் திரு.பி. சுப்ரமண்யம் சென்னை உயர் நீதிமன்றத்தில் ரிட்மனு தாக்கல் செய்திருந்தார். திரு. இராசப்பா தாக்கல் செய்த அதே ரிட்மனுவைப் போன்றதே இந்தமனுவும் ஆகும். இந்தமனுவும் உச்ச நீதிமன்றத்துக்கு மாற்றப்பட்டது.

எட்டாவது நீதிப் பேராணை மனு

பாட்னா உயர் நீதிமன்ற வழக் குரைஞர்கள் திரு. டி. என் பாண்டே, திரு. தக்குர் ராமாபதி சின்கா ஆகியோர் பாட்னா உயர் நீதிமன்றத்தில் ரிட்மனுதாக்கல் செய்திருந்தனர். ஏற் கனவே லில்லிதாமசும், எ. சிராசப்பாவும், பி. சுப்பிரமண்ய மும் தாக்கல் செய்திருந்த ரிட் மனுக்களில் கூறப்பட்டிருந்த அதே கருத்தையே இந்த ரிட் மனுவிலும் கூறியிருந்தனர். அதாவது தலைமை நீதிபதி கே.பி,என் சிங்கையும், தலைமை நீதிபதி எம்.எம். இசுமாயிலையும் மாற்றிய உத்திரவுகள் அரசி யல் சட்டத்துக்கு எதிரானது எனக் கூறப்பட்டிருந்தது.

இந்த ரிட் மனுவில் நீதிபதி. கே. பி. என். சிங்கை மூன்றாவது எதிர் மனுதாரராக முதலில் சேர்த்திருந்தனர். ஆனால் நீதிபதி. கே.பி.என். சிங் தன்னையும், ஒரு மனு தாரராகவே ஏற்றுக்கொள்ள வேண்டுமென மனுப்போட்டார். நீதி மன்றமும் அதை ஏற்றுக் கொண்டு மேலே சொன்ன இரண்டு வழக்குரைஞர்களுடன் இவரை மூன்றாவது மனு தாரராக மனுவில் சேர்த்துக் கொண்டனர்.

நீதிபதி. கே.பி.என். சிங் தனது உறுதிமொழிப் பத்திரத் தில் (Affidavit) தன்னை சென்னை உயர் நீதி மன்றத் தலைமை நீதிபதியாக மாற்றியது தனக்களிக்கப்பட்ட ஒரு தண்டனை யாகக் கருதப்பட வேண்டுமென்றும், தன்னை மாற்றியது பொது நலனுக்கு எதிரானது என்றும், உச்ச நீதி மன்றத் தலைமை நீதிபதியுடன் தனது மாறுதல் குறித்து முழுமையாக வும், தேவையான அளவிலும் கலந்து ஆலோசிக்கவில்லையென் றும் குறிப்பிட்டிருந்தார்.

இறுதியில் இந்த ரிட் மனுவும் உச்ச நீதிமன்றம் வந்து சேர்ந்தது.

இந்த நான்கு ரிட் மனுக்களும் இரண்டு தலைமை நீதிபதி கள் திரு.எம்.எம். இசுமாயில், திரு. கே.பி.என் சிங் ஆகி யோரின் இடம் மாற்றத்தை எதிர்த்து போடப் பட்டுள்ளதால் உச்ச நீதிமன்றம் தீர்ப்புச் சொல்லுவதில் வசதியை முன்னிட்டு இரண்டாம் தொகுதி ரிட் மனுக்கள் என்று இவைகளை அழைத் தது.

எட்டு ரிட் மனுக்களிலும் ஆய்வுக்கு எழுந்த முக்கிய வழக் கெழு வினாக்கள்.

(1) பொது நலன் குறித்த வழக்கு (Public Interest litigation) என்ற முறையில் வழக் குரைஞர்கள் மேலே சொன்ன ரிட் மனுக்களைத் தாக்கல் செய்யத் தகுதி பெற்றவர் களா?

(2) நீதித் துறையின் சுதந்தரம் பெரிதும் பாதிக்கப் பட்டுள்ளதா?

(3) மத்திய அரசின் சட்ட அமைச்சர் 18-3-81ல் விடுத்த சுற்றறிக்கை சட்டப்படி செல்லுமா?

(4) உயர் நீதிமன்ற நீதிபதிகளை நியமிப்பதிலும் மாற்று வதிலும், என்ன நடைமுறை பின்பற்றப் படவேண்டும்? யாராரிடம் கலந்து ஆலோசிக்க வேண்டும்? பாதிக்கப்பட்ட நீதிபதிகளின் ஒப்புதலும் தேவைதானா?

(5) ஒரு உயர் நீதி மன்றத்திலிருந்து இன்னொரு உயர் நீதி மன்றத்துக்கு நீதிபதிகளை மாற்றம் செய்யும் பொழுது, பொது நலன், நீதிபதியின் தனிப்பட்ட வசதிக் குறைவு, மாநில மொழி நீதிபதியின் ஒப்புதல்-போன்றவைக்களைக் கருத்தில் கொள்ள வேண்டுமா?

(6) அரசியல் சட்டப் பொருள் விளக்கம், அரசியல் சட்ட மரபுகள், போன்றவைகள் சம்பந்தமாகவும், ஆவணங்கள் சம்பந்தமாகவும் எழுந்துள்ள பூசல்கள் குறித்து உச்ச நீதி மன்றத்தின் கருத்துக்கள் யாவை?

உச்ச நீதிமன்றம், மேலே குறிப்பிட்ட இந்த எட்டு மனுக் களில் எழுந்துள்ள வழக்கெழு வினாக்களுக்குத் தனது மிகப் பரந்த விரிந்த தீர்ப்பில் சொல்லியுள்ளவைகள் பின் வரும் தலைப்புகளில் சுருக்கமாகத் தரப்படுகின்றன.

நீதிபதிகள் வழக்கில் வழக்குரைஞர்கள் நீதி மன்றத்தை நாட உரிமை உண்டு. (Locus Standi)

இந்த வழக்குகளில் நீதித் துறையைப் பற்றிய பூசல்கள் எழுந்துள்ளன என்பதில் அய்யம் இல்லை. தலைமை நீதிபதி கே.பி.என். சிங்கும் கூடுதல் நீதிபதி எஸ்.என்.குமாரும் மனு தாரர்களாக இருக்கின்றனர். இப்படி நீதித்துறை, நீதிபதிகள் பற்றிய பூசலானதால், வழக்குரைஞர்களுக்கு இந்தப் பூசல் களில் தீர்வு காண்பதில் மிகுந்த அக்கரை உண்டு என்றே உச்ச நீதிமன்றம் கருதியுள்ளது. ஆகவே ரிட் மனுக்களைத்

தாக்கல் செய்துள்ள வழக்குரைஞர்களைப் பார்த்து "வழக்குரைஞர்களே நீதிபதிகளுக்கு ஏற்பட்டுள்ள சிக்கல்களில் தலையிட உங்களுக்கு உரிமையில்லை, எனவே நீதிமன்றத்தை நாடாதீர்கள், அதோ வாயில்கள் திறந்திருக்கின்றன சென்று விடுங்கள்" எனக் கூற முடியாது.

பொதுவாக ஒருவரின் தனிப்பட்ட உரிமை பாதிக்கப் பட்டால் அதைக் காப்பாற்றிக்கொள்ள நீதிமன்றத்தை நாட உரிமை உண்டு என்பது தெளிவானதாகும். ஒருவரின் சொத்துக்கோ, உடலுக்கோ. உள்ளம் நோகக்கூடிய முறையிலோ அல்லது அவரது புகழுக்கு இழுக்குத்தேடும் முறையிலோ தீங்கு இழைக்கப்பட்டால், அவர் நீதிமன்றத்தை நாடி தீங்குக்குத் தீர்வு காணமுடியும்.

தனிப்பட்டோர் நலச்சட்டம், பொதுநலச்சட்டம் (Private law & Public law) இருவகைச் சட்டங்களில் தனிப்பட்டோர் நலச்சட்டமே முன்காலத்தில் வலிவு பெற்றிருந்தது. ஆகவே தனிப்பட்டோர் நலனுக்குத் தீங்கு நேரிடுமாகில் அவர் நீதி மன்றத்தை அனுக வாய்ப்புகள் நிறைய இருந்தன. ஆனால் அரசியல் சட்டம் உருவாகியபின்னர் பொது நலத்தை முன்னிட்டு நீதிமன்றங்களை நாட வாய்ப்புகள் பெருகியுள்ளன. உயர்நீதி மன்றத்தை அரசியல் சட்டப்பிரிவு 226ன் படியும், உச்ச நீதிமன்றத்தை பிரிவு 32ன் படியும் நாடமுடியும்.

ஒரு குறிப்பிட்ட பகுதியினர் வறுமையின் காரணமாகவோ, உதவி செய்வார் இன்மையாலோ, பொருளாதார சமுதாயத் தடைகளினாலோ அல்லது வேறு வசதியின்மையாலோ அவர்களுக்குத் தீங்கு ஏற்பட்ட பின்பும் நீதிமன்றத்தை நாட இயலவில்லை என்றால் அவர்களது நலனில் அக்கரை கொண்ட எவரும் நீதிமன்றத்தை நாடமுடியும்.

பீகார் சிறையிலே வாடிய சிறைக் கைதிகளின் நலனுக்காகவும், ஆக்ராவில் உள்ள அனாதை இல்லத்தில் வாடிய எளியவர்க்காகவும், கொடைக்கானலில் துன்பப்பட்ட இலங்கை அகதிகளுக்காகவும், ஆச்மீர் மாவட்டத்தில் பாதைகள் போட்ட தொழிலாளிகள் படும் துன்பத்தைக் களையவும் உச்ச நீதிமன்றம் முன்வந்தது, ஏழைகளின் நலனில் அக்கரையுள்ள சமுதாயத் தொண்டர் ஒரு கடிதம் உச்ச நீதிமன்றத்துக்கு எழுதினால் போதும். அக்கடிதத்தையே ரிட் மனுவாக ஏற்றுக் கொண்டு உச்ச நீதி மன்றம் தீங்கு செய்த கொடியவர்களின் கொட்டம் அடங்கவும் எளியவர்களின் கண்ணீரைத் துடைக்க

வும் தெய்வம் போல் துணியை வரிந்து கட்டிக்கொண்டு வந்து நிற்பதை நம்மால் காணமுடிகின்றது.

"குடி செய்வல் என்ற ஒருவற்குத் தெய்வம்
மடிதட்டித் தான் முந்துறும்"

என்று திருக்குறள் கூறுவது போல் சமுதாயத்தில் நசுக்கப்பட்டவர்களைக் கை கொடுத்து தூக்கிவிட முன்வந்து உழைக்கும் சமுதாய உணர்வுள்ள ஒவ்வொருவருக்கும் உச்ச நீதிமன்றம் முன் வந்து கைகொடுக்கத் தவறுவதில்லை என்பது நீதித்துறை வரலாற்றில் ஏற்பட்டுள்ள மகத்தான மாறுதலாகும்.

இன்று நீதித்துறையில் ஒருபரந்த புரட்சியே விளைந்து வருகின்றது. சட்டத்தின் நிகழ்விடம் குறுகிய பகுதியைக் கடந்து விரைந்து மாற்றத்தை நாடிச் செல்கின்றது. ஏழைகளுக்கேற்பட்டுள்ள அல்லல்கள் கவனத்தை ஈர்க்கும் வகையில் நம் முன்வந்து நிற்கின்றன. ஆகவே நீதிமன்றங்கள் புதிய முறைகளைக் கண்டு பிடித்து புதிய களங்களை அமைத்து, அடிப்படை மனித உரிமைகளும், சுதந்திரம், சமத்துவம் போன்றவைகளும் கிடைக்காத மக்கள் சமுதாயத்துக்குச் சமுதாய நீதி கிடைக்கும்படியான வழிகளை உருவாக்க வேண்டுவது உடனடித் தேவையாகும்.

சமுதாய உணர்வுள்ள தனிப்பட்டோர் எழுதும் கடிதங்களையே ரிட் மனுக்களாக ஏற்று, துன்பப்படுவோரின் உதவிக்குச் செல்வதன் மூலமே கடப்பாட்டை நிறைவேற்ற முடியும். இந்த உணர்வுடன் தான் கடிதங்களையே ரிட் மனுக்களாக ஏற்று வருகின்றோம்.

உயர் நீதி மன்றங்களும் விழிப்புடன் இருந்து செயலில் காட்டுகின்ற இந்த முறையைப் பின் பற்றும் என நாங்கள் நம்புகின்றோம்; உறுதியுடன் எண்ணுகின்றோம்.

(உச்ச நீதிமன்றம் எ. அய். ஆர். 1982 பக்கம் 189)

Today a vast revolution is taking place in the Judicial process; the theatre of the law is fast changing and the problems of the poor are coming to the fore front. The Court has to innovate new methods and devise new strategies for the purpose of providing access to justice to large masses of people who are denied their basic human right and to whom freedom and liberty have no meaning. The only way in which this can be done is by entertaining writ petitions and even letters from public

spirited individuals seeking judical redress for the benefit of persons who have suffered legal wrong or a legal injury or whose constitutional or legal right has been violated but by reason of their poverty or socially or economically disadvantaged position are unable to approach the court for relief. It is in this spirit that the Court has been entertaining letters for judicial redress and treating them as writ petitions and we hope and trust that the High Courts of the Country will also adopt this proactive goal oriented approach.

(Supreme Court AIR 1892 p 189)

இந்தக் கோணத்தில் பார்க்கும் போது வழக்குரைஞர்கள் நீதித்துறையின் தனித்தன்மைக் காப்பதில் பெரிதும் அக்கரை கொண்டவர்கள் என்பதில் இருவித கருத்து இருக்க முடியாது. ஆகவே அரசு எடுக்கும் நடவடிக்கைகளால் நீதித்துறையின் சுதந்திரம் பாதிக்கப்படுவதாக இருந்தால் அவைகளை எதிர்க்க வழக்குரைஞர்கள் முன்வருவது இயல்பானதே. வழக்குரைஞர்கள் நீதி ஆலயத்தில் பணிபுரியும் பூசாரிகள். நீதிமன்றம் நீதி வழங்கும் பணியில் வழக்குரைஞர்களின் ஒத்துழைப்பும் பங்கும் உண்டு. அவர்களின் உதவியின்றி நீதி நிர்வாகம் சரிவர இயங்காது. உள்ளபடியே உண்மையாக அவர்கள் நீதிமன்றங்களின் ஒரு அங்கம். நீதிமன்றங்களின் உரிமை குறைக்கப் படும் முயற்சிகள் நடக்கும் போது வழக்குரைஞர்கள் கைகட்டி வாளா இருக்க மாட்டார்கள். நீதிமன்ற நிர்வாகத்தல் வழக்குரைஞர்கள் சமபங்கு வகிக்கும் கூட்டுப் பஙகுதாரர்கள் ஆனதால் இயல்பாகவே அவர்கள் நீதிமன்றத்தை நாடும் உரிமை பெற்றவர்கள்.

நீதித்துறையின் சுதந்திரம்
(Independence of the Judiciary)

இந்தியா போன்ற வளர்கின்ற நாட்டில் நீதித்துறையின் சுதந்திரம் எந்தளவுக்கு போற்றப்பட வேண்டும் என்ற வினாவுக்கு விடை காண்பது சிக்கல் நிறைந்ததாகும். இந்திய திருநாடு சமுதாய நீதி என்ற இலக்கை நோக்கி நடை போடுகின்றது. வளர்ந்துள்ள நாடுகளைப் போல் அல்லாமல் இங்கு பெண்களுக்கு நீதி, உழைப்பாளிகளுக்கு நீதி, சிறுபான்மையினருக்கு நீதி, சமமில்லாத இரண்டு பிரிவினருக்கு இடையே சமமான நீதி, நலிந்தவர்களுக்கு நீதி என சமுதாயநீதி வழங்க

வேண்டிய நிலை இருக்கின்றது. இப்படிப்பட்ட நீதி வழங்கக் கூடிய பதவியில் உள்ளோருக்கு சமுதாயப் பார்வை, புதியவை களைப் படைக்கும் ஆற்றல் ஆகியவைகள் இருக்க வேண்டியது தேவையாகும். சமுதாய நீதியை உருவாக்கச் சட்டத்தைப் பயன்படுத்தும் துணிவும் உள்ளமும் நீதித்துறையில் பணி புரிவோர் கொள்ள வேண்டிய போக்காகும். நீதிபதி கிருஷ்ண அய்யர் நீதிபதிகள் எத்தகைய நோக்கமுள்ளவர்களாக இருக்க வேண்டுமென்பதைப் பின்வரும் சொற்களால் கோடிட்டுக் காண்பிப்பதைக் காணலாம்.

நீதி வழங்குவதில் வல்லமை, சட்டத்தின் புலமை, வாழ்க்கை அனுபவம், உயர்ந்த நேர்மை போன்றவைகள் இணைந்து உள்ளவர்களை நீதிபதிகளாக நியமனம் செய்வதில் போதிய கவனம் கொள்வது நல்லதாகும். மேலே சொல்லியுள்ளவை களுக்கும் மேலாக இன்றியமையாத இரண்டு நெறிகளை பின் பற்றுவோரைக் கருதுவது தேவையானதாகும்.

நமது அரசியல் சட்டத்தில் கூறப்படும் பொதுவுடைமைக் கொள்கைகளை ஒட்டிய சமுதாய நெறி முதலில் வருகின்றது. வசதி படைத்தோர் காட்டும் ஆதாயம், அதிகார தோரணைகள், தனிப்பட்டோர் விருப்பு வெறுப்பு, கட்சிகளின் நம்பிக் கைக்குப் பாத்திரம் ஆதல், முரண்பாடான அரசியல் பொருளாதார கொள்கைகள் ஆகியவைகளுக்கு அப்பால் நின்று அவைகளுக்கு வளைந்து கொடுக்காமை இரண்டாவதாகத் தேவையான நெறியாகும்......

சட்டத்தில் புலமை மாத்திரம் போதாது. அத்துடன் சமுதாய நோக்கு, படைப்பாற்றல்மிக்க திறம் ஆகியவைகளும் நீதி வழங்குவதில் வெற்றிபெறத் தேவையான கருவிகள் ஆகும். அரசியல் சட்டத்துக்கும், இந்திய மக்களுக்கும் உண்மையுள்ள வர்களாகவும், பிறர் எவ்வளவு உயர் பதவி வகிப்பவராக இருந்தாலும பதவியைக் கண்டு அஞ்சாமல், ''உன் பதவி பெரிதல்ல சட்டமே பெரிது'' என முழங்கும் துணிவு பெற்றவர்களாக நீதிபதிகள் இருக்கவேண்டும். இவைகள்தான் நீதி மன்றம் சுயமாக இயங்குகின்றது என்பதற்கான உரைகல். 1/3 பாக நீதிபதிகள் வேறு மாநில நீதிமன்றங்களிலிருந்து கொண்டுவரப்பட வேண்டும் என்று கூறுவது நீதிபதிகளின் சுதந்திரத்தில் தலையிடுதல் ஆகாது. இந்த ஏற்பாட்டுக்குச் சட்ட குழுக்களும் (Law Commissions), உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதியும் ஒப்புதல் அளித்துள்ளனர்.

18-3-1981ம் தேதியிட்ட சட்ட அமைச்சரின் சுற்றறிக்கை

மத்திய அரசின் சட்ட அமைச்சரின் 18-3-1981-ம் தேதி விட்ட சுற்றறிக்கை அரசியல் சட்டத்துக்கு முரண்பட்ட தென்றோ, பயனற்றதென்றோ, அல்லது அதிகாரத்தைத் தனது விருப்பம் போலவும் தவறாகவும் பயன்படுத்தும் போக்கைக் காட்டுகின்றதென்றோ கருத இடமில்லை. ஆனால் சுற்றறிக்கை சட்டப்படி செல்லுபடியாகும் என்று கூறும் அதே வேளையில் ஒன்றைத் தெளிவுபடுத்த விரும்புகின்றோம். உயர் நீதிமன்றத்தில் பணிபுரியும் கூடுதல் நீதிபதிகள் அந்த நீதி மன்றத்தில் காலியாகும் நிரந்தர இடத்துக்கு நியமனம் பெற வும், கூடுதல் நீதிபதி நியமனத்தின்போது குறிக்கப்பட்ட காலம் முடிந்துவிட்டாலும் மேலும் தொடர்ந்து காலத்தை நீட்டிக்கும்படி கேட்க உரிமையுடையவர் எனவும் முடிவு செய் கின்றோம். அவர்கள் சுற்றறிக்கையில் குறிப்பிட்டபடி தங்கள் ஒப்புதலை (Consent) அளிக்கவில்லை என்ற காரணத்தைக் காட்டி காலத்தை நீட்டிக்க மறுக்கப்படுமானால், குடியரசுத் தலைவரின் அத்தகைய முடிவு அரசியல் சட்டத்துக்கு முரண் பாடானதுடன், ஒப்புக்கொள்ளக் கூடியதுமல்ல என்பது வெளிப்படையாகும். மத்திய அரசு அத்தகைய பொருத்த மற்ற போக்கைக் கைவிட்டு பொருந்தக்கூடிய காரணங்களை ஆய்வு செய்து முடிவை மாற்றிக்கொள்ள நேரிடும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

அரசியல் சட்டப் பிரிவு 217ன்படி கலந்து பேசுவதற்குரியவர்

குடியரசுத் தலைவரால் உயர்நீதி மன்ற நீதிபதி நியமனம் செய்யப்படும்பொழுது பெரும் பதவி வகிப்போர் மூவரைக் கலந்து ஆலோசிக்க வேண்டுமென பிரிவு 217 கூறுகின்றது. ஒருவரை உயர்நீதி மன்ற நீதிபதியாக நியமிக்க மத்திய அரசு எண்ணியகாலத்துதான், மேலே குறிப்பிட்ட மூவரைக் கலந்து ஆலோசிக்க வேண்டுமேயொழிய அவரை நியமிக்க விரும்பா விட்டால் மூவரைக் கலந்து ஆலோசிக்கத் தேவையில்லை யென்றே உச்சநீதி மன்றம் கருத்து தெரிவித்திருக்கின்றது.

பெரும் பதவி வகிக்கும் மூவர் 1. இந்திய உச்சநீதி மன்றத் தலைமை நீதிபதி, 2. அந்த மாநில ஆளுநர் 3. உயர்

நீதிமன்றத் தலைமை நீதிபதி ஆவர். [(1) Chief Justice of India (2) Governor of the state (3) Chief Justice of the state.]

திரு. கே.என். குமார்
(டில்லி உயர்நீதிமன்ற கூடுதல் நீதிபதி)

டில்லி உயர்நீதி மன்றத்தில் கூடுதல் நீதிபதியாக (Additional Judge) நியமிக்கப்பட திரு. கே.என். குமார் அவர்களின் பதவிக் காலத்தை மேலும் நீட்டிக்கலாமா என்ற கேள்வி எழுந்தது. மத்திய அரசு அவரது கூடுதல் நீதிபதிப் பதவிக் காலத்தை நீடிக்கத் தேவையில்லையென முடிவு செய்தது. இத்தகைய முடிவு உச்சநீதி மன்ற தலைமை நீதிபதி, மாநில ஆளுநர், மாநில உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி ஆகியோரிடம் முழுமையாகவும் பயனுள்ள வகையிலும் ஆலோசனை செய்த பிறகு கொண்ட முடிவா என்பது பற்றிய சிக்கலை இந்த வழக்கில் உச்சநீதிமன்றம் ஆய்வு செய்து தனது கருத்தை வெளியிட்டிருக்கின்றது.

திரு. குமார் அவர்களின் கூடுதல் நீதிபதி பதவிக்காலத்தை மேலும் நீடிக்கக் கூடாதென அரசு இறுதியாக முடிவு செய்த வேதனையான நிகழ்ச்சி டில்லி உயர் நீதி மன்றத் தலைமை நீதிபதி 19-2-1981ம் அன்று மத்திய அரசின் சட்ட அமைச்சருக்கு எழுதிய கடிதத்துடன் தொடங்கியது. திரு. குமாரின் பதவிக் காலம் 6-3-1981 உடன் முடிவடைய வேண்டியதாகும். டில்லி உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி தனது கடிதத்தில் உயர்நீதிமன்றத்தில் தேங்கிக் கிடக்கும் வழக்குகளை எண்ணினால் இன்னும் பல கூடுதல் நீதிபதிகள் தேவையெனப் படுகின்றது எனக் குறிப்பிட்டு ஆனால் கூடுதல் நீதிபதி திரு. கே. என். குமார் அவர்களின் பதவிக்காலத்தை நீடிக்க வேண்டுமென்கின்ற பரிந்துரை செய்யத்தான் விரும்பவில்லையென்றும் குறிப்பிட்டார்.

தலைமை நீதிபதி தான் பரிந்துரை செய்ய விரும்பாத நிலைக்கு மூன்று காரணங்களைத் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். அவை: (1) எழுத்து மூலமும், வாய்மொழியாகவும் திரு. கே.என். குமாருக்கு எதிராகப் புகார்கள் வந்துள்ளன. இப்புகார்கள் தலைமை நீதிபதிக்கு நேராகவும், சட்ட அமைச்சர் மூலமாகவும் கிடைத்திருக்கின்றன. அப்புகார்

களை ஆய்வு செய்து பார்த்ததில் சில புகார்கள் ஆதாரமற்ற வையென ஒதுக்க முடியாதவைகளாகும்.

(2) தேங்கிக் கிடக்கும் வழக்குகளை முடித்து வைக்கும் பணிகளில் திரு. குமாரின் உதவி போதுமான அளவுக்குக் கிடைக்காதது.

வழக்குரைஞர் சங்கத்தைச்சேர்ந்த வழக்குரைஞர் சிலரும் தலைமை நீதிபதியுடன் பணியாற்றும் சில நீதிபதிகளும் திரு. குமாரின் நேர்மையில் நம்பிக்கையின்மை தெரிவித்துள்ள னர். (அந்த நீதிபதிகளின் பெயரைக் குறிப்பிடுவது முறையல்ல என்று குறிப்பிடாது விட்டு விட்டார்).

இந்தப் புகார்களில் உண்மையுள்ளனவா இல்லையா என் பதை அறிய புலன் விசாரணை செய்யக் கூடிய அமைப்புத் தன் னிடம் இல்லையென்றாலும் புகார்கள் தொடர்ந்து வருகின் றன என்றும், சட்ட அமைச்சரே அவைகளை ஆய்ந்து பார்க்க வேண்டும் என்றும் தனது கடிதத்தில் மேலும் குறிப்பிட்டிருக் கின்றார். டில்லி உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதி மத்திய அரசின் சட்ட அமைச்சருக்கு எழுதிய கடிதம் தலைமை நீதிப திக்கும் சட்ட அமைச்சருக்கும் ஏற்பட்ட கூட்டு சக்தியின் விளைவு என்று உச்ச நீதி மன்றத்தில் திரு. கே. என். குமா ரின் சார்பாக வாதாடிய புலமை மிகு வழக்குரைஞர் திரு. கார்க் (R.K. Garg) கூறிய வாதத்தை உச்ச நீதிமன்றம் ஏற்றுக்கொள்ளவில்லை.

ஆனால் உச்ச நீதி மன்றம் தீர்ப்பில் தெளிவான சில கருத் துக்களைக் கூறியுள்ளது நம் எல்லோரின் சிந்தனைக்குரிய தாகும்.

"Of course the possibility cannot be ruled out that the information received by the chief Justice of the High Court may be at times motivated or prejudiced because the additonal Judge has offended some member of the Bar or decided some case against a litigant. These occupational hazards which beset the life of an additional Judge—in fact even of a permanent Judge or Whether in the High Court or in the Supreme Court have unfortunately increased in recent times because there has been a steady erosion of values and not only some interested Politicians but also a few-and fortuately their tribe is still small—lawyers and members of the public are prone to make

wild and reckless allegations against Judges and impute motives for the decisions given by them"

The nature of the judicial process being what it is it is inevitable that the view taken by a judge perfectly bonafide though it may be may not accord with the expectations of a Section or group of persons believing in a particular social or political philosophy but that cannot be a ground affording justification for making imputation against the Judge or accusing him of lack of bonafides or charging with surrender or subservience to the Excutive or to any other interest. Those who indulge in such personal attacks against Judge for the decisions given by them do not realise what incalculable damage they are doing to the judicial institution by destroying the confidence of the people in the integrity and inviolability of administration of justice. It is the easiest thing to make false reckless and irresponsible allegations against judges in regard to times honesty and integrity and in recent times the tendency has grown to make such allegations against judges because they have decided the case in a particular manner either against a dissatisfied litigant or contary to the view held by a group or section of politicians or lawyers or members of the public. The Judge against whom such allegations are made is defenceless because having regard to the peculiar nature of the office held by him he can not enter into arena of conflict and raise or join a public controversy. This pernicious tendency of attributing motives to judges has to be curbed if the judicial institution is to survive as an effective instrument for maintenance of the rule of law in the country and this can happen only if politicians, lawyers members of the public accept the Judgments rendered by Judge as bonafide expressions of their views and do not impute motives to the Judge for the judgments given by them, even though they be adverse to the views held by them.

நீதித்துறைக்கு இருக்கும் இயல்பான போக்கை நாம் எண்ணிப்பார்த்தால் ஒரு நீதிபதி வழக்குகளில் வழங்கும் தீர்ப்பு முழுக்க நியாயமாக இருந்தாலும். மக்களுள் ஒரு பகுதியினர் தாமாகவே மேற்கொண்டுள்ள சமுதாய அல்லது அரசியல் கருத்துக்கு அது ஏற்புடையதாக இல்லாமல் போகலாம்.

ஆனால் அதன் காரணமாகவே அந்த நீதிபதியின் மீது குற்றம் காண முயல்வதும், உண்மையைப் பார்க்காது விட்டார் என்று குறை சொல்லுவதும். நிர்வாகத்துக்குப் பணிந்து விட்டார் என்பதும், வேறு சிலர் வற்புறுத்தலுக்கு இடம் கொடுத்து விட்டார் என்பதும் நியாயமற்றதாகும். அந்த மாதிரி நீதிபதியின் மீது நேரிடையாகக் குற்றம் சுமத்துவர்கள் மக்கள் நீதி மன்றங்களின் மீது வைத்துள்ள பெரும் நம்பிக்கையையும் நல்லெண்ணத்தையும் குலைப்பதுடன், நீதித்துறைக்கு மிகப் பெரிய இழுக்கையும் தேடித்தருகின்றனர் என்பதை உணர வேண்டும். நீதிபதிகளின் மீது பொய்யான, பொறுப்பற்ற, அபாண்டமான செய்திகளை அவர்களின் நாணயத்தையும் நேர்மையையும் அய்யப்படும் வண்ணம் அள்ளி வீசுவது எளிதாகத் தோன்றலாம். அந்த மாதிரி அபாண்டமான செய்திகளை அள்ளி வீசுவது அண்மைக் காலத்தில் அதிகரித்துள்ளது. காரணம் நீதிபதிகள் வழங்கும் தீர்ப்பு சில அரசியல்வாதிகளுக்கோ, அல்லது மக்களில் ஒரு சிறு பகுதியினருக்கோ பாதகமாக இருப்பதேயாகும். நீதிபதிகள் தாம் மேற்கொண்டுள்ள பணியின் காரணமாக அத்தகைய பொய்யான குற்றச்சாட்டுகளை மறுக்கவோ எதிர்த்துவாதிடவோ முடிவதில்லை.

இத்தகைய பொருப்பற்ற முறையில் நீதிபதிகள் மேல் அள்ளி வீசும் போக்கை நாம் கட்டுப்படுத்தியாக வேண்டும். நாட்டில் தனிப்பட்டோர் விருப்பு வெறுப்புக்குட்படாத சட்டத்தின் ஆட்சி காப்பாற்றப்பட நீதி மன்றங்கள் என்ற வலுவான கருவிகள் பயன்படவேண்டும். அப்படிப் பயன்பட அரசியல்வாதிகள், வழக்கறிஞர்கள், பொதுமக்கள் ஆகிய எல்லோரும் நீதிபதிகள் எண்ணிவழக்குகளில் வெளியிடும் கருத்துக்களை ஏற்று அவைகள் அவர்களின் உண்மையான கருத்துக்கள் தான் என நம்புகின்ற போக்கு வரவேண்டும். அத்தகைய கருத்துக்கள் தாங்கள் கருதுகின்ற எண்ணங்களுக்கு மாறுபட்டவையானாலும் தவறான நோக்கம் கற்பிக்காமல் இருப்பது நலமாகும்.

டில்லி உயர் நீதி மன்றத் தலைமை நீதிபதி கூடுதல் நீதிபதி கே.என் குமாரின் பதவிக் காலத்தை நீட்டிக்கப் பரிந்துரை செய்யாவிட்டாலும் உச்ச நீதி மன்றத் தலைமை நீதிபதி திரு. குமாரின் பதவிக் காலத்தை நீட்டிக்கப் பரிந்துரை செய்தார், என்பது குறிப்பிடத்தக்கதாகும். ஆறு மாதத்துக்கு நீடிக்கப்பரிந்துரை இருந்தும், மத்திய சட்ட அமைச்சர் மூன்று மாதத்துக்குத்தான் பதவியை நீட்டிக்கும் உத்திரவு போட வழி செய்தார். மத்திய அரசு, மூன்று மாதத்துக்கப்புறம் மேலும்

பதவி நீட்டித்தராததால் திரு. கே. என். குமார் பதவியி லிருந்து விலகவேண்டி வந்தது.

ஒரு பக்கம் டில்லி உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதி கூடுதல் நீதிபதி குமாரின் பதவி நீட்டிக்கச் செய்ய பரிந்துரை செய்யாததுடன் குமார் மீது சில குறைபாடுகளையும் எடுத்துக் காட்டியுள்ளார். ஆனால் உச்ச நீதிமன்றத் தலைமை நீதி பதியோ, குமாரின் மீது வீசப்பட்ட குறைபாடுகள் ஒப்புக் கொள்ளத்தக்க அளவுக்குத் தெளிவாக இல்லை என்று கருதி குமாரின் பதவிக் காலத்தை நீட்டிக்க வேண்டுமென்று பரிந் துரை செய்தார்.

மத்திய அரசோ டில்லி உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதி யின் கருத்தை ஏற்று குமாரின் பதவியை நீட்டிக்காது விட்டு விட்டது.

வழக்கில் உச்ச நீதிமன்றம் மத்திய அரசு தலைமை நீதிபதி யின் கருத்தை ஏற்று குமாரின் பதவியை நீட்டிக்காது விட்டது தவறு எனக் கருத இயலாது எனத் திர்ப்பளித்தது. இரண்டு பெரும் பதவி வகிப்போரின் கருத்துக்களுள் ஒன்றுக்கொன்று எதிரானதாக இருந்தால், ஒன்றையே மத்திய அரசு ஏற்க முடியும். எனவே மத்திய அரசின் முடிவில் நாம் தவறு காண இயலாது என்றே உச்ச நீதிமன்றம் கருதியது.

முடிவில் பெருமை வாய்ந்த உயர் நீதிமன்ற நீதிபதி என்ற பதவியை எண்ணி, உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதியை மீண்டும் கலந்து அவரது பரிந்துரைக்கேற்ப திரு. குமாரை டில்லி உயர் நீதிமன்றத்துக்கு நியமிச்க இயலுமோ என்பதை மத்திய அரசு சிந்திக்கவேண்டுமென்று உச்ச நீதி மன்றம் தீர்ப் பில் கருத்துரை கூறியிருக்கின்றது.

"கே.பி.என். சிங்கும் எம்.எம். இசுமாயிலும்"

பாட்னா உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதி மாண்புமிகு திரு. கே.பி.என். சிங் சென்னை உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதியாக மாற்றப்பட்டார். சென்னை உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதி மாண்புமிகு. எம்.எம். இசுமாயில் கேரள உயர் நீதிமன்றத்துக்குத் தலைமை நீதிபதியாக மாற்றப்பட் டார். அய்ந்தாவது நீதிப்பேராணை மனுவை (5th Writ petition) வழக்குரைஞர் செல்வி லில்லி தாமசு தாக்கல் செய்

திருந்தார். அதில் நீதிபதி இசுமாயில் அவர்களின் மாற்றத்துக்கு அவரின் ஒப்புதல் பெறவில்லையென்றும், பொது நன்மையை எண்ணி மாற்றம் எனக்குறிப்பிட்டிருந்தாலும் என்ன பொது நன்மை என்பது தரப்படவில்லையென்றும், உச்ச நிதி மன்றத் தலைமை நீதிபதியை முழு அளவுக்குக் கலக்காமல் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்றும் குறிப்பிட்டிருந்தார்.

தலைமை நீதிபதி இசுமாயில் அவர்கள் உச்ச நீதி மன்றத்தில் இந்த மனு வந்த போது தனக்காக யாரும் நீதிமன்ற நடவடிக்கை எடுப்பதைத் தான் விரும்பவில்லை யென்றும், தனக்காக யாரும் வாதாடவும் வேண்டாமென்றும் உறுதிமொழிப் பத்திரம் தாக்கல் செய்தார். மேலும் தனது பதவியையும் துறந்தார். அதனால் உச்ச நீதிமன்றம் அவரைப் பொறுத்த வரை எழுந்துள்ள கேள்விக்குவிடையளிக்கத் தேவையில்லை யென விட்டு விட்டு திரு. கே. பி. என் சிங் அவர்களைப்பற்றி எழுந்துள்ள கேள்வியை எடுத்துக் கொண்டது.

ஆர்டிக்கள் 222 பின் வருமாறு சொல்கின்றது. ''குடியரசுத் தலைவர், இந்திய உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதியுடன் கலந்த பேசிய பிறகு உயர் நீதிமன்ற நீதிபதி ஒருவரை ஒரு உயர் நீதிமன்றத்திலிருந்து இன்னொரு உயர் நீதி மன்றத்துக்கு மாற்றலாம்''

பொது நலனை முன்னிட்டே ஆர்ட்டிக்கள் 222 குறிப்பிடுகின்றபடி நீதிபதியை மாற்றம் செய்ய முடியும் என்ற முடிவுக்கு உச்ச நீதிமன்றம்வந்திருக்கின்றது. இந்திய அரசியல்சட்டத்தை உருவாக்கிய அறிஞர் அம்பேத்காரரின் கருத்து கீழே தரப்படுகின்றது.

"The drafting committee felt that since all the High Courts so far as the appointment of judges is concerned form now a central subject, it was desirable to treat all the Judges of the High Courts through out India as forming one Single Cadre like the I.C.S. and that they should be liable to be transferred from one High Court to another. If such power was not reserved to the centre the administration of justice might become a very difficult one. It might be necessarry that one judge may be transferred from one High Court to another in order to strengthen the High Court else where by importing better talent which may not be locally available. Secondly it might be desirable to import a new chief Justice to a High Court because

it might be desirable to have a man unaffected by local policies or local jealousies. We thought therefore that the power to transfer should be placed in the hands of the central government.''

உயர் நீதிமன்ற நீதிபதிகள் நியமனத்தைப் பொருத்த வரையில் மாநில உயர்நீதிமன்றங்கள் நடுவண் அரசுக்குட் பட்டவையாகக் கருதப்படுவதால் எல்லா மாநில உயர்நீதி மன்ற நீதிபதிகள் அனைவரும் பழைய அய். சி. எஸ் போல ஒரே துறையைச் சேர்ந்தவர்கள் என்ற அரசியல் சட்டத்தை உருவாக்கிய குழு உணர்ந்தது. ஆகவே அவர்கள் ஒரு உயர்நீதி மன்றத்திலிருந்து வேறு உயர் நீதிமன்றத்துக்கு மாற்றப் படல் வேண்டும். அந்த அதிகாரம் நடுவண் அரசுக்கு இல்லாது போனால் நீதி நிர்வாகம் ஒருதொல்லை நிறைந்ததாக ஆகி விடும். ஒரு நீதிபதியை வேறு உயர்நீதிமன்றத்துக்கு மாற்று வதன் மூலம் அந்த உயர் நீதிமன்றம் வலுப்பெறவும்வழியுண்டு. அங்கு காணப்படாத திறமை இவர் மூலம் அந்த நீதிமன்றத் துக்குக் கிடைக்கும். இரண்டாவதாக மாற்றப்படும் புதிய தலைமை நீதிபதி அந்த மாநிலத்தில் நிலவும் கொள்கைகளுக் கும், பூசல்களுக்கும் உட்படாதவராக இருக்க முடியும். அதனால் தான் உயர் நீதிமன்ற நீதிபதிகளை மாற்றும் அதிகாரம் நடுவண் அரசின் கையில் இருக்க வேண்டுமென எண்ணினோம்''

திரு. கே. பி. என். சிங் அவர்களை சென்னை உயர்நீதி மன்றத்துக்கு மாற்றியதில் பொது நலன் தான் பெரிதும் எண்ணப்பட்டிருக்கின்றதே யொழிய அதை ஒரு தண்டனை என்ற கோணத்தில் பார்க்கக் கூடாது. ஒரு நீதிபதி தவறாக நடக்கின்றார். அல்லது அவர் நீதிபதியாகப் பணிபுரியும் வலுவை இழந்து விட்டார் என்ற காரணங்களைக் காட்டி அவரை ஒரு நீதிமன்றத்திலிருந்து இன்னொரு நீதிமன்றத்துக்கு மாற்றம் செய்தல் தகாது. நீதித்துறையின் சுதந்தரத்தையும், நீதிபதியின் உரிமைகளையும் காக்க இரண்டு வகையான பாது கரப்பு உள்ளன. ஒன்று குடியரசுத் தலைவர் உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதியைக் கலந்து ஆலோசிக்க வேண்டுமென்ப தாகும். அப்படிக் கலந்து ஆலோசிக்கும் வேளையில் தலைமை நீதிபதி, எதேச்சதிகார மாற்றத்தை எதிர்த்துக்குரல் கொடுக் கத் தவறக் கூடாது. தன்னை நியமனம் செய்யப்பட்ட அதே நீதிமன்றத்தில் தொடர்ந்து பணி செய்யும் வாய்ப்பைப் பெறு வது ஒருநீதிபதியின் உரிமையாகும். அந்த உரிமையில் கைவைக் கப்படுமானால் உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி அதற்கான

காரணங்களை நன்கு ஆராய்வதுடன் பாதிக்கப்பட்ட நீதிபதியின் கருத்தையும் கேட்பதும் தேவையானதாகும். பாதிக்கப்பட்ட நீதிபதி தான் ஏன் மாற்றப்படக் கூடாது, என்று கூறும் காரணத்தையும் தெரிந்து கொள்வது நலம் பயக்கும்.

இரண்டாவது, மாற்றலுக்குட்பட்ட நீதிபதி தன்னை மாற்றம் செய்தது ஆர்ட்டிக்கள் 222 (1) யை மீறுவதாகும் என நீதிமன்றத்தை நாடி பரிகாரம்தேடமுடியும் என்பதாகும். பாட்னா உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியைச் சென்னைக்கு மாற்றியது பொதுநலனை எண்ணியே என்பது உண்மையாகும் என உச்ச நீதிமன்றம் இறுதியாக முடிவுக்கு வந்து நீதிப் பேராணைமனுவைத் தள்ளுபடி செய்திருக்கின்றது.

முடிவில் உச்ச நீதிமன்றத்தின் முன் ஆய்வுக்கு வந்திருந்த அனைத்து நீதிப்பேராணைகளும் தள்ளுபடி செய்யப்பட்டன என்றாலும் ஏழு நீதிபதிகளும் ஒன்றுபட்ட கருத்துக்கொள்ள வில்லை.சிறு பான்மை நீதிபதிகள் தங்கள் மாறுபட்ட கருத்துக் களையும் சொல்லியுள்ளனர். ஆகவே உச்ச நீதிமன்றம் அனைத்து நீதிப்போரணைகளையும் மன வேதனையுடன்தான் தள்ளுபடி செய்துள்ளது என்பதைக் காண்கின்றோம். சிறு பான்மை நீதிபதிகளின் மாறுபட்ட கருத்துக்களும் மிகவும் சிந்திக்கத்தக்கஅளவில் சிறப்பாக இருக்கின்றன.

இந்த வழக்கில் வாதங்கள் தொடர்ந்து நடந்து வந்த காலை, நீதித்துறையில் உள்ள கீழமை (Subordinate) நீதி மன்ற நீதிபதிகளின் பணி நிலை, ஊதியம், உதவித் தொகைகள், குடியிருப்பு வசதிகள் போன்றவைகளும், உயர் நீதிமன்ற நீதிபதிகளின் நலம், வழக்குறைஞர்களின் குறைகள் போன்றவைகளும் ஆய்வுக்கு எழுந்தன. வழக்கில் அமர்ந்து பொறுமையாக வாதங்களைக் கேட்ட நீதிபதிகளும், வாதங்களைத் திறம் படவும் உரத்த குரலிலும் நீதிபதிகளின் முன் வைத்த பல வழக்குரைஞர்களும் அப்படி எழுந்த கேள்விகளுக்குத் தங்கள் கருத்தைத் துணிவுடன் கூறியுள்ளனர்.

நீதிபதிகளுக்குப் பல பாதுகாப்புகள் அரசியல் சட்டத்திலேயே வகுக்கப்பட்டிருக்கின்றன. அவைகள் எல்லாம் முழுமையாக உணரப்பட்டால் நீதிபதிகள் சுதந்தரமாக இயங்க எவ்விதத்தடையும் இருக்காது என்பதில் அய்யமில்லை. ஆனால் அவைகளுக்கு மேலாக நீதிபதிகள் தங்களைத் தாங்களே கட்டுப்படுத்திக் கொள்வதின் மூலம், இன்னும் பெரும் நன்மைகள் தோன்ற வழியுண்டு. நீதிபதியும் ஒரு

மனிதர் தான். அவருக்கும் மனித உணர்ச்சிகள் உண்டு. விருப்பு வெறுப்பு, அன்பு, நேசம், அச்சம், அவலம். இழிவாக நினைப்பது, போன்றவை உள்ளத்தில் தோன்றக் கூடும். இவைகளை அவர் கட்டுப்படுத்துவது பெரிதும் நல்லது. கல்வியாலும், பயிற்சியாலும், பணிவாலும், கடமையை உணர்வதாலும் இவைகளைக் கட்டுப்படுத்த இயலும்.

உச்ச நீதிமன்றம் தீர்ப்பில் இறுதியில் சமஸ்கிருத மொழியில் வரும் அருமையான சுலோகத்தின் ஆங்கில மொழி பெயர்ப்பை நீதிபதிகளின் முன்வைத்திருக்கின்றது.

"Let men trained in ethics or morality insult or praise; let lakshmi (wealth) accumulate or vanish as she likes; let death come to day itself or at the end of a yuga (milleinnium)men with discretion will not deflect from the path of rectitude"

நாம் தமிழ் மொழியில் உள்ள சங்க இலக்கியங்களில் ஒன்றான மதுரைக் காஞ்சியில் வரும் பாடலையும் திருக்குறள் பாடல் ஒன்றையும்எடுத்துக்காட்டலாம்.

"அச்சமும் அவலும் ஆர்வமும் நீக்கி
செற்றமும் உவகையும் செய்யாது காத்து
நெமன் கோல் அன்ன செம்மைத்தாகி
சிறந்தகொள்கை அறங்கூர் அவையமும்"

— மதுரைக் காஞ்சி.

"கெடுவாக வையாது உலகு நடுவாக
நன்றிக்கண் தங்கியான் தாழ்வு" —(குறள் 117)

பிற்சேர்க்கை

நம் உயர் நீதி மன்றத்தின் கிரீடத்தில் புதிய அணிகலன்

இந்திய மண்ணில் பிரஞ்சுக்காரார்கள் ஏற்படுத்தியிருந்த காலனிகளின் எதிர்காலம் குறித்து இந்திய அரசுக்கும், பிரஞ்சு அரசுக்கும் இடையே ஒரு ஒப்பந்தம் 21-10-1954ம் அன்று உருவானது.

1954 நவம்பர் முதல் தேதியிலிருந்து இந்திய அரசு பிரஞ்சு அரசு இந்திய மண்ணில் ஏற்படுத்தியிருந்த பிரஞ்சு குடியிருப்புகளின் நிர்வாகப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளும். இந்த் குடியிருப்புகள் பிரஞ்சு அரசின் கீழ் பெற்றிருந்த அதே நிர்வாக நலன்களையெல்லாம் இந்திய அரசின் நிர்வாகத்தின் கீழும் தொடர்ந்து பெற்று வரும். அதிலுள்ள அரசியல் அமைப்பு முறையில் வருங்காலத்தில் மாற்றம் தேவையென்றால் மக்களின் எண்ணங்களை அறிந்த பிறகே மாற்றங்கள் செய்யப்படும்.

இந்த ஒப்பத்தத்தின் விளைவாக பாண்டிச்சேரி ஒரு யூனியன் பிரதேசமாக ஆக்கப்பட்டு அங்கு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு செயல்பட்டு வருகின்றது. அதேமாதிரி மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்றமும், இயங்குகின்றது. ஆனால் நீதித் துறையைப் பொறுத்த வரையில் பாண்டிச்சேரி ஒரு மாவட்டமாகக் கருதப்படுகின்றது. அங்குள்ள மாவட்ட நீதிமன்றம் நமது தமிழ்நாடு உயர்நீதிமன்றத்தின் கீழ் இயங்கும் மற்ற மாவட்ட நீதி மன்றங்களில் ஒன்று என்ற முறையில் இயங்கி வருகின்றது. அதாவது பாண்டிச்சேரி நீதித்துறை நமது உயர் நீதி மன்றத்துடன் இணைக்கப்பட்டு உயர் நீதி மன்றத்தின் மேற்பார்வையில் இயங்கி வருவது உயர் நீதி மன்றத்துக்கிடைத்துள்ள புதிய அணிகலனாகும்.

12-10-1954 தேதி ஒப்பந்தத்தில் காணப்படும் சில பிரிவுகள் நீதித்துறை சம்பந்தமான விவரங்களைக் கூறுகின்றன. அவைகளைக் கீழ்வருமாறு காணலாம்.

பிரிவு 10

பிரஞ்சுக் குடியிருப்புகள் இந்திய அரசின் ஆளுகைக்குள் வருவதற்கு முன்பு எடுக்கப்பட்ட நீதி மன்ற நடவடிக்கைகள் இறுதி முடிவு எடுக்கப்படும் வரையிலும் ஏற்கனவே இருந்து வரும் சட்டம் ஒழுங்குமுறைகளுக்குட்பட்டு தொடர்ந்து நடத்தப்பட்டுவரும்.

அந்த நீதிமன்ற நடவடிக்கைள் முடிவுறும் தறுவாய்வரையிலும் குடியிருப்புகளில் இயங்கி வரும் அதே நீதி மன்றங்கள் தொடர்ந்து பணியாற்றிவரும். அக்குடியிருப்புகளில் வழக்கமாக வாழ்ந்து வரும் மதிப்பு மிக்கவர்களும் சட்டப் புலமை பெற்றவர்களுமே அந்தநீதிமன்றங்களில் நீதிபதிகளாக இருந்து வருவர். ஆட்சி மாற்றத்துக்கு முன் இருந்த பிரஞ்சு சட்ட ஒழுங்கு விதிகளின்படி இந்திய கான்சல் ஜெனரலுடன் கலந்து தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் அந்த நீதிபதிகள் ஆவர்.

வழக்குகளில் ஈடுபட்டுள்ள இருதரப்பினரும் தங்களுக்குள் பொதுவான உடன்பாட்டுடன் மேலே சொன்ன நீதிமன்ற நடவடிக்கைகளையும், பிரஞ்சு நீதிமன்றங்களில் உள்ள நடவடிக்கைப் பதிவேடுகளில் இன்னும் பதிவாகாத ஆனால் தாக்கல் செய்யப்பட்ட நீதிமன்ற நடவடிக்கைகளையும், மேலும் சாதாரணமான அல்லது அரிதான மேல் முறையீட்டு வழக்குகளையும் தகுதி வாய்ந்த இந்திய நீதிமன்றங்களுக்கு மாற்ற விரும்பினால் மாற்றிக் கொள்ள வாய்ப்புக் கொடுக்கப்படுகின்றது.

இந்திய அரசின் ஆளுகைக்குள் மாற்றப்படுவதற்கு முன்பு பிரஞ்சு நீதிமன்றங்கள் வழங்கியுள்ள தீர்ப்பாணைகள், உத்திரவுகள் ஆகியவைகள் இறுதிக்கட்டத்துக்கு வந்துவிட்டவையானாலும் அல்லது மேல் முறையீடுகள் செய்யாமையால் இறுதியானவைகளாக ஆகிவிட்டிருந்தாலும் தகுதி வாய்ந்த இந்திய மன்றங்களில் அவைகளை நிறைவேற்றம் செய்யலாம். மாற்றத்துக்குப் பின்பு வழங்கப்பட்ட தீர்ப்பாணைகளையும் உத்திரவுகளையும் எந்த நீதிமன்றம் வழங்கியிருந்தாலும். அவைகளையும் தகுதி வாய்ந்த இந்திய மன்றங்களில் நிறைவேற்றம் செய்து கொள்ளலாம்.

ஆளுகை மாற்றத்துக்கு முன் பிரஞ்சு சட்டமுறைக்குட்பட்டு உரிமைகளை வழங்கிய சட்டங்கள், செய்கைகள் அதே

மதிப்புடனும், செல்வாக்குடனும் தகுதியுடனும் தொடர்ந்து இருந்து வரும்.

பிரஞ்சு நீதி மன்றங்களில் உள்ள ஆவணங்கள் பதிவேடுகள் ஆகியவை இருபது ஆண்டுகளுக்குத் தொடர்ந்து அதே நிலையில் காப்பாற்றிவைக்கப்படும். அந்த ஆவணங்கள் பதிவேடுகளில் அடங்கியுள்ள செய்திகளை பிரஞ்சு அரசின் அதிகாரம் பெற்ற பிரதி நிதிகள் தேவையென வேண்டினால் வழங்கப் படும்.

1966 ம் ஆண்டைய பாண்டிச்சேரி உரிமையியல் நீதிமன்றச்சட்டம்

2. சொற்பொருள் விளக்கம் (definition) இந்த சட்டத்தில் குறிப்பிட்ட இடத்தில் வேறு முறையில் ஒரு பொருளின் விளக்கம் இருந்தாலன்றி

அ. அரசாங்கம் என்பது அரசியல் சட்டம் பிரிவு 239ன் கீழ் குடியரசுத்தலைவரால் நியமிக்கப்பட்ட நிர்வாக அதிகாரி (Administrator) யாகும்.

ஆ. உயர் நீதிமன்றம் என்பது சென்னை மாநகரிலுள்ள உயர் நீதிமன்றமாகும்.

இ. யூனியன் பிரதேசம் என்பது பண்டிச்சேரி யூனியன் பிரதேசமாகும்.

3. நீதிமன்றங்கள். அவைகளின் எண்ணிக்கை அவைகளின் அதிகார வரம்புகள்.

(1) பாண்டிச்சேரி யூனியன் பிரதேசத்தில் பின் வரும் நீதி மன்றங்கள் இயங்கும். (இந்த சட்டப்படி இந்த யூனியன் பிரதேசம் ஒரு மாவட்டமாகக் கருதப்படும்)

அ. மாவட்ட நீதிபதி அடங்கிய நீதி மன்றம்.

ஆ. துணை நீதிபதிகள் அடங்கிய நீதிமன்றங்கள்.

இ. முன்சீப் நீதிமன்றங்கள்.

(2) அரசியல் சட்டம் பிரிவு 309ன் கீழ் வகுக்கப்பட்டுள்ள விதிகளின் படி மாவட்ட நீதிபதியும், துணை நீதிபதிகளும், முன்சீப் நீதிபதிகளும் நியமிக்கப்படுவர்.

ஆனால் உயர் நீதிமன்றத்துடன் ஆலோசனை செய்த பிறகு மாவட்ட நீதிபதி நியமிக்கப்படுவார்.

(3) எவ்வளவு துணை நீதிமன்றங்கள், முன்சீப் நீதிமன்றங்கள் என்பது நிர்ணயக்கப்பட்டுப் பின்னர் அவ்வப்பொழுது தேவைக்கேற்ப அரசு அவைகளின் எண்ணிக்கையில் மாற்றம் செய்யும்.

(4) அ. மாவட்ட நீதிமன்றத்தின் அதிகாரவரம்பு யூனியன் பிரதேச முழுமைக்கும் பரவி நிற்கும்.

ஆ. துணை நீதிமன்றங்கள் முன்சீப் நீதிமன்றங்கள் ஆகியவைகளின் அதிகார வரம்புகள் அரசு தனது பணித்துறை வெளியீட்டில் அறிவிக்கும் அளவுக்குச் செல்லு படியாகும்.

மேலும் தேவைப் பட்டால் அரசு இந்த நீதிமன்றங்களின் அதிகார வரம்பை அவ்வப்பொழுது மாற்றம் செய்யும்.

6. இப்பொழுது இயங்கிவரும் நீதிமன்றங்களுக்குமாறாக இந்த சட்டத்தின் கீழ் இனி இயங்கப்போகும் நீதிமன்றங்கள்.

1. தி டிரிபூனல் சூப்பரியர் டி அப்பீல், The Tribunal Superieur D' Appeal, டிரிபூனல் கோர்ட்டுகள் டி லிரி இன்ஸ்டன்சு (Courts of Tribunal de Lere Instance) ஜட்சு டி பெய்க்சு (Judge De Paix) என்ற பெயரில் இந்த சட்டத்துக்கு முன்னால் இயங்கிவந்த நீதிமன்றங்கள் இனிமேல் முதல் மாவட்ட நீதிமன்றமாகவும், துணை நீதிமன்றங்களாகவும், முன்சீப் நீதிமன்றங்களாகவும் இயங்கிவரும்.

2. இந்த சட்டம் அமுலுக்கு வரும் காலத்திலிருந்து

(அ) டிரிபூனல் சூப்பரியர் அப்பீல் நீதிமன்றத்தின் தலைவர், நீதிபதிகள் எனப்பதவி வகித்தவர்கள் இனி முதன்மை மாவட்ட நீதிபதி (Principal District Judge) யாகவும் கூடுதல் மாவட்ட நீதிபதியாகவும் பணிபுரிவர்.

ஆ. டிரிபூனல் டிலிரி இன்ஸ்டன்சு நீதிமன்றத் தலைவர்களும், சட்சு டி பெயிக்சு என்று இதற்கு முன் பணியாற்றியவர்கள் இனிமேல் துணைநீதிபதிகளாகவும் (Subordinatc Judges), முன்சீப்புகளாகவும் (Munsifs) அந்தந்த அதிகார வரம்புக்குள் பணிபுரிவர்.

3. இந்த சட்டத்திற்குட்பட்டு மாவட்ட நீதிபதி சுப்பீரியர் டி அப்பீல் நீதிமன்றத்தில் நிலுவையில் இருக்கும் வழக்குகளிலும் உயர்நீதிமன்றம் கோர்ட்டு டிகாசேசன் என்ற முறையில் ரிமாண்டுசெய்த வழக்குகளிலும் அதே அதிகாரங்களுடனும் பணிமுறைகளுடனும் இயங்கி வருவார்.

கான்சியில் டியூ காண்டன்டியிக்சு அட்மினிஸ்டிராட்டிப் நீதிமன்றம் ஒழிப்பு
(Abolition of Conseil Du Contentieux Administratif)

இந்த சட்டம் அமுலுக்கு வரும் தேதியிலிருந்து கான்சியில் டியூ காண்டன்டியிக்சு அட்மினிஸ்டிராட்டிப் நீதிமன்றம் ஒழிக்கப் படுகிகின்றது.

2. அப்படி ஒழிக்கப்பட்டதால் இதற்குமுன் அந்த நீதி மன்றத்தில் நிலுவையில் இருந்த எல்லா வழக்குகளையும், உயர் நீதிமன்றம் கான்சியில் டி இடேட் (Conseil D Etat) என்ற முறையில் ரிமாண்டு செய்த வழக்குகளையும் முதன்மை மாவட்ட நீதிபதியோ, அல்லது கூடுதல் மாவட்ட நீதிபதியோ இந்த சட்டத்துக்கு முன்பு அமுலில் இருந்த நடைமுறைச் சட்டத்தின்படி கேட்டு முடிவு செய்வர்.

தி ஆபீசஸ் ஆப்தி புரொகியூரர் டில ரிபப்ளிக்கி என்ற பதவிகள் ஒழிப்பு
(Abolition of the offices of the Procureur Dela Republique)

1. இந்த சட்டம் அமுலுக்கு வரும் நாளிலிருந்து புரொகி யூரர் டில ரிபப்ளிக்கி என்ற பதவிகள் ஒழிக்கப்படுகின்றன.

2. அப்படி ஒழிக்கப்பட்டாலும், அரசு தனது அரசு செய்தி இதழில் வெளியிடும் அறிக்கைகள் மூலம் சட்டத்தில் பட்டம் பெற்றவரையோ, அல்லது டிப்ளமோ பெற்ற வரையோ பிரஞ்சு சட்டத்தின் கீழ் அப்பதவி வகித்தோர் செய்து வந்த அதே கடமைகளையும் பணிகளையும் குறிப் பிட்ட பகுதிகளில் செய்து வரும்படி அதிகாரம் அளிக்கும்.

பொருள் விளக்க விதி:-

யூனியன் பிரதேசத்தில் தி டிரிபூனல் சுப்பீரியர் டி அப்பீல் நீதிமன்றம், தி டிரிபூனல் டிலிரி இனஸ்டன்சு நீதிமன்றம், தி சட்சு டிபெயிக்சு நீதிமன்றம் ஆகியவைகளைப்பற்றி அமுலில் இருக்கும் சட்டங்களில் காணப்படும் குறிப்புகள் இனி மாவட்ட நீதிமன்றம், துணைமன்றம், அல்லது முன்சீப் நீதிமன்றங் களைக் குறிக்கின்ற குறிப்புகளாகக் கருதப்படும்.

**

பாண்டிரி சேரியை ஆண்டுவந்த பிரஞ்சு நாட்டுக்கும் இந்தியாவை ஆண்டுவந்த ஆங்கில நாட்டுக்கும் அய்ரோப்பி மண்ணில் அடிக்கடி போர்கள் நடந்து வந்தன. அப்படி இருநாட்டுக்கும் அங்கே போர் மூழும்போது இங்கும் பாண்டிச்சேரி அரசுக்கும் இந்திய அரசுக்கும் உறவுகள் மோசமடையும், சில வேளைகளில் இங்கும் போர் மேகங்கள் சூழ்ந்து கொள்ளும். பின்னர் அய்ரோப்பாவில் இரு நாடுகளுக்கும் உடன்பாடு ஏற்பட்டு போர் முரசு ஓயும் போது இங்கும் இரு பகுதிகளிலும் சமாதானம் ஏற்பட்டு நல்லுறவு தழைப்பதைக் கண்டுள்ளோம்.

இந்திய மண் ஆங்கிலேயரிடமிருந்து விதடுலை பெற வேண்டுமென்ற விடுதலைப்போர் முழங்கிக் கொண்டிருந்த போது பாண்டிச்சேரியிலும் அதன் எதிரொலி கேட்டது அங்கும் விடுதலை உணர்வு தலை தூக்கியது. ஆனாலும் 1947 விடுதலைபெற்ற இந்தியநாட்டின் அரசுக்கும் பாண்டிச்சேரியை அடிமைப்படுத்தி வைத்திருந்த பிரஞ்சு அரசுக்கும் ஏழு ஆண்டுகள் கழித்து 1554ல் ஒப்பந்தம் ஏற்பட்டதின் விளைவாக இந்திய அரசு பாண்டிச் சேரி நிர்வாகத்தை மேற்கொண்டது,

பிரஞ்சு ஆட்சியின் கீழ் பாண்டிச்சேரியில் இயங்கி வந்த நீதிமன்றங்கள் நீக்கப்பட்டு இந்திய நீதிமன்றங்கள் நிறுவப்பட்டது. பாண்டிச்சேரி நீதித்துறையில் ஏற்பட்ட பெரிய மாற்றம் என்பதில் அய்யமில்லை. திடிரிபியூனல் சுப்பிரியர்டி ஆப்பீல் என்ற நீதிமன்றம் மாவட்ட நீதிமன்றமாகவும். டிலிரி டிரியூனல் இன்சுடன்சு என்றநீதிமன்றம், துணை நீதிமன்றமாகவும்(Sub Court) சட்சுடிபெய்க்சு நீதிமன்றம், முன்சீப் நீதிமன்றமாகவும் ஆகியிருக்கின்றன.

அத்துடன் ஆட்சிமுறை ஆயங்களும் (Administrative Tribunals) புரோகியூரர் என்றபதவியும் அடியுடன ஒழிக்கப்பட்டிருக்கின்றன.

ஆங்கில நாட்டு சட்ட இயலுக்கும் (English Jurisprudence) பிரஞ்சு நாட்டு சட்ட இயலுக்கும் அடிப்படையிலேயே வித்தியாசங்கள் இருப்பதால், இவ்விரு சட்டத்துறைக்கோட் பாடுகளின் படி இயங்கும் நீதிமன்றங்களும் சில தனித்தனி கோட்பாடுகளைக் கொண்டே இயங்கிவர நேர்ந்தது. ஆங்கிலச்சட்ட இயலின்படி ஒருவர் குற்றச் சாட்டுக்குட்பட்டு நீதிமன்றத்தில் நிற்கும் போது அவர் குற்றம் செய்துள்ளார் என்பதை அரசு தான் போதுமான சான்றுகளுடன் மெய்ப்பிக்க வேண்டும்,

அவர் குற்றத்தை மறுப்பதுடன் பல பொய்யான செய்திகளையும் சொல்லலாம், அல்லது வாயைத்திறக்காமலும் இருக்கலாம். அரசுதரப்பினர் அவர்மீது சாட்டப்பட்ட குற்றத்தை எவ்வித ஐய்யத்துக்கும் இடமின்றி மெய்ப்பிக்க வேண்டும் என்பது சட்டவிதி. ஆனால் பிரஞ்சு சட்ட இயலின்படி குற்றம் சாட்டப் பட்டவர்தான் குற்றம் செய்யவில்லை என்று தகுந்த ஆதாரங்களுடன் எடுத்துக்காட்ட வேண்டும், அதுவரையிலும் அவர்குற்றம் செய்தவர் என்றே கருதப்படுகின்றார்.

இன்னொரு முக்கியமான வித்தியாசமும் உண்டு. ஆங்கில சட்ட இயலின்படி நீதிமன்றத்தை நாடும் இருதரப்பினரும் அவரவர் வசதிக்கேற்ப தமச்குக் கிடைக்கும் சான்றுகளை நீதிமன்றத்தின் முன் வைக்கின்றனர். நீதிமன்றம் அவைகளை மாத்திரம் ஆய்ந்து தீர்ப்புச் செய்கின்றது. இதை எதிரெதிர் நடைமுறை (Adversery Procedure) என்பர். பிரஞ்சு சட்ட இயல் கூறுவது உசாவி அறியும் நடைமுறை (Inquisitorial System) என்பதாகும். இதன்படி நீதிமன்றத்துக்குத் தங்கள் பூசலைக் கொண்டுவந்துள்ள இருதரப்பினரும் தமது வாய்ப்பு வசதிக் கேற்ப சேகரித்து முன் வைக்கும் சான்றுகளை மாத்திரம் நீதிமன்றம் ஆய்வுசெய்வதுடன் நின்றுவிடாமல் வழக்கில் நீதிவழங்கத் தேவையான சான்றுகள் எங்கு இருந்தாலும் அவைகளையும் நீதிமன்றமே வரவழைத்து ஆய்வுசெய்யும் வாய்ப்புஉண்டு. பிரஞ்சு நீதிமன்றங்கள் மேற்கொண்டிருக்கும் இந்தநடைமுறை பொதுவுடமை நாடான இரசியா நாட்டிலும் நீதிமன்றங்கள் கைக் கொண்டுள்ள நடைமுறை என்பதை அறிகின்றோம். வழக்குகளைச் சோடனை செய்பவர்களும் வசதி படைத்தவர்களுமே பெரும்பாலும் வெற்றிபெறும் வாய்ப்பு ஆங்கிலச்சட்ட இயல் கூறும் நடைமுறையின் கீழ் உள்ளது என்று கருத இடம் உண்டு. ஆனால் பிரஞ்சு, இரசிய போன்ற நாடுகளில் நிலவும் சட்ட இயல் கூறும் நடைமுறையின் கீழ் பெரும் பாலும் உண்மையானவர்கள் வெற்றிபெறும் வாய்ப்புள்ளது என்பது தெரிகின்றது. ஏழைகளே மிகுந்துள்ள நம் நாட்டிற்கும் பிரஞ்சு நாட்டு சட்ட இயல் பெரிதும் பயன் விளைவிக்கக் கூடும். பாண்டிச்சேரியில் பிரஞ்சு ஆட்சியின் கீழ் இயங்கிவந்த நீதிமன்றங்கள் ஆங்கிலச் சட்ட இயலை ஏற்று இயங்கும் நமது நீதி மன்றங்களாக மாறிய போது இது தேவையான மாற்றம் தானா என்றே தொடக்கத்தில் பலர்நினைத்தார்கள். ஆனால் போகப் போக அதுவும் சரியாகி விட்டது என்றே தோன்றுகிறது.

ஆனால் பிரஞ்சு ஆட்சியின் கீழ் இயங்கி வந்த ஆட்சிமுறை ஆயம் (Administrative tribunal) நீக்கப்பட்டது தேவையற்ற

தாகும் என நினைக்கவே தோன்றுகின்றது. அதற்குத் தகுந்த காரணம் உண்டு. ஆங்கில ஆட்சியில் இல்லாத அமைப்பே ஆட்சி முறைத் தீர்ப்பாயங்கள் ஆகும். அவைகளின் சிறப்புக்குக் காரணம் ஆட்சியில் உள்ளவர்களானாலும் மக்களானாலும் சட்டத்துக்குட்பட்டவர்கள் என்ற நல்ல கோட்பாட்டின்படி அவைகள் இயங்கி வந்ததேயாகும்.

ஆங்கில நாடு தொடர்ந்து முடியாட்சியின் கீழ் இருந்து வருகின்றதென்பதை அறிவோம். அதாவது மாட்சியமை தங்கிய மன்னர் பிரான் ஆட்சி செலுத்தி வருகின்ற சனநாயக நாடாகும். மத்திய காலத்தில் முடிதரித்த மன்னர்களின் ஏக போக அதிகாரத்தைக் குறைக்க பாராளுமன்றம் முயன்ற போது மமதை பிடித்த மன்னர் சொன்னார் ''நான் ஆண்டவனின் பிரதிநிதியாக இருந்து ஆள்வதால், நான் செய்வதெல்லாம் நல்லது. தவறாகாது'' (The King is The Representative of God. Therefore the King Can do no wrong) பின்னர் காலம் செல்லச் செல்ல மன்னர்களின் ஏகபோக அதிகாரம் குறைக்கப்பட்டது. பாராளுமன்றதின் கை ஓங்கியது. பாராளுமன்றம் பெண்ணை ஆணாக்க முடியாது. ஆணைப் பெண்ணாக்க இயலாது என்ற ஒரு நியதியைத் தவிர வேறு எந்தச் சட்டத்தையும் இயற்றும் அதிகாரம் பெற்று உயர்ந்த போதிலும் ''பாராளும் வேந்தன் தவறு செய்யான்'' என்ற கோட்பாடு நீங்கிவிடவில்லை. ஆங்கில நாட்டு அரசர்கள் அரசு அவர்கள் பெயரால் விடுக்கும் ஆணைகளில் கையொப்பமிடும் பணியை மாத்திரம் வைத்துக்கொண்டுள்ளார்கள் என்ற நிலைக்குத் தள்ளப்பட்டதால் அந்தக் கோட்பாடு மன்னர்களை விட்டு நீங்கி அரசுப் பணியாளர்களிடம் ஒட்டிக் கொண்டது. ஆகவே அவர்கள் தாங்கள் நிர்வாகத்தில் செய்யும் தவறுகளைத் தட்டிக்கேட்க இயலாது என்ற எண்ணம் வளர்ந்திருந்தது. அதனால்தான் ஆட்சி முறை ஆயங்கள் ஆங்கில நாட்டிலும் அதன் ஆளுகைக்குட்பட்டிருந்த இந்தியாவிலும் அமைக்கப்படவில்லை.

பிரஞ்சு நாட்டில் ஏற்ப்பட்ட பிரஞ்சுப் புரட்சியின் விளைவாக மன்னர் ஆட்சி தூக்கியெறியப்பட்டது. சுதந்திரம், சமுத்துவம், சகோதர மனப்பான்மை போன்றவை தலை தூக்கி ஆளுவோரையும் மக்களையும் ஆட்கொண்டன. அதன் பிறகு அங்கு பாராளும் வேந்தன் தவறு செய்யான் என்ற கோட்பாடு மாண்டு மண்ணோடு மண்ணாய்ப் போய்விட்டது. மண்ணாளும் ஆட்சியினரும், மக்களும் ஒரே நிலையினர் ஆயினர். நிர்வாகத்தில் தவறு நேர்ந்தால் அதற்குப் பொருப்

பாளி யாராக இருந்தாலும் தட்டிக் கேட்கும் உரிமையும், தவறின் காரணமாக பாதிக்கப்பட்ட மக்கள் உடனடியாக நிவாரணம் பெறும் உரிமையும் உண்டு என்பதைக் காட்டவே ஆட்சி முறை ஆயங்கள் தேவையென உணரப்பட்டது. தவறைத் தட்டிக்கேட்கவும் தேவைப்பட்டால் உடனடியாக நிவாரணம் வழங்கவும் பிரஞ்சு நாட்டிலும் அதன் ஆளுகைக் குட்பட்ட பாண்டிச்சேரி போன்ற இடங்களிலும் ஆட்சி முறை ஆயங்கள் அமைக்கப்பட்டன என்பதைக் காண்கின்றோம்.

ஆட்சி முறை ஆயங்களை நாடி பரிகாரம் கேட்பது மிக எளிமையாக்கப்பட்டிருந்தது. நீதிமன்றங்களை நாடுவதால் ஏற்படும் பெரும் செலவு ஆட்சிமுறை ஆயங்களை நாடும் பொழுது ஏற்படுவதில்லை. பாதிக்கப்பட்ட ஒருவர் எழுதிய புகார் ஒன்றைத் தந்தால் போதும். ஆட்சி முறை ஆயம் தன் பணியைத் தொடங்கிவிடுகின்றது. அப்புறம் அவருக்குக் குறுகிய காலத்தில் பரிகாரம் கிடைக்கிறது.

அரசு நிர்வாகத்தினர் செயல்களால் பாதிக்கப்பட்ட மக்கள் நான்கு காரணங்களைக் கொண்டு அவைகளைத் தட்டிக் கேட்க இயலும். (1) அரசு நிர்வாகம் அதிகார வரம்பை மீறி செயல்பட்டது. (2) சட்டம் வகுத்துள்ள நடைமுறைகளை உதாசீனம் செய்து செயல்பட்டது. (3) சட்டத்தையே தவறாகப் பயன்படுத்தியது. (4) அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்தது ஆகியவைகள் நான்கு காரணங்கள் ஆகும். இந்த நான்கு வகையிலும் அரசு நிர்வாகத்தினர் செய்யும் தவறுகள் பெருகி வருவதால், பாதிக்கப்படும் மக்கள் தொகையும் அதிகமாகின்றது. அதனால் ஆட்சிமுறை ஆயங்களை நாடுபவர்களின் தொகை கூடுகின்றது.

கென்றிஆப்ரகாம் என்ற ஆசிரியர் ஜூடிசியல் பிராஸஸ் (Judicial Process) என்ற நூலில் பக்கம் 269ல் "அரசு நிர்வாகத்தின் அத்துமீறலுக்கு எதிராகத் தங்கள் உரிமைகளைப் பாதுகாக்கும் நம்பிக்கைக்குரிய வீரியமிக்க பாதுகாவலன் என ஆட்சிமுறை ஆயங்களை பிரஞ்சு மக்கள் கருதுகின்றனர். ஒவ்வொரு ஆண்டும் ஆட்சிமுறை ஆயங்களில் தாக்கல் ஆகும் ஆயிரமாயிரம் வழக்குகளை ஆயங்களில் அமர்ந்து தீர்த்து வைக்கும் நடுவர்களின் திறமையில் மக்கள் மிகுந்த நம்பிக்கை வைத்துள்ளனர்." (The French people lookup to it as a reliable and virile guardian of individual rights against administrative encroachment. Moreover they have great faith in the ability of these high- elass civil servants to dispose of the thousands upon thousands of cases that reach them every year- as well they might."

பிரஞ்சு ஆட்சிமுறைஆயங்கள் மிக வெற்றிகரமாகச் செயல் பட்டு வருகின்றன. அவைகளை எளிதில் அணுக முடியும். செலவும் மிகக்குறைவு. அவைகள் திறம்படச் செயல்படுவ தால் விரைவாக நல்ல பரிகாரங்களும் கிடைக்கின்றன. தாராள மாக நட்டஈடும் வழங்கப்படுவதும் குறிப்பிடத்தக்கதாகும். அரசு பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆயங்கள் வழங்கும் தீர்ப்புப் படி நட்டஈடு வழங்குவதுடன், நிர்வாகத்தில் உள்ள எந்தப் பணியாளர் செய்த தவறால் நட்ட ஈடு கொடுக்க வேண்டி வந் ததோ, அந்தப் பணியாளர் தனிப்பட்ட முறையில் பொறுப் பேற்கவும் ஏற்பாடு செய்கின்றது என்பதும் குறிப்பிடக் கூடிய அம்சமாகும். இப்படிப் பல நன்மைகள் ஆட்சிமுறை ஆயங்கள் இயங்குவதால் ஏற்படுவதை எண்ணியே அமெரிக்க, பிரிட்டன் போன்ற நாடுகளும் பழைய கோட்பாட்டை உதறித் தள்ளி பிரஞ்சு ஆட்சிமுறை ஆயங்கள் போல் அமைக்க உத்தேசித்து தீவிரமாக ஈடுபட்டுள்ளனர் என அறிகின்றோம். நமது இந்தி யாவும் அந்த எண்ணத்தில் பின் தங்கவில்லை.

இந்தியாவில் அண்மைக்காலத்தில் மைய அரசு ஆட்சிமுறை ஆயங்களை (Administrative tribunals) சென்னை போன்ற இடங்களில் அமைந்திருக்கின்றது. நமது தமிழ்நாடு அரசும் ஆட்சிமுறை ஆயம் ஒன்றை நிறுவ ஏற்பாடு செய்து வருகின் றது. பிரஞ்சு ஆட்சியின் கீழ் பாண்டிச்சேரியில் இயங்கி வந்த நீதிமன்றங்கள் தமிழக உயர்நீதி மன்றத்துடன் இணைந்ததால் ஏற்பட்ட விளைவுகளில் இங்கும் ஆட்சிமுறை ஆயங்களின் தேவை உணரப்பட்டுள்ளது ஒன்றாகும்.

அண்மையில் இன்னொரு மகிழ்ச்சிகரமான செய்தியும் கிடைத்திருக்கிறது. 1954ல் பாண்டிசேரி நீதிமன்றங்கள் நமது உயர் நீதி மன்றத்தின் தலைமையை ஏற்று ஏறக்குறைய 33ஆண்டுகள் ஓடிவிட்ட பின்னர், இன்று தமிழ்நாட்டு வழக் கறிஞர் மாமன்றமும் பாண்டிச்சேரி வழக்கறிஞர் மாமன்றமும் இணைந்துள்ளதைக் காண்கின்றோம். 1987 மார்ச்சு தமிழ் நாடு பாண்டிச்சேரி வழக்கறிஞர் இணையத்தின் (Tamil Nadu Pondicheri Bar Federation) துவக்க விழா சென்னையில் கோலா கலமாக நடந்தது. இரு மாநிலங்களையும் சேர்ந்த வழக் கறிஞப் பெருமக்கள் திரளான மிக உற்சாகத்துடன் கலந்து கொண்டனர். விழாவில் உரையாற்றிய மைய அரசின் மாண்பு மிகு அமைச்சர் சிதம்பரம் அவர்கள் ஆட்சி முறை ஆயங்களின் தேவை பற்றியும், நமது உயர் நீதிமன்றம் தாங்கிக்கொண்டி ருக்கும் பெரும் சுமைகளைக் குறைக்கச் செய்யவேண்டிய முயற்சிகள் பற்றியும் அழகாகவும் அருமையாகவும் எடுத் துரைத்தார்.

பாண்டிச்சேரி மாநில நீதிமன்றங்கள் தமிழக உயர் நீதி மன்றத்தின் அணிகலனாகத் திகழ்வது போல் பாண்டிச்சேரி வழக்கறிஞர் மன்றம் தமிழகவழக்கறிஞர் மாமன்றத்தின் அணிகலனாகவும் இணைந்திருப்பது வரவேற்கத்தக்கதாகும்.

நீதிமன்றங்களில் நகைச்சுவை

நீதிமன்றங்களில் வழக்குகளைப் பற்றியும், வழக்குகளில் எழும் சிக்கல்களைப் பற்றியும், நீதிபதிகளும், வழக்கறிஞர்களும் அலசி ஆராய்வதால் அவர்கள் நகைச்சுவை அறியார் என்று பொதுவாகக் கருதுவதுண்டு. இக்கருத்து முற்றிலும் சரியல்ல. நீதிமன்றங்களில் நகைச்சுவைக்கும் இடமுண்டு. நகைச்சுவையைச் சேர்க்கவில்லையென்றால், வாழ்க்கையே சுவையின்றிப் போகும் என்பதை நீதிபதிகளும், வழக்கறிஞர்களும் அறியாதவரல்ல.

''நகல்வல்லர் அல்லார்க்கு மாயிரு ஞாலம்
பகலும்பாற் பட்டன்று இருள்'' -குறள் 999

திருக்குறள் கூறுவதுபோல் சிரிக்கத் தெரியாதவர்களுக்குப் பகலும் இருட்டாகவே மாறும் என்பதை நீதிமன்றத்தில் உள்ளவர்களும் அறிவார்கள். ஆகவே அவ்வப்பொழுது வாதம், எதிர்வாதங்களில் நகைச்சுவை தோன்றும். சிரிப்பொலியும் நீதிமன்றங்களில் கேட்கும்.

நீதிமன்றங்களைப் பற்றித் தெரிந்துகொள்பவர்கள் அங்கு காரசாரமாக உரைகளுக்கிடையே நெகிழும் நகைச்சுவையையும் தெரிந்து சுவைக்காது போனால் முழுமை பெறாது. ஆகவே சில நகைச்சுவை நிகழ்ச்சிகளை இங்கு தருகின்றோம்.

o o o

நார்ட்டன் என்ற புகழ்பெற்ற ஆங்கில வழக்கறிஞர், நீதிமன்றத்தில் வாதிட்டுக்கொண்டிருந்தார். ''சான் வாலிசு'' என்ற நீதிபதியும் இன்னொரு இளைய நீதிபதியும் அவரது வாதத்தைக் கேட்டுக் கொண்டிருந்தனர். ''நார்ட்டன்'' புத்தகங்களைப் புரட்டி அவைகளிலிருந்து நீண்ட பகுதிகளை படித்துக் காட்டியவாறு இருந்தார். ''நார்ட்டன்'' தனது குரலை உயர்த்தியும், தாழ்த்தியும் இடத்துக்குத் தகுந்தாற் போல் படித்ததால் ''சான்வாலிசின்'' காதில் தாலாட்டு

மாதிரி பட்டதுபோலும். "சான்வாலிசின்'' கண்கள் மூடின. தலை நெஞ்சில் புதைந்தது. அதுபோலவே ''சான் வாலிசின்'' டபேதாரையும் தூக்கம் ஆட்டவே அவனும் தூங்க ஆரம்பித்தான். இதைக் கவனித்த ''நார்ட்டனுக்கு'' சிறிது ஆத்திரம் வந்தது. அவர் தன் முன்னால் இருந்த புத்தகக்கட்டைத் தள்ளினார். அது தரையில் விழுந்து பெரிய சத்தத்தை எழுப்பியது. டபேதார் தூக்கத்திலிருருந்து தடால் என்று எழுந்தான். ''வாலிசும்,' திடீரென்று கண் விழித்தார்.

''மாண்புமிகு நீதிபதியே, நான் வருந்துகின்றேன் ''எனக் கூறினார் "நார்ட்டன்''.

',ஏன், என்ன விஷயம் நார்ட்டன்?''

''ஓ, ஒன்றுமில்லை. அய்யா, தபேதார் தானும் ஒரு நீதிபதியைப்போல் நீதிமன்றத்தில் தூங்க முடியும் எள்று கருதுகின்றான்'' என்று அமைதியாகப் பதிலளித்தார் 'நார்ட்டன்".

o o o

சர். முர்ரே. கூட்ஸ் டிராட்டர் ஒரு நகைச்சுவை நீதிபதி. நீதிமன்றத்தில் அவர் வழக்குகளைக் கேட்கும்போது நகைச்சுவையை உதிர்த்துக்கொண்டே இருப்பார். வழக்கறிஞர் பலர் அவரது நகைச்சுவை நிரம்பிய சொற்களைக் கேட்க காத்துக்கொண்டிருப்பார்கள். அன்று திங்கட் கிழமை, இன்சால்வெண்டு வழக்கு ஒன்று அவர் முன் வந்தது. அந்த இன்சால்வெண்டு தான் கட்டவேண்டிய ரூ. 25/- ஒதுக்கீட்டை ரூ. 15/- ஆக குறைக்கவேண்டி மனுச் செய்திருந்தார். நீதிபதி அபீசியல் அசைனியைப் பார்த்து ''இது என்ன மனு'' என்று கேட்டு வழக்கைத் தொடங்கினார். அபீசியல் அசைனிக்கு இன்சால்வெண்டு கொடுத்திருக்கும் மனு சரியற்றது என்று தெரியும், ஆகவே இந்த மனுவை தள்ளுபடி செய்யும்படி கேட்டுக்கொண்டார். நீதிபதி அவர் சொல்வதை ஏற்றுக் கொள்ளாமல் இன்சால்வெண்டை விசாரிக்க ஆரம்பித்தார்.

நீதிபதி: உனக்குள்ள மொத்தக் கடன் எவ்வளவு?

இன்சால்வெண்டு: நீதிபதியவர்களே, ரூ 1500/-

நீதிபதி; இதுவரையில் எத்தனை கட்டித் தீர்த்திருக்கிறாய்?

இன்சால்வெண்டு; ரூ. 500/-

நீதிபதி: ஒரு நாணயமான இன்சால்வெண்டு கட்டுவதைக் காட்டிலும் அதிகமாகவே கட்டியிருக்கின்றார். சரி நீர் என்ன வேலை செய்கின்றீர்?

இன்சால்வெண்டு: நான் ஒரு நிலைய அதிகாரி.

நீதிபதி: பெரிய பதவிபோல் தெரிகின்றதே. அதிகாரி என்றால் என்ன?

இன்சால்வெண்டு: நிசாமுக்குச் சொந்தமான ரயில்வேயில் புகை வண்டி நிலைய அதிகாரியாக இருக்கிறேன்.

நீதிபதி: அடேயப்பா, நிசாமுடைய ரயில்வேயா, சம்பளம் என்ன?

இன்சால்வெண்டு: என் சம்பளம் ரூ. 85

நீதிபதி: உனது குடும்பத்தில் எத்தனை பேர்?

இன்சான்வெண்டு: இரண்டு மகன்கள், மூன்று பெண் மக்கள், ஒரு மனைவி, வயதான தாய் ஒருத்தி.

நீதிபதி: இந்த சம்பளத்தைக் கொண்டு எட்டு பேர் பட்டினியா? உன்னுடைய நிலையம் எங்கேயுள்ளது.

இன்சால்வெண்டு: அடர்ந்த காட்டுக்குள் நடுவில்.

நீதிபதி: ஓ. அடர்ந்த வனமா, புலிகள் உண்டோ?

இன்சால்வெண்டு: அவைகள் நிலையத்திற்குள் அடிக்கடி வந்து நடந்து செல்லும்.

நீதிபதி: அப்படியா, சரி (தட்டசகரை கூப்பிடுகின்றார்). ''இன்சால்வெண்டை விடுவிக்கிறேன்''

அபீசியல் அசைனி: மாண்புமிகு நீதிபதியவர்களே, அவர் ஒதுக்கீட்டைக் குறைக்கத்தான் வேண்டுகின்றார்.

நீதிபதி: பின் நீர் ஏன் ஒத்துக்கொள்ளவில்லை? அவரை இப்பொழுது விடுவிக்கின்றேன். அய்யா, இன்சால்வெண்டே. இங்கு கவனியும். நீர் அடர்ந்த காட்டுக்கும். புலிகளிடத்தும் சென்று விடும். நீர் தற்பொழுது ஒரு சுதந்திர மனிதர். அபீசியல் அசைனி தப்பித்தவறி அங்கு வருவாரானால் உம்முடைய புலிகளை ஏவிவிடு அவர்மேல்.

நீதிமன்றத்தில் சிரிப்பொலி எழுந்தது. அந்த ஏழை மனிதர் நீதிபதியின் கருணையை நினைந்து கீழே விழுந்து வணங்கி வெளியேறினார்.

o o o

இன்னொரு சமயம் சர்.சி.பி. இராமசாமி அய்யர் நீதிபதி கூட்சு டிராட்டர் முன் ஒரு வழக்கில் தோன்றி நடத்திக்கொண்டிருந்தார், நீதிபதிக்கு ஒரு தந்தி வந்தது. அவர் அதை வாங்கிப் பிரித்துப் பார்த்தார். அவரால் சிரிப்புத் தாங்க முடியவில்லை. தந்தியில் என்ன அப்படி நகைச்சுவை வாசகம் என்பதை தெரிந்துகொள்ள வேண்டி சி.பி.ஆர். கேட்டார்.

''எல்லோரும் பாருங்கள். இந்தத் தந்தியை அனுப்பியவன் எவ்வளவு அறிவுள்ளவன் தெரியுமா? தந்தியை அனுப்பியவன் பெயரைக்கூட என்னால் படிக்க இயலவில்லை. இன்று போட்டிருக்கும் அவனது வழக்கில் வாய்தா வேண்டுமாம். அவன் கேட்கும் வாய்தா கிடைக்கும்'' என்று கூறிய நீதிபதி மேலும் தொடர்ந்தார்.

தந்தியை உயர் நீதிமன்ற ''இன்சால்வெண்டு நீதிபதி'க்கு அனுப்பியிருக்கின்றான். தந்தி சேவகன் தவறால் தந்தியை என் கையில் கொடுத்துவிட்டுச் சென்றான். இதில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை. என் பொருளாதார நிலையை இந்தஆட்கள் சரியாகப் புரிந்து வைத்து இருக்கின்றனரே'' என்று நீதிபதி சொல்ல நீதி மன்றத்தில் சிரிப்பொலி எழாமல் இருக்குமா?

நீதிமன்றம் ஆரம்பமாயிற்று, நீதிபதி 'கூட்சு டிராட்டர்' அன்று நடக்க வேண்டிய வழக்குகளை கவனித்துக்கொண்டிருந்தார். ஆனால் ஒரு வழக்கும் நடப்பது மாதிரி நிலை காணோம். பட்டியலில் குறிக்கப்பட்டிருந்த கடைசி வழக்கிலும் வக்கீல் வாய்தா கேட்டார். அந்த வழக்கில் வாதிக்கு நாகேசுவரன் என்ற வழக்கறிஞர் அமர்த்தப்பட்டிருந்தார். எங்கே நாகேசுவரன்? என்ற கேள்வி எழுந்தது. துரைசாமி என்ற வழக்கறிஞர் மெதுவாக எழுந்து நின்றார். அவர் உயர் நீதிமன்றத்தில் வழக்கு நடத்திப் பழக்கப்பட்டவரல்ல. சிறு வழக்கு நீதிமன்றத்திலும், நகர சிவில் நீதிமன்றத்திலுமே வழக்குகள் நடத்தியவர். ஆகவே எழுந்து நிற்பதற்கே துணிவு போதவில்லை. கை, கால்கள் நடுங்கின.

''மாண்புமிகு நீதிபதியவர்களே, நாகேசுவரன்............... ....துரைசாமிக்கு அதற்கு மேல் நா பேச மறுத்தது.

''ஆமாம் ஆமாம் அவர்தான் அவருக்கு என்ன நேர்ந்தது? உயிருடன் உள்ளாரா இல்லையா?'' என்று நீதிபதி அவசர

மாகவும், கவலையுடன் விசாரித்தார். துரைசாமி தன் துணிவையெல்லாம் வரவழைத்துக் கொண்டு ''அவர் ஒரு பெண் குழந்தையைப் பெற்றெடுத்து இருக்கின்றார். அதனால் நீதிமன்றத்திற்கு வர இயலவில்லை'' என்று சொல்லி முடித்தார்.

நீதிபதிக்கு சிரிப்புத் தாங்க முடியவில்லை. குபீர் என்று வாய்விட்டுச் சிரித்தார். நீதிமன்றத்தில் உள்ள அனைவருமே சிரிப்பில் ஆழ்ந்து விட்டனர். ஆனால் துரைசாமி மாத்திரம் ஏன் எல்லோரும் சிரிக்கின்றனர் என்று புரியாமல் விழித்துக் கொண்டு நின்றார். சில மணித்துளிகள் கழித்து வி.வி. சீனிவாச அய்யங்கார் தன் சிரிப்புக்கிடையே நீதிபதியைப்பார்த்து,

''மைலார்டு, இதன் பின்னர் நீங்கள் அவர் கேட்டும் வாய்தாவை மறுக்க முடியாது'' என்று சாவதானமாகச் சொன்னார்.

நீதிபதி; நிச்சயமாக முடியாது. சீனிவாசன் இந்த வழக்கில் மாத்திரமல்ல, இந்த மாதிரி அரிய செயலைச் செய்யக் கூடிய எந்த வழக்கறிஞர்களுக்கும், நான் வாய்தா தரத் தயாராய் இருக்கின்றேன்.

o o o

நீதிபதி கூட்சு டூராட்டருக்கு எஸ்டேட் லேண்டு ஆக்ட் என்ற சட்டப்படி வழக்கு என்றால் மிகவும் வெறுப்பு அந்த மாதிரி வழக்குகள் வந்தால் அவர் நடத்தமாட்டார். தள்ளிப் போட விரும்புவார். அன்றைய ஒரு வழக்கில் திரு விஸ்வநாத அய்யர் ஆஜரானார். அவர் அந்த வழக்கில் வாதிடத் தயார் செய்து கொள்ளவில்லை. அதனால் வாய்தா வாங்கித் தீர வேண்டிய கட்டாயத்தில் இருந்தார். நீதிபதியோ வாய்தா தர மறுப்பார் போல் இருந்தது. விஸ்வநாத அய்யருக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. அருகாமையில் அமர்ந்து இருந்த தன் சக வழக்கறிஞர் அவர்களுடன் ஆலோசனை செய்தார். சக வழக்கறிஞர் அவர் காதில் ஏதோ ''குசு குசு'' என்று சென்னார். ''நான் கூறியபடி நீர் உமது வழக்கு எடுக்கப்படும் பொழுது பேசினீர் என்றால், வாய்தா வாங்குவதில் நீர் வெற்றியடைய முடியும்'' என்றார். விஸ்வநாதரின் வழக்கைக் கூப்பிட்டனர் நீதிமன்றத்தில். விஸ்வநாதன் மிகுந்த நம்பிக்கையுடன் கொஞ்சமும் தயக்கமின்றி எழுந்தார். ''மாண்புமிகு நீதிபதியவர்களே, இந்த வழக்கில் சென்னை எஸ்டேட்ஸ் நில சட்டத்தில்உள்ள பல பிரிவுகளைப் பொருத்து ஒரு முக்கியமான ஆனால் சுவையான கேள்வி இந்த நீதிமன்

றத்தில் ஆய்வுக்கு எழுகின்றது''. என்று அவர் வாதத்தைத் தொடங்கினார்.

''ஓ. எஸ்டேட் நிலச்சட்டமா, இங்கிருந்து 100 மைல் சுற்றளவுக்கு அந்த சட்டத்தின் வாசமே எனக்குக்கூடாது. இந்த வழக்கை தூக்கி வேறு தீர்ப்பாயத்திடம் போடுங்கள்'' என்று ''கூட்சு டிராட்டர்'' மிகுந்த வெறுப்புடன் கூறினார்.

சக வழக்கறிஞருக்கு சிரிப்பு வந்தது. விஸ்வநாதரும் அந்த சிரிப்பில் கலந்து கொண்டதில் வியப்பென்ன?

o o o

நீதிபதி கூட்ஸ் டிராட்டரிடம் ஒரு சுவையான வழக்கு வந்தது. வழக்கில் சுவையில்லை. ஆனால் வழக்கில், சாட்சி சொல்ல வந்தவர்களிடம் சுவை இருந்தது. சொத்தின் மீது அடமானக் கடன் வாங்கியவரின் சொத்து, கடன் தந்தவர்கள் நீதிமன்றத்தில் தீர்ப்பு வாங்கியதால் பறிபோய் விட்டது. அவர் சும்மா இருக்கவில்லை? தன் மைனர் மக்களைத் தூண்டி வழக்குப் போட வைத்தார். அடமானக் கடனை வாங்கி அப்பா குடிக்கும் கூத்தியாருக்கும் செலவழித்தார். குடும்பத்திற்கு ஒரு காசும் பயன்படவில்லை என்பது மைனர் மக்கள் வழக்கில் எழுப்பிய வாதமாகும். அந்த வழக்கில் மைனர் மக்களுக்காக திரு எத்திராசு முதலியார் ஆஜரானார். அவர் பையன்களது அப்பா குடியிலும், கூத்தியார்களிடமும் மிகுந்த ஈடுபாடு கொண்டு பணத்தைத் தண்ணீர் போல் இறைத்தார் என்று நிரூபிக்க பல சாட்சிகளை விசாரித்தார். சாட்சிகளில் பலர் நடனக்காரிகள். சாட்சி சொல்ல வந்த நடனக்காரி ஒவ்வொருத்தியும் பளபளக்கும் சேலையும், மினு மினுக்கும் மின்னும் நகையும் அணிந்திருந்தாள். நீதிபதி நடனக்காரிகள் சாட்சி சொல்லும் முறையை கவனித்தார். அவர்கள் அணிந்திருந்த பளபளக்கும் சேலையும், அவரது கவனத்தை ஈர்ந்தது. தங்களுக்காக மைனர் பையன்களது அப்பா நிறைய பணம் செலவழித்தார் என்பது நடன மாதர்களின் சாட்சியத்தின் கருப்பொருள்.

ஒரு நடன நங்கையின் சாட்சியம் சில நாள் தொடர்ந்து சென்றது. முதல் நாள் அவள் கண்ணைப் பறிக்கும் பச்சை சேலையும், இரண்டாவது நாள் மின்னும் சிவப்புச்சேலையும், மூன்றாவது நாள் அழகிய கருப்பு நிறச் சேலையும் அணிந்து சாட்சி சொன்னாள். இன்னும் அவள் சாட்சி முடிந்த பாடில்லை. நாலாவது நாளும் தொடரும்போல் இருந்தது.

நாலாவது நாள் என்ன நிறச்சேலை அணிவாள்என்பதைத் தெரிந்துகொள்ள கூட்சு டிராட்டருக்கு ஆர்வம் போலும். அந்த குசியில் எத்திராசு முதலியாரைப் பார்த்து "எத்திராசு, உமது வழக்கு நாளைக்கு தொடரும்" என்றார் நீதிபதி.

எத்திராசு: சரி, நீதிபதியவர்களே"

நீதிபதி: "மிகவும் நன்று, உமது சாட்சி நாளைக்கு என்ன நிறச்சேலை அணிந்து வருவதாக உத்தேசம்"

எத்திராசு: நீங்கள் என்ன நிறத்தை விரும்புகின்றீர்களோ அந்த நிறச்சேலை.

பாவம் நீதிபதி கூட்சு டிராட்டருக்கு முகத்தில் அடித்தது போல் இருந்தது. நீதிமன்றத்தை விட்டு வெளியேறினார் உடனே.

o o o

சர். வால்டர், புதிய தலைமை நீதிபதி, அவரும் பழைய நீதிபதி ஒட்கர்சும் இந்து சட்ட சம்பந்தமான மேல்முறையீட்டு வழக்கு ஒன்றில் வாதத்தைக் கேட்டனர். வாதிட்ட வழக்கறிஞர் டி.ஆர். இராமசத்திர அய்யர். ஒட்டகர்சு பழைய நீதிபதியானதால் இந்த சட்டத்தைப் பற்றியும், தந்தை சொத்தில் இந்து சட்டப்படி யாருக்கு என்னென்ன பாகம் என்பது பற்றியும் தெரிந்து வைத்திருப்பார் என்று எண்ணியதில் வியப்பில்லை. புதிய தலைமை நீதிபதிக்கு அது விஷயத்தில் வழி காட்டுவார் என்றும் எதிர்பார்க்கப்பட்டது.

டி. ஆர். இராமசந்திர அய்யர் வாதத்தைத் தொடங்கினார். "நீதிபதிகளே, குருசாமி பிள்ளை என்பவர் நல்ல மதிப்புள்ள சொத்துக்களை வைத்துவிட்டு இறந்துவிட்டார். அவருக்கு இரண்டு ஆண் மக்கள், இரண்டு பெண் மக்கள்" என்றார் வழக்கறிஞர். அவர் மேலும் வாதத்தை தொடரு முன், நீதிபதி ஒட்கர்சு தலையிட்டு பேசினார். "ஓ அப்படியென்றால் ஒவ்வொரு பெண் மகளுக்கும் 1/4 பாகம் கிடைக்கும் என்று சொல்லுங்கள்" என்றார் நீதிபதி. புதிய தலைமை நீதிபதிக்கு அன்றைய இந்து சட்டத்தின் நுணுக்கங்களை எடுத்துக்காட்ட வேண்டிய நீதிபதி ஒட்கர்சே பெண்களுக்கு தந்தை சொத்தில் என்ன உரிமையுண்டு என்று புரியாமல் இருந்தார்.

புதிய தலைமை நீதிபதிக்கோ நீதிபதி ஒட்கர்சு கூறியது சரியல்ல என்று பட்டது.

''அவ்வளவு பெரிய முறையில் பாக உரிமை வகுப்பப்பட்டுள்ளது என்று நான் நினைக்கவில்லை என்ன அப்படித்தானே இராமசந்திரய்யர்? என்று கேட்டார் தலைமை நீதிபதி. இராமச்சந்திர அய்யருக்கு நீதிபதிஓட்கர்சை விட்டுக்கொடுக்க மனமில்லை.

''நீதிபதியவர்களே, அப்படியில்லை நீதிபதி ஓட்கர்சு என்ன அர்த்தத்தில் சொன்னார் என்றால், பெண் மகள். ஆண் மகனாக இருந்திருந்தால் ¼ பாகம் கிடைக்கும்'' என்று கூறி நீதிபதி ஓட்கர்சின் சங்கடத்தை சமாளித்தார் இராமச்சந்திர அய்யர்.

சமயத்தில் தன் சங்கடத்தை சமாளித்ததைப் பார்த்து ''ஆமாம் ஆமாம் நீங்கள் சொன்னது முழுவதும் சரி'' என்றார் ஓட்கர்சு.

o o o

நீதிபதி ஓட்கர்சைப் பற்றி இன்னொரு நிகழ்ச்சி. அவரும் இன்னொரு நீதிபதியும் ஒரு குற்றவழக்கு மேல்முறையீட்டில் வாதத்தைக்கேட்டுக்கொண்டிருந்தனர். கீழமை நீதிமன்றத்தில் கொலைக்குற்றத்திற்காக தண்டனை பெற்றிருந்த குற்றவாளிக்காக புகழ்பெற்ற நியூ செண்டு கிராண்டு ஆஜராக வாதம்செய்தார் நீதிபதி ஓட்கர்ஸ் மிகவும் கவனமாக வாதத்தைக்கேட்டுக் கொண்டிருப்பதாகக் காணப்பட்டார், அவரது கண்கள் பாதி மூடியிருந்தன. பின்னர் கண்கள் திடீரென அகலத் திறந்தன. இரவு முழுதும் கம்பராமாயணத்தை கேட்டுக் கொண்டிருந்த ஒருவர் இராமனுக்கும் சீதைக்கும் என்ன உறவு என்று கேட்டதுபோல்.

''ஐயா, கிராண்டே, நீங்கள் சொன்னதெல்லாம் சரி, ஆனால் கீழ்நீதிமன்றத்தில் குப்புசாமி கவுண்டனை ஏன் விசாரிக்கவில்லை? என்று கேட்டார் நீதிபதி ஓட்கர்சு.

குப்புசாமி கவுண்டன்தான் கொலை செய்யப்பட்டவன். அவனை ஏன் சாட்சியாக விசாரிக்கவில்லை என்று கேட்கின்றாரே நீதிபதி. இவர் என்ன புரிந்திருக்க முடியும் என நினைத்து கொண்ட கிராண்டுக்குத் தலை சுற்றி வந்தது.

o o o

பேங்வெல் என்ற நீதிபதிக்கு முழுவதும் வழுக்கைத் தலை. சேசாச்சாரி என்ற வழக்கறிஞர் ஒரு வழக்கை அந்த நீதிபதி முன் நடத்தினார். நீதிபதியைப்போல் முழுதும் வழுக்கைத் தலையான ஒரு சாட்சியை குறுக்கு விசாரனை செய்தார் வழக்கறிஞர். சாட்சி கடுமையான ஆளாக இருந்தார். அவரிட

மிருந்து தனக்குச் சாதகமான ஒரு பதிலையும் வாங்க முடிய வில்லை, வழக்கறிஞரால். ஆகவே சாட்சியை தனிப்பட்டுத் தாக்க முனைந்தார்.

''இங்குபாரும் ஏன் வழுக்கைத் தலையாய்விட்டது உமக்கு என்ற காரணத்தைச் சொல்ல முடியுமா?''.

''எனக்கெப்படி தெரியும். தலை வழுக்கையாய் விட்டது அவ்வளவுதான்'' என்று சாட்சி பதில் சொன்னார்.

''உமக்கு காரணம் தெரியவேண்டுமா? நான் சொல்லட் டுமா'' என்று ஏளனமாக வழக்கறிஞர் கேட்டார்.

''நீங்கள் சொல்லும் காரணத்தை நான் கேட்கத் தயா ராக இருக்கின்றேன்'' என்றார் சாவதானமாக சாட்சி.

''உங்கள் தலை வழுக்கைக்குக் காரணம். முடி உங்கள் தலைக்கு வெளிப்புறம் வளருவதற்கு பதிலாக தலைக்குள்புறம் வளர ஆரம்பித்து இருக்கிறது. உமது மூளை இருக்கும் இடத்தை தலைமயிர் ஆக்கிரமித்து விட்டது. ஆகவே உமது மூளை 'மயிர் மூளை' என்று கிண்டலாகவும் இழிவு படுத்தும் முறையிலும் சொன்னார் வழக்குரைஞர்.

கேசாச்சாரி திடீரென நீதிபதியைப்பார்த்தார் தான் சாட்சியைப்பற்றிச் சொன்னது நீதிபதிக்கும் பொருத்தமே என்று சங்கடப்பட்டார். ஏதாவது சமாதானம் சொல்லித் தப்பிக்க, சிரிப்பை வரவழைத்துக்கொண்டு ''நான் சொன்ன வைகளுக்கு நல்ல விதி விலக்குகள் இருக்கின்றன மாண்புமிகு நீதிபதியவர்களே'' என்று கூறினார், வழக்குரைஞர்.

நீதிபதி சிரித்துக்கொண்டே தலையசைத்தார்.

o o o

திரு. பாஸ்யாம் அய்யங்கார் அவர்கள் ஸ்டேண்டார்டு என்ற பத்திரிக்கையின் ஆசிரியர் பரமேஸ்வரம் பிள்ளையால் வெறுக்கப்பட்டார். அந்த ஆசிரியர் அய்யங்காரைப் பற்றி மிகவும் இழிவான முறையில் எழுதிவந்தார். அய்யங்கார் அதைப்பெரிதும் பொருட்படுத்தவில்லை. ஆனால் அவருடைய நண்பர்கள் இதைப் பொருத்துக் கொள்ளவில்லை. அய்யங் கார் மாநிலக்குற்ற வழக்கு நீதிமன்றத்தில் பத்திரிக்கை ஆசிரி யர் மீது ஒரு வழக்குத் தொடர்ந்தார். பத்திரிகை ஆசிரியர்

ஒரு அயர்லாந்து பாரிஸ்டரைத் தன் சார்பாக வழக்கை நடத்த அமர்த்தினர். பாரிஸ்டர் யாரையும் கிண்டலும் கேலியும் செய்வதில் வல்லவர்.

வழக்கு மாநில தலைமைக் குற்ற வழக்கு நீதிபதி முன் வந்தது. பாஸ்யம் அய்யங்கார் முதல் சாட்சியாக விசாரிக்கப் பட்டார். குறுக்கு விசாரணை அய்யங்காரை அசைக்கவில்லை. பாரிஸ்டர் அய்யங்காரைத் தனிப்பட்டுத் தாக்கி ஆவமானப் படுத்த முயன்றார்.

பாரிஸ்டர்: சர். பாஸ்யம் நீங்கள் மாநில மேல்சபை உறுப்பினரா?

சர். பாஸ்யம்: ஆமாம்.

பாரிஸ்டர்: நீங்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினரல்ல.

பாஸ்யம்: இல்லை. நான் நியமிக்கப்பட்ட உறுப்பினர் அட்வ கேட் ஜெனரல் என்ற முறையில் அந்த உறுப்பினர் பதவி வகிக்கின்றவன்.

பாரிஸ்டர்: மேல் அவைக்கு ஒழுங்காக செல்கிறீர்களா?

பாஸ்யம்: ஆமாம்

பாரிஸ்டர்: அடிக்கடி தீர்மானங்களின் மீது மேலவையில் வாக்கெடுப்பு வருகிறதல்லவா?

பாஸ்யம்: ஆமாம்

பாரிஸ்டர்: வாக்கெடுப்பு வரும்பொழுது எல்லாம் நீர் அரசு டன் சேர்ந்து வாக்கு பதிவு செய்வது உண்மை யல்லவா?

பாஸ்யம்: அதை அப்படி சொல்வதற்கில்லை.

பாரிஸ்டர்: பின் எப்படி சொல்வீர் என்பதை தெரிந்து கொள்ளலாமா?

பாஸ்யம்: நான் சொல்வது என்னவென்றால், வாக்கெடுப்பு என்று வரும்பொழுது அரசு என்னுடன் சேர்ந்து வாக்குப்பதிவு செய்கின்றது என்றுதான் சொல் வேன்.

பாரிஸ்டர் விழித்தார் வழக்கு பாஸ்யம் அய்யங்காருக்கு சாதகமாக முடிந்தது. ஆசிரியர் மான நட்டமாக பெரிய தொகை கொடுக்க வேண்டி வந்தது.

0—0—0

இந்நூல் எழுதப் பயன்பட்ட நூல்கள்

1. A Peep into the history of Madras Law Courts.
2. The charters of the High Court of Judicature at Madras and the Court which preceded it.
3. The High Court of Judicature at Madras—Historical Accounts of Courts at Madras.
4. (1892) 15 I.L.R. Madras Memorandum "Opening of the new Law Courts at Madras"
5. The Madras High Court 1862—1962 Centenary Volume
6. High Court of Judicature at Madras - Centenary Celebrations Volume
7. Century Completed—V. C. Gopalratnam.
8. 1982 AIR Supreme Court 189.
9. Souvenir published by the Kanyakamari District Legal Aid Commitee on the Occasion of the Seminar on Legal Aid Movement Conducted on 25-9-1983.
10. Ahananoru (அகநானூறு)
11. Purananoru (புறநானூறு)
12. Madurai Kanchi (மதுரைக் காஞ்சி)
13. THIRUKKURAL (திருக்குறள்)

தமிழக உயர்நீதிமன்றத்தில் வீற்றிருக்கும் இன்றைய மாண்புமிகு நீதிபதிகள்

1. மாண்புமிகு தலைமை நீதிபதி திரு எம். என். சந்தூர்க்கர்
2. மாண்புமிகு நீதிபதி திரு வி. இராமசாமி
3. மாண்புமிகு நீதிபதி திரு. இரத்தினவேல்பாண்டியன்
4. மாண்புமிகு நீதிபதி திரு. எஸ். மோகன்
5. மாண்புமிகு நீதிபதி திரு. தா. சத்தியதேவ்
6. மாண்புமிகு நீதிபதி திரு. எஸ். நயினார்சுந்தரம்
7. மாண்புமிகு நீதிபதி திரு. ஜி. மகேசுவரன்
8. மாண்புமிகு நீதிபதி திரு. எஸ். சாமிக்கண்ணு
9. மாண்புமிகு நீதிபதி திரு. வி. இரத்தினம்
10. மாண்புமிகு நீதிபதி திரு. ஆர். செங்கோட்டுவேலன்
11. மாண்புமிகு நீதிபதி திரு. எஸ். எ. காதர்
12. மாண்புமிகு நீதிபதி திரு. கே. வெங்கிட்டசாமி
13. மாண்புமிகு நீதிபதி திரு. கே. எம். நடராசன்
14. மாண்புமிகு நீதிபதி திரு. டேவின் அன்னுசாமி
15. மாண்புமிகு நீதிபதி திரு. பி. பாஸ்கரன்
16. மாண்புமிகு நீதிபதி திரு. எஸ். டி. இராமலிங்கம்
17. மாண்புமிகு நீதிபதி திரு. இ. ஜே. பெல்லி
18. மாண்புமிகு நீதிபதி திரு. எம். ஸ்ரீனிவாசன்
19. மாண்புமிகு நீதிபதி திருமதி பத்மினி ஜேசுதுரையம்மையார்
20. மாண்புமிகு நீதிபதி திரு. சிவசுப்பிரமண்யம்

ஆசிரியரைப் பற்றி...

ஆசிரியர் சின்ன அய்யன் இராமகிருட்டினன் தமிழ்நாடு நீதித் துறையில் மாவட்ட நீதிபதியாவார். நாட்டில் சமுதாய நீதி ஏற்படவும், வளரவும், நிலையாக இருக்கவும் சட்டம் தனது உறுதியான பங்கைச் செலுத்தவேண்டு மென்பதிலும், நீதிமன்றங்களும் சமூதாய நீதி என்ற உயர்ந்த கோட்பாட்டை இலக்காகக் கொண்டு இயங்க வேண்டுமென்பதிலும் ஆசிரியர் மிகுந்த நாட்டம் கொண்டவர்.

ஆசிரியர் இலக்கியத்தில் ஆர்வத்தை வளர்த்து, திருக் குறளில் புலமை பெற்று, இசையில் ஈடுபாடும், நீதியில் நாட்டமும் கொண்டு நல்ல சமுதாயம் உருவாகத் தன்னால் இயன்ற பணியைச் செய்து வருகின்ற பண்பாளர்.

அவர் நமது உயர்நீதிமன்றத்தின் மீது கொண்டுள்ள அளவற்ற மதிப்பும், நீதிபதிகளிடம் வைத்துள்ள அன்பும், மரியாதையுமே இந்நூல் எழுதக் காரணமாக அமைந் துள்ளன.

ஆசிரியரின் பிற நூல்கள் :

1. வளரும் சனநாயகத்தில் நீதிமன்றங்கள்

(தமிழ்நாடு அரசின் பரிசு பெற்ற நூல்)

2. திருவள்ளுவர் பாடல்கள்

(ஆசிரியர் இப்பாடல்களை இயற்றி இசையும் அமைத் துள்ளார். அவைகளை இசையுடன் பாடவும் வல்லவர்.)

3. நீதிவானில் ஓர் விடிவெள்ளி

(அமெரிக்க உச்ச நீதிமன்றத்தின் நான்காவது தலைமை நீதிபதி சான்மார்சல் அவர்களைப் பற்றிய சுவையான வாழ்க்கை வரலாறு ஆகும். சான்மார்சல் உலகின் மிகப் பெரிய நீதிபதி எனவும் அரசியல் அமைப்புச் சட்டத்துக்குப் பொருள் விளக்கம் தருவதில் இணையற்ற சட்ட மேதை யாகவும் திகழ்ந்தவர் எனவும் எல்லோராலும் எற்றுக் கொள்ளப்பட்டவராவார்.)